## தமிழகத்தில்

# மனித உரிமைகள்—2009



மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமைகள்--2009

வெளியீடு

மக்கள் கண்காணிப்பகம்

6, வல்லபாய் சாலை, சொக்கிகுளம், மதுரை--625 002

நூல் : தமிழகத்தில் மனித உரிமைகள் 2009

முதல் பதிப்பு : செப்டம்பர் 2011

வெளியீடு : மக்கள் கண்காணிப்பகம்,
6 வல்லபாய் சாலை,
சொக்கிகுளம், மதுரை-625002

தொலைபேசி : 0452-2539520

தொலைநகலி : 0452-2531874

மின்னஞ்சல் : info@pwtn.org

அச்சுக்கோர்ப்பு : சத்யா, ராணி

அட்டை வடிவமைப்பு: ஜெயராமன்

ஆலோசனை : கா. கணேசன்

தொகுப்பு : பா. பிரபாகர், மீனாட்சி

நூல் வடிவம் : சி. பன்னீர் செல்வம்

அச்சகம் : ஆண்டோ ஆர்ட் கிராப்ட், சிவகாசி

நன்கொடை : ரூ. 150/-

இந்நூலில் காணப்பெறும் நிகழ்வுகள் அனைத்தும் மக்கள் கண்காணிப்பகத்தின் கள ஆய்வில் கண்ட வழக்குகளே. இவை 2009ஆம் ஆண்டில் தமிழகத்தில் நடந்த மனித உரிமை மீறல்களின் மொத்தத் தொகுப்பல்ல.

# பதிப்புரை

தமிழகத்தில் நடைபெறும் மனித உரிமை மீறல்களை கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கண்காணித்து வரும் மக்கள் கண்காணிப்பகம். இம்மீறல்களுக்கு அரசு பொறுப்பேற்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது; சட்ட ரீதியாகத் தலையீடு செய்வதில் மிகுந்த நம்பிக்கையுடைய மக்கள் கண்காணிப்பகம் மனித உரிமைப் பாதுகாப்பிற்கென்று சட்டபூர்வமாக நிறுவப்பட்டுள்ள மாநில மற்றும் தேசிய மனித உரிமை ஆணையங்களையும் அணுகி நடந்தேறிய மீறல்களுக்குத் தீர்வு காணவும் முயல்கிறது. இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ள மீறல் வழக்குகளும் தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையங்களுக்கு ஏற்கெனவே புகார்களாக அனுப்பப்பட்டவை மட்டுமின்றி, கள ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு வழக்கும் உரிய மாவட்ட ஆட்சியருக்கும் மாவட்ட காவல்துறைத் தலைவர்க்கும் அனுப்பப்பட்டவை.

இவ்வறிக்கையில் தரப்பட்டிருக்கும் வழக்குகள் அனைத்துமே மக்கள் கண்காணிப்பக மண்டல மனித உரிமைக் கண்காணிப் பாளர்களின் நேரடி கள ஆய்வின் முடிவில் தயாரிக்கப்பட்டவை.

மீறல்கள் எனும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டோர், மீறலை நிகழ்த்தியோராகக் கருதப்பட்டோர், சாட்சியங்கள், அரசு தரப்பினர் ஆகியோரிடம் முழுமையான விசாரணை நடத்திய பின்னரே முடிவுக்கு கொண்டு வரப்பட்ட வழக்குகள் இவை. மீண்டும் மீண்டும் பல்வேறு முறையில் விசாரணை செய்த பின்னர், ஒருங்கிணைப்பாளர்களால் சரிபார்க்கப்பட்டுத் தொகுக்கப்பட்டவை.

இவ்வறிக்கையில் தரப்பட்டிருக்கும் மீறல் நிகழ்வுகள் அனைத்தும் மக்கள் கண்காணிப்பகத்தின் கண்காணிப்புத் துறையின் மண்டல ஒருங்கிணைப்பாளர்களால், நேரடியாகவும், ஊடக வழியாகவும், சேகரிக்கப்பட்டவை.

அ. காவல்நிலைய வன்முறை, ஆ) மோதல் சாவுகள், இ) சிறை மரணங்கள், ஈ) வகுப்பறை வன்முறை, உ) பெண்கள் மீதான வன்முறை, ஊ) கொத்தடிமைத் தொழிலாளர், எ) தலித்துகள் மீதான வன்முறைகள்

எனும் ஏழு பெருந்தலைப்புகளில் இவ்வறிக்கை தொகுக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட தலைப்புகளில் நடைபெற்றதாகத் தொகுக்கப்பட்ட வன்முறைகள் மட்டுமே தமிழகத்தில் நடந்துள்ளதாக மக்கள் கண்காணிப்பகம் கருதவில்லை. இன்னும் நிறையவே நிகழ்ந்துள்ளன. இம்மீறல்கள் பற்றி அறிய விரும்புவோர், மக்கள் கண்காணிப்பக வலைத்தளமான www.peopleswatch.org-யைப் பார்த்து அறிய முடியும்.

இத்தொகுப்புக்கு உதவிய கண்காணிப்புப் பிரிவின் கா.கணேசன் மற்றும் குழுவினர்க்கு, தலையீட்டுக்குத் துணை நின்ற வழக்குரைஞர்களுக்கு, மூத்த சட்ட உதவியாளர்களுக்கு குறிப்பாக இத்தொகுப்பை முழுமைப்படுத்த உதவிய திரு.பிரபாகரன், திருமதி. மீனாட்சி ஆகியோருக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம்; அறிக்கை முழுவதும் படித்து திருத்தம் செய்த கவிஞர். பன்னீர் செல்வம் அவர்களுக்கும நன்றி. கண்காணிப்பு, தலையீடு, மறுவாழ்வு என்ற மனித உரிமைப் பாதுகாப்பு பரிமாணங்களுக்கு என்றும் எப்போதும் பின்புலமாய் நிற்கும் மக்கள் கண்காணிப்பக இயக்குநர் திரு. ஹென்றி திபேன் அவர்களுக்கு மிக்க நன்றி. கணிப்பொறிப் பிரிவு ஜெயராமன், சத்யா, ஜெயக்குமார், ராணி ஆகியோருக்கும் அச்சிட்ட ஆண்டோ ஆர்ட் கிராப்ட் அந்தோணி ராஜுக்கும் நன்றி.

இனிவரும் காலங்களில் எல்லா ஆண்டும் இவ்வறிக்கைகள் தொடரும் என்று உறுதி கூறுகிறோம்.

பதிப்புத்துறை,
மக்கள் கண்காணிப்பகம்,
மதுரை -2

முனைவர், இ.**தேவசகாயம்**

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலைய வன்முறை | 1-25 |
| 2. | மோதல் சாவுகள் | 26-32 |
| 3. | சிறை மரணங்கள் | 33-42 |
| 4. | வகுப்பறை வன்முறை | 43-62 |
| 5. | பெண்கள் மீதான வன்முறை | 63-89 |
| 6. | கொத்தடிமைத் தொழிலாளர் | 90-96 |
| 7. | தலித் மீதான வன்முறை | 97-169 |

# காவல்நிலைய வன்முறை

## 1. விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் காவலர்களால் அடித்துக் கொலை

ஈரோடு மாவட்டம், கவுந்தபாடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பெருந்தலையூர் எல்.எம். பாளையத்தில் வசித்து வந்தவர் அருமைராஜ். இவர் கிறித்தவ ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர். கே.பி. என் என்ற தனியார் பேருந்தில் ஓட்டுநராகப் பணியாற்றியவர். கடந்த 12.06.09 அன்று மொடக்குறிச்சி காவல் எல்லைக்குட்பட்ட சோலார் நகராட்சியைச் சேர்ந்த உமா என்ற பெண் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வழக்கு குறித்து விசாரிப்பதற்காக வந்த மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் தங்கராஜ் அருமைராஜின் தாய் கஸ்தூரி என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டியும், அடித்தும் காயப்படுத்தி ஈரோடு மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். அருமைராஜின் தாயை காவலர்கள் அழைத்துச் சென்றதால் இவ்வழக்கில் சரணடைவதற்காக அருமைராஜ் கவுந்தபாடி காவல் நிலையத்திற்குச் சென்றுள்ளார். அங்கிருந்து காவலர்கள் அருமைராஜை ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் பின்புறம் உள்ள காட்டில் வைத்து அருமைராஜை காவலர்கள் அடித்துச் சித்தரவதை செய்துள்ளனர். காவலர்கள் கடுமையாகத் தாக்கியதால் 22.06.09 அன்று அருமைராஜ் இறந்துள்ளார். அருமைராஜ் இறந்த தகவல் அவருடைய வழக்கறிஞர் சுரேஷ்குமார் மூலமாக அருமைராஜின் உறவினர்களுக்குத் தெரிய வந்துள்ளது. அதன் பின்பு அருமைராஜின் உறவினர்கள் ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அருமைராஜின் அம்மாவை அழைத்துக் கொண்டு ஈரோடு அரசு பொது மருத்துவமனைக்குச் சென்றுள்ளனர். அங்கு அருமைராஜின் உடலை அடையாளம் காண்பித்த பின்பு கோவை அரசு மருத்துவமனையில் சடலக் கூறாய்வு நடத்தப்பட்டு 23.06.09 அன்று அருமைராஜின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வழக்குக் குறித்து மாவட்ட வருவாய்க் கோட்டாட்சியர் ஜெயலட்சுமி விசாரணை மேற் கொண்டார்.அருமைராஜை அடித்துக் கொன்ற காவலர்கள் அருமைராஜின் அம்மாவிற்குப் பணம் கொடுத்து வழக்கை மேல் நடவடிக்கைக்குக் கொண்டு செல்லாமல் தடுத்துள்ளனர்.

## 2. காவலர்கள் தாக்குதல்: இரத்த வாந்தியெடுத்து நாகேஷ் மரணம்

தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம், காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கெட்டூர் கிராமத்தை சேர்ந்தவர் நாகேஷ் (37). நாகேஷ்க்கும், அவருடைய அண்ணன் நஞ்சுண்டன் குடும்பத்திற்கும் இடையே குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ளது.அதனால் நஞ்சுண்டன் என்பவரது மனைவி காரிமங்கலம் காவல் நிலையத்தில் நாகேஷ் மீது புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரின் அடிப்படையில் 24.07.09 அன்று காலை சுமார் 5.30 மணியளவில் காரிமங்கலம் காவல் நிலையக் காவலர்கள் நாகேஷை விசாரிப்பதாக அழைத்துச் சென்றுள்ளனர்.

நாகேஷின் மனைவி வள்ளியம்மாள் நாகேஷை காவலர்கள் அழைத்துச் சென்ற விபரத்தை அவருடைய உறவினர்களிடம் கூறி காரிமங்கலம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். இதற்கிடையில் நாகேஷை காவலர்கள் கடுமையாக அடித்துச் சித்திரவதை செய்து நாகேஷின் உடல்நிலை மோசமான நிலையில் அவரை வெளியே அனுப்பியுள்ளனர். நாகேஷின் மனைவி வள்ளியம்மாள் 24.07.09 அன்று மதியம் காரிமங்கலம் காவல் நிலையத்தில் நாகேஷைப் பற்றி விசாரித்த போது காவலர்கள் தங்களுக்குத் தெரியாது எனவும், சாப்பிட வெளியில் சென்றிருக்கலாம் என்றும் பொறுப்பற்ற முறையில் பதில் அளித்துள்ளனர்.

வள்ளியம்மாளின் உறவினர்கள் நாகேஷைத் தேட ஆரம்பித்துள்ளனர். அப்போது காரிமங்கலம் இந்தியன் வங்கி அருகில் நாகேஷ் இரத்த வாந்தி எடுத்து சுயநினைவற்ற நிலையில் இருந்துள்ளார். அதனைப் பார்த்த உறவினர்கள் அவரை அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர். அந்த மருத்துவர் உடனடியாக தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுமாறு பரிந்துரைத்துள்ளார். இதனால் உடனடியாக நாகேஷை ஆட்டோவில் ஏற்றி தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அப்போது நாகேஷ் தன்னைக் காவலர்கள் கடுமையாக அடித்துள்ளனர், அதனால் பிழைப்பது கடினம் என தனது மனைவியிடம் கூறியுள்ளார்.

இந்நிலையில் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் செல்லும் வழியிலேயே மதியம் சுமார் 3 மணியளவில் நாகேஷ் இறந்துள்ளார். இதுகுறித்து கிராம நிர்வாக அலுவலர், தாசில்தார், வருவாய் ஆய்வாளர் ஆகியோருக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வள்ளியம்மாளை காரிமங்கலம் காவல் நிலையத்தினர் விசாரணை செய்துள்ளனர். தர்மபுரி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடிந்து 25.07.09 அன்று மாலை சுமார் 7 மணியளவில் நாகேஷின் உடல் அவரது உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து வள்ளியம்மாள் தர்மபுரி மாவட்ட ஆட்சியருக்கு புகார் அளித்துள்ளார். காரிமங்கலம் காவல் நிலையத்தில் 174 குற்றவியல் விசாரணை முறை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. திருட்டு வழக்கில் தலித் இளைஞர் காவலர்களால் அடித்துக் கொலை

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், ஸ்ரீ மூலக்கரை கிராமத்தைச் சேர்ந்தவர் இராமர் (எ) இராமச்சந்திரன் (29/09). இவர் தாழ்த்தப்பட்ட பள்ளர் சாதியைச் சேர்ந்தவர். திருச்செந்தூர் காயல்பட்டிணத்தைச் சேர்ந்த வாபூ முகம்மது என்பவரது வீட்டில் 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சுமார் 366 பவுன் நகை திருடுப் போயுள்ளது. இது தொடர்பாக ஆத்தூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

20.07.09 அன்று ஆத்தூர் காவல் நிலையக் காவலர்கள் இராமச்சந்தி ரனின் இளைய சகோதரர் கனகராஜ் என்பவரை ஆறுமுகனேரி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அங்கிருந்து ஆத்தூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று இராமச்சந்திரன் எங்கே என விசாரித்துள்ளனர். இராமச்சந்திரனின் அம்மா மற்றும் உறவினர்கள் ஆத்தூர் காவல் நிலையத்திற்குச் சென்று கனகராஜை விடுவிக்க கேட்ட போது இராமச்சந்திரனை ஒப்படைத்தால் தான் கனகராஜை விடுவதாக கூறியுள்ளனர். அதன்படி 22.07.09 அன்று இராமச்சந்திரனின் அம்மா வழக்கறிஞர் வேல்சாமி என்பவரது உதவியுடன் தூத்துக்குடி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இராமச்சந்திரனை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆய்வாளர் அனில் குமார் என்பவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

விசாரணை என்ற பெயரில் இராமச்சந்திரனை காவலர்கள் கடுமையாக தாக்கியதால் அவர் இறந்து விட்டார். இராமச்சந்திரன் இறந்த தகவலை 29.07.09 அன்று அவருடைய வழக்கறிஞர் இராமச்சந்திரனின் அம்மாவிற்கு செல்போனில் தகவல் அளித்துள்ளார். இது குறித்து தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை வைத்து இராமச்சந்திரனின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

வருவாய் கோட்டாட்சியார் இராமச்சந்திரனின் அம்மாவை விசாரணை செய்த பின்பு இராமச்சந்திரனின் உடலை பார்க்க அனுமதித்துள்ளார். இராமச்சந்திரனின் உடலில் கடுமையான காயங்கள் இருந்துள்ளது. அவரது இடது தொடை கிழிந்த நிலையில் தொடை பகுதி முழுவதும் இரத்தம் கட்டிய நிலையில் மிகக் கொடூரமாக சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 29.07.2009 அன்று உடல் கூறாய்வு முடிந்த பிறகு இராமச்சந்திரனின் உடல் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. ஆனால் அவர்கள் சம்மந்தப்பட்ட காவலர்கள் மீது *SC/ST* சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்காத வரை உடலை வாங்க மாட்டோம் என மறுத்து 30.07.2009ல் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திரு. பசுபதி பாண்டியன் என்ற தலித் தலைவர் முன்னிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காவல் துறையினரின் பேச்சு வார்த்தைக்கு பின்பு இராமச்சந்திரன் உடலை அவரது சொந்த ஊரில் நல்லடக்கம் செய்துள்ளனர். இவ்வழக்கு குறித்து *PSO 151* அடிப்படையில் விசாரணை நடைபெற்றுள்ளது.

## 4. நீலாங்கரை காவலர்கள் மது போதையில் சித்திரவதை: தலித் இளைஞர் சாவு

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பாலூரை சேர்ந்தவர் இரமேஷ், பறையர் சாதியை சேர்ந்தவர். இரமேஷின் மனைவி உஷாராணி தேவர் சாதியைச் சேர்ந்தவர். இருவரும் கலப்பு திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

17.08.09 அன்று இரவு இரமேஷ் மது அருந்தி விட்டு வீட்டுக்குச் சென்று அவரது மனைவி உஷாராணியுடன் தகராறு செய்துள்ளார். அப்போது இரமேஷை எச்சரிப்பதற்காக உஷாராணி 108 என்ற எண்ணுக்குத் தொலைபேசியில் அழைத்து, இரமேஷ் தகராறு செய்யும் விபரத்தை கூறியுள்ளார். அவர்கள் கட்டுப்பாட்டு அறை எண் 100க்கு தகவல் சொல்வதாகக் கூறியுள்ளனர். அதன்பின்பு சுமார் 12 மணியளவில் நீலாங்கரை காவல் உதவி ஆய்வாளர் குணசேகரன் மற்றும் இரண்டு காவலர்கள் காவல் வாகனத்தில் இரமேஷ் வீட்டிற்கு சென்றுள்ளனர். அங்கு ரமேஷும், உஷாராணியும் தகராறில் ஈடுபட்டிருந்த போது இரமேஷை காவலர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி இரவு கூட எங்களை நிம்மதியாக இருக்க விட மாட்டீர்களா? ஏன் பொண்டாட்டியுடன் தகராறு செய்கிறாய் என பிரம்பால் அடித்தும், பூட்சுக் கால்களால் எட்டி உதைத்தும் சித்திரவதை செய்துள்ளனர்.

அப்போது உஷாராணியையும் நீ தான் போன் செய்ததா என்று கேட்டு அடித்துள்ளனர். இரமேஷை கடுமையாகத் தாக்கியுள்ளனர். தடுக்கச் சென்ற உஷாராணியையும் அருகாமை வீடுகளிலிருந்தவர்கள், உறவினர்கள் அனைவரையும் சரமாரியாக காவலர்கள் தாக்கியுள்ளனர். காவலர்களின் இத்தகைய வெறிச்செயலுக்கு காரணம் இரவில் மது அருந்தி விட்டு இருந்தவர்களை போன் செய்து தொந்தரவு செய்து விட்டார்கள் என்ற ஆத்திரமே.

இரமேஷின் உறவினர்களிடம் ஜீப்புக்கு டீசல் போடுவதற்குப் பணம் வாங்கிக் கொண்டு இரமேஷை நீலாங்கரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பின்பு 18.08.09 அன்று அதிகாலை சுமார் 1.30 மணிக்கு உஷாராணியை நீலாங்கரை காவலர்கள் தொலைபேசியில் அழைத்து அவரது கணவரை அழைத்துச் செல்லுமாறு கூறியுள்ளனர். உஷாராணி உறவினர்களை அழைத்துக் கொண்டு நீலாங்கரை காவல் நிலையத்திற்கு சென்ற போது இரமேஷ் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விட்டு அவரை அவரது மனைவியுடன் அனுப்பி வைத்துள்ளனர். உஷாராணி இரமேஷைப் பார்த்த போது இரமேஷ் காவலர்களால் மிகவும் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு இருந்தார். உஷாராணியும், அவரது உறவினரும் கைத்தாங்கலாக இரமேஷை அழைத்து வரும் போது அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. நின்ற இடத்திலேயே மலம், சிறுநீர் கழித்து சுயநினைவின்றி மயங்கி விழுந்துள்ளார்.

அதன் பின்பு நீலாங்கரை காவலர்கள் ஆட்டோ பிடித்து உஷாராணியிடம் இரமேஷை நீலாங்கரை சாந்தி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறியுள்ளனர். அங்கு மருத்துவர்கள் இல்லாததால் அடையார் மலர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு

கூறியுள்ளனர். அதன்படி இரமேஷை அடையார் மலர் மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது 15 நிமிடத்திற்கு முன்னரே இரமேஷின் உயிர் பிரிந்து விட்டது என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். 18.08.09 அன்று காலை சுமார் 8 மணியளவில் இரமேஷின் உறவினர்கள் மலர் மருத்துவமனை முன்பு மறியலில் ஈடுபட்டனர். அதன் பின்பு மாநகர துணை ஆணையர் முரளி தலைமையில் இரமேஷின் உடல் பிரேத பரிசோதனைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. உஷாராணியை காவல் அடைப்பில் வைத்திருந்தனர்.

வருவாய் கோட்டாட்சியர் பத்மஜா தேவி இரமேஷின் உறவினர்களிடமும் உஷாராணியிடமும் விசாரணை செய்துள்ளனர். காவலர்கள் இரமேஷ் மாரடைப்பில் இறந்ததாக கூறியுள்ளனர். இரமேஷின் உடல் கூறாய்வு ஒன்றுக்கு மேற்பட்ட மருத்துவர் குழுவால் செய்யப்பட்டு வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 5. தலித் இளைஞரை சித்திரவதை செய்து கொலை செய்த காவலர்கள்

காஞ்சிபுரம் மாவட்டம், நெற்குன்றம் பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்தவர் சரவணன் (21). த/பெ. நாகப்பன். இந்து ஆதித்திராவிடர் சமூகத்தை சேர்ந்தவர். சங்கராபுரம் பகுதியை சேர்ந்த 30 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்ட வழக்கு பாலூர் காவல் நிலையத்தினர் விசாரணையில் உள்ளது. இவ்வழக்கில் சந்தேகத்தின் பெயரில் விசாரிப்பதற்காக 29.10.2009 அன்று பாலூர் காவல் நிலைய காவலர்கள் சரவணனின் வீட்டிற்கு இரவு சுமார் 12.30 மணியளவில் சென்று சரவணனை அடித்து இழுத்துச் சென்றுள்ளனர்.

சரவணனின் தாயார் ஞானம்மாள் சரவணனைத் தேடி 30.01.09 அன்று காலை மதுரவாயல் காவல் நிலையம், MMJ அம்பத்தூர் எஸ்டேட் ஆகிய காவல் நிலையங்களில் விசாரித்துள்ளார். எங்குமே சரவணன் இல்லை. உடனடியாக ஞானம்மாள் மாநகர ஆணையர் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவுக்கு தந்தி அனுப்பியுள்ளார். அதன் பின்பு 31.10.09 அன்று மதியம் 2.15 மணியளவில் 2 காவலர்கள் (பாலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பரணி, மற்றொரு காவலர்) சரவணனின் தாயாரிடம் சரவணன் விசாரித்துக் கொண்டிருக்கும் போது தப்பி ஓடியதாக கூறியுள்ளனர். ஆனால் உண்மையில் சரவணனைக் காவலர்கள் கடுமையாக தாக்கியதில் அவர் இறந்து விட்டார். அதை மறைப்பதற்காக சரவணன் காவல் நிலைய மதில் சுவரைத் தாண்டி தப்பித்துச் செல்லும் போது காயம்பட்டதாகவும், செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்று இறந்ததாகவும் காவலர்கள் கூறுகின்றனர். காவல் நிலைய மதில் சுவர் 6 அடி உயரம் கொண்டது தான். அந்த மதில் சுவரிலிருந்து விழுந்தால் எவரும் இறந்து விட முடியாது. காவலர்கள் அவர்களை தற்காத்துக் கொள்ள இவ்வாறு கூறியுள்ளனர். ஆனால் சரவணன் இறந்த தகவல் அவருடைய குடும்பத்தினருக்கு தெரியாது. 31.10.09 அன்று காலை நெற்குன்றம் ஊர் தலைவர் அளித்த தகவலின்படி தான்

சரவணன் மரணமடைந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த விபரம் தெரிய வந்துள்ளது. சரவணனின் உடலை அவருடைய தாயார் அடையாளம் காண சென்ற போது சரவணனின் கால்கள் இரண்டும் வீக்கமடைந்திருந்தது. மூக்கில் இருந்தும், தலையில் இருந்தும் இரத்தம் வழிந்து உறைந்து இருந்துள்ளது. கையில் வெட்டுக்காயம் இருந்துள்ளது. செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு 31.10.09ம் தேதி சரவணனின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வருவாய் கோட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு கு. எண். *362/09, U/s 176 (iii)* குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 6. நண்பர் குடும்பத்தைத் துப்பாக்கியால் சுட்டவர்: காவலர்களால் அடித்துக் கொலை

சென்னை, சைதாப்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் சண்முகராஜன் (32/09). இவர் சென்னை பனையூர் குப்பம் பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற இராணுவ கேப்டன். இளங்கோவன் (60/09) என்பவருடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்துள்ளார். ரியல் எஸ்டேட் தொழிலில் இருவருக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் 24.08.09 அன்று சண்முகராஜன் இளங்கோவன் வீட்டிற்கு துப்பாக்கியுடன் சென்று இளங்கோவனையும் அவரது மனைவி பூரணியையும் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துள்ளார். மேலும் அங்கிருந்த இளங்கோவனின் மருமகளையும் துப்பாக்கியால் சுட்டுத் தப்ப முயன்றுள்ளார்.

இச்சம்பவத்தை அறிந்த பனையூர் கிராம பொது மக்கள் தப்பி ஓட முயன்ற சண்முகராஜனை பிடித்து சரமாரியாக அடித்து உதைத்துள்ளனர். அதன் பிற்கு சண்முகராஜனை நீலாங்கரை காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். காவல் துறையினர் ஏற்கனவே பொது மக்கள் அடித்து காயமடைந்துள்ள சண்முகராஜனுக்கு சிகிச்சை ஏதும் அளிக்கவில்லை. அவர் மீது கு. எண் 608/02009, பிரிவுகள் *450, 392, 397, IPC r/w 251 B and 27 Arms Act* ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். அதன் பின்பு நீலாங்கரை காவலர்கள் சண்முகராஜனைக் கடுமையாக அடித்துச் சித்திரவதை செய்ததில் 25.08.2009 அன்று அதிகாலை 3 மணியளவில் சண்முகராஜன் மரணம் அடைந்துள்ளார். சண்முகராஜன் மரணம் குறித்து காஞ்சிபுரம் வருவாய் கோட்டாட்சியர் பத்மஜாதேவி விசாரணை நடத்தியுள்ளார்.

## 7. மது போதையில் தகராறு செய்தவர்: காவலர்களால் அடித்துக் கொலை

சென்னை, மயிலை வட்டம், ஆர். பிளாக் 74/2, கோட்டூர்புரம் என்ற முகவரியில் வசித்து வந்தவர் பழநி (37/09), த/பெ. ரங்கநாதன். பழனி 12.03.09 அன்று இரவு சுமார் 8 மணியளவில் மது அருந்தி விட்டு வீட்டிற்கு சென்று அவருடைய மனைவி இளவரசியுடன் தகராறு செய்துள்ளார். அதன் பின்பு வீட்டிலிருந்து வெளியே சென்று பழநியின் தம்பி

ராமச்சந்திரனிடம் வீட்டு பிரச்சனை குறித்து தகராறு செய்துள்ளார். இச்சம்பவத்தை குறித்து அத்தெருவில் உள்ள பொதுமக்களில் யாரோ ஒருவர் J4 கோட்டூர்புரம் காவலர்களுக்கு தொலைபேசியில் அழைத்து தகவல் கூறியுள்ளார்.

இதனையடுத்து வந்த J4 கோட்டூர்புரம் காவல் நிலைய தலைமை எழுத்தர் மனோகரன், ஹரிசுப்ரமணியன் ஆகிய காவலர்கள் பழநியின் சட்டையைப் பிடித்து இழுத்து காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு வாசலிலேயே வைத்து பழநியை அடித்துள்ளனர். அதன் பின்பு காவல் நிலையத்திற்குள் இழுத்துச் சென்று அரை நிர்வாணமாக்கி காவலர்கள் பழநியை கடுமையாகத் தாக்கியுள்ளனர். பிறகு இரவு சுமார் 9 மணியளவில் பழநியை வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பியுள்ளனர். பழநி காவல் நிலையத்திலிருந்து வெளியே சென்று காவலர்களை திட்டியுள்ளார். யாரும் புகார் கொடுக்காமல் எப்படி என்னைக் கைது செய்து அடித்தீர்கள்? என்று கேள்வி எழுப்பி விட்டு வீட்டிற்கு சென்றுள்ளார்.

இரவு சுமார் 10 மணியளவில் பழநி ராசு என்பவரின் சைக்கிள் கடைக்கு சென்று ஏன் போலீசுக்கு போன் செய்தாய்? என அவருடன் தகராறு செய்துள்ளார். அவர் மீண்டும் காவலர்களுக்குதகவல் அளிக்கவே காவல் வாகனத்தில் சென்ற தலைமைக் காவலர் மனோகரன், ஹரிசுப்ரமணியன் உட்பட்ட காவலர்கள் பழநியை இழுத்துக் கொண்டு சென்று காவல் வாகனத்தில் ஏற்றி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு மேல்மாடியில் வைத்து பழநியைக் காவலர்கள் கடுமையாக தாக்கியுள்ளனர். பின்னர் சைதாப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு பழநியை அழைத்துச் சென்று மது போதையில் இருக்கிறாரா என பரிசோதனை செய்துள்ளனர். அப்போது பழநி மருத்துவரிடம் காவலர்கள் அடித்ததால் உடலில் காயங்கள் உள்ளது என்று கூறியுள்ளார். மருத்துவர் அதை பொருட்படுத்தவில்லை.மருத்துவரிடம் உண்மையைக் கூறியதால் ஆத்திரமடைந்த காவலர்கள் பழநியை சைதாப்பேட்டை ஜெ1 காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று மிகவும் கடுமையாக தாக்கியுள்ளனர்.

காவலர்கள் அடித்ததில் பழநியின் உடல் முழுவதும் லத்தியால் அடித்த காயங்களும், இடது தோளிலும் இடது முழங்கை, இடது கை மணிக்கட்டு விரல்கள், வலது தொடைப் பகுதி மற்றும் இரண்டு முழங்கால்களும் கடுமையான காயமடைந்திருந்தது. பழநியின் உடல்நிலை மோசமாகவே காவலர்கள் அவரை சைதாப்பேட்டை காவல் நிலையத்திலிருந்து ஜெ 4 கோட்டூர்புரம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளர். பழநியின் நண்பர்கள் மூலமாக அவருடைய அப்பாவை காவல் நிலையத்திற்கு வரவழைத்துள்ளனர். பழநி மீது இ.த.ச பிரிவு 75ன் கீழ் வழக்கு பதிவு செய்து பழநியிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு நல்ல முறையில் பழநியை அழைத்துச் செல்வதாக அவருடைய அப்பா ரங்கநாதனிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டு ரூ. 500/- பணமும் பெற்றுக் கொண்டு இரவு சுமார் 11 மணியளவில் பழநியை வீட்டிற்கு அனுப்பியுள்ளனர். பழநியின் நண்பர்கள் அவருடைய காயத்திற்கு மருந்து போட்டுள்ளனர் பழநியின் மனைவி அவருடைய அம்மா வீட்டில்

இருந்துள்ளார். பழனியின் நண்பர் பழனியின் மனைவி இளவரசியை அழைத்து சென்றுள்ளார். பழனியின் உடல்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அவருடைய மனைவி கதறி அழுதுள்ளார். அதன் பின்பு இரவு படுத்து தூங்கிய பழனி அதிகாலை 3.30 மணியளவில் இறந்துள்ளார். அதன் பின்பு மறுநாள் காலை பழனியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் காவல் உயர் அதிகாரிகளுக்கு தகவல் அளித்துள்ளனர். கோட்டூர்புரம் சாலையில் ஊர் பொது மக்கள் சம்மந்தப்பட்ட காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்ககோரி மறியலில் ஈடுபட்டுள்ளனர். மாநகர உதவி ஆணையர் சென்று பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு காவலர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார். இவ்வழக்கு குறித்து வருவாய் கோட்டாட்சியர் விசாரணை செய்துள்ளார். 13.03.2009 அன்று காலை 9 மணியளவில் பழனியின் உடல் ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை நடைபெற்றது. அதன் பின் அவருடைய உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 174 குற்றவியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 8. உயர்நீதிமன்ற வளாகத்திலேயே வழக்கறிஞர்கள் மீது காவல் துறை கடும் தாக்கு

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுவதைக் கண்டித்து நீதிமன்ற புறக்கணிப்பு செய்திருந்தனர். (அப்போது) 17.02.09-இல் அங்கு 80 பேருடன் மனு கொடுக்க வந்திருந்த டாக்டர். சுப்ரமணிய சுவாமியிடம் நீதிமன்ற புறக்கணிப்புக்கு ஒத்துழைப்பு தர வழக்கறிஞர்கள் கோரினர். அதற்கு நீங்கள் LTTEக்கு ஆதரவு தருபவர்கள், கோட்டாவில் படித்த தலித்துகள் சட்டத்திற்கு புறம்பாக நடக்கிறீர்கள் என்று சாதியைக் கூறி வழக்கறிஞர்களை இழிபடுத்தியதாகச் சொல்லப்படுகிறது. அவர் மீது அழுகிய முட்டையை வீசியதாக நீதிபதியிடம் வாய்மொழியாக முறையிட்டார். உடனே உதவிக் காவலர், ஆணையர் ராமசுப்ரமணி பணி செய்யவிடாமல் தடுத்ததாக 20 வழக்கறிஞர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்தார். 19.02.2009 அன்று சுப்ரமணியசுவாமியை வன்கொடுமை தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யகோரி வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் காவல்துறை மறுத்து மற்ற வழக்கறிஞர்களை கைது செய்ய முயற்சித்தது. இதனால் காவல்துறைக்கும் (வழக்கறிஞர்கள் சீருடையில் பல்வேறு காவலர்கள் இருந்தனர்) வழக்கறிஞர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது ஏற்கனவே நீதிமன்ற வளாகத்தில் குவிக்கப்பட்டிருந்த அதிரடிப்படை காவலர்கள் வழக்கறிஞர்களையும் நீதிமன்ற ஊழியர்களையும் நீதிபதிகளையும், நீதிமன்ற கோப்புகள் இருக்கைகளையும் பின் வழக்கறிஞர்களையும் கடுமையாகத் தாக்கினர். சென்னை உயர்நீதிமன்ற செயலர் ஜி. மோகன் சிருவாணனுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் கடுமையாக தாக்கப்பட்டனர். ஆனால் சாதிய அடிப்படையில் வழக்கறிஞர்களை இழிவுப்படுத்திய சுப்ரமணிய சுவாமியின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 9. நண்பனுக்கு உதவி செய்ததால் சித்திரவதை

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ளது பஹிராபாத். இங்கு ஆட்டோ ஓட்டுநராகயிருப்பவர் அன்சார்பாட்ஷா. இவருடைய நண்பர் இம்ரான்கானும், ஆயிஷா என்பவரும் காதலித்து வந்தனர். பெற்றோர்களிடமிருந்து எதிர்ப்பு இருக்கவும், கேரளாவிற்கு செல்ல திட்டமிட்டு அன்சாத்பாட்ஷாவின் உதவியை நாடினர். அன்சாரும் கேரளா வரை சென்று காதலர்களை விட்டுவிட்டு வந்தார். இதனையறிந்த வாணியம்பாடி காவல்துறை 21.04.09 அன்று அன்சாரை விசாரணை செய்தனர். மீண்டும் 28.04.09 அன்று வீட்டிலிருந்த அன்சாரை இழுத்துக் கொண்டு போய் சரமாரியாகத் தாக்கினர். 30ம் தேதி வரை வீட்டிற்கு வராத தன் மகன் அன்சாரை பார்க்க சென்ற அவருடைய தந்தை இக்பாலை கெட்ட வார்த்தைகளால் திட்டினர். குற்ற எண் 608/09 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 366 (அ)ன் கீழ் அன்சார்பாட்ஷா கைது செய்யப்பட்டு குடியாத்தம் சிறையில் அடைக்கப்பட்டார்.

## 10. காவலரை சித்திரவதை செய்த காவல்துறை

சிவகங்கை மாவட்டம், கொல்லாங்குடி அருகிலுள்ளது கீரனூர். இங்கு வசிப்பர் இராமலிங்கம் (39). அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்த இவர் உலகம்பட்டி காவல் நிலையத்தில் காவலராக பணி செய்தார். 07.04.09 அன்று இராமலிங்கத்தின் வீட்டிற்கு எதிரில் உள்ள கொங்கையா தேவர் என்பவர் அவருடைய வீட்டுப் பாதையை மறைத்து வேலி போட்டுள்ளனர். இதனைக் கேட்ட ராமலிங்கத்தின் அம்மா சுந்தரம்மாளையும், தங்கை மீனாட்சியையும் தாக்கினர். 16.06.09 அன்று காளையார்கோவில் காவல் நிலையத்தில் இராமலிங்கம் புகார் செய்தார். அப்போது புகாரை பதிவு செய்யாமல் காவல் சார்பு ஆய்வாளர் ஆதம் அலி இருவரும் சமரசம் செய்து கொள்ள வற்புறுத்தினார். இதற்கு இணங்காமல் காவல் கண்காணிப்பாளிடம் ராமலிங்கம் நேரிடையாக புகார் கொடுத்ததால் ஆத்திரம் அடைந்த ஆதம்அலி, ராஜேந்திரன், சுந்தரி, குணசேகரன் ஆகிய காவலர்கள் 16.06.09 அன்று இரவு 8 மணிக்கு இராமலிங்கத்தை காவல் நிலையம் இழுத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர். இராமலிங்கத்தின் தந்தை காசிநாதனையும் தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தி அவர் மீதும் இராமலிங்கத்தின் தங்கை மீனாட்சியின் மீதும் புகார் பதிவு செய்து சிறையிலடைத்தனர். இதனால் இராமலிங்கம் தற்காலிகமாகப் பணியை இழந்தார். மீனாட்சியின் திருமணமும் நின்று போனது.

## 11. திருட்டு வழக்கில் அனைத்து ஒட்டர்களும் கைது

தேனி மாவட்டம், சின்னமன்னூருக்கு அருகிலுள்ளது காமாட்சிபுரம். இங்கு ஒட்டர்களும் பிற சமூக மக்களும் வாழ்ந்து வருகின்றனர். காமாட்சிபுரத்தை சேர்ந்த பிச்சையம்மாள் என்பவருடைய வீட்டிலிருந்து 06.09.09 அன்று 11 பவுன் நகையும், 47,000 ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றவர்களை கண்டறிய முடியாத காவல்துறையினர் அந்தக் கிராமத்தில் உள்ள 27 ஒட்டர் குடும்பத்திலுள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரையும் கைது செய்து கைரேகையை பெற்றுக் கொண்டு படக்காட்சியாகப் *(video)* பதிவு செய்துள்ளனர்.

## 12. மாற்றுத்திறனாளியைத் துன்புறுத்திய காவல்துறை

சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுக்காவில், கூனாண்டியூர். இங்கு வசிப்பவர் அய்யாத்துரை (40) இவர் மாற்றுத்திறனாளி ஆவார். 27.09.09 அன்று பேருந்து நிலையத்தில் இருந்த அய்யாத்துரையிடம் காவலர்கள், கள்ளத்தனமாக எங்கு மது விற்கப்படுகிறது என்று கேட்டனர். மாமூல் வாங்கும் காவல்துறைக்குத்தான் தெரியும் என்று அய்யாதுரை பதிலுரைத்தார். ஆத்திரம் அடைந்த காலவர்கள் அய்யாதுரையை வாகனத்தில் ஏற்றி சுண்டு விரலிலேயே லத்தியால் பலமுறை அடித்தும், கீழே தள்ளியும் துன்புறுத்தினர். நாயே, தாயோழி என தகாத வார்த்தைகளைக் கூறி இழிவுப்படுத்தி அவரிடம் இருந்த ரூ. 2500/- ரூபாய் பணத்தை பிடுங்கிக் கொண்டனர். அப்பாவியான அய்யாதுரையிடம் கைரேகையை வாங்கிக் கொண்டு குற்ற எண் 601/09 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294ல் வழக்கு பதிவு செய்தனர்.

## 13. குடிபோதையில் காவல்துறையினர் அத்துமீறல்

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தாலுக்காவில் உள்ளது இடிந்தகரை. கடற்கரை கிராமம். 25.08.2009 அன்று விநாயகர் சதுர்த்தி திருநாளை முன்னிட்டு இரவு இசை கச்சேரி இடிந்த கரையில் நடைபெற்றது. அப்போது பாடிய பாடல்களுக்கு இளைஞர்கள் நடனம் ஆடினர். இசை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக கூடங்குளம் காவல் ஆய்வாளர் ஜெயச்சந்திரனும் சில காவலர்களும் குடி போதையில் அங்கு வந்தனர். ஆடிக் கொண்டிருந்த இளைஞர்களை ‘பற நாய்களா’ என்று இழிவுப்படுத்தி அடித்தனர். இதனால் இளைஞர்களுக்கும், காவல்துறைக்கும் இடையே தள்ளுமுள்ளு நடந்தது. ஆத்திரமடைந்த காலவர்கள் 24.08.09 அன்று இரவு 12 மணிக்கு சோதனை என்ற பெயரில் வீட்டிலிருந்தவர்களை அடித்தும், சாதி பெயரைக் கூறி இழிவுப்படுத்தியும் பெண்களை தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் அவமானப்படுத்தியும் இளைஞர்களை கைது செய்தனர். மீனவர்களின் மோட்டார் எஞ்சின்களையும் களவாடிச் சென்றனர்.

## 14. புகார் கொடுத்த பெண்ணை அவமானப்படுத்திய காவல்துறை

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுக்காவில் உள்ளது கிளியூர். இங்கு விவசாயக் கூலித் தொழிலாளியாக பணி செய்பவர் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த அமுதா. அமுதாவிற்கும் அவருடைய அக்கா முருவாயிக்கும் சொந்தமான இடத்தில் உள்ள பொதுப்பாதையை முருவாயி அடைத்துள்ளார். அந்த இடத்தை அமுதாவால் பயன்படுத்த முடியவில்லை. இதனால் 21.08.09 அன்று திருநாவலூர் காவல் நிலையத்தில் அமுதாவும் அவருடைய உறவினர் குமரேசனும் புகார் செய்தனர். அமுதாவையும், முருவாயியையும் விசாரித்த காவல்துறை உதவி ஆய்வாளர் கலியமூர்த்தி 1000 ரூபாயை அமுதாவிடமிருந்து லஞ்சமாகப் பெற்றுக் கொண்டு ‘தேவிடியா’ என்று அவமானப்படுத்தியும் புகார் கொடுக்க வந்த குமரேசனுடன் அமுதாவை இணைத்து நடத்தையையும் கேவலப்படுத்தினார். புகாரைப் பதிவு செய்யாமல் முருவாயியின் சார்பாக உதவி ஆய்வாளர் கலியமூர்த்தி செயல்பட்டார்.

## 15. காவல்துறையின் அச்சுறுத்தலில் தற்கொலை முயற்சி

தூத்துக்குடி அமுதாநகரில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த இசக்கிராஜ் வசித்து வருகிறார். இவர் திருட்டு வழக்கில் தண்டனைப் பெற்று தற்போது ஆட்டோ ஓட்டுநராகப் பணியாற்றுகிறார். ஆனால் திருடாத குற்றத்திற்காகக் காவல்துறை இசக்கிராஜ் மீது தொடர்ந்து திருட்டு வழக்கில் கைது செய்ய முயற்சித்த போது 18.08.08 அன்று மாவட்ட ஆட்சியாளரிடம் இசக்கிராஜ் புகார் செய்தார். இதனை அறிந்த காவல் துறை அன்று இரவே அவரைப் பிடிக்க திட்டமிட்டு வீட்டிற்கு வந்தது. ஆனால் அவர்களிடமிருந்து தப்பித்து 20.08.08 அன்று காவல்துறையின் தொந்தரவையும், அச்சுறுத்தலையும் தாங்க முடியாமல் விஷம் குடித்தார். மருத்துவமனையிலிருந்து குணமான இசக்கிராஜை மீண்டும் காவல்துறை 27.08.08 அன்று கைது செய்து சிறையிலடைத்தது.

## 16. பணம் தராததால் இளைஞர்களைச் சித்திரவதை செய்த வனத்துறையினர்

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் உள்ளது பையர்நாயக்கன் பாளையம். இங்கு வன்னியர் சமூகத்தை சேர்ந்த அன்பு என்பவர் ஓட்டுநராக பணி செய்து வருகிறார். இவரும் இவருடைய நண்பர் பன்னீரும் 27.04.09 அன்று தெரிந்த நபரிடம் காட்டுப்பன்றி இறைச்சியை வாங்கிக் கொண்டு இரு சக்கர வாகனத்தில் வந்தனர். அவர்கள் எதிரே வன அலுவலர்கள் வரவும் இறைச்சியையும், இருசக்கர வாகனத்தையும் போட்டு விட்டு ஓடி விட்டனர். 28.04.09 அன்று விசாரணைக்காக அன்புவையும், பன்னீரையும் அழைத்த வன அலுவலர்கள் மகேந்திரன், கணபதி ஆகிய இருவரும் ரூ. 75000/- பணம் கேட்டனர். அவர்கள் 40,000/- பணம் தருவதாக கூறியதை ஒப்புக் கொள்ளாத அலுவலர்கள் அன்புவையும், பன்னீரையும் மூங்கில் கம்பால் உடல் முழுக்கத் தாக்கினர். குற்ற எண் 4/09, வன உயிர்பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1882 *TN F /Act* பிரிவு 21 *D* ன் கீழ் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

## 17. முன்னாள் ராணுவ ஊழியரைத் தாக்கிய காவலர்கள்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, ரெட்டமலைசீனிவாசன் பேட்டையில் வசிப்பவர் சிவா. வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த இவர் ராணுவத்தில் பணியாற்றிவர். 30.09.09 அன்று இரவு 11 மணிக்கு *ATM* மையத்திற்கு சென்று விட்டு தன் இருசக்கர வாகனத்தில் வந்த சிவாவை, திருப்பத்தூர் காவல் நிலையம் அருகே குடிபோதையில் வாகனச் சோதனையில் ஈடுபட்ட உதவி காவல் ஆய்வாளர் வழிமறித்து நிறுத்தினார். யாருடா நீ, என்று மரியாதைக் குறைவாக பேசவும், மரியாதையாக நடந்துக் கொள்ளுங்கள் நான் ஆர்மி என்று சிவா கூறினார். இதனால் ஆத்திரமடைந்த ஆய்வாளர் லட்சுமி என்னடா மயிறு ஆர்மி என்று பணியை இழிவு செய்து பூட்ஸ் காலால் எட்டி உதைத்து, சாலையிலேயே துன்புறுத்தினார். காவல் நிலையம் அழைத்துச் சென்று தரையில் உட்காரச் செய்தும், வெள்ளைத்தாளில்

கையெழுத்துபோடுமாறும் வற்புறுத்தினார். மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர், மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளரிடம் சிவா புகார் தெரிவித்தும் பணியில் இருக்கும் போது குடிபோதையில் சித்திரவதை செய்த ஆய்வாளர் லட்சுமி மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 18. காவலர்-கைதிகள் மோதல்: துப்பாக்கிச் சூடு

மதுரை மத்தியச் சிறையிலிருந்த கொலை, கொள்ளை, திருட்டு போன்ற வழக்குகளில் ஈடுபட்ட 11 கைதிகளை 05.03.2009 அன்று சிவகாசி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திவிட்டு மீண்டும் மதுரைக்கு வரும் போது கைதிகள் குடிப்பதற்கு குடிநீர் கேட்டனர். அதற்கு தாமதப்படுத்தியதால் வாய்ச்சண்டை ஏற்பட்டது. அப்போது ரமேஷ்குமார் எனும் கைதி வாகனத்திலேயே புகைப்பிடித்ததால் அதனைக் கேட்ட காவலரைச் சட்டையைப் பிடித்தார் ரமேஷ்குமார். இதனால் கைதிகளை அமைதிப்படுத்த வாகனத்திற்குள்ளிருந்தே வானத்தை நோக்கி சுட்டதில் வாகனம் சேதமடைந்தது. காவலர்களுடன் தகராறு செய்த ரமேஷ்குமார் மீதும் அவருக்கு ஆதரவு அளித்த மற்ற கைதிகள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 19. மாற்றுத்திறனாளியை அடித்து சித்திரவதை

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, சூருக்குடியைச் சேர்ந்தவர் கனகராஜ். இந்து பிரான்மலை கள்ளர் வகுப்பைச் சேர்ந்த இவர் இரு கால்களும் செயல் இழந்து நடக்க இயலாத நிலையில் தையல் ஆசிரியராக பணி செய்கிறார். இவருடைய நண்பராகிய கண்ணனும் பிரியா என்பவரும் காதலித்து எதிர்ப்பைச் சமாளிக்க இயலாமல் எங்கோ ஓடிச் சென்றனர். 27.09.09 அன்று எஸ்.வி மங்கலம் ஆய்வாளர், கனகராஜை விசாரணைக்காகக் காவல் நிலையம் அழைத்துச் சென்று தகாத வார்த்தைகளால் திட்டியும், நொண்டி என்று இழிவுப்படுத்தியும், துப்பாக்கியால் சுட்டு விடுவேன் என்று மிரட்டியும் இரவு முழுக்க இரும்பு பூண் போட்ட லத்தியாலும், அடித்து சித்திரவதை செய்தனர். இதனை வெளியே கூறினால் குடும்பத்தோடு கொலை செய்வேன் என்றும் மிரட்டல் விடுத்தார். 03.10.09 அன்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த கனகராஜுடன் சமரசம் செய்து கொள்ளுமாறு ஆய்வாளர் களஞ்சியம் மிரட்டினார். அதற்கும் மறுத்த கனகராஜை போலீசை பகைத்துக் கொண்டு வாழ முடியாது என்று எச்சரிக்கை விடுத்தார்.மாவட்ட ஊனமுற்றோர் நல அலுவலர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வருவாய் கோட்டாட்சியர், தமிழக முதல்வர் என அனைவருக்கும் புகார் அளித்தும் பாதிப்பை ஏற்படுத்தியக் காவலர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 20. காவல்துறையின் துன்புறுத்தலால் தற்கொலை செய்து கொண்ட பெண் தொழிலாளி

கோவை, மட்டச்சாலைப் பகுதியில் வசிப்பவர் சுரேஷ்குமார், சுமதி தம்பதியினர். தொட்டிநாயக்கர்சமூகத்தைச் சேர்ந்த சுமதி கட்டிட தொழிலாளியாக பணி செய்தார். பி. 12 உக்கடம் காவல்நிலைய பெண் காவலர்கள் சுமதியின் கணவர் சுரேஷ்குமாரை

காவல்துறையின் வாகனத்தில் ஏற்றிதற்போது திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பெயரைக் கூறு என்று கேட்டதற்கு சுரேஷ்குமார் தெரியாது எனக் கூறியதால் இரும்புக் கம்பியால் அவரை அடித்துத் துன்புறுத்தினர். வீட்டில் இருந்த பொருட்களையும் சோதனையிட்டனர். அவருடைய மனைவி சுமதியையும் அடித்து சித்திரவதை செய்தனர். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக உக்கடம் பி. 12 காவல் நிலைய பெண் காவலர்கள் தொல்லையும் சித்திரவதையும் செய்து வந்ததால் 01.08.09 அன்று சாணிபவுடரை அருந்தி சுமதி இறந்து போனார். குற்ற எண் 516/09 குற்றவியல் தண்டனைச் சட்டம் 174ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 21. திருடாதவருக்குத் திருட்டுபட்டமும் சித்திரவதையும்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்காவில் உள்ள தர்ணம்பேட்டை லட்சுமி டிரேடர்ஸ் மளிகைக் கடையில் 10 ஆண்டுகளாக பணி செய்பவர் கவரை நாயுடு சமூகத்தை சேர்ந்த அரி. இவர் 25.06.09 அன்று தன்னுடைய கடை முதலாளி அய்யாசாமியின் வீட்டிற்குள் இருந்த குடோனில் பொருட்களை வைக்கச் சென்ற போது அந்த வீட்டுப் பூட்டை உடைத்து திருடப்பட்டிருந்தது. இதனால் அரியின் மீது சந்தேகப்பட்டு குடியாத்தம் காவல் ஆய்வாளர் விஜயக்குமார் அரியை விசாரணைக்காக 29.06.09 அன்று காவல்நிலையம் அழைத்துச் சென்று கை, கால், பிட்டம் என எல்லாப் பகுதிகளையும் லத்தியால் அடித்து சித்திரவதை செய்தார். சித்ரவதையில் அவருடைய நடுவிரல் முறிக்கப்பட்டது. அரசு மருத்துவர் ரவிக்குமாரும் காவல் நிலையச் சித்திரவதையால் அரியின் உடலில் காயம் ஏற்பட்டிருப்பதை மறைத்து காவல் ஆய்வாளர் விஜயக்குமாருக்கு ஆதரவாக செயல்பட்டார். குற்ற எண் 397/09, இந்தியத் தண்டனைச் சட்டப்பிரிவுகள் 454, 380ன் கீழ் அரியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 22. காவலர்கள் தொடர் தொந்தரவும் பணம் பறிப்பும்

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுக்கா ஸ்ரீராமபுரத்தில் செல்போன் வியாபாரம் செய்து வருபவர் பாலாஜி. சிவகங்கை மாவட்டம் கீழ் செவல்பட்டியிலுள்ள ஒரு பெட்ரோல் பங்கிலிருந்து கொள்ளையடித்த போது எடுத்த செல்போனை பாலாஜியின் கடையில் விற்றுள்ளனர். இதனால் 22.07.09 அன்றிலிருந்து கீழ்செவல்பட்டி காவல் ஆய்வாளர் மணியழகன் பாலாஜியிடம் விற்ற நபரை கேட்டு சுமார் ஒரு மாத காலத்திற்கு மேல் தொந்தரவு கொடுத்துவந்தார். விற்ற நபரை கூறவில்லை எனில் பாலாஜியை கைது செய்து சிறை வைக்கப் போவதாகக் கூறி தொடர்ந்து தொந்தரவுகளையும் தந்து பணம் பறித்து வந்தார். குற்றவாளிகளை கைது செய்ய இயலாமல் பாலாஜியின் கைரேகையையும், அவரை புகைப்படம் எடுத்தும் திருட்டுக் குற்றவாளியாக ஆக்குவதற்கு முயற்சித்துள்ளனர்.

## 23. புகார் கொடுத்தவர் மீதே புகார்: காவல் துறை சித்திரவதை

சிவகங்கை மாவட்டத்திலுள்ள படமாத்தூர் கிராமத்தில் தேநீர் கடை வைத்திருப்பவர் பாலு (48). இவர் கோனார் சமூகத்தைச் சேர்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவர் பாலுவுக்குச் சொந்தமான தேக்கு மரக் கன்றுகளை அழித்தும், வயல்வேலிகளை பிடுங்கியும் தொல்லை கொடுத்து வந்தார். இதனால் பூவந்தி காவல் நிலையத்தில் பாலு புகார் அளித்தார். சார்பு ஆய்வாளர் தனபால் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததினால் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் பாலு 22.12.08 அன்று புகார் அளித்தார். இதனால் கோபமடைந்த கிருஷ்ணனும், அவரது மகன்கள் பாண்டி, கண்ணன், நீதிராஜன் ஆகியோரும் உருட்டைக் கட்டையால் பாலுவை தாக்கினர். இதனைப் புகார் அளிக்க பூவந்தி காவல் நிலையம் சென்ற பாலுவை கெட்ட வார்த்தைகளை கூறி இழிவுப்படுத்தியும், பூட்ஸ் கால்களால் உதைத்தும் சார்பு ஆய்வாளர் தனபால் துன்புறுத்தினார். மேலும் அவரிடமிருந்த 900 ரூபாய் பணத்தையும், 1/2 பவுன் மோதிரத்தையும் பிடுங்கிக் கொண்டார். குற்ற எண் 14/09, u/s 427, 324, 323, இந்திய தண்டனை பிரிவுகளின் கீழ் கிருஷ்ணன் மீதும், குற்ற எண் 15/09, u/s 341, 294 (b), 323, 506 (ii) இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் கீழ் புகார் அளிக்கச் சென்ற பாலுவின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சிவகங்கை கிளைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

## 24. சந்தேகத்தின் பெயரில் ஆட்டோ ஓட்டுநர் சித்திரவதை

காரைக்கால் தென்றல் நகர் பகுதியில் ஆட்டோ ஓட்டுநராக பணி செய்பவர் ஜாகீர் உசேன். கோட்டுச்சேரி பகுதியில் நடந்த சரவணன் கொலை தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என 26.10.09 அன்று கோட்டுச்சேரி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற காவல் ஆய்வாளர் மாரிமுத்து, உதவி ஆய்வாளர் லெனின் பாரதி, ஜாகீர் உசேனைக் கட்டித் தொங்க விட்டு உருட்டுக் கட்டையால் தாக்கினர். தொடர்ந்து பாதத்திலேயே சித்திரவதை செய்ததால் அவரால் நடக்க இயலாமல் போனது. ஜாகீர்உசேனுக்கு கேட்கும் திறன் குறைவாக இருந்தமையால் காவலர்கள் கேட்ட கேள்விக்கு அளித்த பதிலும் அவருக்கு சரிவர தெரியவில்லை. 20 முறைக்கு மேல் விசாரித்த கோட்டுச்சேரி காவலர்கள் சித்திரவதை செய்து காரைக்கால் பேருந்து நிலையத்தில் அப்படியே ஜாகீர்உசேனை விட்டுச் சென்றனர். மிகவும் பயந்த நிலையில் யார் மீதும் புகார் கொடுக்கும் மனநிலையின்றி ஜாகீர் உசேன் வாழ்ந்து வருகிறார்.

## 25. ஓட்டுநரை இரவு முழுக்க கொடுமைப்படுத்திய காவல்துறை

திருப்பூர் மாவட்டம், பெரிச்சபாளையத்தில் ஓட்டுநராக பணி செய்பவர் அருள்ராஜ் (35) என்பவர். இவர் பள்ளர் சாதியைச்சேர்ந்தவர். 14.10.09 அன்று பல்லடம் காவலர்கள் ஆக்டிங் ஓட்டுநர் வேண்டும் என்று கூறி காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். பணத்தை

திருடியதற்காக அருள்ராஜின் மீது சந்தேகம் கொண்டு அவரது கை, கால்களை இரும்பு சங்கிலியால் கட்டி, வாயில் துணியை வைத்து லத்தி மற்றும் இரும்புக் கம்பியால் இரவு முழுக்க அடித்து சித்ரவதை செய்தும், தகாத வார்த்தைகளைக் கூறியும் இழிவுபடுத்தினர். அடித்ததை வெளியில் சொல்லக் கூடாது என்றும், எப்பொழுது கூப்பிட்டாலும் வர வேண்டும் எனவும் அருள்ராஜையும் அவருடைய மனைவியையும் மிரட்டி வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கிக் கொண்டு இந்திய தண்டனைச் சட்டம் 294 *(b)* பிரிவின் கீழ் அருள்ராஜின் மீது வழக்கு பதிவு செய்து 16.10.09 அன்று பல்லடம் காவல்துறையினர் விடுவித்தனர்.

## 26. புகார் கொடுத்தவருக்கு எதிராகச் செயல்பட்ட காவல்துறை

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் கஸ்தூரிபாய் தெருவைச் சேர்ந்தவர் ஐயப்பன் (53). வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த இவர் ஓட்டுநராகப் பணி செய்து வந்தார். ஐயப்பனுக்கும் அவருடைய அண்ணன் மூர்த்திக்கும் நீண்ட நாட்களாக நிலப்பிரச்சனை இருந்தது. பிரச்சனைக்குரிய அந்த இடத்தை அதே ஊரைச் சேர்ந்த தஸ்தகீர் என்பவருக்கு விற்று விட்டதாகக் கூறி தஸ்தகீரும், 20 அடியாட்களும் ஐயப்பனை காலி செய்ய கோரி 04.02.09 அன்று மிரட்டல் விடுத்தனர். இதனால் திருப்பத்தூர் காவல் நிலையத்தில் ஐயப்பன் 04.05.09 தேதி புகார் அளித்தார். புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காவல்துறை துணை ஆய்வாளர் வாசுகி 07.04.09 அன்று ஐயப்பன் வீட்டிற்குச் சென்று அவருடைய மனைவியை தகாத வார்த்தைகளால் திட்டி ஐயப்பனை காவல் நிலையத்திற்கு வரக் கூறினார். காவல் நிலையம் சென்ற ஐயப்பனையும் தகாத வார்த்தைகளால் திட்டியும், பூட்ஸ் காலால் அடித்து சித்திரவதை செய்து போக்குவரத்துக்கு இடையூறு செய்ததாக, குற்ற எண் 539/09 பிரிவு 294 *(B)* இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஐயப்பனின் புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காத திருப்பத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் பூஞ்சோலை, துணை ஆய்வாளர் வாசுகி, உலகநாதன், ஏட்டு சிங்காரவேலு ஆகியோர் தஸ்தகீருக்கு சாதகமாகவே செயல்பட்டார்கள்.

## 27. பாதிப்பை ஏற்படுத்தியோரைக் கைது செய்யாத காவல் துறை

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்காவில் உள்ள ஊசூரான்பட்டி கிராமத்தில் வசிப்பவர் நீலகண்டன். வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த இவர் தீப்பெட்டி தயாரிக்கும் தொழில் செய்து வருகிறார். அதே ஊரில் வசிப்பவர் நீலகண்டனின் உறவினர் மணி. இவர் காவல் உதவி ஆய்வாளராகயிருந்து ஓய்வு பெற்றவர். இவரது மகன் சதீஷ் (30) சிறப்பு அதிரடிப்படையில் பணி செய்தார். இந்த அதிகாரப் பின்புலத்தைக் கொண்டு நீலகண்டனுக்கு சேர வேண்டிய நிலத்தை சரியாகப் பங்கீடு செய்யாமல் நீண்ட நாட்களாகக் காலம் தாழ்த்தினார். இதனை நீலகண்டன் காவல்துறையிடம் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும்

எடுக்கப்படவில்லை.25.12.08 அன்று சதீஷ் மற்றும் அவரது உறவினர்கள் நீலகண்டனிடம் வீட்டை அடித்து நொறுக்கி அவருடைய மனைவி விஜியாவை சேலையை அவிழ்த்து மானபங்கம் செய்தனர். இதனை தட்டி க்கேட்ட நீலகண்டன் தலையில் அரிவாளால் வெட்டினர். சித்திரவதையின் தொடர்ச்சியாக பொது மக்கள் நீண்ட காலமாக பயன்படுத்தி வந்த பொதுப் பாதையையும் கல்லைப்போட்டு அடைத்தனர். 29.12.08 தேதி வரை உள்நோயாளியாக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 02.01.09 அன்று புகார் அளித்தனர். ஆயினும் பாதிப்பை ஏற்படுத்தியும், கொடூரமாக தாக்குதலையும் கொடுத்த பொது வழியை ஆக்கிரமிப்பு செய்த மணி மற்றும் அவரது குடும்பத்தினர் மீது பேர்ணாம்பட்டு காவல் துறை எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. குற்ற எண் 1234/08, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 147, 148, 294 (b), 324, 323, 307 கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 28. காவலர்களின் தொந்தரவு: தற்கொலைக்கு முயன்ற தொழிலாளி

திருப்பூர் பாண்டியன் நகரைச் சேர்ந்த முருகேஷ் இரு சக்கர வாகன பழுது நீக்கும் பணியாளர். இவர் தேவாங்க செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர். 06.06.09 அன்று வீரப்பன் சத்திரம் காவல் நிலைய காவலர்கள் 6 பேரும், துணை ஆய்வாளர் ஜெகநாதனும் திருடிய வண்டியை விலை கொடுத்து முருகேஷ் வாங்கியதாக ஈரோடு காவல் நிலையம் அழைத்துச் சென்று விற்ற வண்டியை கொண்டு வா அல்லது 50,000 ரூபாய் பணம் கொடு என்று மிரட்டினர். வேறு வண்டியை தருவதாக முருகேஷ் ஒப்புக் கொண்டதால் முருகேஷை காவலர்கள் விடுவித்தனர். ஆனால் காவலர்கள் தொடர்ந்து தொலைபேசியில் வண்டியை கொடு, பணம் கொடு என்று தொந்தரவு செய்ததால் 10.06.2009 அன்று முருகேஷ் விஷம் அருந்தினார். திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வீடு திரும்பினார்.

## 29. இஸ்லாமியத் தொழிலாளியைச் சாலையில் சித்திரவதை செய்த பெண் காவலர்

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் சுவரொட்டி ஒட்டும் தொழிலாளியாக இருப்பவர் மன்சூர் அலிகான்.04.05.09 பாரதீய ஜனதா கட்சியின் கொடியை கட்டிக் கொண்டிருந்ததை (கூலிக்காக) பார்த்த கீழக்கரை சார்பு ஆய்வாளர் ஜெயதேவி, இஸ்லாமியர் ஒருவர் இந்து கட்சியின் கொடியை கழற்றுகிறார் என்று பொதுச் சாலையிலேயே மன்சூர் அலிகானை தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியும் இரும்பு பூண் போட்ட லத்தியால் அடித்தும் சித்ரவதை செய்தார். கீழக்கரை காவல் நிலையம் அழைத்து சென்று பயிற்சி துணை ஆய்வாளர் பார்த்திபன் மற்றும் தலைமைக் காவலர்களும் இணைந்து மன்சூர் அலிகானை அரை நிர்வாணப்படுத்தி லத்தியால் அடித்துத் துன்புறுத்தி 300 ரூபாயை அபராதமாக கட்டுமாறு கூறினார்கள். அடித்ததை வெளியே கூறினால் நிம்மதியாக வாழ முடியாது என்று மிரட்டி கீழக்கரை காவலர்கள் மன்சூர் அலிகானை விடுவித்தனர்.

## 30. கொடுத்த பணத்தைத் திரும்பக் கேட்டவருக்கு வெட்டு,

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் துணி வியாபாரம் செய்து வருபவர் குணசேகரன் (44). இவர் ஈடிகர் நாயுடு சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் அதே ஊரைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவருக்கு 1,20,000 ரூபாயை கடனாகக் கொடுத்தார். அந்த பணத்தை 14.01.2009 அன்று திரும்பக் கேட்ட குணசேகரனை தேவிடியாப் பையா என்று தகாத வார்த்தைகளைக் கூறி இழிவுப்படுத்தியதோடு அவருடைய தலை மற்றும் விரல்களை அரிவாளால் ரவிச்சந்திரன் வெட்டினார். 14.01.2009 முதல் 23.01.2009 வரை ஆம்பூர் மற்றும் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற குணசேகரன் ஆம்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஆனால் ஆம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் இருதயராஜ் ரவிச்சந்திரனிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு இந்த கொலை முயற்சியை சாதாரண வழக்காக பதிவு செய்து, ரவிச்சந்திரனை தப்பிக்க விட்டார்.

## 31. பொய் வழக்கு போட்டுத் தம்பதிகள் சித்திரவதை

நெல்லை மாவட்டம், சங்கரன்கோவிலுள்ள சுப்புலாபுரத்தில் வசித்து வருபவர் செல்வம் (26). செங்குந்த முதலியார் வகுப்பை சார்ந்த இவர் விஜயலட்சுமி என்பவருக்கு சொந்தமான நெசவுக் கூடத்தில் பணி செய்கிறார். 01.12.2008 அன்று தன்னுடைய குழந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்று முதலாளி விஜயலட்சுமியிடம் செல்வம் பணம் கேட்டார். அப்போது விஜயலட்சுமியின் வீட்டில் ஒரு ஜோடி கம்மலும், கைப்பேசியையும் காணவில்லை எனவும், அதனை செல்வம் தான் எடுத்துள்ளார் என்று அவரை வேலையிலிருந்து உடனே நிறுத்தி, கொடுத்த முன் பணம் ரூ. 10,000/-யும் வாங்கிக் கொண்டார். 03.12.08 அன்று கரிவலம்வந்தநல்லூர் உதவி ஆய்வாளர் துரைசாமி செல்வத்தின் வீட்டை சோதனையிட்டு காவல் நிலையத்திற்கு செல்வத்தையும் அவர் மனைவி மகேஸ்வரியையும் கொண்டு சென்று நிர்வாணப்படுத்தி தகாத வார்த்தைகளை கூறி இழிவுபடுத்தியும், பூட்ஸ் கால்களால் உதைத்தும் சார்பு ஆய்வாளர் ரெலினா துன்புறுத்தினார். கணவனின் பிறப்புறுப்பை நசுக்கியும்,சங்கிலியால் கட்டியும் சுவரில் மோதியும் சித்திரவதை செய்தார். அடித்ததை வெளியே கூறினால் மனைவியை விபச்சார வழக்கில் சிறையிலடைப்போம் என்று மிரட்டி, விஜயலட்சுமியிடம் லஞ்சமாக 5000 ரூபாயை பெற்றுக் கொண்டு குற்ற எண் 250/08 பிரிவு 381 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 10,000/- ரூபாயை திருடியதாக பொய் வழக்கு போட்டு செல்வத்தை சங்கரன் கோவில் சிறையில் அடைத்தனர்.

## 32. அப்பாவித் தொழிலாளிகளைத் துன்புறுத்திய துணை இராணுவத்தினர்

திருப்பூர், செட்டிப்பாளையத்தில் மகாலட்சுமி ஐயங்கார் பேக்கரியில் வேலை பார்ப்பவர்கள் சுரேஷ் மற்றும் வேலாயுதம். 27.04.09 அன்று துணை ராணுவப்படையைச் சேர்ந்த ஜோகேஷ்குமார் என்பவர் குடிபோதையில் பேக்கரியில் தேநீர், பிஸ்கட் சாப்பிட்டு விட்டு பணம் கொடுத்த போது இன்னும் பணம் தர வேண்டும் என்று வேலாயுதம் விரல்களால் செய்கை காட்டினார். இதனைப் புரிந்து கொள்ளாமல் வேலாயுதம் மற்றும் சுரேஷ் ஆகியோரை நெஞ்சு, கை, கால்கள் என 20க்கும் மேற்பட்ட துணை இராணுவத்தினர் அடித்து துன்புறுத்தினர். இந்த தாக்குதலில் தொழிலாளர்கள் சுரேஷ் மற்றும் வேலாயுதத்திற்கு மூக்கு உடைந்து, கை, கால்களில் முறிவு ஏற்பட்டது. அவர்களை அடித்ததோடு, வாகனத்தில் ஏற்ற முயற்சிக்கவும் பொது மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதனால் இராணுவத்தின் சுரேஷையும் வேலாயுதத்தையும் விட்டு சென்றனர். சுரேஷினுடைய புகாரின் பேரில் குற்ற எண் 71/09 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 323, 147-ன் கீழ் 20 ராணுவத்தின் மீதும், ஜோகேஷ்குமார் கொடுத்த புகாரின் பேரில் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 324ன் கீழ 20 பேரின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 33. கம்யூனிஸ்ட் கட்சிப் பொறுப்பாளரைப் பொதுச்சாலையில் அடித்த சார்பு ஆய்வாளர்

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், சக்கம்பட்டியைச் சேர்ந்தவர் வெங்கடேசன். கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த இவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயற்குழு உறுப்பினராகவும், *CITU* சங்கத்தின் மாவட்ட செயலாளராகவும் பணியாற்றுகிறார். 31.03.2009 தன்னுடைய பணியை முடித்து விட்டு வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த வெங்கடேசனை ஆண்டிப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முத்துபிரேம்சந்த் மரியாதையில்லாமல் அழைக்கவும் ‘மரியாதை கொடுங்கள்’ என்று சொன்ன வெங்கடேசனை கன்னத்தில் அறைந்து அவமானப்படுத்தி காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றார். தன்னுடைய பணியையும் சென்று வந்த இடத்தையும் கூறிய பின்பும் மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் தொலைபேசியில் பேசிய பிறகும் வேண்டுமென்றே குற்ற எண் 198/09, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b) -ன் கீழ் பொய் வழக்கை வெங்கடேசன் மீது பதிவு செய்து அதிகாலை 4 மணிக்கு விடுவித்தார். வெங்கடேசன் அதிகாரிகளிடம் மேல் முறையீடு செய்த பின்பும் எவ்வித நடவடிக்கையும் சார்பு ஆய்வாளர் மீது எடுக்கப்படவில்லை.

## 34.ஓட்டுநரை சித்திரவதை செய்து சட்டவிரோதக் காவல்

சென்னை, தண்டையார் பேட்டை வட்டம், கொடுங்கையூரைச் சேர்ந்தவர் உமாபதி (35). நாயுடு சமூகத்தைச் சேர்ந்த இவர் ஓட்டுநராக பணி செய்கிறார். இவரோடு பணி செய்யும் மகாகாந்தி என்பவர் திருட்டு லாரிகளை விற்பார். காந்தியோடு உமாபதிக்கு பழக்கம் இருந்ததால் அரும்பாக்கம் காவல் ஆய்வாளர் ரமேஷ் 30.04.09 அன்று உமாபதியை அழைத்துச் சென்று அடித்து சித்திரவதை செய்து ஒருநாள் காவலில் வைத்து விடுவித்தனர்.

## 35.பேருந்தில் பாலியல் தொந்தரவு செய்த காவலர்

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தாலுக்காவிலுள்ள, சேத்தூர் தேசிய மனித உரிமை கழகத்தில் மகளிர் பிரிவு தலைவியாக இருப்பவர் மறவர் சமூகத்தைச் சேர்ந்த தவம் பெற்ற நாயகி (41). 13.12.2008 அன்று இவர் சேத்தூரிலிருந்து ராசபாளையத்திற்கு பேருந்தில் வந்து கொண்டிருந்த போது பறையர் சமூகத்தைச் சேர்ந்த காவலர் ரவிக்குமார் என்பவரும் பயணம் செய்தார். அப்போது ரவிக்குமார் தவம்பெற்ற நாயகியிடம் பாலியல்ரீதியாகத் தவறாக பேசியுள்ளார். இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதனால் தவம்பெற்றநாயகி மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளிப்பதாகக் கூறினார். அதற்கு காவலர் ரவிக்குமார் தவம்பெற்ற நாயகியின் வயிற்றைப் பிடித்து அமுக்கிவிட்டு இதையும் போய் சொல்லு எனக் கூறியுள்ளார். மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் முருகேசனிடமும், ராசபாளையம் தெற்கு காவல் ஆய்வாளர் விஜயகாண்டீபனிடமும் தவம்பெற்றநாயகி புகார் அளித்தார். பெண் காவலர்கள் விசாரணை செய்யாத நிலையில் 4 ஆண் காவலர்களே விசாரணை செய்தனர். காவலர் ரவிக்குமார் குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் சமரசம் செய்யவே ஆய்வாளர் முயன்றார். சமரசம் செய்து புகாரை திரும்ப பெறவில்லை எனில் தவம்பெற்ற நாயகியின் மீது பொய் வழக்கில் சிறைக்கு அனுப்புவதாகவும் மிரட்டல் விடுத்தனர்.

# காவல்நிலைய வன்முறை / மரணங்கள்

காவல் நிலைய சித்திரவதையில் உடல் ரீதியான சித்திரவதைகளின் வகைகள்:

- பூட்சு கால்களால் உதைப்பது ,
- அந்தரங்க உறுப்புகளைத் தாக்குவது,
- பாதிக்கப்பட்டவர்களைப் படிகளிலிருந்தோ அல்லது மாடிப்படிகளிலிருந்தோ, சன்னலிருந்தோ அல்லது ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களிலிருந்தோ தள்ளி விடுவது,
- 'லாடம் கட்டுவது' , தொங்க விடுவது,
- **மூச்சுத்திணறடிக்கும் வதை முறை:** தலையையும் முகத்தையும் ஒரு பாலிதீன் பையால் வலுக்கட்டாயமாக மூடி மூச்சுத்திணறடிக்க செய்வது, மூச்சுத்திணறலை மேலும் தீவிரப்படுத்த அப்பாலிதீன் பையில் சிறிய அளவு பெட்ரோலோ அல்லது மண்ணெண்ணெயையோ அல்லது மிளகாய் தூளோ வைக்கப்படும்.
- வாளி அல்லது தொட்டியில் அல்லது பிளாஸ்டிக் தொட்டியில் நிறைந்திருக்கும் நீரில் ஒருவரின் தலையை மட்டும் மூழ்க வைத்து அந்தத் தண்ணீரில் இரத்தத்தையோ, சிறுநீரையோ அல்லது மலத்தையோ கலந்திடுவர். சில நேரங்களில் பாதிக்கப்பட்டவரை ஒரு கிணற்றுக்குள் தள்ளி அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும் வரை கிணற்றுக்குள்ளேயே வைத்திருப்பர்.
- **சூட்டின் மூலமாகச் சித்திரவதை:** ஒருவரின் உடல் தோலை சிகரெட்டின் மூலமாகவோ, தீயின் மூலமாகவோ கொதிநீர் மூலமாக அல்லது ஹீட்டர் அல்லது துணி தேய்க்கும் பெட்டியினாலோ புண்ணாக்குவது
- **மின்சாரத்தினால் சித்திரவதை:** அந்தரங்க உறுப்பு உள்ளிட்ட உடலின் மென்மையான பகுதிகளில் மின்சார அலைகள் பாய்ச்சப்படும். ஜெனரேட்டர்களில் இணைக்கப்பட்ட வயர்களின் மூலம் மின்சாரமானது பாதிக்கப்பட்டவர் மீது பாய்ச்சப்படும்.
- உடல் ரீதியாக சோர்வுற வைப்பது
- **பாலியல் சித்திரவதைகள்:** வன்புணர்ச்சி, மரியாதைக் குறைவாக இழிவான முறையில் தாக்குதல், கம்புகள், பாட்டில்கள், ஐஸ்கட்டிகள் அல்லது திரவம் போன்றவற்றைப் பெண்ணின்/ ஆணின் அந்தரங்க உறுப்பிலோ, மல வாயிலிலோ நுழைப்பது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடச் செய்தல். உறவினர்கள் முன்னிலையிலே பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்துதல்.
- பற்களை பிடுங்குதல், நகக்கண்களை பிடுங்குதல், ஊசி ஏற்றுதல்

**மற்ற வகைச் சித்திரவதைகள்:**

- தூங்க முடியாமல் செய்வது
- பல வகை மயக்கநிலை உள்ளிட்ட வலி ஏற்படுத்தும் மருந்துகளைப் பயன்படுத்துவது.
- உடலை முக்கியமாக அந்தரங்க உறுப்புகளை விலங்குகளிடம் காட்டுவது
- நீண்ட நேரம் கண்களைக் கட்டி வைத்திருப்பது
- நீண்ட நேரம் மிகப் பிரகாசமான விளக்கு ஒளிக்கோ, சூட்டிற்கோ அல்லது குளிர்ச்சிக்கோ உட்படுத்துவது.
- குடிக்கத் தண்ணீர் மறுப்பது
- நீண்ட நேரம் விசாரணை நடத்துவது
- முடியைப் பிடித்துத் தூக்குவது
- முடியைப் பலவந்தமாக வெட்டுவது அல்லது எரித்து விடுவது
- கைவிரல் நகத்தையோ அல்லது கால் விரல் நகத்தையோ பலவந்தமாகப் பிடுங்குவது.
- மிளகாய்த் தூளை உண்ணவோ அல்லது சூடான எண்ணெயைக் குடிக்கவோ கட்டாயப்படுத்துவது
- நாக்கை வெளியே இழுத்து மேல், கீழ்த்தாடைகளில் அதிக அழுத்தம் கொடுத்து பற்களுக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் நாக்கைக் கடிக்க வைப்பது, வண்டியில் கையை அல்லது கால்களைக் கட்டிப் புல்தரையில் அல்லது தார் ரோட்டில் அல்லது மலையில் தரதரவென்று இழுத்துச் செல்வது
- கண்களின் மேல் அழுத்தம் கொடுப்பது அல்லது திருகுவது, மார்பகங்களிலோ அல்லது அந்தரங்க உறுப்புகளிலோ அழுத்தம் கொடுப்பது
- ஊசியினாலோ, கத்தியுள்ள துப்பாக்கியினாலோ குத்துவது.
- மிளகாய்ப் பொடி அல்லது பெட்ரோல் புகை போன்ற எரிச்சலூட்டும் பொருட்களை கண்கள் மற்றும் ஆசன வாயிலில் காட்டுவது.

## NCRB அறிக்கையின் படி காவல்துறையால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் 2009

| புகார்கள் | நிறுவனத்தின் விசாரணைகள் | | | பொய் வழக்குகள் | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | துறை வாரியான நடவடிக்கைகள் | குற்றப் பத்திரிகை தாக்கல் / நீதி மன்ற விசாரணை |
|---|---|---|---|---|---|---|---|
| | துறை வாரியான விசாரணை | வருவாய்த் துறை விசாரணை | நீதிமன்ற விசாரணை | | | | |
| 54, 873 | 24,302 | 611 | 481 | 28,120 | 14,975 | 9,759 | 1,618 |

## NCRB அறிக்கையின் படி காவல்துறை மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த நிலை 2009

| நீதிமன்ற விசாரணை நடைபெற்ற வழக்குகள் | வாபஸ் பெறப்பட்ட வழக்குகள் | நீதி மன்ற விசாரணை முடிந்த வழக்குகள் | குற்றம் நிரூபிக்கப்பட்ட வழக்குகள் | விடுதலைப் பெற்ற வழக்குகள் |
|---|---|---|---|---|
| 1,279 | 132 | 142 | 43 | 99 |

*National Crime Record Buero (NCRB)* புள்ளிவிவரப்படி 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் காவல்துறையினர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மொத்தம் 54,873. அவற்றில் 1,279 வழக்குகளில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு 132 வழக்குகள் மட்டும் நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதில் 43 வழக்குகளில் மட்டும் தான் குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவைத் தவிர 15,356 வழக்குகளில் துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 647 காவல்துறையினர் மட்டுமே தற்காலிக பணி நீக்கம் மற்றும் பணியிலிருந்து விலக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவற்றில் 141 வழக்குகள் மட்டுமே தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணையங்களின் வழிகாட்டுதல்கள், ஆணையங்களின் தலையீடுகள் ஓரளவிற்கு பரவலாக்கம் செய்யப்பட்டிருக்கும் போதே 54,873 வழக்குகளில் காவல்துறையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர். மேற்கண்ட எண்ணிக்கையும் அரசு தரப்பு புள்ளி விவரங்கள் தான். ஆனால் பதிவு செய்யப்படாத, பரவலாக்கம் செய்யப்படாத ஏராளமான மனித உரிமை மீறல்கள் நாள்தோறும் காவல்துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழகத்தில் மக்கள் கண்காணிப்பகமும், மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கமும் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து கள ஆய்வு செய்த வழக்குகளில் சமாதானமான வழக்குகள், வாபஸ் பெறப்பட்ட வழக்குகள், கட்டப்பஞ்சாயத்து மூலம் தீர்க்கப்பட்ட வழக்குகள் தவிர்த்து கடந்த ஆண்டு மட்டும் மொத்தம் 35 வழக்குகள்

தற்போது தொடர் நடவடிக்கைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட வழக்குகளில் உள்ள காவல்துறையின் அத்துமீறல்களும், உண்மைகளும் கீழே கண்டறிந்தவைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## கண்டறிந்தவைகள்:

1) விசாரணை என்ற பெயரில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் காவல்துறையினரால் அடித்துச் சித்திரவதை செய்து கொலை செய்யப்படுகிறார்கள். விசாரணை செய்யப்படும் நபர்களின் உடல்மிகக் கொடூரமான முறையில் சிதைக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் காவல் நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் (அ) பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் நல்ல நிலையில் அனுப்புவதாக மிரட்டி பொய் கையொப்பம் பெற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அத்தகைய நபர்கள் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர். இந்நிலையில் அவர்களுடைய மரணங்கள் காவல்நிலைய மரணங்களாக இல்லாமல் சந்தேக மரணங்களாக வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

2) திருட்டு மற்றும் கொலை வழக்குகளில் உரிய குற்றவாளியை கண்டுபிடிக்க இயலாத காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் தலித் சமூகத்தை சேர்ந்த அப்பாவி நபர்களை வேண்டுமென்றே கைது செய்வதையும், குற்றத்தை ஒப்புக் கொள்ள சொல்லி சித்திரவதை செய்து அடித்து கொலை செய்து விடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். (உதா.) தூத்துக்குடி ஸ்ரீவைகுண்டம் இராமர்(எ) இராமச்சந்திரனும், காஞ்சிபுரம் நெற்குண்டம் சரவணனும். இவர்கள் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள்.

3) இரவுப் பணிக் காவலர்கள் பணி நேரங்களில் மது போதையில் உள்ளனர். அத்தகைய நேரங்களில் அவர்களிடம் புகார் கொடுத்தால் ஆத்திரத்தில் புகார் கொடுத்தவரை எரிச்சலூட்டியும், குற்றம் சாட்டப்பட்டவரை கொடூரமாகத் தாக்கியும் கொலை செய்துள்ளனர்.

4) திருட்டு வழக்குகளை, குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள கல் ஒட்டர் சமூகத்தின் மீது பொய் வழக்காகப் பதிவு செய்துள்ளனர்.

5) பெண்கள் காவல் நிலையங்களுக்கு புகார் கொடுக்கச் சென்றால் அலட்சியப்படுத்துவதோடு அவர்களுடைய நடத்தையை இழிவுப்படுத்தி புகாரை பதிவு செய்ய மறுத்துள்ளனர்.

6) போக்குவரத்துக் காவலர்கள் லஞ்சம் தராதவர்களை பொது மக்கள் முன்னிலையிலேயே லத்திக் கம்புகளால் அடித்தும், பூட்சுக் கால்களால் உதைத்தும் பணம் வசூலித்துள்ளனர்.

## பரிந்துரைகள்:

- ஒருவர் காவலில் இருக்கும் போது மரணமடைந்தால் சடலக் கூறாய்வு நடத்தப்பட்டு ஒளிநாடாவில் பதிவு செய்ய வேண்டும் எனவும், காவல் மரணம் ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள் தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு அறிக்கை அளிக்க வேண்டும் எனவும், தேசிய ஆணையம் அனைத்து மாநில அரசுகளையும் கேட்டுக் கொண்டுள்ளது. எனினும் பல்வேறு நிகழ்வுகளில் இம்முறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. எனவே கீழ்க்கண்ட வழிமுறைகள் சட்டமாக்கப்பட்டு, கடைபிடிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

- ஒருவரைக் கைது செய்யும் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி, உச்சநீதிமன்றம் டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க அரசு என்ற வழக்கில் விரிவாகக் கூறி உள்ளது. நீதிமன்ற உத்தரவுப்படி இந்த வழிமுறைகள் சில காவல் நிலையங்களில் சுவர்களில் எழுதி வைக்கப்பட்டாலும் போலீஸ் காவல் குறிப்பு தருவதோ, பிற வழிகளை பின்பற்றுவதோ இல்லை.

- உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு சட்டமாகவே கருதப்பட வேண்டும் என்கிற அரசியலமைப்புச் சட்டத்தின் கூற்று நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். கைதியை நீதிமன்றக் காவலுக்காக நடுவர் முன் முன்னிலைப்படுத்தும்போது மேற்கண்ட வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என சரி பார்க்க வேண்டும். சரி பார்க்கத் தவறும் போது, நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு நடுவரும், போலீசாரும் உடந்தையாக இருக்கின்றனர் எனக்கருதி அவர்கள் மீது வழக்கு தொடர வேண்டும். மேலும் மேற்கூறிய வழிமுறைகளை கடைப்பிடிக்காத காவல் நிலையத்திற்குப் பொறுப்பாளரான மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும் சட்ட மீறலுக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும். தேசிய மனித உரிமை ஆணையமும், மாநில மனித உரிமை ஆணையங்களும் தாங்களாகவே *(suo motto)* மனித உரிமை மீறல்கள் குறித்த சம்பவங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும், மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது. எனினும் எந்த ஒரு வழக்கிலும் ஆணையங்கள் முன் முயற்சி எடுத்து விசாரணை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எனவே, ஆணையங்கள் தங்கள் அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

- காவல் நிலையங்களிலோ, காவலிலோ உள்ள போது மரணம் ஏற்பட்டால் சந்தேக மரணம் என வழக்கு பதிந்து கோட்டாட்சியரின் விசாரணைக்கு உத்தரவிடப்படுகிறது. கோட்டாட்சியரின் விசாரணை அறிக்கையை அரசுக்கு மட்டும் தான் அளிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு தரப்படுவதில்லை. இந்நடைமுறைகளை மாற்றி, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கென தனியாக புலன் விசாரணை அமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விசாரணையின் போது உடனிருக்க அனுமதிக்க வேண்டும். முதல் தகவல் அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, சடலக்கூறாய்வு அறிக்கை மற்றும் கோட்டாட்சியர் அறிக்கைகள் பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

- மனித உரிமை மீறல் வழக்குகளில் ஒவ்வொரு தனி நபரின் குற்றப் பொறுப்பு என்னவென்று ஆராயாமல், பணியிலிருந்த காவலர், காவல் நிலைய பொறுப்பு அதிகாரி, விசாரணைக்கு உத்தரவிட்ட காவல் அதிகாரிகள் அனைவரையும் குற்றப் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்.

- முதல் நோக்கிலேயே குற்ற வழக்கு இருப்பது தெரிய வந்தால், வெறுமனே இடமாற்றல் அல்லது இடைநீக்கம் செய்வதும் கோட்டாட்சியர் விசாரணைக்கு பிறகு மீண்டும் நிர்வாக விசாரணை என காலம் கடத்தும் போக்கும் கைவிடப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும். வழக்கு முடியும்வரை அவர்களை பணியில் அமர்த்தக் கூடாது.

- காவலில் இறப்பவர்களின் குடும்பத்தினருக்கு சில வழக்குகளில் மட்டுமே ரூபாய் ஒரு லட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை உயர்த்தித் தரப்பட வேண்டும். போலீசால் மரணம் ஏற்படும் அனைத்து வழக்குகளிலும் வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் தொகையை தவறிழைத்த அதிகாரிகளிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

- கோட்டாட்சியர் அறிக்கை மீது அரசு பரிந்துரைத்தால், (தவறிழைத்த அதிகாரிகள் மீது) கோட்டாட்சியரே நடுவர் மன்றத்தில் தனிநபர் முறையீடாக புகார் செய்கிறார். இந்நடைமுறை கைவிடப்பட்டு, மாவட்ட மனித உரிமை நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட வேண்டும்.

- மாவட்ட மனித உரிமை நீதிமன்றத்தில் உள்ள நீதித்துறை நடுவரே நேரடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

- காவல் நிலைய மரணங்கள் நிகழும்போது வழக்கமாக நடைபெறும் கோட்டாட்சியர் விசாரணை நடத்தப்படாமல் 2005ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 176 (1) (அ) அடிப்படையில் குற்றவியல் நடுவர்தான் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

...ஓஓ...

# மோதல் சாவுகள்

## 1. 'குரங்கு' செந்தில் சுட்டுக் கொலை

நாகை மாவட்டம், சீர்காழி வட்டம், விளாந்திடல் சமுத்திரத்தைச் சேர்ந்தவர் செந்தில் (எ) குரங்கு செந்தில் (30) த/பெ ராமகிருஷ்ணன். இந்து பறையர் சமூகத்தை சேர்ந்தவர். இவர் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பொறியியல் இரண்டாம் ஆண்டு படிக்கும் போது பாதியில் படிப்பை நிறுத்திவிட்டார். இவர் ஆரம்ப காலத்தில் இருந்து பல்வேறு குற்றநடவடிக்கையில் ஈடுபட்டு இருந்ததால் இவர் மீது பல்வேறு வழக்குகள் இருந்தன.

இந்நிலையில் 02.10.09 அன்று அதிகாலை சுமார் 3.30 மணியளவில் குரங்கு செந்தில் இரு சக்கர (வாகன எண் *TN-02 R-8367-Hero Honda Passion)* வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்தபோது அம்மாபேட்டை காவல் நிலைய ஆய்வாளர் கார்த்திகேயன், ஏட்டு ஸ்ரீதரன் ஆகியோர் ஜீப்பில் விரட்டியதாகவும், அப்போது வண்டி சறுக்கிவிழுந்த குரங்கு செந்தில் தன் வண்டியில் வைத்திருந்த அரிவாள், பட்டாக்கத்தியால் ஆய்வாளரை வெட்டிய பின் தன் கையில் வைத்திருந்த நாட்டு வெடிகுண்டை போலீசார் மீது வீசியதால், அது வெடித்து சிதறியதால் போலீசாருக்கு காயம் ஏற்பட்டதாகவும் ஆய்வாளர் தற்பாதுகாப்பு கருதி குரங்கு செந்திலை இரண்டு முறை சுட்டதாகவும் பத்திரிக்கை செய்தியில் *IG* திரிபாதி தெரிவித்துள்ளார். இது குறித்து மக்கள் கண்காணிப்பகம் உண்மையறியும் குழு நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த போது, குரங்கு செந்தில் பயன்படுத்திய இருசக்கர வாகனம் இருந்த இடத்தில் காவல்துறையினர் குரங்கு செந்திலை வளைத்திருந்தால் கண்டிப்பாக தப்பிக்க முடியாது. ஆனால் அவர் சறுக்கிவிழுந்ததாகவும் உடனே அரிவாளை எடுத்ததாகவும் அதன்பிறகு கையில் வைத்திருந்த குண்டை எறிந்ததாகவும் கூறுவது காவல்துறையினரால் புனையப்பட்டது என்பதை அறிய முடிந்தது. மேலும் குரங்கு செந்தில் கையில் குண்டுடன் சறுக்கி விழுந்திருந்தால் அவருக்குதான் ஆபத்தாயிருக்கும். ஆனால் அவருக்கு தீ காயங்கள் எதும் ஏற்படவில்லை என்பது பத்திரிக்கையின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் சம்பவ இடத்தில் நாட்டு வெடிகுண்டு வெடித்ததற்கான அடையாளம் எதுவுமே கிடையாது.

உண்மை அறியும் குழுவினர் தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதல்களின் படி பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியதன் அடிப்படையில் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

அதன் பின்பு உண்மையறியும் குழு சார்பாக சம்பவம் நடந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையமான திருவரம்பூர் காவல் நிலையத்தில் குரங்கு செந்திலை போலி மோதல் சாவில் சுட்டுக் கொலை செய்தவர்கள் மீது தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி கொலை வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்று 03.10.09 அன்று புகார் கொடுக்கப்பட்டது. அந்தப் புகாரைப் பெற்றுக் கொண்டதற்கான மனு ரசீது எண் 667/09. இவ்வழக்கு குறித்து மக்கள் கண்காணிப்பகம் அனைத்துக் காவல் உயர் அதிகாரிகளுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் புகார் அனுப்பியுள்ளது. மேலும் தொடர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தி வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. விருதுநகர் சுந்தர மூர்த்தி சுட்டுக் கொலை

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், கிருஷ்ணன்கோவில் அருகில் உள்ள குன்னூர் புதூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி, த.பெ பழனிச்சாமி நாடார். இவருக்கு சிவகாசி கிழக்குக் காவல் நிலையத்தில் இரண்டு வாரண்டும், திருத்தங்கல் காவல் நிலையத்திலும் வாரண்டுகள் உள்ளன. இந்நிலையில் **28.7.2009** க்கு முன் ஒரு வாரமாக சுந்தர மூர்த்தியை காவலர்கள் கைது செய்யத் தீவிரமாகத் தேடியுள்ளனர்.

இந்நிலையில் **28.7.2009** செவ்வாய்க் கிழமையன்று இரவு சுமார் **7.30** மணியளவில் திருத்தங்கல் அண்ணா சிலை அருகில் ஆட்டோ ஸ்டாண்டு பக்கத்தில் உள்ள பழக்கடையில் பழம் வாங்கிக் கொண்டு இருந்தபோது திருத்தங்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ராஜேஷ் கண்ணனும் சில காவலர்களும் சிவகாசி கிழக்குக் காவல் நிலைய ஆய்வாளர் திரு. ராதாகிருஷ்ணனும் மற்றும் சில காவலர்களும் சுந்தரமூர்த்தியை கைது செய்து அதன் பின்பு சிவகாசி நகர்காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று அன்று முழுவதும் சிவகாசி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அதன் பின்பு 28.7.2009 அன்று சிவகாசி *to* விளாம்பட்டி பாதையில் உள்ள கல்மண்டபம் பகுதியில் வாகனச் சோதனை நடத்தியபோது *SI* மணிவண்ணன் மற்றும் காவலர்கள் கைது செய்ததாகவும் அப்பொழுது நாட்டு வெடிகுண்டு வீச முயற்சி செய்ததாகவும் *SI* மணிவண்ணன் சுந்தரமூர்த்தியை கைது செய்து வழக்குப் பதிவு செய்ததாகவும் கூறப்படுகிறது. அதன் பின்பு 29.7.2009 அன்று சிவகாசி அரசுப் பொது மருத்துவமனையில் உடல் தகுதி சான்றிதழ் பெற்று மருத்துவமனையிலிருந்து ஆட்டோவில் செல்லும்போது ரெட்டைப்பாலம் அருகில் சுந்தரமூர்த்தி தப்பி ஓட முயன்றதாகக் கூறி மேற்படி போலீசார் தன்னைக் காத்துக் கொள்ள சுட்டுக் கொன்றதாகவும் பத்திரிக்கைகளும் அதிகாரிகளும் கூறுகின்றனர். ஆனால் சார்பு ஆய்வாளர் மணிவண்ணன் 28.7.2009 அன்று சுந்தரமூர்த்தியைத் தன் பொறுப்பில் எடுத்து தன்னை போனில் மிரட்டியுள்ளார் என்றும் தன் அண்ணனை சிவகாசி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மணிவண்ணன் மற்றும் காவலர் காமராஜ், சிவா ஆகியோர் திட்டமிட்டு சுட்டுக் கொலை செய்துள்ளனர் என்றும் சுந்தரமூர்த்தியின் தம்பி பாண்டியராஜன் கூறுகிறார். சுந்தரமூர்த்தியின் 2வது மனைவி வசந்தி தன் கணவரைச் சுட்டுக்கொன்ற போலீசார் மீது

கொலை வழக்குப் பதிவு செய்து தனக்குச் சட்டப்படி நீதி வேண்டும் என திருத்தங்கல் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். மேலும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தியிடமும் சிவகாசி காவல் துணைக் கண்காணிப்பாளர் ராஜகோபாலிடமும் புகார் செய்துள்ளார். அதேபோல் மக்கள் கண்காணிப்பகம் சார்பில் திருத்தங்கல் காவல் நிலையத்தில் இந்த வழக்கில் தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதலை அரசு அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டும், மோதல் கொலையில் ஈடுப்பட்ட காவலர்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும் எனப் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு குறித்து மக்கள் கண்காணிப்பகம் அனைத்து காவல் உயர் அதிகாரிகளுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் புகார் அனுப்பியுள்ளது. மேலும் தொடர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தி வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 3. காவல்நிலையத்தில் சரணடைந்தவர் சுட்டுக்கொலை

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, கல்லல் காவல் நிலையம் எல்லைக்கு உட்பட்ட அரண்மனை சிறுவயல் பகுதியை சேர்ந்தவர் சண்முகம், த,பெ. நடராஜ். இந்து மறவர் இனத்தைச் சேர்ந்தவர். சண்முகம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் தேவர் பேரவையின் கல்லல் ஒன்றியச் செயலாளராக இருந்துள்ளார். கடந்த 1992ம் ஆண்டு 17 வயது தலித் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததாக அவருக்கு ஆயுள் தண்டனை கிடைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து அவர் மீது பல்வேறு கொலை வழக்குகள் மற்றும் வழிப்பறிக் கொள்ளை போன்ற சம்பவங்களில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு திருந்தி வாழ ஆசைப்பட்டு தலைமறைவாகச் சென்ற சண்முகம் தன் மூன்று குழந்தைகளையும் திருமயத்தில் உள்ள கிறித்துவ விடுதியில் விட்டுவிட்டு, தானும் மனைவி பொன்மணியும் கோவை அன்னூர் பகுதியில் உள்ள கோழிப்பண்ணை, மில் என பல இடங்களில் தனது பெயரைச் சத்தியமூர்த்தி என்று மாற்றிக் கொண்டு புதியதாக லைசென்ஸ் வாங்கி டிரைவராக வேலை செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் சிவகங்கை மாவட்டக் காவல் கண்காணிப்பாளராக இருந்த கண்ணன், கோவை மாவட்டக் காவல் கண்காணிப்பாளராக இட மாறுதலில் சென்றவுடன் கோவை அன்னூரில் டிரைவராக வேலை செய்த சண்முகம், அவரது மனைவியை இரண்டு நாளுக்கு முன்னரே அனுப்பிவிட்டு இருசக்கர வாகனத்தில் கோவையிலிருந்து காரைக்குடிக்கு சென்றுள்ளார். 06.02.2009 அன்று மாலை அரண்மனை சிறுவயலில் இருந்து செல்போனில் அவரது மனைவியை தொடர்பு கொண்டு உடனே அரண்மனை சிறுவயலுக்கு வருமாறு கூறியுள்ளார். அவர் மனைவி சென்ற போது ஏழுமாபட்டி அருகே சென்றபோது போலீஸ் ஜீப் நின்றுள்ளது. அதற்கு முன் சண்முகம் வந்த டூவீலர் கீழே கிடந்துள்ளது. சண்முகத்தை இரண்டு போலீசார் பிடித்து வைத்துக்கொண்டு இருந்ததை நேரடியாகப் பொன்மணியும் பார்த்துள்ளார். சண்முகம் காவலர் பிடியிலிருந்தபோது, தற்போது திருந்தி விட்டேன். சரணடையத்தான் வந்தேன் என்று கதறி அழுதுள்ளார். ஆனால் சண்முகம், காவல்

வண்டியின் மீது பெட்ரோல் குண்டு வீசி பின்னர் ஆய்வாளர் இராதா கிருஷ்ணன், காவலர் சோமசுந்தரம் இருவரையும் அரிவாளால் வெட்டி ஜீப்பின் கண்ணாடியையும் உடைத்தார் என்று கூறி சுட்டுக் கொலை செய்துள்ளனர். அதன் பின்பு சடலக் கூறாய்வு செய்த உடலை அவரது மனைவியிடம் கொடுக்காமல் அவரது தாய் லெட்சுமி அம்மாளிடம் கொடுத்து காரைக்குடி மயானத்தில் சடலம் எரிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு குறித்து மக்கள் கண்காணிப்பகம் அனைத்து காவல் உயர் அதிகாரிகளுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் புகார் அனுப்பியுள்ளது. மேலும் நீதிமன்றத் தொடர் நடவடிக்கைக்கும் உட்படுத்தி வருகிறது. சென்னை உயர் நீதி மன்றத்தில் பொது நல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 4. தனிப்படையினரால் தேனி தெய்வேந்திரன் சுட்டுக் கொலை

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுக்கா, கீழக் கூடலூர், 8வது வார்டு, விதைப்பண்ணை ரோட்டைச் சேர்ந்தவர் தெய்வேந்திரன். 1992லிருந்து இவர் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்ததால் இவர் மீது பல வழக்குகள் போடப்பட்டுள்ளது. இந்நிலையில் 19.01.09 அன்று ஏ.டி.ஜி.பி உட்தரவின் பேரில் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில் அம்மைநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் புகழேந்தி தலைமையில் தனிப்படை அமைத்து தெய்வேந்திரனை தேடிவந்துள்ளார்கள்.

இந்நிலையில் அவர் விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டி பேருந்து நிலையத்தில் பதுங்கியிருந்ததாகவும் இரவு 8.30 மணிக்கு தனிப்படையினர் பிடித்து அங்கிருந்து திண்டுக்கல் கொண்டு வரும் வழியில் சின்னாளப்பட்டி அருகே பெருமாள் கோவில்பட்டி விலக்கில் இரவு சுமார் 10.30 மணியளவில் சிறுநீர் கழிக்க வேண்டும் என்று கூறியதாகவும், அதனால் காவலர்கள் வண்டியை நிறுத்தியதாகவும் அப்போது தெய்வேந்திரன் காவலர்களிடம் இருந்த துப்பாக்கியை பிடுங்கிக் கொண்டு ஓடியதாகவும் அதன்பிறகு அங்கிருந்த காவலர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் கொடுத்து, அவர் வரும்வரை காத்திருக்கையில் அங்கு பதுங்கியிருந்த தெய்வேந்திரன் காவலர்களை நோக்கிச் சுட்டதாகவும் காவலர்கள் திருப்பிச் சுட்டதில் சம்பவ இடத்தில் தெய்வேந்திரன் இறந்துவிட்டதாகவும் அவருடைய மனைவிக்கு காவலர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மக்கள் கண்காணிப்பகம் உண்மையறியும் குழு நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்று கள ஆய்வு செய்ததில் தெய்வேந்திரனை சுட்டுக் கொன்றதற்கு காவலர்கள் சொன்ன காரணம் சிறிதும் பொருந்தவில்லை என்பதை கண்டறிந்ததன் அடிப்படையில் இது போலி மோதல் என முடிவு செய்யப்பட்டது. ஆகவே இவ்வழக்கு குறித்து மக்கள் கண்காணிப்பகம் சார்பில் அனைத்துக் காவல் உயர் அதிகாரிகளுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் புகார் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் தொடர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தி வருகிறது. சென்னை உயர் நீதி மன்றத்தில் பொது நல வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 5. நீதிமன்றம் அழைத்துச் செல்லும் வழியில் சிறைக் கைதி சுட்டுக் கொலை

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா, பழனிபேட்டை ஏ.என். கண்டிகை 3வது தெருவைச் சேர்ந்தவர் தனசேகர் த/பெ. ராஜன். இந்து வன்னியர் இனத்தைச் சேர்ந்தவர். இவர் கொலை வழக்கிற்காக புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். புழல் சிறையிலிருந்தவரை திருத்தனி நீதிமன்றத்திற்கு திருவள்ளூர் மாவட்டம், திருத்தனி தாலுக்கா, மப்பேடு காவல் நிலையத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்ற காவலர் கடந்த 09.07.09 அன்று வேனில் அழைத்துச் செல்லும் போது மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொலை செய்துள்ளார்.

## கண்டறிந்தவை

*NCRB*ன் இணையதளப் புள்ளி விவரப்படி 2009 ஆம் ஆண்டு காவல்துறையினரால் மொத்தம் 1280 துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. அந்த துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 490. காவல்துறையினர் துப்பாக்கிச்சூட்டிற்காக கலவரத்தை அடக்குதல், கூட்டுக் கொள்ளை சம்பவங்களுக்கு எதிராகச் செயல்படுதல், தீவிரவாதத்திற்கு எதிராக செயல்படுதல் என்று பல்வேறு காரணங்களைக் கூறினாலும் சட்ட ரீதியாக அவர்கள் கடைபிடிக்க வேண்டிய எந்தவொரு விதிமுறையும் காவல்துறையால் பின்பற்றப்படவில்லை என்பது தான் உண்மை. உதாரணமாக தமிழ்நாட்டில் மட்டும் மொத்தம் 5 நபர்கள் போலி மோதல் சாவுகளால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த 5 வழக்கிலும் துப்பாக்கிச் சூட்டின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் கடைபிடிக்கப்படவில்லை. துப்பாக்கிச் சூட்டிற்கு பின்பும் காவல்துறை உயர் அதிகாரிகளால் செய்ய வேண்டிய பணிகள் என்று வகுக்கப்பட்டுள்ள தேசிய மனித உரிமை ஆணையத்தின் வழிகாட்டுதல்கள் கடைபிடிக்கப்படவில்லை. மருத்துவ அதிகாரிகளின் போக்கும் காவல்துறையினருக்கு சாதகமானதாவே உள்ளது.

**19.01.2009– தெய்வேந்திரன் – திண்டுக்கல்**

**06.02.2009– சண்முகம் – சிவகங்கை**

**09.07.2009– தனசேகரன் – சென்னை**

**29.7.2009– சுந்தரமூர்த்தி – விருதுநகர்**

**02.10.2009– செந்தில் @ குரங்கு செந்தில் – நாகை**

சமூக மாற்றத்திற்காக உழைக்கின்ற மக்கள் நலவாதிகள், மனித உரிமை ஆர்வலர்கள், வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆகியோரை சட்டத்திற்குப் புறம்பாக ‘‘மோதல்’’ என்ற பெயரில் அவர்களை தீர்த்துக் கட்டும் நோக்கில்

செயல்படும் போலீசாரின் அத்துமீறலை எந்தவொரு சூழலிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. போலீசாரின் கேள்வி கேட்பாரற்ற இந்த வகை அத்துமீறல்கள், அராஜகங்கள், உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர், அவர் யாராக இருந்தாலும் போலீசார் சுட்டுக் கொல்வதற்கு, அவரை உயிரைப் பறிப்பதற்கு எந்தவித அதிகாரமும் எப்போதும் வழங்கப்பட்டதில்லை. இது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் முக்கியமான சில பார்வைகளையும் பரிந்துரைகளையும் அரசின் முன் வைத்துள்ளது.

## பரிந்துரைகள்

1) எல்லா மோதல் சாவுகளையும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கொலைக் குற்றப் பிரிவின் கீழ் (302) பதிவு செய்து சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையை அரசு தீவிரமாக தமிழகத்தில் பின்பற்ற வேண்டும்.

2) அகில உலக மனித உரிமைப் பிரகடனம் 10ல் ஒருவருக்குரிய உரிமைகளையும், கடமைகளையும் தீர்மானிக்கின்ற போது அவருக்கு எதிராக ஏற்கனவே குற்றவியல் குற்றச்சாட்டு இருந்தாலும், அதனை நிரூபிக்க நடுநிலை தவறாத நடுவர் மன்றத்தின் மூலம் நியாயமான வெளிப்படையான விசாரணை கோருவதற்கான உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு. இந்த உரிமையை மதிக்காமல், இரக்கமின்றி கொலை செய்த போலீசார் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

3) சட்ட ரீதியாக ஒருவரை கைது செய்யாமல் சட்டத்திற்குப் புறம்பாக மோதல் சாவுகள் என்கிற பெயரில் ஜனநாயகவாதிகளை கொலை செய்யும் போலீஸ் அதிகாரிகள் மற்றும் போலீசார் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4) யாரையும் சித்திரவதை செய்யக்கூடாது, கொடூரமாக, மனிதத் தன்மையற்று கேவலமாக நடத்தக்கூடாது, கொடூரமான மனித தன்மையற்ற, கேவலமான தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது என்று அகில உலக மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 5–ல் குறிப்பிட்டுள்ளது. இப்பிரகடனத்தை தவறாக பயன்படுத்துகிற அரசு அதிகாரிகளை சட்ட மீறல்களுக்கு காரணமானவர்களாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5) மோதல் சாவுகளால் இறந்தவர்களுக்காக இரங்கல் கூட்டம் நடத்துபவர்கள், மக்கள் அமைப்புகளைச் சார்ந்தவர்கள், இறந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள், ஊர்க்காரர்கள் போன்றோர் மீது விசாரணை என்ற பெயரால் சோதனை செய்வதும் உடல், மனரீதியாக சித்திரவதை செய்வதும் போன்ற போலீசாரின் நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

6) மோதல் சாவுக்குப் பின்னர் இறந்து போனவரை குற்றம் சாட்டப்பட்டவராகக் காட்டுதல், இந்திய தண்டனைச் சட்டம் 307ஆவது பிரிவின் கீழ் அவருக்கெதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல், குற்றம் சாட்டப்பட்டவர் இறந்துபோனால் வழக்கினை முடிவு கட்டுதல் ஆகியவை சட்ட வழிமுறைகளுக்கு முரணானதாகும்.

7) மோதல் கொலை வழக்கு ஒவ்வொன்றுக்கும், போலீஸ் நிலையத்தின் பொறுப்பு அலுவலரின் முறையான விசாரணை, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 154, 170, 173 மற்றும் 190களின் கீழ் பதிவு செய்வது அத்தியாவசியானதாகும்.

8) ஒவ்வொரு மோதல் கொலையும் இந்திய சாட்சி சட்டத்தின் பிரிவு 105இன்படி தனிப்பட்ட பாதுகாப்புக்கான உரிமை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட வேண்டும்.

9) ஒவ்வொரு கொலையும், தற்காப்புக்காக நேர்ந்தாலும் கூட குற்றஞ்சாட்டுவதற்குரியதே, விசாரிக்கப்பட வேண்டியதே. ஒவ்வொரு மோதல் சாவிலும், மாநில சி.ஐ.டி அல்லது தனிப் புலனாய்வு பிரிவினர் மூலம் விசாரணை செய்வதற்கென பொது உத்தரவு ஒன்றினை மாநில அரசாங்கம் வெளியிட வேண்டுமென்று ஆணையத்தால் பரிந்துரைக்கப்படுகிறது.

10) எந்த ஒரு குடிமகனின் உயிரையும் பறிக்கும் குற்றம் புரியும்படி எந்த ஒரு சட்டட்தின் கீழும் போலீசுக்கு அனுமதி தரப்படவில்லை. இதுபோன்ற மனித உயிரைப் பறிக்கும் செயலில் ஈடுபடும் போலீசார் கொலை புரிந்தவராகவே கருதப்படுவர். போலீசார் தனது தனிப்பட்ட பாதுகாப்பிற்காக செய்யும் கொலைகள் கூட இந்தியாவின் குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு குற்றவியல் சட்டப்பிரிவு 46ன்படி இது போன்ற கொலைகளை போலீசார் சரியென நிரூபிப்பதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இல்லாவிடில் அவர்கள் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு மரண தண்டனையோ ஆயுள் தண்டனையோ வழங்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பிரிவு 46–இன் கீழுள்ள அதிகாரத்தின்படி சாவுகள் நேர்வது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. சட்டப்படியான தனிப்பட்ட பாதுகாப்பு காரணங்களுக்கல்லாமல் இதுபோன்ற கொலைகள் மோதல் என்ற பெயரைக் கொண்டு செயல்படுமானால் அது மனிதத் தன்மையற்ற குற்றமாகவே கருதப்பட்டு குற்றவியல் சட்டம் பிரிவு 46ன் கீழ் இத்தகையவற்றில் ஈடுபட்ட போலீசார் கைது செய்யப்பட வேண்டும். இத்தகைய மோதலில் கொலை நிகழும் பட்சம் முறையாக புலனாய்வு செய்யப்பட்டு மேற்கண்ட 2 நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ்கொண்டு வரப்படவேண்டும்.

11) மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மாநில மனித உரிமை ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பிரிவு 12 (1)) பயன்படுத்தித் தானாகவே *(suo motto)* மோதல் சாவுகளை விசாரிக்க வேண்டும்.

# சிறை மரணங்கள்

## 1. சிறையில் பினாயில் குடித்துக் கைதி தற்கொலை

விழுப்புரம் மாவட்டம், கிளியனூர் அஞ்சல், தேர்குணம் கிராமத்தைச் சேர்ந்தவர் பாலு (28/09) த/பெ. பூங்காவனம். இவர் கொலை வழக்கில் கைதான ஆயுள் தண்டனை கைதியாக கடலூர் மத்திய சிறையில் கடந்த 3 வருடங்களாக இருந்துள்ளார். இந்நிலையில் திடீரென 08.12.2009 அன்று காலை சுமார் 7.45 மணியளவில் சிறையில் கழிவறையில் சுத்தம் செய்ய வைத்திருந்த பினாயிலை குடித்துத் தற்கொலை செய்து கொண்டதாகச் சிறைக் கண்காணிப்பாளர் திரு. கனகராஜ் தகவல் தெரிவித்துள்ளார். பாலு பினாயில் குடித்தவுடன் சிறையிலுள்ள மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பலனின்றி பாலு இறந்துள்ளார் என்பது செய்தி. ஆனால் கடலூர் மத்திய சிறையில் இது போன்ற கைதிகள் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவம் அடிக்கடி நடைபெறுவதும், பினாயில் குடித்த ஒரு மணி நேரத்திற்குள் பாலு இறந்துள்ளார் என்பதும் மனித உரிமை மீறல் நடந்திருக்கும் என கருதுவதற்கு வாய்ப்பாக அமைகிறது. இச்சம்பவத்தில் கடலூர் அரசு பொது மருத்துவமனையில் பாலுவின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.அதன் அறிக்கை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் உண்மையை அறிய கள ஆய்வாளர் கடலூர் மத்திய சிறை கண்காணிப்பாளர், அரசு பொது மருத்துவமனை, தலைமை மருத்துவர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரையும், பாலுவின் பெற்றோரையும் சந்தித்தும் கூட உண்மைத் தகவலை பெற முடியவில்லை. இந்நிலையில் இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை மேற்கொண்டு பாதிப்பு ஏற்படுத்திய சிறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க கோரி 10.12.2009 அன்று கடலூர் மாவட்ட கண்காணிப்பாளர், முதலமைச்சர் தனிப்பிரிவு, மாநில மனித உரிமை ஆணையம், உள்துறை செயலர், மாநில சிறைக் கண்காணிப்பாளர், மாவட்ட நீதிபதி, மாவட்ட ஆட்சியர் ஆகியோருக்கு புகார்கள் அனுப்பப்பட்டுள்ளது.

## 2. சிறையில் தூக்கில் தொங்கிய கைதி

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கொல்லக்கொட்டால் பகுதியைச் சேர்ந்த மூர்த்தி (38).இவருக்கும் இவரது உறவினர் அம்மாவாசை என்பவருக்கும் இடையே நிலத்தகராறு ஏற்பட்டுள்ளது. அந்த தகராறில் 25.08.08 ஆம் அன்று அம்மாவாசையை வெட்டிக் கொலை செய்துள்ளார். இக்கொலை வழக்கிற்காக மூர்த்தி வேலூர் மத்திய சிறையில் விசாரணைக் கைதியாக இருந்துள்ளார். இந்நிலையில் கடந்த 05.08.09 அன்று மூர்த்தி சிறைக்குள் இருந்த மரத்தில் அவரது கைலியால் தூக்குப் போட்டு தற்கொலை செய்ய முயற்சித்த போது சிறைக் காவலர்கள் அவரை வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்துள்ளார். அதன்பின் 06.08.09 அன்று மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்தி பிரேத பரிசோதனை முடிந்த பின்பு மூர்த்தியின் உடல் அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மூர்த்தியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக அவருடைய மனைவி 10.05.09 அன்று மாவட்ட ஆட்சியர் உட்பட அனைத்து காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும், மனித உரிமை ஆணையங்களுக்கும் புகார் அனுப்பியுள்ளார். மூர்த்தி சிறையில் தற்கொலை செய்துக் கொண்டிருப்பினும் அவர் தற்கொலை செய்வதற்கு காரணமாக அமைந்த சிறைச் சூழல் பாதுகாப்பற்றதாக உள்ளது என கருத முடிகிறது. ஆகவே சிறைகள் சீர்திருத்தங்கள் செய்யப்படுவது கைதிகளின் தற்கொலையை குறைக்க வாய்ப்பாக அமையும்.

## 3. மனநலம் பாதித்தவர்: காவலர்கள் அடித்ததில் சிறையில் மரணம்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி, சில்லையன்நாயக்கன்பட்டியில் வசித்து வந்தவர் முத்தையா. இவர் கவுரவ நாயுடு சாதியை சேர்ந்தவர். இவரும், இவரது மனைவி பாக்கியலெட்சுமியும் சில்லையன்நாயக்கன்பட்டியில் கம்பளத்து நாயக்கர் தெருவில் இட்லி கடை வைத்து பிழைப்பு நடத்தி வந்துள்ளனர். இவர்களது இட்லி கடையில் தாழ்த்தப்பட்ட மக்களும் சாப்பிடுவதைப் பொறுத்துக் கொள்ளாத கம்பளத்து நாயக்கர் சாதியைச் சேர்ந்தவர்கள் முத்தையா மீது மது விற்பதாக சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் பொய்ப் புகார் கொடுத்துள்ளனர். ஆகவே ஏப்ரல் மாதம் 2009 ஆம் ஆண்டு இப்புகாரின் கீழ் முத்தையா கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

அதன் பின்பு முத்தையா குடும்பத்தினர் சில்லையன்நாயக்கன்பட்டியில் ஊர் மக்கள் நிம்மதியாக வாழவிடமாட்டார்கள் என்று சிவகாசியில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கியுள்ளனர். இச்சூழலில் கடந்த நவம்பர் மாதம் 2009ல் முத்தையாவிற்கு மனநிலை சரியில்லாமல் போய்விட்டது. சில்லையன்நாயக்கன்பட்டியில் உள்ள தனது வீட்டைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு கடந்த 06.12.09 அன்று குடும்பத்துடன் சென்றுள்ளார். அப்போது கம்பளத்து நாயக்கன் சாதியை சேர்ந்தவர்கள் அவரையும், அவரது குடும்பத்தினரையும் அடித்து சித்திரவதை செய்துள்ளனர். அதனால் முத்தையாவின் மனைவி சிவகாசி கிழக்கு காவல்

நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். அதற்கு காவல்துறையினர் புகாரை ஏற்க மறுத்துள்ளனர். அதனால் மாவட்டக் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்று புகார் கொடுத்துள்ளனர். அவர்கள் மீண்டும் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திற்கு திருப்பி அனுப்பியுள்ளனர்.

சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் ராதாகிருஷ்ணன், உதவி ஆய்வாளர், முத்தையாவை மது அருந்தியிருப்பதாக கூறி காவலர்கள் அடித்து சித்ரவதை செய்துள்ளனர். மேலும் இரவு முழுவதும் காவல் நிலையத்தில் உள்ள வேப்ப மரத்தில் முத்தையாவை இரும்புச் சங்கிலியால் கட்டிப்போட்டுப் கொடூரமாக அடித்துச் சித்ரவதை செய்துள்ளனர். அதன் பின்பு 07.12.09ல் முத்தையா மீது கு.எண். 1070/09 *U/s* 341, 307, இ.த.ச.ன் கீழ் வழக்கு பதிந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மதுரை மத்திய சிறைக்கு கொண்டு சென்றுள்ளனர். முத்தையா கடுமையாக தாக்கப்பட்டு கொடூர காயங்களுடன் இருந்ததால் மதுரை மத்திய சிறையில் காவலர்கள் ஏற்க மறுத்து விட்டனர். அதனால் மதுரை அரசு பொது மருத்துவமனையில் முத்தையாவை உறவினர் ஒருவரை ஆள்மாறாட்டம் செய்து மருத்துவமனையில் காண்பித்து புறநோயாளிகள் சீட்டைப் பெற்றுக் கொண்டு அதை மதுரை சிறைக் காவலர்களிடம் கொடுத்து முத்தையாவின் மதுரை சிறையின் உள்ளே அனுமதித்தனர். போலியான மருத்துவ ஆவணங்களை கொடுத்ததால் முத்தையாவிற்கு மருத்துவ சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை. சிவகாசி கிழக்கு காவல்துறையினர் கடுமையாகத் தாக்கியதில் மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்ட முத்தையா மருத்துவசிகிச்சைக் கூட அளிக்கப்படாமல் இருந்ததால் 10.12.09 அன்று மதுரை மத்திய சிறையில் மரணம் அடைந்துள்ளார். அதன் பின்பு 10.12.09 அன்றே மதுரை மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது.

இது சம்மந்தமாக 11.12.09 அன்று மாவட்ட ஆட்சியர், காவல்துறை உயர் அதிகாரிகள், முதலமைச்சர் தனிப்பிரிவு ஆகியோருக்கு புகார் அளிக்கப்பட்டுள்ளது.

## 4. விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் புதுவை சிறையில் மரணம்

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ரோசனை செஞ்சி மெயின் ரோடு, காந்தி நகரில் வசித்து வந்தவர் சரவணன் (31/09). இவர் கொத்தனார் வேலை செய்து வந்துள்ளார். அந்த வேலை காரணமாக வெவ்வேறு ஊர்களுக்கு சரவணன் செல்வதுண்டு.கடந்த 22.06.09 அன்று காலை சுமார் 5 மணியளவில் பாண்டிச்சேரிக்கு வேலைக்கு செல்வதாகத் தன்னுடைய மனைவியிடம் கூறிவிட்டு சென்றுள்ளார். அன்று இரவு பாண்டிச்சேரி ஒதியஞ்சோலை காவல்துறையினர் மது அருந்திவிட்டு தகராறு செய்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்து சரவணனை கடுமையாகத் தாக்கியுள்ளனர். அதன் பின்பு 24.06.09 அன்று மதியம் 2 மணியளவில் கு. எண் *269/2009, u/s 234 A III PP Act* என்ற சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து புதுவை சிறையில் சரவணனை அடைத்துள்ளனர்.

புதுவை காலப்பட்டு சிறையிலும் சரவணன் காவலர்களால் கடுமையாக தாக்கப்பட்டு 25.06.2009 அன்று சரவணன் இறந்துள்ளார். சரவணனின் மனைவிக்கோ, குடும்பத்தினருக்கோ சரவணன் கைது செய்யப்பட்டுக் காவலர்களால் கொலை செய்யப்பட்ட சம்பவம் எதுவுமே தெரியாது. 25.06.2009 அன்று புதுச்சேரி ஒதியஞ்சோலை காவல்துறையினர் சரவணனின் வீட்டிற்கு சென்று அவரது மனைவியிடம் சரவணன் இறந்த தகவலைக் கூறியுள்ளனர். அதன் பின்னர் சரவணனின் மனைவி, அவரது உறவினர்களுடன் புதுச்சேரி அரசு மருத்துவமனைக்கு சென்று சரவணனின் உடலைப் பார்த்துள்ளனர். சரவணனின் உடல் முழுக்க இரத்த காயங்கள் இருந்துள்ளது. வலது முட்டிக்குக் கீழ் கட்டுப்போடப்பட்டிருந்தது. மூக்கு மற்றும் காதுப் பகுதிகளில் இரத்தம் வழிந்து உறைந்திருந்துள்ளது. முன் வரிசைப் பல் ஒன்று உடைந்துள்ளது. உடல் முழுக்க சிராய்ப்பு காயங்களும் இருந்துள்ளது. இதைப் பார்த்த சரவணனின் மனைவி அவருடைய கணவர் இயற்கையாக மரணம் அடையவில்லை, என்றும் அவருடைய மரணத்தில் சந்தேகம் உள்ளதாகவும் புகார் கொடுத்துள்ளார். அதன்படி 27.06.2009 அன்று சரவணனின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு அதை வீடியோ பதிவு செய்தனர். மதியம் சுமார் 12 மணியளவில் சரவணனின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்து 29.06.09ல் மாவட்ட ஆட்சியர், காவல்துறை உயர் அதிகாரிகள், மனித உரிமை ஆணையங்கள், முதலமைச்சர் தனிப்பிரிவு ஆகியோருக்கு பதிவுத் தபாலில் புகார், அனுப்பப்பட்டுள்ளது.

## 5. மனைவி பார்க்க வராததால் மனைமுடைந்தவர் சிறையில் தற்கொலை

கடலூர் மாவட்டம், ராமபுரம் ஊராட்சி, சாத்தான்குப்பம் பகுதியில் வசித்து வந்தவர் வெங்கடேசன் (31/09). அவருடைய மனைவி விஜிக்கும், கருணாகரன் என்பவருக்கும் இடையே தொடர்பு இருந்ததால் கோபத்தில் வெங்கடேசன் கருணாகரனை கொலைச் செய்துள்ளார். அதனால் அவருடைய குற்றத்தை ஒப்புக்கொண்டு 31.08.09 அன்று திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் சரணடைந்துள்ளார். வெங்கடேசன் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு கடலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் சிறையில் இருக்கும் போது அவருடைய மனைவி பார்க்க செல்லாததால் மனமுடைந்து 04.11.09 அன்று காலை சுமார் 8 மணியளவில் சிறை வளாகத்தில் உள்ள மாமரத்தில் தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.அவரை சிறைக் காவலர்கள் கடலூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். 05.11.09ல் சிகிச்சை பலனின்றி வெங்கடேசன் மரணமடைந்துள்ளார். வெங்கடேசனின் உறவினர்களை மருத்துவமனையில் பார்க்க அனுமதிக்காததால் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். அதன் பின்பு மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. பிரேத பரிசோதனை வீடியோ பதிவும் செய்யப்பட்டது. அவருடைய உயிரை பாதுகாக்கவில்லை என்பதால் இது மனித உரிமை மீறலாக பதிவு செய்யப்படுகிறது.

## 6. பொய் வழக்கில் கைது செய்யப்பட்டக் குறவர் சமூகத்தை சார்ந்தவர் அடித்துக் கொலை

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தென்முடியனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் முருகன் (45/09) த/பெ. குப்புசாமி. இவர் நரிக்குறவர் சமூகத்தைச் சார்ந்தவர். இவருடைய சொந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டம், மனோஜ்பட்டி. முருகன் மீது ஒரு வருடத்திற்கு முன்பு காவலர்கள் பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்துள்ளனர். அதன் பின்பு சிறையில் இருந்து வெளிவந்து அவருடைய மகன் மகேந்திரன் வசிக்கும் கிருஷ்ணகிரியில் வசித்துள்ளார். இந்நிலையில் 2008 ஆம் ஆண்டு இறுதியில் தஞ்சாவூரில் தனது தந்தை இறந்த ஈமக் காரியங்களுக்காக மனோஜ்பட்டிக்கு சென்ற முருகனை மல்லியகரை மற்றும் தலைவாசல் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். முருகனுடன் சேர்த்து 6 நபர்களையும் திருட்டு வழக்கிற்காக கைது செய்து கடுமையாக அடித்துச் சித்திரவதை செய்துள்ளனர். அதன் பின் முருகனை சேலம் மத்திய சிறையில் அடைத்துள்ளனர். முருகனை பற்றிய விபரம் எதுவும் அவருடைய குடும்பத்தினருக்கு காவலர்கள் தெரியப்படுத்தவில்லை. ஆகவே முருகனை காணாததால் முருகனின் மனைவி சென்னையில் உள்ள வழக்கறிஞர் உதவியுடன் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளார். அதன் பின்பு தான் முருகன் சேலம் மத்திய சிறையில் இருக்கும் தகவல் அவருடைய மனைவி மலருக்கு தெரிய வந்துள்ளது.

சேலம் மத்திய சிறைக்குச் சென்று முருகனுடைய மனைவி அவரைச் சந்தித்த போது காவலர்களும், சிறைக் காவலர்களும் கடுமையாக அடித்துள்ளனர் என்பதையும், காது ஜவ்வு கிழிந்து வலியாக உள்ளது என்பதையும் விரைவில் ஜாமீனில் வெளியே எடுத்து மருத்துவ சிகிச்சையளிக்காவிட்டால் இறந்து விட நேரிடும் என்று அவரது மனைவியிடம் அழுது புலம்பியுள்ளார். முருகனுடைய மனைவி அவரை ஜாமீனில் வெளியில் எடுப்பதற்கான முயற்சிகள் செய்து கொண்டிருக்கும் போதே 10.04.2009 அன்று உடல்நிலை மோசமடைந்து முருகன் இறந்துள்ளார்.

## கண்டறிந்தவைகள்:

1) சிறைச்சாலையினுள் ஆயுள் தண்டனைக் கைதிகள் இறப்பு அதிகமாக உள்ளது. அவை தற்கொலைகளாக சித்தரிக்கப்படுகிறது. சிறைச்சாலைக்குள் சிறைக் கைதிகளின் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை இருப்பது இதன் மூலம் கண்டறிய முடிகிறது.

2) காவல் நிலையத்தில் மிகக் கடுமையாக சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களை, முழுமையான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளாமல் சிறைச் சாலையில் அனுமதிக்கிறார்கள். சிறையில் போதுமான மருத்துவ சிகிச்சை வசதிகள் இல்லாமல் அத்தகைய கைதிகள் இறக்க நேரிடுகிறது. இதன் மூலம் சிறைச்சாலையில் அனுமதிக்கப்படும் கைதிகள் முறையான பரிசோதனைக்கு பின்பு

அனுமதிக்கப்படுவது இல்லை எனவும், சிறைச்சாலை மருத்துவமனைகளில் போதுமான மருத்துவ சிகிச்சை வசதிகள் இல்லை எனவும் அறிய முடிகிறது.

3) காவல் விசாரணைக்குப் பின்பு கைதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டும், மருத்துவச் சான்றிதழ் பெற்றும் சிறைக்குள் அனுமதிக்கப்பட வேண்டும். விசாரணைக் கைதிகள் கடுங்காயத்துடன் இருந்தாலும் நீதிமன்றத்தில் அவற்றை பதிவு செய்வதில்லை. அரசு மருத்துவமனைகளிலும் காயங்கள் எதுவும் இல்லை என்று பொய் சான்றிதழ் வழங்குகிறார்கள். இந்நிலையில் கைதிகளை எவ்வித மருத்துவ சிகிச்சைக்கும் உட்படுத்தாமல் சிறைப்படுத்தப்பட்டு சிறையில் இறக்க நேரிடுகிறது. சில வழக்குகளில் மருத்துவச் சான்றுக்காக காவல்துறையினர் சம்மந்தப்பட்ட கைதிக்கு பதிலாக வேறு ஒரு நபரை பரிசோதனைக்கு உட்படுத்தி போலி மருத்துவ சான்றை பெறுவதற்காக ஆள் மாறாட்டம் செய்துள்ளனர்.

## பரிந்துரைகள்

குற்றவாளிகளைச் சீர்திருத்தும் கோட்பாடு அடிப்படையில் **“ரெக்லசின் கமிட்டியின் அறிக்கை”** கீழ்க்கண்ட முக்கியமான பரிந்துரைகளை முன் வைத்தது.

- சிறைச்சாலைகள் சீர்திருத்த மையங்களாக மாற்றப்பட வேண்டும்.
- புதிய சிறைச்சாலைகள் (இடநெருக்கடியைத் தவிர்க்க) உருவாக்கப்பட வேண்டும்.
- இளம் சிறார்கள் வயது வந்த சிறைக் கைதிகள் போன்று நடத்தப்படக் கூடாது.
- முறையாக, தொழில்ரீதியான சீர்திருத்த *(Correctional Service)* சேவையில் பயிற்சி பெற்றவரே சிறை நிர்வாகியாக நியமிக்கப்பட வேண்டும்.
- சிறை சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் அடிப்படையில் புதிய சிறைப்பேரேடு *(Jail Manual)* உருவாக்கப்பட வேண்டும்.
- சிறைத்தண்டனை அனுபவித்தவர்களுக்கு மறுவாழ்வுதரும் அமைப்பு ஒன்றும், நன்னடத்தைக் காரணமாக சிறைக் கைதிகள் தண்டனைக் காலத்திற்கு முன்பே விடுதலை செய்யப்படுவதை பரிந்துரைக்கும் அமைப்பு ஒன்றும் ஏற்படுத்த வேண்டும்.

(ஆதாரம்: *Jail Administration of India. Prepared for the Govt. of India. by Dr. Walter C. Rackless, expert appointed by the Technial assistance Administration of the United Nations*)

இந்த ரெக்லஸ் அறிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட சிறைப் பேரேட்டுக்கான கமிட்டி சிறை சீர்திருத்தங்களுக்கான பல பரிந்துரைகளைக் கொண்ட மாதிரி சிறைப்பேரேடு ஒன்றை 1960 ஆம் ஆண்டில் அரசுக்கு சமர்ப்பித்தது. மிக சிறப்பான சீர்திருத்தங்களை கூறிய அந்த அறிக்கை வெளிவந்த பின்னரும் சிறைக் கொடுமைகள் தொடர்ந்தன. 70களின் இறுதியில், (அவசர நிலைக் காலகட்டம்) சர்வதேச பொது மன்னிப்பு சபை, மனித உரிமை அமைப்புகள் சிறையில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் மீது

கடுமையான கண்டனங்களை தெரிவித்தன. உச்ச நீதிமன்றம் பல எண்ணற்ற தீர்ப்புகளில், முக்கியமாக நீதியரசர் திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் தலைமையிலான அமர்வுகள் சிறை அமைப்பு மனித உரிமைகளை நசுக்குவதை மிக வன்மையாக கண்டித்தன. ‘‘சட்டத்தின் ஆட்சியே சிறையில் நடைபெற வேண்டும். கைதிகளின் அடிப்படை உரிமைகள் சிறையில் அவசியம் பேணப்பட வேண்டும்’’ என்றும் உச்ச நீதிமன்றத்தின் மூலம் உத்தரவிடப்பட்டது. (ஆதாரம்: *Report of the All Inida on Jail Reforms 1980-83 vol. I page 16*)

இதற்குப் பின்னரும் நிலைமைகள் சிறிதளவே மாறியுள்ளன. சிறை உண்மையான சீர்திருத்தப் பள்ளியாக மாறி சிறைக் கைதிகளின் மனித உரிமைகள் பேணப்பட அனைத்திந்திய சிறை சீர்திருத்தக் கமிட்டிகளின் பரிந்துரைகளும் மற்றும் தமிழகத்தில் பாட்னா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. ஆர்.எஸ். நரசிம்மன், ஐ.சி.எஸ்., தலைமையில் திரு. எஸ்.எம்.டயேஸ், ஐ.பி.எஸ்., டாக்டர் அ. வெங்கோபராவ், எம்.டி.பி.எச்.டி. (மனநல மருத்துவத்துறையின் முன்னாள் தலைமை மருத்துவர், ராஜாஜி அரசு மருத்துவமனை மதுரை) ஆகியோரை உறுப்பினராகக் கொண்டு அமைக்கப்பட்ட ‘‘தமிழ்நாடு சிறை சீர்திருத்த ஆணையத்தின்’’ (1978) பரிந்துரைகளும் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். இங்கு மேற்கண்ட இரு அமைப்புகளின் பரிந்துரைகளில் முக்கியமானவை மட்டும் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

- சிறையிலடைக்கப்பட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டவர் மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் மனிதர்களுக்கான கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தண்டனை அளிக்கப்பட்டவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்ற அந்தஸ்துக்கேற்றவாறு நடத்தப்பட வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்ட இளம் சிறார் *(Accused Juveniles)* வயது வந்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்களின் வழக்குகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும்.
- சிறைக்கைதிகள் திருந்துவதற்கும் அவர்களுக்கு சமூக மறுவாழ்வு அளிக்கப்படுவதற்கும் ஏதுவான முறையில் சிறைத்தண்டனை முறையை அமைப்பதே அதன் முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். இளம் குற்றவாளிகள் *(Convicted Juveniles)* வயது வந்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு அவர்களின் வயதுக்கும் சட்ட அந்தஸ்த்துக்கும் ஏற்ற வகையில் தண்டனை அளிக்கப்பட வேண்டும்.
- சிறையின் கொள்ளளவுக்கு மேல் எக்காரணம் கொண்டும் கைதிகள் அடைக்கப்படக் கூடாது.
- காசநோய் உள்ள கைதிகளுக்கென்று தாம்பரம் டி.பி.சானடோரியம் மற்றும் மதுரை டி.பி மருத்துவமனையில் சில குறிப்பிட்ட படுக்கைகள் ஒதுக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்ட தலைமையகத்திலும் ஒரு கிளைச் சிறைச்சாலை அல்லது சிறப்பு சிறைச்சாலை அமைக்கப்பட வேண்டும்.

- நீதிமன்றத்திலிருந்து கிளைச் சிறைச்சாலை மற்றும் சிறப்பு சிறைச்சாலைகளுக்கு சிறைத்துறையினரே அழைத்துச் செல்ல வேண்டும். இதில் போலீசார் ஈடுபடுத்தப்படக் கூடாது. அதே போல் மாநிலத்திலுள்ள அனைத்து கிளைச்சிறைசாலைகளும் நிலவருவாய் துறையிடமிருந்து சிறைத்துறைக்கு மாற்ற வேண்டும்.

- சிறைச் கைதிகளுக்கு அசைவ உணவுகளான கறி அல்லது மீன் போன்றவை வாரம் ஒரு முறை வழங்க வேண்டும். சைவ உணவு உண்பவர்களுக்கு அசைவ உணவிற்கு பதிலாக இனிப்பு மற்றும் தயிர் வழங்கலாம்.

- ஒவ்வொரு மத்திய சிறையிலும் வெளியில் கிராமங்களில் செயல்படும் பஞ்சாயத்து முறை போன்று அறிமுகப்படுத்தப்பட்டால் கைதிகளை ஒருமுகப்படுத்தி அவர்கள் இதன் மூலம் ஒத்துழைப்பு பெற்று அவர்களுக்குள்ளாகவே ஒரு அமைப்பை ஏற்படுத்தலாம்.

- நார் அல்லது வைக்கோல் அடைக்கப்பட்ட தலையணைகளை ஒவ்வொரு கைதிகளுக்கும் வழங்கலாம்.

- கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் பணியாளர்களின் பணியைச் சற்று மேம்படுத்தலாம்.

- கைதிகளின் மறுவாழ்வுக்கு தொழிற் பயிற்சிகள், சிறு வணிகம் மற்றும் கைத்தொழில் செய்முறை பயிற்சி, கணினிப் பயிற்சி போன்றவை சரியான வகையில் அளிக்கப்பட வேண்டும்.

- கைதிகளின் அறையில் சுத்தமான நீர் வைக்கப்பட வேண்டும். அதே போல அவர்கள் வார்டர்களின் துணையின்றி அவர்களாகவே தாகத்தை தீர்த்துக் கொள்ளும்படி நீர் வைக்கப்பட வேண்டும்.

- சிறை வளாகம் முழுவதும் முக்கிய கழிப்பறைகள், குளியலறைகள் சுகாதாரத்துடன் பேணப்பட வேண்டும். இதற்கு ஒவ்வொரு கைதிகளுக்கும் தரமான சோப்பும், பல்துலக்கும் பொடியும் வழங்கப்பட வேண்டும்.

- குறைந்த கால தண்டனை பெறும் கைதிகளுக்கும் உபயோகமான வேலைகளை வழங்கலாம். அதற்கேற்ப ஊதியமும் அளிக்கலாம்.

- முதன்மை நீதிமன்ற நீதிபதி முழுக் கவனம் செலுத்தி அரசின் ஆணைகள் சரியான வகையில் சிறைகளில் நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

- வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு பொருத்தமான வேலைகளை வழங்கலாம். அவர்களுக்கு அதற்கேற்ப ஊதியத்தை எந்தவித பிடித்தமும் இன்றி அளிக்க வேண்டும்.

இப்பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் போதே சிறைக் கலவரங்களுக்கு முற்றுப்புள்ளி ஏற்படும். சிறையானது உண்மையான சீர்திருத்தப்பள்ளியாகத் திகழும்.

## சிறை மரணங்களைத் தடுக்கப் பரிந்துரைகள்:

- சிறைக்குள் அனுமதிக்கப்படும் கைதிகளுக்கு முறையான மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு மருத்துவ ஆவணங்கள் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும்.
- காவல்நிலையங்களில் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் வருகின்ற கைதிகளுக்கு அரசு பொது மருத்துவமனையில் முறையான சிகிச்சையளித்த பின்பே சிறைக்குள் அனுமதிக்க வேண்டும்.
- சிறைச்சாலை மருத்துவமனையில் அனைத்து கைதிகளுக்கும் முறையான மருத்துவ சிகிச்சையளிக்க தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களும் கட்டாயமாக இருக்க வேண்டும். மருத்துவமனையில் உள்ள வசதிகள் குறித்து உயர் அதிகாரிகளால் கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்.
- ஆயுள் தண்டனை கைதிகளுக்கு தொடர் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனியான மருத்துவ பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். அந்த மருத்துவப் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதை சிறை உயர் அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும்.
- கைதிகளுடைய மரணங்கள் அனைத்தும் தற்கொலைகளாக சித்தரிக்கப்படுகின்றன. ஒருவேளை அவை தற்கொலைகளாக இருந்தாலும் அதற்குரிய பொறுப்பை அப்போது பணியில் இருக்கும் சிறை அதிகாரி தான் ஏற்க வேண்டும்.
- கைதிகள் எளிதில் தற்கொலை செய்யக்கூடிய வகையில் உள்ள பொருட்களை பாதுகாப்பாக பராமரிக்க வேண்டும். மேலும் அப்பொருட்களின் மீது தொடர் கண்காணிப்பும் கவனமும் இருக்க வேண்டும். (கயிறு, பினாயில், மண்ணெண்ணெய் உட்பட்ட பொருட்கள்)
- தனிமையில் சோர்வாக உள்ள கைதிகளை கண்காணித்து அவர்களுக்கு தேவையான ஆற்றுப்படுத்துதலை நிபுணர்களை கொண்டு கொடுக்கலாம். மனச்சோர்வை நீக்கும் ஆரோக்கியமான பொழுதுபோக்கு நிகழ்வுகளை நடத்தலாம்.
- சிறை மரணங்களை தடுப்பதில் சிறைத் துறை மட்டும் பொறுப்பல்ல. நீதித்துறைக்கும், அரசு பொது மருத்துவமனைக்கும் தார்மீக பொறுப்புண்டு. கைதிகளை சிறைப்படுத்துவதற்கு முன்பு நீதிமன்றத்தில் காவல்துறையால் தாக்கப்பட்டு கைதிக்கு காயங்கள் ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அரசு பொது மருத்துவமனையில் கைதிக்கு மருத்துவ பரிசோதனை செய்து உண்மையான மருத்துவ அறிக்கையை அளிக்க வேண்டும். காவல்துறையினருக்கு சார்பாக பொய்யான அறிக்கையை அளிக்கக் கூடாது. ஆகவே ஒரு கைதி சிறைப்படுத்தப்பட்டு மரணம் நிகழ்கின்ற பட்சத்தில் சம்பந்தப்பட்ட சிறைக் காவலர்கள், கைது செய்யப்பட்ட காவல்நிலைய காவலர்கள், விசாரணை செய்த நீதிபதி, மருத்துவ அறிக்கை அளித்த

அரசு மருத்துவர் ஆகியோரையும் குற்றவாளிகள் பட்டியலில் இணைத்து அவர்களிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

- சிறையில் நூலகங்கள் அமைத்து மன ஆறுதலுக்கு, நன்னெறிகள் மிக்க நூல்களை வாங்கி வைக்கலாம். கைதிகளிடையே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வாசிப்பு நேரம் என்று தனியாக ஒதுக்கலாம். நூல்கள் மீதான விவாதங்கள் மேற்கொள்ள செய்யலாம். எழுத்து ஆற்றல் மிக்க கைதிகள் உள்ளிருப்பின் அவர்களுடைய எழுத்துக்கள் பிரசுரமாக நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
- யோகா மற்றும் ஆற்றுப்படுத்துதல் பயிற்சிகள் கொடுட்து மன ஆறுதலுக்கான வேலைகளைச் செய்யலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கைதியாக்கப்பட்டு நிராதரவாக்கப்பட்ட அவருடைய குடும்பத்தார் மற்றும் குழந்தைகளின் மறுவாழ்வுக்காக அரசு முன்முயற்சியெடுக்க வேண்டும். அவருடைய குழந்தைகளின் கல்வி எந்நிலையிலும் பாதிக்கப்படாத வகையில் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை அரசு ஏற்று செய்ய வேண்டும். இது போன்ற மறு வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களுடன் இணைந்த செயல்பாட்டின் மூலமாகவும் கைதிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தாரின் மறுவாழ்வை உறுதி செய்ய முடியும்.

...ஓஓ...

# வகுப்பறை வன்முறை

## 1. பதில் கூறாத மாணவரை அடித்துக் காயப்படுத்திய ஆசிரியர்

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை தாலுக்கா, கீழநத்தம் தெற்குகூரில் உள்ள வெள்ளைத்துறையின் மகன் ஆறுமுகம்(14). இவர் பாளையங்கோட்டை தூய யோவான் மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 17.02.09 அன்று வகுப்பாசிரியர் கனகராஜ் அறிவியல் மற்றும் ஆங்கிலப்பாடத்தை படிக்கக் கூறி கேள்வி கேட்டார். அப்பொழுது முழுமையாக மனப்பாடம் செய்யாத ஆறுமுகத்தால் பதில் கூற இயலவில்லை. இதனால் ஆறுமுகத்தை ஆசிரியர் கனராஜ் கைகளாலும், பிரம்புக் குச்சியாலும், உடல் முழுக்க அடித்தார், வலிக்கிறது எனவும் தனக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்துள்ளேன் எனவும் ஆறுமுகம் கூறியதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அடித்து துன்புறுத்தினார். இதனால் தொடைகளிலும் வீக்கமும், நடக்க முடியாத அளவில் கால்களில் வீக்கமும் ஏற்பட்டது. பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் மாணவர் ஆறுமுகத்தின் தந்தை வெள்ளைத்துரை புகார் அளித்து குற்ற எண் 119/09ல் வழக்குபதிவு செய்யப்பட்டது. ஆசிரியர் கனகராஜ் இனிமேல் மாணவர்களை அடிக்கமாட்டேன் என எழுதிக் கையெழுத்துப் போட்டதன் பேரில் வழக்கு திரும்ப பெறப்பட்டது.

## 2. ஆசிரியர் அடித்ததால் மாணவர் தற்கொலை

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்கா, மாடத்திட்டுவிளை தூய லாரன்ஸ் மேல்நிலைப்பள்ளியில் 9-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தவர் செல்வமணியின் மகன் அருஸ்(14). இவர் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர். 26.02.09 அன்று ஜான் என்ற பெயரில் கிளாட்சன் எனும் மாணவர் காதல் கடிதம் எழுதி அருஸிடம் கொடுத்து அதனை அதே வகுப்பில் பயிலும் மேக்லின் எனும் மாணவிக்கு தந்துள்ளார்கள். அக்கடிதத்தை மேக்லின் வகுப்பாசிரியர் மரியராஜிடம் காண்பித்தார். இதனால் கிளாட்சனையும், அருஸையும் ஆசிரியர் மரியராஜ் அடித்துள்ளார். வகுப்பிற்கு வெளியே நிற்க வைத்தும் அடுத்த நாள்

27.02.09 அன்றும் இருவரையும் ஆசிரியர் மரியராஜ் அடித்துள்ளார். 2.3.09 இன்று மாணவி மேக்லினின் தந்தை மார்வுல் டெய்லர் பள்ளி ஒழுங்கையும் மீறி தலைமையாசிரியர், மற்ற ஆசிரியர்கள் முன்னிலையிலேயே மாணவர் அருஸை அடித்துள்ளார். கிளாட்சனின் தாய் அருள்மேரி அதே பள்ளியில் ஆசிரியராக இருந்தமையால் அந்த மாணவரை பள்ளி நிர்வாகம் எதுவும் செய்யவில்லை. மாணவர் அருஸை அடித்ததைப் பற்றி வெளியேக் கூறினால் மற்ற மாணவர்களும் பள்ளியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று பள்ளி நிர்வாகம் மிரட்டியது. மாணவர் அருஸ்சிடம் அவரது பெற்றோர்களை அழைத்துக் வரப் பள்ளி நிர்வாகம் கூறியதால் பெற்றோரும், ஆசிரியர்களும் அடிப்பார்கள் என்று பயந்த மாணவர் அருஸ் பேயன்குழி அருகே வந்து கொண்டிருந்த ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். நாகர்கோவில் ரயில்வே காவல்நிலையத்தில் குற்ற எண் 44*U/S*, குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 174 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. விடுதிச்சுவர் இடிந்து தலித் மாணவி காயம்

நெல்லை மாவட்டம், ராதாபுரம் தாலுக்கா, சுப்பிரமணிமேரி கிராமத்தில் வசிப்பவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த கணேசன் மகள் பானுமதி(15). பணகுடி அரசு மேல்நிலைப்பள்ளியிலுள்ள ஆதிதிராவிட மாணவியர் விடுதியில் தங்கிப் படித்து வந்தார். 07.09.2008 அன்று விடுதியிலுள்ள மேல்சுவர் (போர்டிகோ) இடிந்து மாணவி பானுமதியின் மேல் விழுந்ததில் அவரது கால் முறிவு ஏற்பட்டது. படுகாயமடைந்த பானுமதி நாகர்கோவில் தானு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். காப்பாளரும் ஆசிரியரும் இணைந்தும் 5000/-ரூபாய் பணத்தை மாணவியின் சிகிச்சைக்காக தந்துள்ளனர். வள்ளியூர் துணைக் காவல் கண்காணிப்பாளர், நாங்குநேரி வருவாய் ஆய்வாளர் நேரில் வந்து விசாரணை செய்தும் பணகுடி காவல் நிலையத்தில் மாணவி பானுமதி தரப்பிலிருந்து கொடுத்த புகாரைப் பதிவு செய்ய மறுத்துள்ளனர்.

## 4. கல்விக் கட்டணம் கட்டாத மாணவிகள் சிறைவைப்பு

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுக்கா, திருவாரூர் கிராமத்தில் வசிக்கும் சஞ்சய்காந்தி த/பெ. கந்தன் மகள் ஜான்சி(4), குமார், த/பெ. சேதுபதி மகன்கள் கௌதம்(5), காவியன்(4) ஆகிய மாணவர்கள் பண்ருட்டியில் உள்ள ராதாமெட்ரிக் பள்ளியில் பயின்று வந்தனர். 11.4.09 அன்று பள்ளி கட்டணமும், வாகனக் கட்டணமும், மேற்குறிப்பிட்ட இந்த மாணவர்கள் செலுத்தவில்லை என்று பள்ளி நிர்வாகம், பள்ளி முடிந்த உடன் அந்த மாணவர்களை வகுப்பறைக்குள்ளேயே அடைத்து வைத்தனர்.

## 5. கல்லூரி மாணவி தற்கொலை முயற்சி

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டத்திலுள்ள *SFR* கல்லூரியில் கிறிஸ்தவப் பறையர் சமூகத்தைச் சேர்ந்த ஆரோக்கியசாமியின் மகள் திவ்யா(18) விடுதியில் தங்கி முதலாமாண்டு தமிழ்த்துறையில் படித்து வந்தார். 21.03.09 அன்று திவ்யா, மூன்றாமாண்டு மாணவியின் தட்டை எடுத்துவிட்டார் என்பதற்காக விடுதிக்காப்பாளர் ஜெயாவும், தமிழ்த்துறை பேராசிரியர்

கனகாம்பாளும் திவ்யாவை கடுமையாகத் திட்டியதால் மனம் உடைந்த திவ்யா *compous* மாத்திரையைத் தின்று தற்கொலைக்கு முயற்சித்தார். மாணவி திவ்யாவின் தாய் மாமா சங்கரன் கோவிலுக்கு அருகில் விடுதிக் காப்பாளராக பணி செய்வதால் கல்லூரி நிர்வாகத்தின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முயற்சிக்கவில்லை.

## 6. உயர்சாதி மாணவர்களால் தலித் மாணவர் சித்திரவதை

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுக்கா, பறையர் சமூகத்தைச் சேர்ந்த சாரதி என்பவரின் மகன் பிரவீன்குமார்(20) சென்னை கிண்டியிலுள்ள *SRM* பல் மருதுவமனை விடுதியில் தங்கி *BDS* இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். பிரவீன்குமாரின் விடுதி அறையில் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த விவேக்பாண்டியன், யாதவர் சமூகத்தைச் சேர்ந்த வெங்கடகிருஷ்ணன், அழகப்பன், மற்றும் முதலியார் சமூகத்தைச் சேர்ந்த கார்த்திக்கேயன், சேதுபதி ஆகியோரும் தங்கியுள்ளனர். இந்த விடுதி அறையில் பிரவீன்குமார் மட்டுமே தலித் மாணவராக இருந்ததினால் செருப்பை சட்டைத்துணியால் துடைக்கச் சொல்லியும், கழிப்பறையை சுத்தம் செய்வது போன்ற இழிவான வேலைகளைச் செய்யச் சொல்லியும் சாதிய ரீதியாக மேற்கண்ட இந்த 5 சாதி மாணவர்களும், துன்புறுத்தியுள்ளனர். 11.9.08 அன்று பிரவீன்குமார் தன்னுடைய இருக்கையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த போது 'பறநாயே, பறத்தேவியடியாப் பையா' என்று சாதியைக் கூறி இழிவுபடுத்தி இருக்கையை விட்டு இறங்கி தரையில் உட்கார்ந்து படிக்க கட்டாயப்படுத்தியுள்ளனர். பிரவீன்குமார், இது என்னுடைய நாற்காலி என்று கேள்வி எழுப்பிய உடன் உயர்சாதி மாணவர்கள் அவரை அடித்து காயப்படுத்தியுள்ளனர். இதனால் பிரவீன்குமாரின் காது செயல் இழந்து போனது. கல்லூரி நிர்வாகத்திடம் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் உயர்சாதி மாணவர்களிடத்தில் இருந்து 20,000/- ரூபாயை பணமாக பெற்றுக் கொண்டது. கல்லூரி நிர்வாகம். 19.9.09 அன்று *R-9* வளசரவாக்கம் காவல்நிலையத்தில் ப்ரவீன்குமாரின் தந்தை புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் 'உங்களுக்கு கல்லூரியில் படிக்க இடம் கொடுத்ததே தவறு' எனக்கூறி காவல்நிலைய ஆய்வாளர் ஜெயவேல் இழிவுபடுத்தியுள்ளார்.

## 7. மாணவரை அடித்துத் துன்புறுத்திய ஆசிரியர்

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தாலுக்கா, மல்லூர் வெற்றிவிகாஸ் மேல்நிலைப்பள்ளியில் மதியழகனின் மகன் அகிலம்(16) பிளஸ்-1 படித்து வந்தார். 31.08.09 அன்று அகிலன், அவனோடு படிக்கும் சக மாணவராகிய சுவாமிநாதனின் மூக்கை அழுத்தியதில் சிவந்துபோனது. இதனை விசாரித்த கணக்கு ஆசிரியர் ரவி என்பவர் *Iudo reapeer* -ஐ எடுத்து அகிலனின் முதுகு, தொடை, முழங்கை என உடலின் எல்லாப் பகுதிகளிலும் அடித்து துன்புறுத்தினார். காயமடைந்த அகிலம் 31.8.09 முதல் 1.9.09 வரை சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். காவல் நிலையத்தில் புகார் அளித்தும் காவலர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பள்ளித் தலைமையாசிரியரும் இது சாதாரண விஷயம் என்றே குறிப்பிட்டார்.

## 8. 'பிட்' அடித்த மாணவியைக் கண்டித்ததால் தற்கொலை

கோவை, கிருஷ்ணா நகர், நாடார் சமூகத்தைச் சேர்ந்த அன்புராஜின் மகள் வந்தனா, இவர் சொக்கபுதூர் *SBOA* பள்ளியில் பிளஸ்-2 படித்துக் கொண்டிருந்தார். 3.9.09 அன்று பள்ளியில் நடைபெற்ற செய்முறை தேர்வின் போது மாணவி வந்தனா ஒரு தாளைக் கொண்டு பார்த்து எழுதினார். இதனை கவனித்த ஆசிரியர் பத்மப்ரியா, மாணவி வந்தனாவை தலைமை ஆசிரியரிடம் அழைத்துச் செல்வதாகக் கூறி, அவருடைய அப்பாவின் கைப்பேசி எண்ணையும் கேட்டதனால் அச்சமுற்ற மாணவி வந்தனா பள்ளியின் 3 வது மாடியிலிருந்து குதித்தார். இதனால் அவருடைய இடதுகால் முற்றிலுமாக முறிந்து போனது. கோவை *REX* மருத்துவமனையில் கிச்சிசைப் பெற்ற வந்தனா 4.09.09 அன்று சிகிச்சை பலனின்றி இறந்து போனார். இதனை பி.10 செல்வபுரம் காவல் நிலையத்தில் குற்ற எண் 983/09, குற்றவியல் நடைமுறைச் சட்ட பிரிவு 174-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## 9. பள்ளிச் சிறுமிகளைப் பாலியல் தொந்தரவு செய்த தலைமை ஆசிரியர்

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுக்காவிலுள்ள ஒடசல்புதூர் கிராமத்தைச் சேர்ந்த சவரத்தொழிலாளி கிருஷ்ணன் மகள் ஜெயப்பிரியா(8) ஒடசல்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வந்தார். இந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயராமன்(54) அங்கு பயிலும் பல்வேறு சிறுமிகளிடம் பாலியல் தொந்தரவுகளை செய்துள்ளார். 26.03.09 அன்று தலைமையாசிரியர் ஜெயராமன் ஜெயப்பிரியாவை அவருடைய அறைக்கு அழைத்துச் சென்று மார்பு, மற்றும் பிறப்புறுப்பில் கைவைத்து பாலியல் தொந்தரவு செய்துள்ளார். வலியினால் துன்பப்பட்ட சிறுமி ஜெயப்பிரியாவை, அவரது பெற்றோர்கள் கடத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தபோது பாலியல் கொடுமையைக் கண்டறிந்துள்ளனர். ஊர் பொதுமக்களின் போராட்டத்திற்கு பிறகு கடத்தூர் காவலர்கள் ஜெயராமனை கைது செய்து குற்ற எண் 69/09, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 354, மற்றும் தமிழ்நாடு பெண்கள் சித்திரவதை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 4-ன் கீழும் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## 10. விடுதிக் காப்பாளர் குழந்தைகளை அடித்துச் சித்திரவதை

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், சேவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 4-ம் வகுப்பு படிப்பவர் ஸ்டெல்லாவின் மகன் ப்ரவீன்(9). ப்ரவீன் சேவூரில் உள்ள உதவும் உள்ளங்கள் சிறார் மையத்தில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார். இங்கு விடுதிக் காப்பாளராக உள்ள பொன்ராஜ் குழந்தைகளிடம், காலணிகள் சுத்தம் செய்வது, வண்டியை துடைப்பது, கழிப்பறையைக் கழுவுதல், தண்ணீர் நிரப்புதல், கடைக்கு அனுப்புதல், காய்கறிகளை வெட்டச் சொல்வது போன்ற வேலைகளை செய்யுமாறு கட்டாயப்படுத்தியுள்ளார். இந்த தொந்தரவுகளை தாங்க முடியாத ப்ரவீன் 9.3.09 அன்று தன்னுடைய அம்மாவை பார்க்க

வேண்டும் எனக் கூறியுள்ளார். இதனால் கோபமுற்ற காப்பாளர் பொன்ராஜ் ப்ரவீனை விறகுக் கட்டையால் தலையிலும், கைகளிலும் ரத்தம் வருமாறு அடித்து துன்புறுத்தியுள்ளார். 11.3.09 அன்று பள்ளியில் மயக்கமுற்ற மாணவன் ப்ரவீனை சேவூர் அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர்.பள்ளி வளர்ச்சிக் குழுவின் மூலம் சேவூர் காவல்நிலையத்தில் குற்ற எண் 83/09, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 324 ன் கீழ் பொன்ராஜின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. ஆனால் மறுநாளே பொன்ராஜ் பிணையில் வெளியே வந்துள்ளார்.

## 11. கட்டாய நன்கொடையை கேட்ட மாணவர் சங்க பொறுப்பாளர்களுக்கு அடி

இந்திய மாணவர் சங்கத்தின் வேலூர் மாவட்ட செயலாளாராக இருப்பவர் வேளாளக் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த தனுஷ்(23), வேலூர் மாவட்ட தலைவராக இருப்பவர் ஏகலைவன். இவர்களுக்கு ஆற்காடு மாவட்டம், காவனூர் அரசுப்பள்ளியில் கட்டாய நன்கொடையாக ரூ.200/-வசூலிக்கப்படுவதாக மாணவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் 6.7.09 அன்று பள்ளித் தலைமையாசிரியர் ஞானசேகரனிடத்தில் பேசினார்கள். அவர் முறைப்படி பதில் கூறாததனால் 7.7.09 அன்று பள்ளியின் முன் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கேட்டனர். இதனால் ஆத்திரமடைந்த திமிரி காவல்நிலைய ஆய்வாளர் வெங்கடேசன் ‘என்னடா…பு…தேவுடியா மகன்களா என்று தகாத வார்த்தைகளால் தனுஷ் மற்றும் ஏகலைவனையும்’ இழிவுபடுத்தி அடித்துள்ளார். ‘ காக்கி துணியில்லாமல் அடிச்சா என்ன செய்வீர்கள்’ என்று மிரட்டி, ஆர்ப்பாட்டம் செய்யமாட்டோம் என்று எழுதித்தர கட்டாயப்படுத்தி மாணவர் சங்க பொறுப்பாளர்கள் தனுஷ் மற்றும் ஏகலைவன் மீது பொய்வழக்கு பதிவு செய்தார்.

## 12. ஆசிரியர் அடித்ததால் மாணவி தற்கொலை

சிவகங்கை தாலுக்கா சோழபுரம், செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் மகள் சுந்தரி(15). சோமசுந்தரம் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 27.6.09 அன்று தன்னுடைய உறவினர் திருமணத்திற்கு செல்லவேண்டும் என்று வகுப்பாசிரியர் ஜான்பிரிட்டோவிடம் சுந்தரி கேட்டபோது விடுப்பு தாராமல் மறுத்து விட்டார். அதனால் மாதத் தேர்வையும் சுந்தரியை எழுதவிடாமல் செய்து, ஏற்கனவே எழுதிய தேர்வு விடைத்தாளை படித்து காண்பித்து சரிவர படிக்கவில்லை என்று மாணவி சுந்தரியை ஜான்பிரிட்டோ அடித்துள்ளார். இதனால் மனமுடைந்த மாணவி சுந்தரி 28.6.09 அன்று தூக்குமாட்டி தற்கொலை செய்துகொண்டார். காவல்துறையிடம் புகார் கொடுக்க சுந்தரியின் பெற்றோர் விரும்பாததால் பள்ளி நிர்வாகத்திடம் புகார் கூறியதால் ஜான்பிரிட்டோவை பள்ளி நிர்வாகம் தற்காலிக பணியிடை நீக்கம் செய்துள்ளனர்.

## 13. பள்ளி மாணவியைப் பகடி செய்து சித்திரவதை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், பாமணி கிராமம், யாதவர் சமூகத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகள் அஞ்சுப்பிரியா (18). இவர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பிளஸ்-2 படித்துக் கொண்டிருந்தார். அதே பள்ளியில் பயின்ற கணேசன், வெள்ளிவேல், ரஞ்சித், மைக்கேல்ராஜ் ஆகிய சக மாணவர்கள் தண்ணீர் பாட்டிலை பிடுங்குவது, அருகில் அமர்வது, சாப்பாட்டைக் கொட்டுதல், புத்தகத்தைக் கிழித்தல், சுடிதார் துப்பட்டாவை இழுத்தல், வழி மறிப்பது, முடியை இழுப்பது (வகுப்பறையிலேயே), பிளேடால் கிழிப்பது போன்ற பல்வேறு சித்திரவதைகளை மாணவி அஞ்சுப்பிரியாவுக்கு இழைத்து வந்தனர். பள்ளித்தலைமை ஆசிரியர் சிவசுப்பிரமணியனிடம் அஞ்சுப்பிரியா புகார் செய்ததனால் கணேசன் என்ற மாணவன் கத்தியை காட்டி மிரட்டியுள்ளான் இதனால் அஞ்சுப்ரியாாவின் பெற்றோர்கள், அவருடைய ஊருக்கு அருகில் உள்ள தலைக்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் 26.6.09 அன்று சேர்த்தனர். 27.6.09 அன்று அஞ்சுப்பிரியாவை பின் தொடர்ந்து வீட்டை கண்டறிந்த மாணவர்கள் அன்று மாலை அஞ்சுப்பிரியாவின் வீட்டிற்குள் நுழைந்து அவரை அடித்தும், பிளேடால் உடலெங்கும் கீறியும் துன்புறுத்தினர். ஆட்கள் வருவதை கண்டு தப்பித்து ஒடினர். படுகாயமடைந்த அஞ்சுப்ரியா 27.6.09 முதல் 13.7.09 வரை திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று திருத்துறைபூண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தும் ஆய்வாளர் வெற்றிவேல் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தார். பாதிப்பை ஏற்படுத்திய மாணாக்கர்களில் 2 பேரை மட்டுமே கைது செய்துள்ளார். மேலும் காவல்துறையினர் பாதிப்பை ஏற்படுத்திய நபர்களுக்கு சாதகமாகவே இருந்து வந்தனர்.

## 14. ஆசிரியரும் பெற்றோரும் திட்டியதால் பள்ளிமாணவி தற்கொலை

வேலூர் மாவட்டம், ஆம்பூர் தாலுக்கா, இந்திரா நகரில் வசிக்கும் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த சாரதா என்பவரின் மகள் மீனா(14) இந்து மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். அதே பள்ளியில் பயிலும் மீனாவின் தோழி மோனிகாவும், மீனாவும் 31.08.09 அன்று பள்ளிச் சீருடையில் ஒரு இளைஞனோடு செங்கற்சூளைக்கு சென்றுள்ளனர். இதனை பள்ளி நிர்வாகம் கண்டறிந்து பள்ளியின் நற்பெயர் கெட்டுவிட்டது என திட்டி ‘‘மாற்றுசான்றிதழை வாங்கிச் கொண்டுச் செல்’’ என மீனாவை பள்ளித்தலைமையாசிரியர் அன்னபூரணி கடுமையாக திட்டியுள்ளார். மீனாவின் அம்மாவும் திட்டியதால் மனமுடைந்த மாணவி மீனா 31.8.09 அன்றுமாலை தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துகொண்டார். இதனால் ஆம்பூர் காவல் நிலையத்தில் பள்ளி நிர்வாகத்தின் மீதும், தலைமையாசிரியர் மீதும் மீனாவின் தாய் புகார் செய்தார். ஆனால் பள்ளி நிர்வாகம் 50,000/ ரூபாயை அடக்க செலவிற்கு வைத்துக் கொள்ளுங்கள் எனக்கூறி புகாரை திரும்ப பெற்றுக் கொள்ள வைத்தனர்.

## 15. மாணவரை தற்கொலைக்குத் தூண்டிய தனிப்பயிற்சி மைய நிர்வாகி

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம் பண்டாரத்தான் காட்டில் வசிக்கும் சுப்ரமணியம் மகன் இளவரசன் 9-ம் வகுப்பு படித்து வந்தார். அதே ஊரில் உள்ள தென்றல் தனிப்பயிற்சி மையத்தில் *(Tuition)* பயின்று வந்த இளவரசன் 25.11.09 அன்று அருகில் இருந்த மாமரத்தில் மாங்காயைப் பறித்துள்ளார். இதனையறிந்த மையத்தின் நிர்வாகி ஜெயராமன் ‘‘திருடியதற்குப் பதில் விஷம் குடிக்கலாம், இது உன் பரம்பரைத் தொழிலா, பெத்தவனுக்குசட சோறுபோட வக்கில்லையா?’’ என்று தன்போக்கில் மாணவர் இளவரசனை திட்டினார். இதனால் மனமுடைந்த இளவரசன் பூச்சிகொல்லி மருந்தை உட்கொண்டார். இதனையறிந்த நிர்வாகி ஜெயராமன் தான் திட்டியதை மறைப்பதற்காக சுப்பிரமணியத்தின் மைத்துனன் எழிலரசன் மீதும், அவரது உறவினர்கள் மீதும் பொய் வழக்கை பதிவு செய்தும், மாணவர்கள் வெளியில் கூறிவிடாதபடி அவர்களையும் மிரட்டியுள்ளார்.

## 16. தலித் மாணவரை அடித்து சாதியைக் கூறி இழிவுபடுத்திய ஆசிரியர்

சிவகங்கை மாவட்டம், சாக்கூர் அஞ்சல், கோலிந்தி கிராமத்தில் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த அர்ச்சுனனின் மகன் அரவிந்த்(14)உலகமாதா உயர்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறார். 28.7.09 அன்று மாணவர் அரவிந்தின் சட்டைக்குள் எறும்பு ஒன்று அடித்ததினால் சட்டை காலரை தூக்கி அதனை நசுக்கியுள்ளார். சட்டையின் காலரை சரிசெய்யாமல் அப்படியே மறந்து வகுப்பில் இருந்த போது கணித ஆசிரியர் ‘பள்ளனுங்க எல்லாம் சண்டியரா’ என்று சாதியைக் கூறி இழிவுசெய்தும், குடும்பத்தை திட்டியும் கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். இதனால் அரவிந்தின் காது பாதிக்கப்பட்டு நீர் வடிந்து கொண்டேயிருந்தது. காளையார்கோவில் அரசு மருத்துவமனையில் அரவிந்த் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்று காளையார்கோவில் காவல்நிலையத்தில் அரவிந்தின் தந்தை புகார் அளித்தார். ஆனால் மாணவன் அரவிந்தை அடித்த பாலையாவும், காவல் ஆய்வாளர் செங்குட்டுவனும் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்ததினால் எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

## 17. தனியார் கல்லூரியில் மாணவர் மர்ம சாவு

கிருஷ்ணகிரி மாவட்டம், சாம்பரம் கிராமத்தில் வசிக்கும் வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த முனிராஜின் மகன் சரத்குமார்(17). இவர் ஓசூர் தாலுக்கா/ கோனேரிப்பள்ளி ‘பெருமாள் மணிமேகலை’ கல்லூரியில் இரண்டாமாண்டு கெமிக்கல் டெக்னாலஜி படித்துவந்தார். 28.7.08 அன்று சரத்குமார் தங்கியிருந்த வாடகை அறையில் தூக்குமாட்டி இறந்து கிடந்தார். கல்லூரி நிர்வாகமும் எவ்வித தகவலையும் பெற்றோருக்கு அளிக்காமல் இருந்துள்ளது. சரத்குமாரின் தந்தை தன் மகனை யாரோ சித்திரவதை செய்து கொன்றுள்ளார்கள் என சந்தேகித்தார். இது பற்றி சூளகிரி காவல் நிலையத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டபிரிவு 174ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 18. பள்ளி மாணவன் கையை முறித்த ஆசிரியர்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நாயனா செருவு கிராமம், கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த பாரதியின் மகன் பர்குணன்(13), நாட்ராம் பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 25.3.09 அன்று விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களில் யாரோ ஒருவர் எறிந்த கல் அப்பள்ளியில் பணி செய்யும் ஆசிரியர் அய்யப்பன் மீது பட்டது. இதனைப் பர்குணன் தான் செய்தார் என்று அய்யப்பன், பர்குணனை அடித்து வலது கையை முறித்தார். 26.3.09 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்த பர்குணனிடம் திருப்பத்தூர் தலைமை காவலர் பாஸ்கரன் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார். ஆனால் ஆசிரியர் அய்யப்பன், பெற்றோர்கள் மற்றும் ஊர் பெரியவர்களிடத்தில் மன்னிப்பு கேட்டதால் இருதரப்பிலும் சமரசம் செய்து கொண்டு புகாரை திரும்ப பெற்றனர்.

## 19. பள்ளி மாணவரை அடித்துச் சித்திரவதை செய்த ஆசிரியர்கள்

தஞ்சை மாவட்டம், கடலூர் கிராமத்தில் வசிக்கும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மகன் ஜீவன்ராஜ்(14) அம்மாபேட்டை அருள்நெறி மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். அந்த பள்ளி ஆசிரியர்கள் வெங்கேடசனும், ரம்யாவும் காதலித்து வருவதாக மாணவர்களிடத்தில் ஜீவன்ராஜ் தான் சொன்னார் என்று தவறாக நினைத்து 7.8.09 அன்று ஆசிரியர்கள் வெங்கடேசன், செந்தில், பொன்னியின் செல்வன் மற்றும் சாமிநாதன் ஆகியோர் ஜீவன்ராஜின் வகுப்பறைக்குள் நுழைந்து காட்டுமிராண்டித்தனமாக அடித்தும், உதைத்தும் சித்திரவதை செய்துள்ளனர். இந்த தாக்குதலினால் மாணவர் ஜீவன்ராஜின் காதிலிருந்து ரத்தம் வடிந்தது. இதனையாரிடமும் சொல்லக்கூடாது என்று ஜீவன்ராஜை ஆசிரியர்கள் மிரட்டி வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். நடுக்காவேரி காவல்நிலையத்தில் 7.8.09 அன்று பெற்றோர்கள் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையையும் ஆய்வாளர் சிவக்குமார் மேற்கொள்ளாமல் பெற்றோர்களை அலைக் கழித்துள்ளார். தாக்குதல் தொடுத்த ஆசிரியர்களின் மீது குற்ற எண் 199/09, இந்திய தண்டனை சட்டப்பிரிவு 323, 506 கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 20. சிறுவனின் பார்வையைப் பறித்த ஆசிரியை

தர்மபுரி வெண்ணாம் சாலையில் வாகன ஓட்டுனராக இருப்பவர் சுல்தான், இவருடைய மகன் பாரூக்(8) ஸ்ரீபாக்யம் வித்யாலாயா நர்சரி பள்ளியில் முதலாம் வகுப்பு படித்து வருகிறான். 3.3.09 அன்று இந்தி ஆசிரியை ராஜலட்சமி மூங்கில் குச்சியில் அடித்ததில் பாருக்கின் கண் முற்றிலுமாக சேதமடைந்தது. ஆனால் இதனை மறைத்து பள்ளியின் தாளாளர் குமார், பாரூக்கின் தாயார் நசீபாவிடம் 'பாரூக்கே பென்சிலால் கண்ணைக் குத்திக் கொண்டதாகக்' கூறினார். மருத்துவ செலவுகளை சாமாளிக்க இயலாத பாரூக்கின் பெற்றோர்கள் பள்ளி நிர்வாகத்தைக் கேட்டதற்கு 'உன்னால் என்ன செய்ய முடியுமோ

செய்துகொள்' என்று கூறி எந்த ஒரு உதவியும் செய்யாமல் தவிர்த்துள்ளனர். தர்மபுரி பி.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காத நிலையில் வழக்கறிஞரின் உதவியோடு புகார் பதிவு செய்யப்பட்டது. வேறு பள்ளியில் சேர்க்க வேண்டும் என மாற்றுச் சான்றிதழை பெற்றோர்கள் கேட்டதற்கும் பள்ளிக்குள் வந்தால் 'வெட்டுவேன்' என்று கொலை மிரட்டல் விடுத்தார் தாளாளர் குமார்,

## 21. ஆசிரியர்களின் கவனக்குறைவால் நீச்சல் குளத்தில் இறந்த மாணவர்

திருநெல்வேலி மாவட்டம், கான்மியன் பள்ளிவாசல் தெரு, சாகுல்ஹமீதின் மகன் முகமது ஆசிர்(8). லீட்டில் பிளவர் மார்டன் பள்ளியில் 3ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 27.6.09 அன்று நீச்சல்பயிற்சிக்காக (பள்ளி நிர்வாகம் கட்டாயப் படுத்தியுள்ளது) முகமது ஆசிர் சென்றுள்ளார். நீச்சல் பயிற்சியாளர் வராத சூழலில் ஒரு ஆசிரியை மட்டுமே மாணவர்களை கவனித்துக் கொண்டிருந்தார். அவரும் கைப்பேசியில் பேசிக் கொண்டே குளத்திற்கு வெளியே சென்றுள்ளார். இதனால் மாணவர் முகமது ஆசிர் மூச்சுத்திணறி குளத்திலேயே இறந்து போனார். பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜோஸ்மின் இது குற்றமல்ல கவனக்குறைவு என்றே பெற்றோர்களுக்கு தெரிவித்தார். காவல்துறை 4 நபர்களை கைது செய்தனர். ஆசிரியை சாந்தி தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

## 22. சக மாணவியின் ஆபாச பேச்சால் தற்கொலை செய்த மாணவி

திருநெல்வேலி சத்யா நகர், கிறிஸ்தவ தலித் சமூகத்தைச் சேர்ந்த முத்துபாண்டி மகள் இந்திரா(16) பேட்டை காமராஜ் மேல்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். அவருடன் பயிலும் சகமாணவியான தேவர் சமூகத்தைச் சேர்ந்த செல்வி என்பவர் "நீ கண்டவனையெல்லாம் சைட் அடித்துக் கொண்டு அலையிற" என்று இந்திராவைக் கூறியதால் மனமுடைந்த இந்திரா 10.2.09 அன்று மண்ணெண்ணெயை உடலில் ஊற்றி தீக்குளித்து இறந்து போனார்.

## 23. மாணவரின் கண்பார்வையைப் பறித்த ஆசிரியை

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் மாசிலாமணித் தெரு செங்கமலம் மகன் ராஜபாண்டி(10). செயின்ட் மேரீஸ் மழலையர் தொடக்கப்பள்ளியில் 5ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 4.11.08 அன்று மாணவர்களை படிக்கச் சொல்லி, படிக்காத மாணவர்களை ஆசிரியர் மரகதம் அடித்துக் கொண்டிருந்தார். அப்போது பேசிக் கொண்டிருந்த ராஜபாண்டியை அடிக்க குச்சியை மேலே தூக்கும்போது குச்சி கண்ணில் குத்தி வலது கண் ராஜபாண்டிக்குப் பறி போனது. இதனை பள்ளி நிர்வாகத்திடம் பெற்றோர்கள் கேட்ட போது தாளாளர் ரெஜினாவும், நிர்வாகி பரத்தும் "எங்களிடம் ரௌடிகள், 10 வக்கீல்கள் இருக்கின்றனர். ஆகையால் உங்களால் எதுவும் செய்ய முடியாது" என மிரட்டல் விடுத்தனர்.

மேலும் பெற்றோர்கள் பள்ளி நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தைக்கு வராமல் இருக்க ''ராஜபாண்டி இன்னும் பள்ளிக்கு கட்டவேண்டிய பணம் 10,000/- ரூபாய் மீதம் உள்ளது என்றும் மேற்கொண்டு நடவடிக்கைகளை நீதிமன்றம் மூலம் எடுத்துக் கொள்ளுங்கள்'' எனவும் வக்கீல் நோட்டீசு அனுப்பியது பள்ளி நிர்வாகம். திருவள்ளூர் மாவட்டம் தொடக்க கல்வி அதிகாரி சீனிவாசன் மாணவர் ராஜபாண்டிக்கு, பள்ளி ஆசிரியர் மரகதம் அடித்ததால் கண்பார்வை பாதிக்கப்படவில்லை அவர்வேறு எங்கோ அடிபட்டு வந்து, பள்ளியிடம் பணம் பறிக்கிறார்கள் என்று பெற்றோர்கள் மீது குற்றம் சுமத்தி பள்ளி நிர்வாகத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டார். அம்பத்தூர் காவல்நிலைய ஆய்வாளர் பரத் 177/09 இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 326ன் கீழ் ஆசிரியை மரகதத்தை மட்டும் கைது செய்தார் . பள்ளி நிர்வாகிகள் யாரும் கைது செய்யப்படவில்லை.

## 24. காலதாமதமாக வந்த மாணவனை அடித்த ஆசிரியர்

திண்டுக்கல் மாவட்டம், கீழக்கோட்டை பெரியார் நகரைச் சேர்ந்த பாசரனின் மகன் நடராஜ்(12) இவர் தேவாங்கர் மேல் நிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 11.6.09 அன்று தச்சு ஆசிரியர் சேகரின் வகுப்பிற்கு நடராஜ் காலதாமதமாக வந்தார் என்று அறுவை சிகிச்சை செய்துள்ள மாணவரின் வலது கையில் ஓங்கி பல முறை அடித்துள்ளார். இதனால் நடராஜின் வலது கை வீங்கியது. சின்னாளப்பட்டி காவல் நிலையத்தில் நடராஜின் தந்தை அளித்த புகாரை அரசியல் கட்சியினர் மற்றும் ஊர் பொதுமக்களின் கட்டாயத்தின் பேரில் திரும்ப பெற்றுக் கொண்டார்.

## 25. வருகைச் சான்றிதழ் அளிக்க கையூட்டுக் கேட்ட பள்ளித் தலைமையாசிரியை

தர்மபுரி, வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ராமன் மகன் முனியப்பன். இவர் ஆசிரியர் பயிற்சியை முறையாகப் பயின்று 17.11.08 முதல் 29.1.09 வரை திப்பம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பயிற்சி காலத்தில் இருந்தார். இந்த ஆசிரியர் பணி பயிற்சிக் காலத்திற்குரிய வருகைச் சான்றிதழை பள்ளி தலைமையாசிரியர் அம்சவேணியிடம் முனியப்பன் கேட்டதற்கு அவர் ரூ 500 கையூட்டு தருமாறு கேட்டும், அவ்வாறு தரவில்லை எனில் வருகைச் சான்றிதழை கிழித்துவிடுவதாகவும் மிரட்டல் விடுத்தார். 1.02.09 அன்று மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் தலையீட்டிற்குப் பிறகு சான்றிதழை மாணவர் முனியப்பனிடம் அம்சவேணி வழங்கினார்.

## 26. பிரம்பால் அடித்த ஓவிய ஆசிரியர்

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சாணார்பாளையம் சமூகத்தைச் சேர்ந்த ஆண்டிவேல் மகள் கவிதா(12), கோயில் மகள் ரூபா(12), கொங்குவேளாளக் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த வேலுச்சாமி மகள் சாந்தி(12), மணி மகள் முத்துலெட்சுமி(12) ஆகியோர் மூலனூர் அரசு மேல் நிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு படித்துவந்தனர். 19.2.09 அன்று மாணவர்கள் படிக்காமல்

விளையாடிக் கொண்டிருந்ததால் ஓவிய ஆசிரியர் சுப்பிரமணி மூங்கில் குச்சியால் மாணவிகள் கவிதா, ரூபா, சாந்தி மற்றும் முத்துலட்சுமியை கைகளில் அடித்துள்ளார். வலி தாங்க முடியாமல் மாணவிகள் துடித்துள்ளனர். தலைமையாசிரியரும் விடுப்பில் இருந்தததால் அவரிடம் கூற இயலவில்லை. 21.2.09 அன்று முத்துலெட்சுமியும் கவிதாவும் தாராபுரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டனர். மாணவி முத்துலெட்சுமியின் தந்தை மணி கொடுத்த புகாரின்பேரில் 21.02.09 அன்று குற்ற எண் 31/09 ல் மூலனூர் காவல் நிலையத்தில் ஆசிரியர் சுப்பிரமணியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 27. மாணவன் அடித்துக் கொலை

ஈரோடு, ராதாகிருஷ்ணன் தெரு, வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த வெள்ளிங்கிரியின் மகன் மோகன்ராஜ்(16) இவர் அப்துல்கனி மதராஸா இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வந்தார். 02.03.09 அன்று மதிய உணவை வீட்டில் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கு சென்ற மாணவரை ஆசிரியர்கள் அடித்துள்ளனர். இதனால் மாணவர் மோகன்ராஜ் இறந்துபோனார். பள்ளி நிர்வாகம் நாங்கள் அடிக்கவில்லை எனக் கூறினாலும் இரண்டாம் பருவத்தேர்வு நடைபெறும் போது மாணவர் மோகன்ராஜ் மைதானத்தில் இறந்து போனான் என்கிற பொய்யும் மோகன்ராஜின் இறப்பிற்குப் பள்ளி நிர்வாகத்திலிருந்தும், மாணவர்கள் தரப்பிலிருந்தும் யாரும் வீட்டிற்கு வராததினால் மோகன்ராஜின் இறப்பிற்கு பள்ளி நிர்வாகமே பொறுப்பாகிறது. ஈரோடு நகர காவல்துறை குற்ற எண் 437/09, குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 174ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## 28. போராட்டம் நடத்திய மாணவிகள் மீது காவல்துறை கடும்தாக்குதல்

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா தண்டாரமாணிக்கம், மெய்மை ஆச்சி பிச்சைக்குட்டி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 500க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வந்தனர். ஆனால் 6-10 வகுப்புகளுக்கு இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர். மேலும் மாணவிகளுக்கு போதுமான வகுப்பறை வசதிகளும், கழிப்பறை வசதிகளும் இல்லை. இதனால்1.4.09 அன்று மாணவிகளும், பெற்றோர்களும், ஆசிரியர் கழகத்தினரும் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அங்கு குவிக்கப்பட்டிருந்த திருக்கோஷ்டியூர் காவல் நிலையத்தார் மாணவிகளையும், பெற்றோர்களையும் தகாத வார்ததைகளால் திட்டியும், இரும்பு பூண் போட்ட லத்தியால் உடல் கை, கால், புட்டங்களில் அடித்து துன்புறுத்தியும், குரல் வளையை நெரித்தும், நெஞ்சில் மிதித்தும் காவல் வாகனத்தில் ஏற்றினர், அங்கிருந்த மதிய உணவையும் தரையில் கவிழ்த்துவிட்டனர். இதில் அழகுமீனாள் எனும் மாணவிக்கு கை முறிவு ஏற்பட்டது. மேலும் லீலாவதி, ரம்யா, பாண்டிச்செல்வி, சுசிலா, மல்லிகா, ஆனந்தி, மீனா, அக்சயா, சுந்தரி, மாதவி, அருண் ப்ரியா, ஆகிய மாணவிகளும் காவல்துறையின் தாக்குதலில் கடுமையாக பாதிக்கப்பட்டனர். திருப்பத்தூர் காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட மாணவிகள் சிகிச்சையைப் பெற்றுக் கொண்டனர்.

## 29. கல்லூரி நிர்வாகத்தின் அராஜகம் மாணவி மாயம்

வேலூர் மாவட்டம், திருப்பத்துர் சின்னகண்ணாலப்பட்டி, வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த மகாலிங்கத்தின் மகள் வித்யா(19). இவர் திருப்பத்துர் ஜெயா நர்சிங் கல்லூரி முதலாமாண்டு படித்து வந்தார். இவர் தினமும் வீட்டிலிருந்த கல்லூரிக்கு சென்ற பயிலும் மாணவியாக இருந்ததினால் இவரை விடுதியில் தங்கிப்படிக்க டாக்டர் செந்தில்குமாரும், பிற ஆசிரியர்களும் வற்புறுத்தியுள்ளனர். விடுதியில் தங்கிப் படிக்க அதிகமான பணம் கட்டவேண்டியதனால் சத்யாவின் குடும்பச் சூழலில் பணம் கட்ட தாமதித்ததனால் சத்யாவின் தேர்வு மதிப்பெண்னை குறைப்பது, வறுமையைக்கூறி இழிவுபடுத்துவது போன்ற செயல்களில் கல்லூரி நிர்வாகம் ஈடுபட்டுவந்துள்ளது. இதனால் மனமுடைந்த மாணவி சத்யா 17.2.09 அன்று கல்லூரிக்கு செல்லாமல் வேறு எங்கோ சென்றுள்ளார். 4.3.09 அன்று சந்திலி காவல்நிலையத்தில் புகார் அளிக்கச் சென்ற சத்யாவின் தந்தை மகாலிங்கத்தை திருப்பத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறும், திருப்பத்தூர் காவல் நிலையத்தில் சந்திலி காவல்நிலையத்தில் புகார் அளிக்குமாறும் மாற்றி மாற்றி கூறி 9.3.09 வரை அலைக்கழித்தனர். சந்திலி காவல் நிலையத்தில் தலைமைக் காவலர் மோகன்தாஸ் சத்யா, ஒரு பையனோடு ஓடிவிட்டதாக கதைகட்டினார். சந்திலி காவல் நிலையத்தில் குற்ற எண் 127/09 ல் வழக்கு பதிந்துள்ளார்.

## 30. சிறுமியிடம் பாலியல் தொந்தரவு செய்த ஆசிரியர்

கோவை தில்லைநகரைச் சேர்ந்த ரவிக்குமாரின் மகன் சந்தியாப்ரியா(8). இவர் சங்கனூர் மாநகராட்சிப் பள்ளியில் 3ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். இந்த பள்ளியில் ஆசிரியராக பணிசெய்யும் சுரேஷ் என்பவர் 2.2.09 அன்ற சந்தியாப்பிரியா மற்றும் பிற மாணவிகளிடம் மார்பு மற்றும் உடல் உறுப்புகளை தடவி பாலியல் தொந்தரவு செய்துள்ளார். இதனை காவல்துறையினர் விசாரணை செய்தனர்.

## 31. மதிப்பெண் பட்டியல் தரக் கூடுதல் பணம் கேட்ட கல்லூரி நிர்வாகம்: மாணவர்களைத் தாக்கிய ரௌடிகள்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் புதுப்பேட்டை கிராமம் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த பழனியின் மகன் சங்கர்(23) இவர் திருப்பத்தூர் *GP* கல்வியில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். 17.1.09 அன்று மதிப்பெண் பட்டியில் வாங்குவதற்காகக் கல்லூரிக்கு சென்ற சங்கரிடம் 250/- ரூபாய் பணத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளனர். இதனால் சங்கரும் பிற மாணவர்களும் கல்லூரி முதல்வர் பொன்னுரங்கத்திடம் லட்சணக்கணக்கில் பணம் கட்டியுள்ளோம் இன்னும் எதற்கு பணம் என்று கேட்டனர். இதனால் ஆத்திரமடைந்த கல்லூரி முதல்வர் ரௌடிகளை கல்லூரி வளாகத்திற்குள் வரவழைத்து மாணவர்களை கட்டையால் அடித்து விரட்டினார். காவல்துறையும், திருப்பத்தூர் சட்டசபை உறுப்பினர் ராஜாவும் இருதரப்பிரையும் சமாதானம் செய்து வைத்தனர்.

## 32. மாணவனை அடித்த கல்லூரி முதல்வர்

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுக்கா, திருவிதாங்கோடு மாஹீன் மகன் பகர்தீன். இவர் இறச்சகுளம் சன் தொழில்நுட்பக் கல்லூரியில் முதலாமாண்டு படித்து வந்தார். பகர்தீனுக்கு உடல்நிலை சரியில்லாததால் 04.03.09 அன்று கல்லூரிக்கு செல்லாமல் மறுநாள் 05.03.09 கல்லூரி சென்றுள்ளார். இதனால் கணிதத் துறை தலைவர் சொல்லியும் கேட்காமல் கல்லூரி முதல்வர் ரவிக்குமார் செருப்புக் காலால் பகர்தீனை எட்டி உதைத்து, முதுகில் அடித்துள்ளார். மறுநாள் பெற்றோரை அழைத்து வந்து மாற்றுச் சான்றிதழை பெற்றுச் செல் என்று பகர்தீனை முதல்வர் மிரட்டியும், அவரை நிற்க வைத்தே தேர்வு எழுதச் சொல்லியும் துன்புறுத்தியுள்ளார். காவல் துறையில் இது தொடர்பாக பகர்தீன் புகார் அளித்துள்ளார்.

## 33. சாதியை இழிவுபடுத்தி ஆசிரியர் திட்டியதால் மாணவி தற்கொலை

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், நடுவப்பட்டி, பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் மகள் மதுபாலா (16). இவர் நடுவப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். 21.01.09 அன்று ஆங்கிலப் பாடத்தேர்வில் மதுபாலா காப்பி அடித்தார் என்று ஆசிரியை ராமதிலகம் “உனக்கு எதுக்கு படிப்பு, உங்க சாதி பெண்கள் இந்த வயசுல காதல், கல்யாணமுன்னு இருப்பீங்க” என்று சாதிய ரீதியாக மதுபாலாவை இழிவுப்படுத்தியும், “வீட்டுல படிக்காம எவன் கூட இருந்த” என்று நடத்தையை இழிவு செய்தும் திட்டியுள்ளார். தலைமை ஆசிரியர் சங்கரும் இதே சொற்களை பயன்படுத்தி திட்டி இறைவணக்கம் நடைபெறும் இடத்தில் மதுபாலாவை முட்டி போடச் சொல்லியுள்ளார். இதனால் மனமுடைந்த மதுபாலா மண்ணெண்ணெயை உடலில் ஊற்றி தீ வைத்துக் கொண்டு 21.01.09 அன்று இறந்து போனார். மாணவி மதுபாலாவை தற்கொலைக்கு தூண்டிய ஆசிரியர் ராமதிலகம், தலைமை ஆசிரியர் சங்கர் மீது குற்ற எண் 7/09 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 306ன் கீழ் வச்சக்காரப்பட்டி காவல் துறையினர் வழக்கு பதிந்துள்ளனர். வன்கொடுமை தடுப்பு சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

## 34. குப்பையை உண்ணச் சொல்லி கட்டாயப்படுத்திய ஆசிரியர்

பிரியங்கா, பிரிஜிதா மற்றும் பாண்டிப்பிரியா ஆகியோர் மதுரை மகபூப்பாளையத்தில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி 7-ம் வகுப்பு மாணவிகள். இவர்கள் முறையே குறவர், பறையர் மற்றும் காட்டுநாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். 19.03.2009 அன்று மாலை 3.30 மணிக்கு வகுப்பறைக்குள் நுழைந்த பக்கத்து வகுப்பு ஆசிரியர் லதா, ஏன் வகுப்பறை 2 நாட்களாக சுத்தம் செய்யாமல் உள்ளது என்று இந்த மாணவிகளை சுத்தம் செய்யச் சொன்னார். அதற்கு மறுத்த மாணவிகளை வகுப்பறையை சுத்தம் செய்து அந்த

குப்பையை சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்தினர். தண்டனையைக் கேட்ட மாணவிகள் ஆசிரியர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். அதனை ஒப்புக்கொள்ளாத ஆசிரியர் லதா குப்பையைச் சாப்பிட வைத்தார். பள்ளி முடிந்து வீடு திரும்பிய மாணவிகளுக்கு வயிறு வலிக்கத் தொடங்கியது. குழந்தைகளுக்கு சிகிச்சையை அளித்துவிட்டு காவல் நிலையத்தில் பெற்றோர்கள் புகார் அளித்தனர். புகாரை அறிந்த தலைமையாசிரியை ஜெயலட்சுமி பெற்றோர்களுடன் சமரசம் செய்யத் தொடங்கினார். காவல் ஆய்வாளரும் அதனையே வழிமொழிந்தார். பெற்றோர் ஆசிரியர் கழகமும் ஆசிரியர் சார்பான நிலைப்பாட்டையே எடுத்தது. மாணவிகளிடம் தனித்தனியான புகாரைப் பெற்றுக் கொண்ட காவல் ஆய்வாளர் புகாரை வாபஸ் பெறவேண்டும் என்று பெற்றோர்களை வற்புறுத்தினாரே அன்றி இதுவரையில் வழக்குப்பதிவு செய்யவில்லை.

## கண்டறிந்தவை

பள்ளிகளில் குழந்தைகள் உடல் ரீதியான அல்லது மனரீதியான சித்திரவதைக்கு உள்ளாவது வகுப்பறை வன்முறை எனப்படுகிறது.

1. ஆசிரியர்கள் தண்டனை என்ற பெயரில் மாணவர்களை பிரம்பால் அடிப்பது, முழங்காலில் நிற்கச் சொல்வது, பள்ளி மைதானத்தை சுற்றி வரச் செய்வது, தலையில் குட்டு வைப்பது, மாணவர்களை மாறி மாறி தலையில் குட்டு வைக்க சொல்லி கட்டாயப்படுத்துவது, கையால் அடிப்பது, அடித்து கீழே தள்ளி விடுவது, காலால் எட்டி உதைப்பது போன்றவை உடல் ரீதியான சித்திரவதைகளாக கருதப்படுகிறது.

2. கடுமையான வார்த்தைகளால் திட்டுவது, சாதி குடும்ப பின்னணியை வைட்து மற்ற மாணவர்கள் முன்னிலையில் இழிவுப்படுத்துவது, மதிப்பெண் போட மாட்டேன் என்று மிரட்டுவது, டி.சி.வாங்கிக் கொண்டு போ என்று வற்புறுத்துவது போன்றவை மன ரீதியான சித்திரவதைகள்.

3. பள்ளி வளாகங்களை சுத்தம் செய்ய வைத்தல், ஆசிரியர்களுக்கு எடுபிடி வேலைகளை செய்ய சொல்லிக் கட்டாயப்படுத்துதல், பள்ளிக்குக் குடி தண்ணீர் பிடித்து வைத்தல், மேசை, நாற்காலிகளை தூக்க வைத்தல், பள்ளி கட்டிட வேலைகளுக்கு மாணவர்களை செங்கல் மற்றும் மணல் அள்ள பயன்படுத்துதல், கழிவறைகளை சுத்தம் செய்ய வைத்தல் போன்ற உடல் உழைப்பு சம்பந்தபட்ட வேலைகளை மாணவர்கள் மீது திணிப்பது கட்டாய வேலை வாங்குதலாகும்.

4. ஆசிரியர்கள் மாணவர்களிடம் சாதிய பாகுபாட்டுடன் தனியாக அமர வைப்பது, கழிவறையைச் சுத்தம் செய்யும் குறிப்பிட்ட சில பணிகளை

தாழ்த்தப்பட்ட மாணவர்களை செய்யுமாறுக் கட்டாயப்படுத்துவது, பாடங்கள் நடத்தாமல் புறக்கணிப்பது, மதச் சிறுபான்மையினரை பாகுப்படுத்துவது போன்ற செயல்கள் பாகுபாட்டிற்குரியதாகும்.

5. ஆண் ஆசிரியர்கள் மாணவிகளிடம் பாலியல் ரீதியான இரட்டை அர்த்தங்களுடன் பேசுவது, பாலியல் சீண்டலுக்கு உள்ளாக்குவது. மதிப்பெண்ணைக் குறைத்து விடுவதாக மிரட்டி பாலியல் வன்முறைக்கு ஆளாக்குவது, விடுதி மாணவர்களிடம் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவது போன்றவை பாலியல் குற்றச் செயல்களாகும்.

6. ஆசிரியர்கள் கடுமையாக தாக்கியதால் மாணவர்கள் இறந்து விடும் சம்பவங்கள், ஆசிரியர்களால் மன அழுத்தத்திற்கு ஆளாகி தற்கொலை போன்ற பள்ளிகளில் நடைபெறும் மரணங்களும் வகுப்பறை வன்முறையாக கருதப்படுகின்றன.

இவை தவிர இன்னும் நிறைய வன்முறை சம்பவங்கள் பள்ளி வளாகங்களுக்குள் குழந்தைகள் மீது நடத்தப்படுகின்றன. சட்டத்தின் படி இது போன்ற வன்முறைச் செயல்கள் தண்டனைக்குரிய குற்றமாகும். மாணவர்களின் நலன் சார்ந்து தான் தண்டனைகள் வழங்கப்படுகிறது என்று பள்ளி நிர்வாக தரப்பில் கூறப்பட்டாலும், அடித்தால் தான் பிள்ளைகள் படிப்பார்கள் என்ற சிந்தனை பெற்றோர் மத்தியில் ஊறிப் போயிருப்பினும் இது போன்ற செயல்கள் மாணவர்களின் உயிருக்கு பாதிப்பாகவோ அல்லது எதிர்காலத்திற்கு தடையாகவோ அமைந்து விடுகிறது. இது போன்ற வகுப்பறைகளுக்குள்

### NCRB **அறிக்கை - குழந்தைகள் மீதான வன்முறை 2009**

| வ.எண் | வழக்கின் வகை | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கொலை | 1,488 |
| 2. | சிசுக்கொலை | 63 |
| 3. | பாலியல் பலாத்காரம் | 5,368 |
| 4. | கடத்தப்படுதல் | 8,945 |
| 5. | கருக்கொலை | 123 |
| 6. | தற்கொலைக்குத் தூண்டுதல் | 46 |
| 7. | அனாதரவாகக் கைவிடுதல் | 857 |
| 8. | இளம் பெண்களை வாங்குதல் | 237 |
| 9. | பாலியல் தொழிலுக்காக குழந்தைகளை வாங்குதல் | 32 |
| 10. | பாலியல் தொழிலுக்காக குழந்தைகளை விற்றல் | 57 |
| 11. | மற்றவை | 6,985 |
| **மொத்தம்** | | **24,201** |

கொடுக்கப்படுகின்ற தண்டனைகள் சரி தான் என்ற சிந்தனையும் வழக்கமான நிகழ்வாக மாறிவிட்ட சூழ்நிலையும் இருப்பதனால் இவற்றை மனித உரிமை மீறல்களாக இச்சமூகம் அடையாளப்படுத்துவதில் அல்லது பாதிக்கப்பட்டவரே வெளியில் சொல்லுவதில் நிறைய சிரமங்கள் உள்ளன. கடுமையான தாக்குதல்கள் நடைபெறும் போதோ உதாரணமாக உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டாலோ (அ) உயிரிழப்புகள் ஏற்பட்டாலோ தான் பத்திரிக்கைகளில் செய்தியாகிறது. அதன் மூலமாக தகவல் வெளியில் தெரிய வருகிறது. ஆகவே பள்ளிகளுக்குள் நடைபெறுகின்ற வழக்கமான தொடர் மனித உரிமை மீறல்களை மிகவும் கவனமாக கண்காணிக்க வேண்டிய தேவை உள்ளது. அது மட்டுமல்லாது வழக்கமாக கண்காணிக்கும் முறை மட்டும் இதற்கு உதவாது. ஆகவே மீறலின் வடிவம், தன்மை, பாதிக்கப்பட்ட மாணவரை சந்திப்பதில் உள்ள சிக்கல், பாதிப்பு ஏற்படுத்திய பள்ளி நிர்வாகத்தின் பலம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு மிகவும் நுணுக்கமான யுக்திகளை கையாண்டு தகவல் சேகரிக்க வேண்டும்.

NCRB புள்ளிவிவரப்படி இந்தியாவில் மொத்தம் 24,201 குழந்தைகள் 2009 ஆம் ஆண்டில் பல்வேறு மீறல்களுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் கண்காணிப்பகம் பள்ளி குழந்தைகள் மீதான வன்முறைகளை மட்டும் கள ஆய்வு செய்ததில் பள்ளிக் குழந்தைகள் உடல் ரீதியாக தண்டிக்கப்படுவதும், பாலியல் சுரண்டலுக்குள்ளாக்கப்படுவதும், தற்கொலை, கொலை என்று பல்வேறு வகைகளில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்பதும் கள ஆய்வின் முடிவுகளில் கண்டறிய முடிந்தது. மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தற்போது தொடர் நடடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் 34 வழக்குகளிலுள்ள மீறல்களும், பொதுவான கண்டறிந்தவைகளும் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

## கண்டறிந்தவைகள்

1) ஆசிரியர்கள் மாணவர்களை உடல் ரீதியாக துன்புறுத்துவது என்பது தவறானதாகவே கருதப்படாத நிலை சமுதாயத்தில் உள்ளது, மாணவர்களை தண்டிக்கின்ற நோக்கில் பிரம்பால் அடித்தல், மற்ற வகைகளில் சித்திரவதைக்குள்ளாக்குதல் மாணவர்களுடைய உடல் உறுப்புகளையே பாதித்து விடுகிறது. மாணவர்களுடைய கைகள், கால்கள் உடைதல், பார்வை பறிபோதல் போன்ற கொடூர நிகழ்வுகளும் நடந்துள்ளன. (உதா) தர்மபுரி, வெண்ணாம் சாலை, ஸ்ரீ பாக்யம் வித்யா நர்சரி பள்ளி, முதலாம் வகுப்பு மாணவர் பாரூக் மற்றும் திருவள்ளுவர், அம்பத்தூர், செயின் மேரிஸ் மழலையர் தொடக்கப்பள்ளி, 5–ம் வகுப்பு மாணவர் ராஜபாண்டி ஆகியோரது கண் பார்வை ஆசிரியர்கள் அடித்ததால் பறி போயுள்ளது என்பது கள ஆய்வுகளிலிருந்து கண்டறிய முடிகிறது.

2) கல்வி வியாபாரமாகிவிட்ட இச்சூழலில் மாணவர்களின் கல்வி, எதிர்காலம் மீது அக்கறையற்ற கல்வி நிறுவனங்கள் தான் அதிகரித்துள்ளன. கட்டணத்தை மட்டுமே பிரதானமாகக் கொண்டு இயங்கும் கல்வி நிறுவனங்கள் கட்டணட்திற்காக

மாணவர்களை கடுமையாக தண்டிக்கவும் தயங்குவதில்லை. (உதா : கல்விக் கட்டணம் கட்டாத மாணவரை சிறை வைத்து பள்ளி நிர்வாகம் சித்திரவதை செய்கிறது.)

3) மாணவர்களை மற்ற மாணவர்கள் முன்னிலையில் அடித்தும், இழிவுப்படுத்தியும் அவர்களது மாண்புரிமையை குலைக்கச் செய்வதன் மூலம் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இதனால் ஆசிரியர்கள் திட்டியதால் மாணவர்களுடைய தற்கொலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

4) பள்ளி மாணவர்களிடையே சாதிய பாகுபாடு மேலோங்கி இருப்பதை காண முடிகிறது. தாழ்த்தப்பட்ட மாணவர்களை உயர் சாதி மாணவர்கள் இழிவுப்படுத்துவதும், தாக்குவதும், அதை பள்ளி, கல்லூரி நிர்வாகத்தினர் கண்டுக் கொள்ளாத சூழலும் உயர் சாதி மாணவர்களுக்கு ஆதரவாக செயல்படும் சூழலும் காணப்படுகிறது.

5) ஆதி திராவிடர் மாணவர் விடுதிகள் மிக மோசமான நிலையில் உள்ளன. உள் கட்டமைப்பு வசதிகள் ஏதும் அற்ற நிலையிலும், விடுதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாமலும் உள்ளன. மாணவர்களுக்கு தரமற்ற உணவுகள் வழங்கப்படுகின்றன, கழிவறை, தண்ணீர் வசதி அற்று உள்ளது, விடுதி காப்பாளர்களின் முறையற்ற அணுகு முறைகளும் மாணவர்களை கட்டாய வேலை வாங்குவது, அடிப்பது போன்ற சம்பவங்களும் காணப்படுகின்றன. (உதா.) ஆதி திராவிடர் நலத்துறை சுற்றுச்சுவர் இடிந்து ஒரு மாணவி பலத்த காயம் அடைந்துள்ளார். மேலும், தலித் மாணவர்கள் விடுதிகளில் மர்மமான முறையில் இறக்கும் சம்வங்கள் அதிகமாக உள்ளன.

6) பள்ளி மாணவிகளிடம் ஆசிரியர்கள் பாலியல் தொந்தரவு சம்பவங்கள் அதிகமாக நடைபெறுகிறது. மாணவிகள் அச்சம்பவங்களை வெளியில் சொல்லத் தெரியாமலும், வெளியில் சொல்ல பயந்துக் கொண்டு அதிகமாக பாதிப்புக்குள்ளாகின்றனர்.

7) பள்ளி நிர்வாகம் மாணவர்களை பராமரிப்பு வேலைகளுக்கு உட்படுத்துவதாலும் நிர்வாகட்தினரின் கவனக் குறைவாலும் மாணவர்கள் நீர் நிலைகளில் மூழ்கி இறக்கும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

8) பள்ளி நிர்வாகத்தின் தவறான செயல்பாட்டை கண்டித்து மாணவர்கள் கோரிக்கை விடுத்தால் நிர்வாகத்தினர் காவல்துறையினரை வைத்து அடித்து பொய் வழக்கு போடுவதும், ரௌடிகளை வைத்து சித்திரவதை செய்து உயிர் மீதான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதுமான நடவடிக்கைகளை செய்கின்றனர்.

## தேசியக் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR)– பரிந்துரைகள்

1. சேர்க்கப்படும் குழந்தைகளின் நலன்களுக்கு கல்வி நிறுவனம் (பள்ளி/விடுதி/பாலர் இல்லம்) பொறுப்பேற்க வேண்டும். குழந்தைகளுக்குக் காயமோ/உடல் நலக் குறைவோ/ மரணமோ நிகழுமானால் அதற்கு காவல் நிலையத்திலோ சிறையிலோ கைதிகளுக்கு இவ்வாறு நிகழும்போது காவல்துறை பொறுப்பாக்கப்படுவது போல், சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனமே பொறுப்பாக்கப்பட வேண்டும்.

2. கல்வி நிறுவனத்திற்குள் நடைபெறும் எந்த ஒரு சம்பவத்தாலும் குழந்தைக்கு மரணமோ/காயமோ ஏற்படுமானால் அல்லது மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய நிலை ஏற்படுமானால் அதற்கான செலவை கல்வி நிறுவன நிர்வாகமே ஈடுகட்ட வேண்டும்.

3. குழந்தைகளுக்கு எதிராக நடைபெறக்கூடிய ஒவ்வொரு வன்முறை தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட கல்வித்துறை/வாரியம் ஒரு இணையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய விசாரணைகளில் பெற்றோர்– ஆசிரியர் கழகங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

4. குழந்தைகள் பாலியல் அத்துமீறலுக்கு உட்படுத்தப்படுவது தொடர்பான வழக்குகளில், பெற்றோர் புகாரை விலக்கிக் கொள்வார்களானால், நடந்த குற்றம் தொடர்பாக அரசு கணக்கில் எடுத்துக் கொண்டு, குழந்தைக்கு பாதிப்பு ஏற்படாமல் வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் மீது கறாரான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. பாகுபாடுகள் காட்டப்படுவதாக ஒரு குழந்தை எப்போது தெரிவித்தாலும், எஸ்.சி/ எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

6. உடல் ரீதியான தண்டனைகள் அளிக்கப்பட்டிருக்குமானால், உடல்ரீதியான தண்டனை தொடர்பாக குழந்தைகளும் பங்கேற்கிற ஒரு சமூகத் தணிக்கையை கல்வித்துறை/வாரியம் நடத்த வேண்டும்.

7. குழந்தைகளின் நலன்களைப் பாதுகாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள குழந்தை நலக் குழுக்கள் ஆதரிக்கப்பட வேண்டும்.

**குழந்தை மரணமடைந்தால் அல்லது தற்கொலைக்கு முயன்றால், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால்:**

8. ஒவ்வொரு தற்கொலை வழக்கும் 'தற்கொலைக்கு தூண்டிய' வழக்காக கருதப்பட வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்தின் நிர்வாகம் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

9. ஒரு குழந்தை தற்கொலை செய்து கொள்ள முயல்கிறபோது, அதை சட்டப்படி 'தற்கொலை முயற்சி' வழக்காக எடுத்துக்கொள்ள முடியாது. அது குழந்தையை இரண்டு முறை தண்டிப்பதாகிவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

10. ஒரு ஆசிரியர் அல்லது ஆசிரியர்களின் செயலால் ஒரு குழந்தை தற்கொலை செய்துகொண்டால் / பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டால் / மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் குற்றம் சாட்டப்பட்டவர்(கள்) விசாரணை முடியும் வரையில் உடனடியாக பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட வேண்டும்.

11. ஒரு குழந்தை சந்தேகத்திற்குரிய காயங்கள் / உடல் நலக்குறைவுடன் மருத்துவமனையில் சேர்க்கப்படும் போதெல்லாம், ஒரு மருத்துவ சட்ட வழக்காக மருத்துவமனை அதனை பதிவு செய்ய வேண்டும். குழந்தையின் வாக்குமூலத்தையும் பதிவு செய்ய வேண்டும்.

12. விடுதியில் தங்கியிருக்கும் குழந்தைக்கு எப்போது உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும், அதைக் கண்காணிக்கவும், குழந்தையை எவ்வாறு மருத்துவமனைக்குக் கொண்டு செல்வது என்பது தொடர்பாகவும் (அதற்கான நிதி ஒதுக்கீடு உட்பட) பெற்றோர் பள்ளிக்குச் சென்று குழந்தையை வீட்டுக்கு அழைத்துச் செல்லத் தேவையான போக்குவரத்து செலவை வழங்கவும் உரிய வழிமுறைகளை கல்வித்துறை அல்லது *SWJD* உருவாக்க வேண்டும்.

**தனியார் நிறுவனங்கள்:**

பொது விசாரணையில் தனியார் விடுதிகள் மற்றும் பள்ளிகளில் நடைபெறும் குழந்தை உரிமை மீறல்கள் தொடர்பான பல பிரச்சனைகள் தெரிவிக்கப்பட்டன. பின்வரும் மறு பரிசீலனைகளை மேற்கொள்ள ஒரு குழுவை அமைக்குமாறு அரசுக்கு ஆணையம் பரிந்துரைக்கிறது.

13. தனியார் குழந்தை பராமரிப்பு / கல்வி நிறுவனங்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான நடைமுறைகள்.

14. இந்த தனியார் நிறுவனங்களை முறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான நடைமுறைகளை உருவாக்குதல்.

## பொதுவான பரிந்துரைகள்

- குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ஐ அனைத்து பள்ளிகளிலும் முழுமையாக அமல்படுத்த வேண்டும். இச்சட்டத்தை அமல்படுத்த கல்வி துறை அதிகாரிகளுக்கு முறையான பயிற்சியும், அதன் அமலாக்கத்தை கண்காணிப்பு செய்ய மாவட்ட வாரியாக ஒரு கண்காணிப்புக் குழுவும் அமைக்கப்பட வேண்டும்.

- இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 25% இட ஒதுக்கீடு விளிம்புநிலையிலுள்ள குழந்தைகளுக்கு சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதை மெட்ரிக் பள்ளிகளின் இயக்குநர் கண்காணிக்க வேண்டும்.
- அரசு மாவட்ட வாரியாக குழந்தைத் தொழிலாளர்களை கணக்கெடுக்க வேண்டும். அந்த கணக்கெடுப்பை பஞ்சாயத்துக்கள் மூலம் செய்ய வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் படி அவர்களை அருகாமைப் பள்ளிகளில் சேர்த்து கல்வியை தொடரச் செய்ய வேண்டும். அவர்களுக்கான மறுவாழ்வுக்காகவும் மேம்பாட்டிற்காகவும் சிறப்புட் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.
- அனைத்து பஞ்சாயத்துக்களிலும் உள்ள பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் முறையாக செய்யப்பட்டுள்ளதா என பஞ்சாயத்து வாரியாக ஆய்வு மேற்கொண்டு அப்பள்ளிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை பஞ்சாயத்துகள் மூலம் உட்தரவாதப்படுத்த வேண்டும்.
- பள்ளி குழந்தைகள் மீதான வன்முறை வழக்குகளில் பண பேரத்தில் ஈடுபடும் காவல்துறை அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்திட குழந்தைகள் உரிமை ஆணையங்கள் துரிதமாக செயல்பட வேண்டும்.
- வன்முறையில் ஈடுபட்டு காவல்துறை உதவியோடு பாதிக்கப்பட்டவரை மிரட்டுகின்ற, கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்ற தனியார் மெட்ரிக் பள்ளிகளின் உரிமத்தை ரத்து செய்ய வேண்டும்.
- தமிழகத்தில் மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் கொண்டு வரப்பட வேண்டும்.

# பெண்கள் மீதான வன்முறை

## 1. சிறுமியைப் பாலியல் சித்திரவதை செய்த மாணவர்

சென்னை ராயபுரம், போஜராஜன் தெரு, குர்கா சமூகத்தைச் சேர்ந்த பீம்ராஜின் மகள் பூஜா (6). இவர்களுடைய வீட்டு மாடியில் 26.03.2009 அன்று சந்தோஷின் மகன் அலெக்ஸ் (23) என்ற பொறியியல் கல்லூரி மாணவர் உட்பட 5 பேர் மது அருந்தி விட்டு ஆபாசபடம் பார்த்துள்ளனர். அப்போது சிறுமி பூஜா சிறுநீர் கழிப்பதற்காகக் கழிப்பறைக்கு வந்த போது மாணவன் அலெக்ஸ் தன்னுடைய ஆண் உறுப்பை கையில் பிடிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளார். இதனைச் செய்ய மறுத்த சிறுமி பூஜாவைத் தலையில் கொட்டி துன்புறுத்தியுள்ளார். தகவலறிந்த பெற்றோர்கள் புதுவண்ணாரப்பேட்டை காவல்நிலையத்தில் புகார் செய்ததன் அடிப்படையில் மாணவன் அலெக்ஸ் கைது செய்யப்பட்டார்.

## 2. மனைவியைச் சித்திரவதை செய்து இரண்டாம் திருமணம் செய்த கணவன்

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி, விஸ்வநாதபுரம், பறையர் சமூகத்தைச் சேர்ந்த அற்புதம்-முத்துலெட்சுமி தம்பதியினருக்கு 31.05.04 அன்று திருமணம் நடைபெற்றது. முத்துலெட்சுமி வீட்டிலிருந்து திருமணத்திற்கு வரதட்சணையாக 14 1/2 பவுன் நகையும், 50,000 ரொக்கப் பணத்தையும் அற்புதம் வீட்டார் பெற்றிருந்தனர்.இந்த வரதட்சணைப் பணம் எங்களுக்கு போதாது எனக் கூறி மேலும் 5 பவுன் நகையும், 50,000 ரூபாய் பணமும் கேட்டனர். அவ்வாறு பணம் தரவில்லையெனில் மண்ணெண்ணையை ஊற்றி கொளுத்தி விடுவதாகவும் கொலை மிரட்டல் விடுத்தனர். இந்நிலையில் கணவரின் தொந்தரவு ஒருபுறமிருக்க முத்துலெட்சுமியின் மாமனார் துரைராஜ், மருமகள் முத்துலட்சுமியைப் பாலியல் வல்லுறவுக்கு பலமுறை முயன்று தொந்தரவு செய்துள்ளார். இந்த முறையற்ற செயலை கணவன் அற்புதம் தெரிந்திருந்தும் மாமனாரின் செயலுக்கு தன் மனைவியை ஒத்துப்போகச் சொல்லியுள்ளார். இதனால் சென்னைக்கு தனிக்குடித்தனம் சென்றுள்ளனர். அங்கும் மாமனார் துரைராஜ் சென்று பாலியல் தொந்தரவுகளை முத்துலட்சுமிக்கு

தந்துள்ளார். இதனை எதிர்த்த மருமகள் முத்துலட்சுமியிடம் மீண்டும் 5 பவுன் நகையும், 50,000/- ரூபாய் பணமும் கேட்டு தொந்தரவு செய்துள்ளனர் அற்புதம் குடும்பத்தினர். தன்னுடைய அம்மாவிடம் பணம் இல்லை என்று கூறிய முத்துலட்சுமியை எந்த உணவும் தராமல் இரண்டு நாட்கள் தனி அறையில் அடைத்து சித்திரவதை செய்துள்ளனர்.

மேலும் முத்துலட்சுமி பெண் குழந்தை பிறந்த நிலையில் கணவன் அற்புதம் இரண்டாவது திருமணத்திற்கு வேண்டிய முயற்சிகளை செய்து, முத்துலட்சுமியை அடித்துத் துன்புறுத்தி, கழுத்தை நெரித்து, திருமணத்திற்கு ஆட்சேபனை இல்லை என்று கையெழுத்து வாங்கினர். இவ்வளவு கொடுமைகளையும் பொறுக்காத முத்துலட்சுமி மாவட்ட சமூக நலத்துறையில் புகார் அளித்ததன் பேரில் மாதம் 500 ரூபாயை முத்துலட்சுமியின மகளுக்கு ஜீவனாம்சமாக வழங்க வேண்டும் எனக் கூறியும் இதுவரை வழங்காமல் அற்புதம் இழுத்தடித்து வருகிறார்.

## 3. வரதட்சணைக் கேட்டு பெண்ணை அடித்துச் சித்திரவதை

தருமபுரி மாவட்டம், அரூர் தாலுகா, கைலாயபுரம் கிராமம், ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த தண்டபாணிக்கும்-கலைச்செல்விக்கும் 16.04.2008 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு வரதட்சணையாக 25 பவுன் நகையும், 60,000 ரூபாய் ரொக்கத் தொகையும், 40,000/- ரூபாய் மதிப்புள்ள பாத்திரங்களையும் தண்டபாணியின் குடும்பத்தினர் வாங்கியுள்ளனர். இந்நிலையில் மீண்டும் தனிக் குடித்தனம் செல்ல வேண்டும் என்று ஒரு லட்ச ரூபாய் பணமும், இருசக்கர வாகனம் வாங்குவதற்கு 60,000 ரூபாய் பணமும் கேட்டு கலைச்செல்வியை அடித்து சித்திரவதை செய்துள்ளனர். 04.10.09 அன்று அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கலைச்செல்வி புகார் அளித்ததினால் ஆத்திரமடைந்த தண்டபாணியின் குடும்பத்தினர் கலைச்செல்வியின் வீட்டை அடித்து நொறுக்கியுள்ளனர். மேலும் புகார் கொடுக்க செல்லும் இடங்களுக்கு சென்று ஆபாசமாகத் திட்டியும், பொய் வழக்கை தொடுக்கவும் முயன்று வருகின்றனர். அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி கலைச்செல்வியின் குடும்பத்தாரை மிரட்டி வந்துள்ளனர். குற்ற எண் *20/09*, பிரிவு *498 A, 506 (ii)*, இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் 07/10, பிரிவு *427, 506 (ii)*, இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 4. வீட்டை எழுதித் தரக்கோரி மனைவி சித்திரவதை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் தாலுக்கா, கெண்டைப்பள்ளி கிராமம், எம்.ஜி. நகரைச் சேர்ந்த கோவிந்தசாமியின் மகள் சுதாவும் (20), பெருமாளும் (29) காதலித்து 11.08.08 அன்று திருமணம் செய்து கொண்டார்கள். திருமணம் ஆன சிறிது நாட்களிலேயே மாமனார் கோவிந்தசாமியின் வீட்டை எழுதித்தருமாறு கேட்டு, மனைவி சுதாவைப் பெருமாள் சித்திரவதை செய்துள்ளார். காவல்துறையினர் எச்சரிக்கை செய்தும் தொடர்ந்து கொடுமைகள் செய்துள்ளார். 28.07.2009 அன்று கணவர் பெருமாள் அடித்த அடியை தாங்க முடியாமல் சுதா வீட்டை விட்டுத் தெருவில் ஓடியுள்ளார். மேலும் பெருமாளுக்கு செவிலியராக பணி செய்யும் சத்யா என்பவருடனும் கள்ளத் தொடர்பு இருந்துள்ளது. இதனால் சுதாவும் அவரது

பெற்றோர்களும் ஓசூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் *6/09, u/s* இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு *497, 498 (A), 323, 109* மற்றும் குடும்ப வன்முறை தடுப்பு சட்டப்பிரிவு 4ன் கீழ் பெருமாளைக் கைது செய்துள்ளனர்.

## 5. அடுத்தவர் சொன்னதை நம்பி மனைவியை எரித்த கணவன்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, வெப்பம்பட்டி கிராமம், வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த மணி என்வரின் மகள் தேவிக்கும் (21) அவரது உறவினரும், ராணுவத்தில் பணி செய்பவருமாகிய கோவிந்தசாமிக்கும் (27) திருமணம் நடந்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் யாரோ ஒருவர் கோவிந்தசாமியிடம் நீ வேலைக்கு போன பிறகு உன்னுடைய மனைவி வேறொருவருடன் பேசிக் கொண்டிருக்கிறார் என்று கூறியதை உண்மையென நம்பி 02.07.09 அன்று தன் மனைவி தேவியை நிர்வாணப்படுத்தி, மண்ணெண்ணைய் உடலில் ஊற்றி கொளுத்திவிட்டு, கோவிந்தசாமி வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பலனில்லாமல் தேவி இறந்து போனார். வாணியம்பாடி காவல்துறையினர் *IPC 307, 302*ன் கோவிந்தசாமியை கைது செய்து வழக்கு பதிந்துள்ளனர்.

## 6. புதுமணப்பெண் தற்கொலை

கோபிச்செட்டிப்பாளையம் போயர் சமூகத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகள் தேவிக்கும் (20), கோவிந்தன் மகன் அருணுக்கும் (21) 01.07.09 அன்று திருமணம் நடைபெற்றது. குடும்ப வேலைகள் அதிகமாக இருந்ததால் அதனைச் சமாளிக்க இயலாத தேவி திருமணமான ஒரே வாரத்தில் 09.07.09 அன்று மண்ணெண்ணையை உடலில் ஊற்றி கொளுத்தி தற்கொலை செய்து கொண்டார். அரூர் வருவாய் கோட்டாட்சியரும் காவல்துறையினரும் விசாரணை செய்துள்ளனர்.

## 7. கட்டாய விவாகரத்துச் செய்ய மருமகளை சித்திரவதை செய்த மாமனார்

திருச்சி, கிழக்கு அம்பிகாபுரம், வெங்கடகிருஷ்ணன் மகள் அனுராதா, இவருக்கு திருமணமாகி அஸ்வின்குமார் என்ற மகன் இருக்கிறார். அனுராதாவின் கணவர் துபாயில் 75,000/- மாதச் சம்பளத்தில் பணியாற்றுகிறார். இதனால் அனுராதா தன் மாமனாரின் குடும்பத்தில் தங்கி வாழ்ந்து வருகிறார். இந்த குடும்பச் சூழலை சாதகமாக்கிக் கொண்டு மாமனார் கரிகாலன் நாயுடு, அனுராதாவிற்கும் அவருடைய மகனுக்கும் மாதம் 200/- ரூபாய் மட்டுமே செலவுக்காக தருவார். இதனால் தனிப் பயிற்சி *(Tuition)* வகுப்பு எடுத்த அனுராதாவின் முயற்சிகளுக்கு தடை செய்தார். மகன் மாத வருமானமாக 75,000/- ரூபாய் சம்பாதிப்பதால் வேறு திருமணத்திற்கு ஏற்பாடு செய்து திருச்சி நீதிமன்றத்தில் விவாகரத்து

மனு செய்தார். விவாகரத்து பெறுவதற்கு சாதகமாக அனுராதா மாமியாரை அடித்ததாகவும், கொலை செய்வதாக மிரட்டியதாகவும், அனுராதாவின் மீது மாமனார் கரிகாலன் பொய் வழக்கு பதிவு செய்தார். விவாகரத்து பெறும் வரை எவ்வித பிரச்சனையும் செய்யக் கூடாது என்று அரிமங்கலம் காவல் நிலையத்தில் அனுராதாவிடம் எழுதி வாங்கியுள்ளார். ஆனாலும் மாமனாரும், மாமியாரும் பாத்திரங்களையும், கத்தியைக் கொண்டும் அனுராதாவை அடித்து துன்புறுத்தி வந்துள்ளனர்.

## 8. கர்ப்பிணிப் பெண்ணைக் கொலை செய்த கணவனின் குடும்பத்தார்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தாலுக்கா, தாண்டியப்பனூர் கிராமம். அகமுடையார் சமூகத்தை சேர்ந்த அமிர்தலிங்கத்தின் மகள் தங்கம், இவருக்கும் போச்சம்பள்ளி தாலுக்கா, மருதநேரி கிராமத்தைச் சேர்ந்த அருள் என்பவருக்கும் 14.09.08 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்காக பெண் வீட்டாரிடமிருந்து 26 பவுன் நகையும், 1,10,000 ரொக்கப் பணத்தையும் வரதட்சணையாக அருள் வாங்கியுள்ளார். ஆனால் திருமணத்திற்கு பிறகு மேலும் பணம் கேட்டு தங்கத்தை தொந்தரவு செய்தும், அவ்வாறு பணம் தரவில்லை எனில் தங்கத்தை கொலை செய்துவிட்டு ஏற்கனவே கல்லூரி நாட்களில் காதலித்த பிரியா என்ற பெண்ணை இரண்டாம் திருமணம் செய்வதாகவும் கணவன் அருள் மிரட்டியுள்ளர். மேலும் அருளின் அம்மா ஓலை பின்னச் சொல்லி கட்டாயப்படுத்தியும், பழைய உணவுகளை கொடுத்தும் தங்கத்தை கொடுமைப்படுத்தியுள்ளார். இந்நிலையில் 12.03.2009 அன்று கழுத்து இறுக்கப்பட்டு தங்கம் கொலை செய்யப்பட்டார். வருவாய் கோட்டாட்சியரின் விசாரணையில் தூக்கு போட்டுக் கொல்லும் வாய்ப்புகள் தங்கம் தங்கியிருந்த வீட்டில் இல்லை என்பது தெரியவந்துள்ளது. நாகாசம்பட்டி காவல்துறையினர் குற்ற எண் 69/09 குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 174ன் கீழ் வழக்கு பதிந்துள்ளனர்.

## 9. இரு குடும்பத் தகராறில் மூதாட்டி பலி

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் சொக்கன் வீட்டிலிருந்து கழிவுநீர் வருகிறது என்று பீமாராவ் குடும்பத்தினர் கேட்டுள்ளனர். இதில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு மூதாட்டி தங்கம்மாள் கீழே விழுந்ததில் கால் முறிவு ஏற்பட்டது. சேலம் மத்திய மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது 29.12.2008 அன்று மூதாட்டி தங்கம்மாள் இறந்து போனார். இதனால் சொக்கன் மகள் கௌரி தான் மூதாட்டியை கொலை செய்தார் என்று புகார் தந்தனர். 16.01.09 அன்று மீண்டும் கௌரியின் குடும்பத்திற்கும், பீமாராவ் குடும்பத்தினருக்கும் தகராறு ஏற்பட்டதும், கௌரி பீமாராவ் குடும்பத்தினர் மீது புகார் அளித்தார். புகார் அளித்த இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டதினால் தடுத்த காவலர்களை கௌரியுடன் வந்தவர்கள் செருப்பை வீசித் தாக்க முயன்றுள்ளனர். இதனால் குற்ற எண் *6/09, 294(b), 341, 336, 506 (ii), 7/09, 147, 148, 355, 341, 506 (ii), 8/09, 147, 148, 341, 332, 506 (ii)* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளில் மொரப்பூர் காவல் துறையினர் வழக்கு பதிந்துள்ளனர்.

## 10. 62 நாள் பெண் குழந்தையைக் கொன்ற தந்தை

திருவள்ளூர் அரண்மனைவியல் குப்பம் பகுதியைச் சேர்ந்தவர்கள் வேட்டைக்காரன் சமூகத்தைச் சேர்ந்த ராமலிங்கம் (30) வள்ளியம்மாள் (23) தம்பதியினர். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். இரு குழந்தைகளும் பெண் குழந்தைகளாகப் பிறந்துள்ளனர் என்பதால் கணவனுக்கும் மனைவிக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும், இதனால் ராமலிங்கம் மனைவி வள்ளியம்மாளைக் கண்டபடி தாக்குவார். ஆண் குழந்தை வேண்டும் என்று தொந்தரவு செய்ததால் குடும்பக் கட்டுப்பாடு செய்ய விரும்பிய வள்ளியம்மாளை ராமலிங்கம் தடுத்துள்ளார். இந்நிலையில் அவர்களுக்கு 3வது பிறந்த குழந்தையும் பெண் குழந்தையாகப் பிறந்தது. இதனால் ஆத்திரமடைந்த ராமலிங்கம் குழந்தையையும், உன்னையையும் கொன்று விடுவேன் என மிரட்டியுள்ளார். மருத்துவமனையில் உதவி செய்த நபரையும் வள்ளியம்மாளையும் இணைத்துப் பேசி லாரியில் பிடித்து தள்ளி கொலை செய்யவும் முயற்சித்தார். இச்சூழலில் 01.02.09 அன்று கழிப்பறை சென்று திரும்பிய வள்ளியம்மாள் குழந்தையைத் தொட்டிலில் பார்க்கும் போது பிறந்த 62 நாட்களேயான குழந்தை ப்ரீத்தி இறந்து கிடந்தது. குழந்தையை கணவர் ராமலிங்கம் தான் கொன்றுள்ளார் என செவ்வாய்ப்பேட்டை காவல் நிலையத்தில் வள்ளியம்மாள் புகார் அளித்துள்ளார். குற்ற எண் 22/09 குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 174ன் கீழ் ராமலிங்கம் கைது செய்யப்பட்டார்.

## 11. குடிக்கப் பணம் தராததால் மனைவி கொலை

சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டையில் முதலியார் சமூகத்தவரான பெரியசாமி (28) சுதா (23) தம்பதியினர் வசித்து வந்தனர். பெரியசாமிக்கு குடிபழக்கம் இருந்ததால், குடிக்கப் பணம் கேட்டு மனைவி சுதாவை அடித்து துன்புறுத்துவார். குடித்து விட்டு சுதாவுக்கு குழந்தையில்லை என்று சொல்லி அடிப்பார். 16.04.09 அன்று குடிப்பதற்கு சுதாவிடம் பெரியசாமி பணம் கேட்டார். சாப்பாட்டுக்கு தான் பணம் உள்ளது என்று சுதா கூறியதால் ஆத்திரமடைந்த கணவன் பெரியசாமி சுதாவின் உடலில் மண்ணெண்ணைய் ஊற்றி பற்ற வைத்துள்ளார். இதனால் சிகிச்சை பலனின்றி 19.04.09 அன்று சுதா இறந்து போனார். கொடுங்கையூர் காவல்துறையினர் பெரியசாமியை கைது செய்துள்ளனர்.

## 12. வரதட்சணைக் கேட்டு பெண் சித்திரவதை

திருச்சி மாவட்டம், துறையூர், வளையாப்பட்டி கிராமம், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பழனியாண்டி மகள் பகவதியும், அவருடன் பயின்ற வடலை மகன் நாராயணனும் காதலித்து திருமணம் செய்யாமலே குடும்பம் நடத்தி வந்தனர். பின்னர் இரு குடும்பங்களும் இணைந்து திருமணத்திற்கு சம்மதிக்கவும் நாராயணன் வரதட்சணை கேட்டு பகவதியை அடித்து துன்புறுத்தியுள்ளார். நாராயணனின் அக்கா கண்ணகி, பகவதியை விட்டு விட்டு வா உனக்கு வேறு திருமணம் செய்து வைக்கிறேன் என்று கூறியதால் பகவதி தன் மாமா மணிமாறன்

உதவியோடு துறையூர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். இதனால் கோபமுற்ற நாராயணன் மணிமாறனை அடித்ததால் நாராயணன் மீது வழக்கு பதிவு செய்து காவலர்கள் சிறையில் அடைத்துள்ளனர்.

## 13. வரதட்சணைக் கேட்டு மனைவியும் அவர் குடும்பத்தாரும் சித்திரவதை

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு, தேவர் சமூகத்தைச் சேர்ந்த சுப்பையா மகன் நாகஜோதியும், தேனி மாவட்டம், பழனிசெட்டிப்பட்டி பாண்டியும் தம்பதியினர். பாண்டி, நாகஜோதியை திருமணம் செய்யும் போது 11 பவுன் நகையும், சீர்வரிசைப் பொருட்களையும் வரதட்சணையாக வாங்கியுள்ளார். திருமணத்திற்கு பிறகு மேலும் 8 பவுன் நகையைக் கேட்டும், புதிதாக ஆட்டோ வாங்குவதற்கு 50,000 ரூபாயும் கேட்டும் நாகஜோதியை துன்புறுத்தியுள்ளனர். பாண்டியின் தம்பி திருமணத்தின் போது 15 பவுன் நகையை அவருடைய மனைவியின் வீட்டில் போட்ட போது பாண்டியும் தனக்கு 15 பவுன் நகை வேண்டும் என்று நாகஜோதியை அடித்து வீட்டை விட்டு வெளியேற்றினார். தன்னுடைய அம்மா வீட்டிற்கு குழந்தை பேறுக்கு சென்ற நாகஜோதியிடம் உன் குடும்பத்தினர் குழந்தைக்கு கொடி, கொலுசு செயின் போடவில்லை என்று தகராறு செய்து நாகஜோதியின் தம்பியை செருப்பால் அடித்தார். 08.01.09 அன்று வத்தலக்குண்டு காவல் நிலையத்தில் நாகஜோதி புகார் அளித்தும் சமரசம் செய்யவே காவல்துறையினர் முயற்சித்துள்ளனர்.

## 14. இருளர் மாணவி-பாலியல் வல்லுறவுக்கு முயன்ற இளைஞர்

விழுப்புரம் மாவட்டம், க. பொன்னாங்குப்பம், இருளர் சமூகத்தைச் சேர்ந்த வெங்கடேசனின் மகள் அமுதா (13). இவர் காணை அரசு மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். 27.07.08 அன்று பள்ளி முடிந்து வீட்டிற்கு மிதிவண்டியில் வந்து கொண்டிருந்த போது அதே ஊரைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் சங்கர் (28) என்பவர் அமுதாவின் மிதிவண்டியை வலுக்கட்டாயமாகப் பிடுங்கி அருகிலிருந்து சவுக்குத் தோப்புக்குள் அழைத்து சென்று மாணவி அமுதாவின் மார்பை பிடித்தும், கட்டியணைத்தும் வல்லுறவுக்கு முயன்றுள்ளார். இதனையறிந்த பெற்றோர்கள் காணை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதனடிப்படையில் காவல் துறையினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 3(1) (xi) மற்றும் 244/08, 376, 511 இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளின் கீழ் சங்கரை கைது செய்தனர். ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர் அரிகிருஷ்ணன் சங்கருக்கு ஆதரவாக புகாரை திரும்பப் பெறக் கோரியும், அவ்வாறு வாங்கவில்லை எனில் ஊரில் மற்றவர்களோடு பேச விடாமலும், தண்ணீர் பிடிக்க விடாமலும், செய்து வருவதாகக் கூறி கொலை மிரட்டல் செய்துள்ளார்.

## 15. பெண்ணைக் கடத்தி பாலியல் வல்லுறவு

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுக்கா, நத்தமேடு கிராமம், நாயுடு சமூகத்தைச் சேர்ந்த நாகராஜின் மகள் தனமணி (20). இவர் கூலித் தொழிலாளியாவார். இவரும் விஸ்வநாதன் மகன் ஏமச்சந்திரனும் காதலித்து வந்தனர். இதனால் ஏமச்சந்திரன் ஊரை விட்டு ஓடி விடலாம் என்று கேட்டதற்கு தனமணி பெற்றோரின் சம்மதம் வேண்டும் என்று கூறிய தனமணியின் பதிலை ஏற்காத ஏமச்சந்திரன் 27.02.09 அன்று வலுக்கட்டாயமாக தனமணியை காரில் ஏற்றி உறவினர் ஒருவரின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு கத்தியை காட்டி மிரட்டி தனமணியை பாலியல் வல்லுறவு செய்தார். மறுநாள் தாலிகட்டி (28.02.09) அன்றும் மிரட்டி வல்லுறவு மேற்கொண்டார். பிறகு தனமணியின் உறவினர்கள் நத்தமேடு கிராமத்திற்கு தனமணியை அழைத்து வந்தாலும், தனமணி கெட்டுப் போனவள் என்று அவருடைய குடும்பத்தினர் ஏற்க மறுத்துவிட்டனர். ஏமச்சந்திரனை பற்றி குடியாத்தம் காவல் நிலையத்தில் புகார் செய்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததினால் நீதிமன்றம் மூலம் *FIR* பதிவு செய்தனர். இதனால் கோபமடைந்த காவல் துறையினர் ஏமச்சந்திரனுக்கு ஆதரவாகவே செயல்பட்டனர். அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், ஊரை விட்டு வேறு எங்காவது சென்று விடுமாறு காவல்துறையினர் ஆலோசனையும் அளித்து குற்றவாளியை நாங்கள் தேடி வருகிறோம் என்று கூறிக் கொண்டேயிருக்கிறார்கள்.

## 16. மாணவியைப் பாலியல் வல்லுறவு செய்த ஆசிரியர்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, சின்னவேப்பம்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த பெருமாள் மகள் பிரியா (11) 6ம் வகுப்பு படித்து வந்தார். இதே பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணி செய்தவர் கோவிந்தன். இவர் 06.06.09 அன்று மாணவி ப்ரியாவை பாலியல் வல்லுறவு செய்துள்ளார். பெற்றோர்கள் முயற்சியால் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பரிசோதிக்கப்பட்டு ப்ரியாவை ஆசிரியர் கோவிந்தன் பாலியல் வல்லுறவு மேற்கொண்டது உறுதி செய்யப்பட்டது. மாணவியின் தாயார் பாக்கியம் அளித்த புகாரின் அடிப்படையில், வாணியம்பாடி அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் குற்ற எண் 2/09, 376, 506 (i) இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் ஆசிரியர் கோவிந்தன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 17. திருமணமான பெண்ணைக் கேலி செய்த இளைஞர்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா, ஜோலார்பேட்டை வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த விஸ்வநாதனின் மனைவி லட்சுமி (35). இவர் ரயில்வே தொழிலாளியாக பணி செய்கிறார். தன் கணவனுக்கு மதிய உணவு எடுத்துச் செல்லும் போது, வக்கணம்பட்டி செரங்கம் ஊரைச் சேர்ந்த சுரேஷ் (23) என்பவர் 05.07.09 அன்று லட்சுமியை கிண்டல் செய்தும்,உடலைப் பற்றி தகாத வார்த்தைகளால் பேசியும் கேலி செய்துள்ளார். இதனால்

லட்சுமியும், அவரது கணவர் விஸ்வநாதனும் சுரேஷின் பெற்றோர்களிடத்தில் கூறியபோது, சுரேஷின் பெற்றோர்கள் சுரேஷை கண்டிக்காமல் லட்சுமி-விஸ்வநாதன் தம்பதிகளிடம் சண்டையிட்டனர். இதனால் ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் 05.07.09 அன்று புகார் செய்ததன் அடிப்படையில் சுரேஷை போலீசார் கைது செய்துள்ளனர்.

## 18. செவிலியரின் அலட்சியத்தால் இறந்த கர்ப்பிணி

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுக்கா, மூங்கில் ஊரணி மறவர் சமூகத்தைச் சேர்ந்த சரவணக்குமார் (30) மனைவி மோகனா (20)வுக்கு மானாமதுரை அரசு மருத்துவமனை 23.11.09 அன்று குழந்தை பிறப்பதாகக் கூறியிருந்தார்கள். ஆனால் 24.11.09 அன்று வரை வயிற்று வலி எடுக்காமல் இருந்தது. இதனைச் செவிலியர்கள் சரியாக கவனிக்கவில்லை என்று மருத்துவர்கள் செவிலியரைக் கண்டித்துள்ளனர். பிறகு சரவணக்குமாரிடம் அவர் மனைவியை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கூறியுள்ளார். சிவகங்கை மருத்துவமனையில் கர்ப்பிணி மோகனாவுக்குப் பனிக்குடம் காலை 11 மணிக்கே உடைந்து விட்டது ஏன் இரவு 2 மணிக்கு வருகிறீர்கள் என்று சத்தம் போட்டு, பிரசவம் பார்த்தனர். இதில் மோகனாவுக்கு குழந்தை பிறந்தது. ஆனால் மோகனாவின் உடல்நிலை மோசமானதால் மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு மருத்துவர்கள் கூறியுள்ளனர். 25.11.09 அன்று காலை 6.30 மணிக்கு மதுரை வந்த மோகனாவைப் பரிசோதித்த மருத்துவர்கள் இறந்து விட்டதாகக் கூறினார்கள். சிவகங்கை கேஸ் இங்கு உடல்கூறாய்வு சோதனை செய்ய முடியாது எனக் கூறியதால் மூங்கில் ஊரணிக்கு கொண்டு வந்து மோகனாவை அடக்கம் செய்துள்ளனர். 26.11.09 அன்று மாங்குளம் பகுதி செவிலியர் லட்சுமி, மோகனா இறந்ததைத் துக்கம் விசாரிப்பது போன்று வீட்டிற்குள் நுழைந்து மோகனாவின் தாய் சேய் நலப் பதிவேட்டைச் சேலைக்குள் வைத்து எடுத்துச் சென்று அதில் குறிப்பிட்டிருந்த தேதியை மாற்றியும், சில பக்கங்களையும் கிழித்தும் இருப்பதை சரவணக்குமார் பார்த்தார். மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தும், மோகனா இறப்பின் மீதோ செவிலியர்கள் அலட்சியப்போக்கின் மீதோ எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

## 19. மருத்துவரின் கவனக் குறைவால் கர்ப்பிணிப் பெண் சாவு

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், வையரசம்பாளையம் சீனிவாசன் மனைவி உமாமகேஸ்வரி (22) கர்ப்பமாக இருந்தார். இதனால் 13.04.09 அன்று மருத்துவ பரிசோதனைக்காக எலந்தைக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சென்றனர். சோதித்த மருத்துவர்கள் உடல் நல்ல நிலையில் உள்ளது என்று கூறி, ரத்த அழுத்தத்திற்கு மட்டும் மாத்திரைகள் கொடுத்துள்ளனர். ரத்த அழுத்தம் குறையாததினால் திருச்செங்கோடு மருத்துவமனையில் சேர்க்கச் சொல்லி செவிலியர் சித்ரா கூறியுள்ளார். இதனால் 04.09.09 அன்று திருச்செங்கோடு மருத்துவமனையில் மருத்துவ சோதனைகள் செய்தனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் மஞ்சள் காமாலை இருப்பதாக உமாமகேஸ்வரியிடம்

கூறி ஈரோட்டிற்கு அழைத்துச் செல்லக் கோரினார்கள். 04.09.09 அன்று ஈரோடு அரசு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்ற உமாமகேஸ்வரியிடம் மஞ்சள் காமாலை அதிகமாக உள்ளதால் வேறு மருத்துவமனைக்கு போகச் சொல்லியுள்ளனர். 06.09.09 அன்று கோவை மருத்துவ கல்லூரியில் உமாமகேஸ்வரி சிகிச்சைக்கு சென்றவரை சோதித்த மருத்துவர்கள் நோய் கடுமையாக உள்ளதென்றும் ஏன் இவ்வளவு நாட்கள் தாமதம் செய்தீர்கள் எனவும் திட்டியுள்ளனர். 07.09.09 மற்றும் 08.09.09 இருநாட்களும் அளித்த சிகிச்சை பலனின்றி உமாமகேஸ்வரி இறந்து போனார்.

## 20. குடித்து விட்டுத் தினமும் மனைவியைச் சித்திரவதை செய்த கணவன்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, வேலாயுதபுரம், நாடார் சமூகத்தைச் சேர்ந்த கண்ணனுக்கும், ராணி சீமாவுக்கும் 1992ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு சேதனாதேவி (12) என்ற பெண் குழந்தை இருக்கிறது. கண்ணன் எங்கும் வேலை பார்க்காததோடு தினமும் குடித்து விட்டு வந்து மனைவி ராணி சீமாவை அடித்துத் துன்புறுத்துவார். தூங்கவிடாமல் இரவில் கெட்ட வார்த்தைகள் கூறி திட்டிக் கொண்டேயிருப்பார். ராணி சீமாவின் தந்தையையும் 'குறவன்' என்று வேறு சாதியைக் கூறி இழிவுபடுத்துவார். கணவனின் தொந்தரவு தாங்க இயலாமல் சிவகாசிக்கு குடியேறிய ராணிசீமாவை அங்கேயும் வந்து அடித்து சித்திரவதை செய்தார். ராணிசீமாவின் அம்மா வீட்டில் கொடுத்த 5 பவுன் நகைகளையும் அடகு வைத்து அந்த பணத்தை குடித்தே அழித்தார். கணவனின் சித்திரவதைகளை பொறுக்க இயலாமல் கோவில்பட்டி அனைத்துமகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தும், கண்ணன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் சமரசம் செய்ய முயன்றது காவல் துறை.

## 21. சிகரெட்டால் சூடு வைத்து மனைவி சித்திரவதை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், ஒன்னல்வாடி கிராமம் சரிதாவும் (20), சின்னமட்டம்பள்ளி திம்மப்பா மகன் வேணுகோபாலும் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். திருமணத்திற்கு பிறகு சரிதா மீது சந்தேகம் கொண்டும், வரதட்சணைக் கேட்டும் அவரை பல்லால் கடித்தும், அந்தரங்க உறுப்பில் சூடு வைத்தும் கணவர் வேணுகோபால் சித்ரவதை செய்துள்ளார். சரிதாவை பலமுறை தேவிடியா என்று இழிவுபடுத்தி கட்டையால் அடித்துள்ளார். இவ்வாறு அடிக்கும் போது சரிதா கத்தினால் நீ பத்தினி இல்லை என்றும் கூறி அடித்துள்ளார். பலமுறை கற்பூரத்தை உள்ளங்கையில் ஏற்றி கொடுமைப்படுத்தியுள்ளார். காதல் திருமணம் செய்து கொண்டதால் பொறுமையோடிருந்த சரிதா பெற்றோர்களின் உதவியோடு ஒசூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் அடிப்படையில் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 294 *(B)*, 323, 324 மற்றும் பெண்கள் மீதான சித்திரவதை தடுப்பு சட்டம் பிரிவு 4ன் கீழும் வேணுகோபால் மீது வழக்கு பதிவு செய்து சிறையிலடைத்துள்ளனர்.

## 22. காதல் திருமணம் செய்ததால் ஊர்விலக்கம்

நாகை மாவட்டம், கீவளூர் வட்டம், காமேஸ்வரம் கள்ளர் தெருவில் வசிப்பவர் மாரியப்பன் மகன் சுபாகர். இவர் காதல் திருமணம் செய்ததால், காமேஸ்வரன் பஞ்சாயத்தினுடைய திமுக கவுன்சிலர் செரவி (எ) சுப்ரமணியன் என்பவர் திருவிழாவில் கலந்து கொள்ளக் கூடாது. பிறப்பு இறப்பு நிகழ்ச்சிகள், மளிகை பொருட்கள் வாங்க தடை, வெளியாட்களுடன் பேசக் கூடாது, மீறிப் பேசினால் ரூ. 500 அபராதம் போன்ற பல்வேறு கட்டுபாடுகளை விதித்துள்ளனர். மேலும் சுபாகரின் அண்ணன் சுதாகர், தலித் சமூகத்தைச் சேர்ந்த கோவிந்தம்மாளை திருமணம் செய்ததால் 10 ஆண்டுகளாக ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். சுதாகரின் தந்தையின் இறுதிச் சடங்கிற்கும் கலந்து கொள்ள விடாமல் செரவி (எ) சுப்ரமணியத்தின் அடியாட்கள் தடுத்துள்ளனர்.

அதே கள்ளர் தெருவைச் சேர்ந்த கார்த்தி என்பவர் பண்டாரம் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை காதல் திருமணம் செய்து கொண்டார் என அவர் மீது சமூகக் கட்டுப்பாடுகளையும் , ஊர் விலக்கமும் சுப்ரமணியம் செய்துள்ளார். காந்திமதிநாதன் என்பவர், ஊர் விலக்கம் செய்யப்பட்டவர்களோடு பேசியதால் சுப்ரமணியத்தின் ஆட்கள் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். காதல் திருமணம் செய்து கொண்டார் என அவர் மீது சமூகக் கட்டுப்பாடுகளையும், ஊர் விலக்கமும் சுப்ரமணியம் செய்துள்ளார். காதல் திருமணம் செய்ததாலும், அவர்களுடன் உறவாடியதற்காகவும் தண்டம் விதித்து, ஊர் விலக்கம் செய்த திமுக கவுன்சிலர் சுப்ரமணியத்தின் மீது காவல்துறை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

## 23. மருமகளைச் சித்திரவதை செய்த கணவரின் குடும்பத்தினர்

வேலூர் மாவட்டம், ஆம்பூர் தாலுக்கா கிருஷ்ணாபுரம், தலித் சமூகத்தைச் சேர்ந்த சசிவதனாவுக்கும்-நரேந்திரகுமாருக்கும் 2001ம் ஆண்டு திருமணம் நடந்தது. 2005ம் ஆண்டு சசிவதனாவின் கணவர் நரேந்திரகுமார் ஒரு விபத்தில் மரணமடைந்தார். அப்போது சவுதியில் செவிலியர் பணி செய்து கொண்டிருந்த மனைவி சசிவதனாவுக்கு தாமதமாக நரேந்திரக்குமாரின் குடும்பத்தினர் தகவல் கொடுத்ததால் அவர் வருவதற்குள் நரேந்திரகுமாரை அடக்கம் செய்து விட்டனர். கணவரின் இறப்புக்கு பின் கணவரின் வீட்டிலேயே சசிவதனா இருந்ததால் அவருக்கு பெரிய அரிசி சாதம் போட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இதனால் தனியாக சமையல் செய்த சசிவதனாவை தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் மாமனார் மணி (60) திட்டியுள்ளார். மேலும் லோப்பர் *(Lofer)* என்றும் சீதனம் ஒன்றும் கொண்டு வரவில்லை, உன் பிறப்பு சரியில்லை என்று சசிவதனாவின் குடும்பத்தை இழிவுபடுத்தி அவரை அடித்து வீட்டை விட்டு வெளியே துரத்தியுள்ளனர். இதனால் தற்கொலை செய்ய முயன்று மாத்திரைகளை சாப்பிட்டதால் ஆம்பூர் பெதஸ்தா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். சசிவதனாவையும், அவரது மகள் (6) தனிஷ்காவையும் கொடுமைபடுத்திய

மாமனார், மாமியார் மீது ஆம்பூர் அனைத்து பெண்கள் காவல் நிலையத்தில் 06.08.2009 அன்று புகார் அளித்தார். ஆனால் ஆய்வாளர் ஜெயகாந்தி பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் வயதானவர்கள் என்று கூறி எவ்வித நடவடிக்கையும் அவர்கள் மீது மேற்கொள்ளவில்லை.

## 24. காதலித்து ஏமாற்றி கர்ப்பமாக்கிய இளைஞன்

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், வி.சி. மோட்டூர் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மகள் பூங்கோதை (26). இவரும் அதே ஊரைச் சேர்ந்த காந்தி மகன் வெங்கடேசனும் (27) காதலித்து வந்தனர். திருமணம் செய்து கௌரவமாக வாழ்வோம் என்று கூறியே பூங்கோதையுடன் பலமுறை உறவு கொண்டுள்ளார், வெங்கடேசன் இதற்கிடையில் பூங்கோதையிடம் எதுவும் கூறாமல் வெங்கடேசன் ஆந்திரா சென்றுள்ளார். அப்போது பூங்கோதையின் பெற்றோர்கள், அவருக்கு வேறு திருமணம் செய்துள்ளனர். திருமணமான 5வது மாதத்திலேயே பூங்கோதை குழந்தை பெற்றதால் பூங்கோதையின் கணவன் அவரை பெற்றோர்கள் வீட்டில் விட்டுவிட்டு சென்று விட்டார்.

## 25. குடிபோதையில் மனைவியை எரித்த கணவன்

சென்னை அயனாவரம், வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த சுந்தர் மகள் செல்விக்கும் (27) முரளி மகன் ஜெயக்குமாருக்கும் 2007ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இருவருக்கும் குழந்தையில்லை என்பதில் அடிக்கடி தகராறு நடைபெறும். 11.04.09 அன்று குழந்தையில்லை என்பதை காரணமாகக் கொண்டு குடிபோதையில் செல்வியை அடித்துத் துன்புறுத்தி, எரித்து கணவர் ஜெயக்குமார் கொலை செய்துள்ளார்.அயனாவரம் காவல்துறையினர் ஜெயக்குமாரை கைது செய்துள்ளனர்.

## 26. இளம் பெண் மர்ம சாவு

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், தாசரஹள்ளி, கவுரானாயுடு சமூகத்தைச் சேர்ந்த ஆனந்தனின் மகன் சீதாலட்சுமியும், முனுசாமியின் மகன் முருகனும் தம்பதிகளாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் 09.01.09 அன்று சீதாலட்சுமி திடீரென்று தற்கொலை செய்து கொண்டார்.இதுவரை வயிற்று வலியால் துன்பப்பட்டிராத சீதாலட்சுமி வயிற்று வலியால் தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறியதும், கிராம நிர்வாக அலுவலர் பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் எனக் கூறியும் சோதனை செய்யாமல் இரு வீட்டாரும் சீதாலட்சுமியின் உடலை எரிக்க முயற்சித்ததால் சீதாலெட்சுமியின் இறப்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## 27. சந்தேகத்தால் மனைவியைச் சித்திரவதை செய்த கணவர்

வேலூர் மாவட்டம், சலவன்பேட்டை அகமுடைய முதலியார் சமூகத்தைச் சேர்ந்த ருக்மணியும், ராஜசேகரும் தம்பதிகள். இவர்களுக்கு இரண்டு வயதில் ஒரு குழந்தை இருக்கிறான். திருமணத்திற்கு பிறகு ராஜசேகர் சந்தேகம் கொண்டு தன் மனைவி ருக்மணியை அடித்து துன்புறுத்தியுள்ளார். கணவர் ராஜசேகரோடு வெளியில் சென்றாலும்

"அவன் ஏன் உன்னைப் பார்க்கிறான்" என்று அடிப்பார். 16.02.2009 அன்று ருக்மணியின் குழந்தையை பக்கத்து வீட்டில் விளையாடுவதற்காக விட்டிருந்தார்கள். அப்போது பக்கத்து வீட்டு லலிதா என்பவர் குழந்தைக்கு சோறு ஊட்டியிருக்கிறார். இதனைக் கண்ட ராஜசேகர் என் குழந்தையை பிச்சை எடுக்க வைத்து விட்டாயே என்று அடித்து துன்புறுத்தினார். ராஜசேகர் அடிக்கும் போது அவருடைய அம்மா சுபாசினியும் சேர்ந்து ருக்மணியை தாக்கியுள்ளார்கள். மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத் தலையீட்டிற்கு பிறகு அடிக்காமல் இனி குடும்பம் நடத்துவேன் என்ற ராஜசேகரனின் வாக்குமூலத்தினால் சட்ட நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

## 28. மனைவியைத் துன்புறுத்திய கணவன் குடும்பத்தினர்

சென்னை, திருமங்கலத்தில் வசிக்கும், தலித்+நாயுடு பெற்றோர்களுக்குப் பிறந்த நிர்மலாதேவியும் (30), குமாரும் தம்பதிகள். நிர்மலாதேவிக்கு பிறந்த முதல் குழந்தை (11.12.09) பெண் குழந்தை என்பதால் மாமனார், மாமியார் கொடுமைப்படுத்தியுள்ளனர். கணவர் குமாரும் இதைக் கண்டுக் கொள்ளாமல் அவருடைய நண்பரின் தங்கை ஜெயந்தியுடன் தொடர்பு கொண்டு ஊரை சுற்றியுள்ளார். இதை கண்டித்த நிர்மலாதேவியை அடித்து பல்லை உடைத்துள்ளார் கணவர் குமார். நிர்மலாதேவியை தாக்கியதால் அவருடைய அம்மாவும், தம்பியும் கேட்டதற்கு இருவரையும் கொலை செய்வதாக மிரட்டியுள்ளார். நிர்மலாதேவியைத் தொடர்ந்து அடித்து சித்ரவதை செய்ததினால் அவருடைய வயிற்றில் இருந்த கரு கலைந்துள்ளது. 2002ம் ஆண்டு நிர்மலாதேவி கருவுற்றிருந்த போதும், கணவர் குமாரும் மாமியாரும் கட்டாயப்படுத்தி கருவைக் கலைத்துள்ளனர். 2006ம் ஆண்டு குமார் துபாய்க்கு செல்ல வேண்டும் என்று விரும்பி நிர்மலாதேவியின் வீட்டில் பணமும் நகையும் வாங்கி வருமாறு துன்புறுத்தியுள்ளார். இதனால் 15 பவுன் நகையும், 30,000 ரூபாய் ரொக்கப் பணமும், 50,000 ரூபாய் வீடு கட்டுவதற்கான பொருட்களும் நிர்மலாதேவியின் தாயார் வாசுகி தந்துள்ளார். இவ்வளவு கொடுமையையும் பொறுக்க இயலாத நிர்மலாதேவி *W7* அண்ணாநகர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 10.09.08 அன்று புகார் அளித்தார். ஆனால் ஆய்வாளர் ராஜலட்சுமி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் நிர்மலாதேவிக்கு அறிவுரைகளை மட்டுமே வழங்கினார். விவாகரத்திற்கு கணவர் குமார் நீதிமன்றத்தில் விண்ணப்பத்திருக்கும் நிலையில் (கவுன்சிலிங்) ஆற்றுப்படுத்தும் அமர்விற்கு ஏன் வரவில்லை என்று கேட்கச் சென்ற நிர்மலாதேவியின் ஆடைகளை அவிழ்த்து குமாரின் குடும்பத்தினர் அவமானப்படுத்தியுள்ளனர்.

## 29. பார்வையற்ற மனைவியை அடித்துச் சித்திரவதை செய்யும் கணவன்

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கழிஞ்சூர், வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த, இரு கண் பார்வையுமற்ற மலர்கொடியை (30) நரேந்திரன் 13 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்தார். இவர்களுக்கு 8 வயதில் சுமித்ரா என்ற பெண் குழந்தை உள்ளது. கணவர் நாகேந்திரன் வேலைக்கு எங்கும் போகாத நிலையில், பார்வையற்ற மலர்கொடி ஊதுபத்தி

தேய்த்து அதில் கிடைக்கும் வருமானத்தில் குடும்பத்தை நடத்தி வந்தார். சரியாக உணவு சமைக்கவில்லை, ருசியாக இல்லை என்று மலர்கொடியை நரேந்திரன் அடித்து துன்புறுத்துவார். வீட்டுக்குள்ளேயே மலம் கழித்து அந்த மலத்தை பார்வையற்ற மனைவி மலர்கொடி தேடிப்பிடித்து சுத்தம் செய்வதை பார்த்து ரசிப்பார். மலர்கொடியின் எல்லா துணிகளையும் தீ வைத்து எரித்து, அதில் மலர்கொடியையும், குழந்தையையும் தள்ளி கொலை செய்ய முயற்சித்துள்ளார். 04.02.09 அன்று மலர்கொடியை நாகேந்திரன் அடித்து மண்டையை உடைத்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மலர்கொடி தன் மகள் சுமித்ராவிற்காக உயிர்வாழ்வதாகக் கூறுகிறார்.

## 30. வரதட்சணைக் கேட்டதால் புதுப்பெண் தற்கொலை

சென்னை, எழும்பூர், எம்.எம். காலனி, வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த கணேசன் மகன் ஸ்ரீராமலுவிற்கும், ஜெயந்திற்கும் திருமணமாகி 3 மாதங்கள் ஆகியிருந்தது. ஸ்ரீராமலு வரதட்சணைக் கேட்டு ஜெயந்தியை துன்புறுத்தி வந்தார். மேலும் ஜெயந்தியின் குடும்பத்தாரை இழிவு செய்தும் திட்டுவார். இதனால் ஜெயந்தி சண்டை போட்டுக் கொண்டு தாய் வீட்டிற்கு வந்து விடுவார். சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்தும், மேலும் வரதட்சணைக் கேட்டு ஜெயந்தியை தொடர்ந்து கணவன் ஸ்ரீராமலு துன்புறுத்தி வந்ததால் 26.03.09 அன்று கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார் ஜெயந்தி. அமைந்தகரை காவல்நிலையத்தில் ஜெயந்தியின் குடும்பத்தார் புகார் செய்ததன் அடிப்படையில் ஆய்வாளர் ஆனந்தராமன் கணவர் ராமலு, மாமியார் கமலாம்மாள்,முனியம்மாள் ஆகியோரை கைது செய்துள்ளனர்.

## 31. ஓட்டுநரின் மனைவி தற்கொலை

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஒன்றியம், கொல்லம்பட்டி முருக்கன்காட்டு கொட்டாய் செங்கோட கவுண்டர் மகன் ராஜாவுக்கும், பாலக்கோடு, பாலவாடி கிராமத்தைச் சேர்ந்த தங்கவேல் மகள் கலாவுக்கும் 3 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. 25.03.2009 அன்று குடும்ப தகராறு காரணமாக கலா விஷமருந்தி இறந்து போனார். இறப்பில் சந்தேகம் உள்ளது என்ற உறவினர்களின் புகாரின் பேரில் காரிமங்கலம் காவல் துறையினர் வழக்கு பதிந்துள்ளனர்.

## 32. சமூகப் பணியாளர் மீது பணமோசடி செய்ததாகப் பொய்ப் புகார்

திருவள்ளூர் மாவட்டம், எண்ணூர் பெரியகுப்பம் பகுதியை சேர்ந்தவர் சரஸ்வதி. இவர் மீனவ கிராமங்களில பல வருடங்களாக மக்கள் பணி செய்து வந்துள்ளார். சுனாமி போன்ற பேரிடர் சமயங்களில் மீனவ மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை பெற்று தரும் பணிகளை செய்து வந்துள்ளார். இதனால் கலைச்செல்வி கருணாலயா என்ற தொண்டு நிறுவனம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் பணிக்காக சரஸ்வதியை

நியமித்திருந்தனர். சரஸ்வதியும் 17 மகளிர் குழுக்களை அமைத்து அவர்களுக்கு கடனுதவி பெற்றுத் தந்துள்ளார். கடன் பெற்ற குழுக்களும் கடனை முறையாக திருப்பி செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் கலைச்செல்வி கருணாலயா நிறுவனம் 2009ம் ஆண்டு கலங்கரை விளக்கம் என்ற மகளிர் கூட்டமைப்பை நிறுவி அதன் பொறுப்பாளராக சரஸ்வதியை நியமித்தது. 2009 ஆண்டு மே மாதல் கலங்கரை விளக்கம் கூட்டமைப்பின் தலைவி சிவகாமி என்பவருடன் கூட்டமைப்பில் தொழில் தொடங்குவதற்காக கிடைத்த கடன் உதவி 15,90,000/– ரூபாயை தவறான முறையில் பயன்படுத்தியுள்ளனர். சரஸ்வதி 3ம் வகுப்பு வரை படித்தவர் என்பதால் அவருக்கு வரவு செலவு கணக்கு பார்க்கத் தெரியாது. அதை காரணமாக வைத்து பணத்தை மேற்கண்ட நபர்கள் கையாடல் செய்துள்ளனர்.

மீனவ கிராமங்கள் கட்டப்பஞ்சாயத்து செய்யக் கூடிய பழக்கங்கள் கொண்டவை. சரஸ்வதி பல்வேறு சூழல்களில் ஊர் பஞ்சாயத்தாரை எதிர்த்துள்ளார் என்பதால் அவர் மீது கோபமாக இருந்துள்ளனர். மகளிர் குழுக்களை சரஸ்வதி முன்னின்று அமைத்ததால் மக்கள் பணத்தை கையாடல் செய்தது சரஸ்வதி தான் என்று அவர் மீது குற்றம் சுமத்தியுள்ளனர். காவல் நிலையத்திலும் புகார் கொடுத்து சரஸ்வதி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 33. மனைவியின் மீது சந்தேகம்; வேலை தந்தவருக்கு அடி

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்பாலூர் கிராமம், தலித் சமூகத்தைச் சேர்ந்த ஷாலினி (29) இவருடைய கணவர் முத்து (30). கட்டிட மேஸ்திரியாக உள்ளார். இவரிடம் ரஞ்சித் என்பவரின் மனைவி சுகுணா சித்தாளாக வேலை பார்த்தார். இதனால் சுகுணாவின் மீது சந்தேகப்பட்டு முத்துவையும், ஷாலினியையும் ரஞ்சித் அடித்து ஷாலியின் மார்புத் துணியை பிடித்து இழுத்து அவமானப்படுத்தி, தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். 25.08.09 அன்று ரஞ்சித் ஊர் நாட்டாமையைக் கூட்டி பஞ்சாயத்து செய்து முத்துவிடம் ரூ. 500/– அபராதம் வாங்கியுள்ளனர். மேலும் 26.08.09 அன்றும் ரஞ்சித்தின் மீது தாக்குதல் தொடுத்துள்ளனர். இதனை கடலாடி காவல் நிலையத்தில் ஷாலினி புகார் கொடுத்துள்ளார்.

## 34. இளம்பெண் மர்ம சாவு

தர்மபுரி மாவட்டம்,சோலைக்கொட்டாய், பெரியமல்லிப்பட்டி மாதுவின் மகள் சுமதி (25). இவருக்கும் கம்பைநல்லூர் ஜே. செல்லப்பட்டி பரமசிவத்திற்கும் (45) 5 ஆண்டுகளுக்குமுன் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு குருமூர்த்தி எனும் 1 1/2 வயது குழந்தை இருக்கிறான். இந்நிலையில் 14.07.09 அன்று சுமதி விஷமருந்தி இறந்து போனார். சுமதியின் உடலை பார்த்த பெற்றோர்கள் சுமதியின் உடலில் காயங்கள் இருப்பதினாலும், வரதட்சணைக் கேட்டு அடிக்கடி கணவர் பரமசிவம் துன்புறுத்தியதாலும், பரமசிவம் தான் கொன்றிருக்கிறார் என்று சந்தேகம் அடைந்துள்ளனர்.

## 35. வீட்டுப் பத்திரம் கேட்டப் பெண் மீது பாலியல் பலாத்கார முயற்சி

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், குமரப்பாநகரில், தலித் சமூகத்தைச் சேர்ந்த விக்டோரியா, பெண் குழந்தைகள் மற்றும் 2 மகன்களுடன் வசித்து வந்தார். வறுமையின் காரணமாக கந்து வட்டிக்கு விடும் சாமிநாதனிடம், விக்டோரியா தன் வீட்டுப் பத்திரத்தை வைத்து கடன் வாங்கியுள்ளார். கடனை அடைத்துப் பத்திரத்தைக் கேட்ட விக்டோரியாவிற்கு சாமிநாதன் பாலியல் தொல்லைகள் தந்துள்ளார். 16.12.09 அன்று பத்திரத்தை தருகிறேன் என்று வீட்டிற்குள் அழைத்து விக்டோரியாவின் சேலையைப் பிடித்து இழுத்து பாலியல் வல்லுறவுக்கு சாமிநாதன் முயன்றுள்ளார். அதற்கு இணங்காத விக்டோரியாவை காது, கன்னத்தில் அடித்து துன்புறுத்தியுள்ளார். காட்பாடி காவல் நிலையத்தில் விக்டோரியா தனக்கு நேர்ந்த கொடுமையை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் சாமிநாதன் மீது மேற்கொள்ளவில்லை.

## 36. கூலித் தொழிலாளி மீது பாலியல் பலாத்கார முயற்சி

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தாலுக்கா விஸ்வநாதபுரம் கிராமம் தலித் சமூகத்தை சேர்ந்த ஏழுமலையன் மகள் உஷா (23). இவர் கூலித் தொழிலாளி. 12.04.09 அன்று உஷா ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது முருகன் (39) என்பவர் சந்தோசமாக இருக்கலாம் என்று உஷாவிடம் தகராறு செய்தார். மீண்டும் 14.04.09 அன்று தகாத உறவுக்கு உஷாவை வற்புறுத்தியுள்ளார். அதற்கு மறுத்த உஷாவை 15.04.09 அன்று வேலை செய்து கொண்டிருந்த போது பறத்தேவிடியா நாயே என்று தகாத வார்த்தைகளைக் கூறி பொது இடத்தில் முருகன் இழிவுப்படுத்தினார். திருவண்ணாமலைக் காவல் நிலையத்தில் உஷா அளித்த புகாரின் பேரில் தலித் வன்கொடுமைத் தடுப்பு சட்டப்பிரிவு *3 (i) (x)*ன் கீழ் முருகன் மீது வழக்கு பதிந்துள்ளனர்.

## 37. இளம் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்த முதியவர்

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுக்கா, புலியூர்நத்தம் கிராமம், கூலித் தொழிலாளி பாலசுப்ரமணியத்தின் மகள் கலைவாணி (18). இவர்களுடைய வீட்டிற்கு அருகில் வசிப்பவர் பெரியசாமி (55). குடிப்பழக்கம் உள்ள இவர் குடித்தால் தகராறு செய்வார். 28.07.09 அன்று பெரியசாமி துக்க வீட்டிற்கு சென்று வந்ததாகவும் அதனால் குளித்து உடை மாற்றுவதற்கு உடையை எடுத்து தரச் சொல்லி கலைவவாணியை பெரியசாமி அழைத்துள்ளார். வீட்டிற்குள் நுழைந்த கலைவாணியை பெரியசாமி வாயில் துணியை வைத்து அடைத்து பாலியல் வல்லுறவு மேற்கொண்டார். இதனைச் சொல்லாமல் இருந்தால் பணம் தருவதாகவும் கலைவாணியிடம் பெரியசாமி கூறியுள்ளார். 30.07.09 அன்று கலைவாணியின் பெற்றோர்கள் இடையக்கோட்டை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் 01.08.09 அன்று கலைவாணிக்கு மருத்துவ பரிசோதனை செய்து வல்லுறவை உறுதி செய்து பெரியசாமியை காவல்துறையினர் கைது செய்தனர்.

## 38. காதலித்துக் கர்ப்பமாக்கி ஏமாற்றிய இளைஞன்

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுக்கா, கீழத்தெரு, பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த கருப்பசாமி மகன் செல்வம். இவர் அதே ஊரைச் சேர்ந்த இளவரசு மகள் தமிழ்ச்செல்வியை (22) திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, தமிழ்ச்செல்வி காட்டில் மாடு மேய்த்து கொண்டிருந்த போது உடல் உறவு கொண்டார். திருமணத்தை காரணமாகக் காட்டி பலமுறை தமிழ்ச்செல்வியுடன் செல்வம் உறவு கொண்டுள்ளார். இதனால் கர்ப்பமடைந்த தமிழ்ச்செல்வி தன் தாயாருடன் சென்று செல்வத்தின் வீட்டில் தன்னை திருமணம் செய்யக் சொல்லி கேட்ட போது செல்வத்தின் அண்ணி சோலையம்மாளும், அக்கா சரசாவும் கருவை கலைக்கச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளனர். இதனை மறுத்த தமிழ்ச்செல்வி, வரதட்சணை எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக் கொண்டு திருமணம் நடத்துங்கள் என்று கூறியதால் தமிழ்ச்செல்வியையும் அவரது தாயாரையும் அடிக்க கம்பை எடுத்து மிரட்டியுள்ளனர். இந்நிலையில் செல்வமும் தலைமறைவானார். திருமணமாகாமலேயே குழந்தையைப் பெற்ற தமிழ்ச்செல்வி தன் குழந்தையை பால்வாடியில் சேர்க்கும் போதும், சேரவிடாமல் செல்வமும் குடும்பத்தினர் தடுத்துள்ளனர். காதலித்து கர்ப்பமாக்கிய செல்வமும் தமிழ்ச்செல்வி சொத்துக்கு ஆசைப்பட்டு என் மீது வீண் பழி சுமத்துகிறார் எனக் கூறியுள்ளார். குற்ற எண் 53/05, u/s 417, 506(i) இந்திய தண்டனைச் சட்டப் பிரிவின் கீழ் செல்வம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது.

## 39. கணவரின் குடும்பத்தினர் மனைவியைச் சித்திரவதை

வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டா அருகில் உள்ள கேமரான்பேட்டை தலித் சமூகத்தைச் சேர்ந்த ஜெகநாதன்-ஜெயமங்கலம் (24) என்பவர்களுக்கு 2005ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. ஜெயமங்கலத்தின் கணவர் ஜெகநாதனின் தம்பி சுரேஷ் (22) ஜெயமங்கலத்திடம் தவறாக நடக்க முயற்சி செய்தார். இதனை கணவரிடமும், கணவரின் குடும்பத்தாரிடம் ஜெயமங்கலம் கூறியதால் ஜெயமங்கலத்தையே திட்டி, சந்தேகப்பட்டார்கள். எந்த பொருளையும் வாங்கித் தராமலும் சித்திரவதை செய்துள்ளனர். 30.03.09 அன்று ஜெயமங்கலத்தின் குழந்தைகள் நீரில் விளையாடிக் கொண்டிருந்ததால், அதனைக் கண்டித்தார். இதனால் கணவரின் குடும்பத்தார் அனைவரும் ஜெயமங்கலத்தை கட்டையால் அடித்து சித்திரவதை செய்தனர். இந்த தாக்குதலில் ஜெயமங்கலத்தின் மண்டை உடைந்தது. மாமனாரும் வயிற்றில் எட்டி உடைத்து தலைமுடியை பிடித்து அடித்து ஜெயமங்கலத்தை துன்புறுத்தியுள்ளார். 31.03.09 மனித உரிமை அமைப்பின் உதவியோடு ஆம்பூர் காவல் நிலையத்தில் ஜெயமங்கலம் புகார் செய்தார். காவல்துறையினர் எச்சரிக்கை செய்ததன் அடிப்படையில் மீண்டும் ஜெயமங்கலத்தை வீட்டில் சேர்த்துக் கொண்டனர்.

## 40. சந்தேகப்பட்டு மனைவியை சித்திரவதை செய்து தற்கொலைக்குத் தூண்டிய கணவன்

சென்னை, பரங்கிமலை நேரு நகர் அருந்ததியர் சமூக முருகனின் மகன் சண்முகமும் (32), சுபாஷினியும் தம்பதியினர். சுபாஷினி அழகு நிலையத்தில் பணி செய்து வந்ததால் அனைவருடனும் சகஜமாக பேசுவார். இதனால் கணவன் சண்முகம், தன் மனைவி சுபாஷினியை சந்தேகம் கொண்டும், அவருக்கு பிறந்த குழந்தையை யாருக்கோ பிறந்த குழந்தை என்றும் கூறி தொடர்ந்து அடித்து சித்திரவதை செய்துள்ளார். சிகரெட்டால் உடலில் சூடும் வைத்துள்ளார். கணவனின் சந்தேகம் மாறாமல் தொடர்ந்து சுபாஷினியைச் சித்திரவதை செய்ததால் 30.03.09 அன்று சுபாஷினி மண்ணெண்ணையை உடலில் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். உடலில் பலத்த தீக்காயங்கள் இருந்ததால் சிகிச்சை பலனின்றி இறந்து போனார். இதனால் சுபாஷினியை தற்கொலைக்குத் தூண்டிய கணவன் சண்முகத்தை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

## 41. மதுபோதையில் மனைவியை அடித்துச் சித்திரவதை

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கழிஞ்சூர் மெயின்ரோட்டை சேர்ந்தவர் ஜானகி (40). இவருடைய கணவர் நடராஜன். 1989 ஆம் ஆண்டு திருமணமான நாளிலிருந்து தினமும் மதுபோதையில் அடித்து சித்திரவதை செய்வது வழக்கமாக இருந்துள்ளது. இந்நிலையில் கடந்த 20.02.09 அன்று இரவு நடராஜன் மதுபோதையில் ஜானகியை அடித்து தலைமுடியை பிடித்து இழுத்து சுவற்றில் ஜானகியின் தலையை இடித்துள்ளார். அப்போது ஜானகியின் தலை உடைந்து இரத்தம் வந்துள்ளது. அதை பார்த்ததும் நடராஜன் அடிப்பதை தடுக்கச் சென்ற அவருடைய மகள் மாலினியையும் அடித்து சுவற்றில் மோதச் செய்துள்ளார். நடராஜனின் இத்தகைய வெறிச் செயலை தடுக்க முயன்ற அவருடைய சகோதரி மாலாவையும்,சகோதரன் சிவாவையும் அடித்துள்ளார். இதனால் ஜானகி இரத்தம் வழிந்த நிலையில் அருகாமையின் வீட்டில் கை வைத்தியம் எடுத்துக் கொண்டு இரவு முழுக்க எதிர் வீட்டிலேயே தங்கியுள்ளார்.

## பரிந்துரை-கண்டறிந்தவை

## பெண்களுக்கெதிரான வன்முறை வடிவங்கள்

- குடும்ப வன்முறை
- பாலியல் வன்புணர்ச்சி
- குற்றச் செயல்கள் மூலமாக, வார்த்தைகளால் மற்றும் செய்கைகளால் மற்றும் வன்புணர்ச்சிக்கு முயற்சி செய்வதன் மூலமாக மானபங்கப்படுத்துதல்.
- பணியிடங்களில் பாலியல் பலாத்காரம்
- வரதட்சணைக் கொடுமைகள்
- விபச்சாரத்தில் ஈடுபடுத்துதல்
- பெண் சிசுக்கொலை / கருச் சிதைவு
- திருமணம் சம்பந்தமான குற்றங்கள்
- ஒழுக்கக் கேடான வார்த்தைகள், உடன்கட்டை ஏற்றல், நாணத்தைக் குலைத்தல்.

## குடும்ப வன்முறை:

குடும்ப வன்முறை என்பது பாலியல் ரீதியான தாக்குதல் மற்றம் தூண்டுதல் உள்ளடக்கியதாகும். இது

- உடல் ரீதியான கொச்சைப்படுத்துதல்
- மனநிலை, உணர்வுகளைக் கொச்சைப்படுத்துதல்
- வார்த்தை, சமூக அந்தஸ்தை கொச்சைப்படுத்துதல்
- பாலியல் ரீதியான கொச்சைப்படுத்துதல்
- பொருளாதார ரீதியான கொச்சைப்படுத்துதல் ஆகியவைகள் குடும்பங்களில் பெண்களுக்கெதிராக இழைக்கப்படுகிறது.

### உதாரணங்கள்:

- இடித்தல், அறைதல், மிதித்தல், தள்ளுதல்
- கொச்சைப்படுத்துதல், புனைப்பெயர் வைத்து அழைத்தல், கேவலப்படுத்துதல்.
- கட்டாய உடலுறவு , பாலியல் ரீதியாக உடற்பாகங்களைத் தாக்குதல்
- ஒழுக்கத்தை சீர்குலைத்தல், கொச்சையான வார்த்தைகளால் மிரட்டுதல்
- சூடு வைத்தல், வெட்டுதல், ஆயுதங்களைப் பயன்படுத்துதல்.
- உணவு, கொடுக்க மறுத்தல், தூங்கவிடாமை, மருத்துவ கவனிப்பு மறுத்தல்,
- பொருளாதார நிலையைக் கட்டுப்படுத்துதல்.

### உடல்ரீதியான வன்முறை:

- தலைமுடியைப் பிடித்திழுத்தல், உடற்பாகங்களை திருகுதல், இடித்தல், வெட்டுதல், குத்துதல், எலும்பை உடைத்தல், சூடுபோடுதல்.
- ஆயுதங்கள் மற்றும் தீக்கருவிகளைப் பயன்படுத்துதல்
- வன்முறையின் மூலாக மாறி, மாறி கட்டாய கருச்சிதைவு மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே கரு வெளியேறுதல்.

### மனநிலை, உணர்வு மீதான வன்முறை:

- அச்சுறுத்தல்
- ஒழுக்கக் கேடான வகையில் பெண்களை குற்றம் சுமத்துதல்
- பொது மற்றும் தனி நபர்கள் முன்னிலையில் கேவலப்படுத்துதல்.
- வீட்டுச் சாமான்களை உடைத்தல், வளர்ப்புப் பிராணிகளைக் கொல்லுதல்.
- குழந்தைகள் மற்றும் உறவினர்களுக்கு தீங்கு மற்றும் அடிப்பதாக மிரட்டுதல்.

### பாலியல் ரீதியான வன்முறை:

- கட்டாய உடலுறவு அல்லது சம்மதமில்லாத பாலியல் நடவடிக்கைகள்
- பாலியல் பாகங்களைத் தாக்குதல்
- இச்சைப் பொருளாகப் பாவித்தல்.
- இயற்கைக்கு மாறான பாலியல் நடவடிக்கைகளுக்கு கட்டாயப்படுத்துதல்.
- பாலியல் தேவைகளுக்கு ஆட்படாத போது வன்முறை மூலமாக பயமுறுத்தி பணிய வைத்தல்.

### வார்த்தைகள் மற்றும் சமூக வன்முறை:

- கொச்சைப்படுத்துதல், புனை பெயர் வைத்து அழைத்தல்
- பெண் வீட்டு பெற்றோரை, நண்பர்களை மற்றும் குடும்ப உறவுகளைக் கொச்சைப் படுத்துதல்.
- தனிமைப்படுத்துதல், குடும்ப உறவுகளைத் துன்புறுத்தல், நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துதல், பொதுவாக அநாகரீமாக நடத்துதல்.

### பொருளாதார வன்முறை :

- குடும்ப வருமானத்தைக் கட்டுபடுத்துதல், பொருளாதார நிறைவை அடைவதற்கான வழியைத் தடுத்தல்.
- பொருளாதார சார்புக்கு கட்டாயப்படுத்துதல்.
- வீட்டுச் செலவுகளுக்கு குறைவான பணம் கொடுத்தல்
- பணத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாக அல்லது சுயநலத்திற்கு செலவிடுவதாக குறை கூறுதல்.

## NCRB அறிக்கை - பெண்கள் மீதான வன்முறை-2009

| வ.எண் | வழக்கின் வகை | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பாலியல் பலாத்காரம் | 21,397 |
| 2 | கடத்தப்படுதல் | 25,741 |
| 3 | வரதட்சணை மரணங்கள் | 8,383 |
| 4 | சித்திரவதைகள் | 89,546 |
| 5 | மானபங்கப்படுத்துதல் | 38,711 |
| 6 | பாலியல் தொந்தரவுகள் | 11,009 |
| 7 | பெண்களை இறக்குமதி செய்தல் | 48 |
| 8 | கடத்தலை தடுக்கும் சட்டம் 1956 – ன் கீழ் | 2,474 |
| 9 | பெண்களை இழிவாக சித்தரிப்பதை தடை செய்யும் சட்டம் 1986 | 845 |
| 10 | வரதட்சணை ஒழிப்புச் சட்டம் 1961 | 5,650 |
| மொத்தம் | | 2,03,804 |

NCRB புள்ளி விவரப்படி 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் மொத்தம் 2,03,804 பெண்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இந்த புள்ளி விவரங்களில் குடும்பத்தில் வன்முறைக்குள்ளாக்கப்படுவதும், பணியிடங்களில் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாவதும் வெளியில் சொல்லப்படாத வன்முறைகளாகும். அது போன்ற வெளியில் சொல்லப்படாத வன்முறைகளை தவிர்த்து ஒரு வருடத்திற்கு 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்ற தகவல் மிகவும் அதிர்ச்சித் தரத்தக்கதாக உள்ளது. தமிழ்நாட்டு புள்ளி விவரங்கள் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன.

## பெண்கள் மீதான வன்முறை – தமிழ்நாடு 2009

| வ.எண் | வழக்கின் வகை | பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பாலியல் பலாத்காரம் | 596 |
| 2. | வரதட்சணை மரணங்கள் | 194 |
| 3. | பாலியல் துன்புறுத்தல்கள் | 1242 |
| 4. | பாலியல் தொந்தரவுகள் | 501 |
| 5. | கணவர் மற்றும் அவரது உறவினர்களால் கொடுமைப்படுத்தப்படுதல் | 1460 |
| 6. | பெண்கள் மற்றும் இளம் பெண்கள் கடத்தப்படுதல் | 1133 |
| 7. | வரதட்சணை தடை சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள் | 207 |
| மொத்தம் | | 5333 |

பல்வேறு வகையான பெண்கள் மீதான வன்முறைகள் குறித்த செய்திகள் அன்றாடம் தினசரிகளில் குறைந்தபட்சம் 5 க்கு குறையாமல் வெளிவருகிறது. இவை தவிர வெளியில் தெரியாமல் பல வன்முறைகள் நடந்துக் கொண்டு வருகிறது. இன்னும் பல வன்முறைகள் குறித்த செய்திகள் வெளியில் தெரிந்தால் அது பாதிக்கப்பட்ட பெண்ணிற்கே அவமானமாக அமைந்துவிடும் என்ற சிந்தனையில் நிறைய வன்முறை சம்பவங்கள் வெளியில் சொல்லப்படுவதில்லை. செய்தியாகின்ற பல வன்முறை சம்பவங்களில் ஒரு சில மட்டுமே காவல்நிலையங்களில் வழக்காக பதிவு செய்யப்படும். அவ்வாறு காவல்நிலையங்களில் 2009 ஆம் ஆண்டு வழக்குகளாக பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விபரங்கள் மட்டுமே இங்கு பட்டியலிடப்பட்டுள்ளது. (குறிப்பு தமிழ்நாடு காவல்துறை இணையதளத்திலிருந்து மேற்கண்ட தகவல்கள் எடுக்கப்பட்டது). இவை தவிர இந்தியாவில் பெண் கருக்கொலைகள் 63, சிசுக் கொலைகள் 123 வழக்குகள் NCRB புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மக்கள் கண்காணிப்பகமும், மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கமும் கள ஆய்வு செய்து தற்போது தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள 41 வழக்குகளில் உள்ள மீறல்களும், வன்முறை வடிவங்களும் கண்டறிந்தவைகளாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## கண்டறிந்தவைகள்

- பெண் குழந்தைகளுக்கு குறிப்பாக வீட்டில் தனியான இருக்கும் சிறுமிகளுக்கு அக்கம் பக்கத்தினர், உறவினர்களால் பாலியல் தொந்தரவு ஏற்படுகிறது. இதனால் அவர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உள்ளது.
- வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் தாக்கப்படுதல், தற்கொலைக்கு தூண்டப்படுதல், கொலை செய்யப்படுதல் போன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.
- பெண் குழந்தைகள் சிசுக் கொலை செய்யப்படும் சம்பவங்கள் குறையவே இல்லை.
- பெண்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் மற்றும் இருளர் பெண்கள் ஆதிக்க சாதியினரால் பாலியல் வல்லுறவுக்கு அதிகமாக உட்படுட்தப்படுகின்றனர்.
- பெண்கள் மீதான வன்முறைகளும் அதிகரித்துக் கொண்டே உள்ளது என்பதை இவ்வறிக்கைகளில் காண முடிகிறது.
- மருத்துவமனை, மருத்துவர்கள், செவிலியர்களின் அலட்சியத்தால் அதிகளவில் கர்ப்பிணி பெண்களும், பிறந்த குழந்தைகளும் இறக்க நேரிட்டுள்ளது.
- குடும்ப வன்முறையில் கணவன் மனைவியை மதுபோதையிலோ, சந்தேகத்தின் பெயரிலோ அடித்தல், சிகரெட் துண்டுகளால் சுடுதல், எரித்தல் போன்ற பல்வேறு சித்திரவதைகளை செய்கின்ற சம்பவங்கள் அதிகமாக இவ்வறிக்கையில் இடம் பெற்றுள்ளன.
- ஆண்கள் Phycho மனநிலையில் காரணமேயின்றி தொடர்ந்து பெண்களை சித்திரவதை செய்கின்ற சம்வங்களும் இவ்வறிக்கையில் உள்ளன.

## பொதுவான பரிந்துரைகள் :

- பெண்களின் மீதான வன்முறைகள் மற்றும் குற்றங்களில் நடைபெறும் புலனாய்வைத் துரிதப்படுத்துவதைப் பொறுத்தவரை தமிழக அரசு இரண்டு விஷயங்களில் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும். ஒரு பெண்ணின் மரணம் (திருமணமாகி 7 ஆண்டுகளுக்குள் அப்பெண் மரணமடைந்திருந்தால் மட்டுமே) அல்லது அவர் பாலியல் பலாத்காரத்திற்குள்ளாக்கப்படுதல் போன்றவற்றைப் புலனாய்வு செய்ய கோட்டாட்சியருக்கும் துணைப் போலீஸ் கண்காணிப்பாளருக்கும் இத்தகைய வழக்குகளை கையாளும் போது அவற்றை சரியான பாலியல் கண்ணோட்டட்துடன் அணுக முறையான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். ஏனெனில், இந்த வழக்குகளை விசாரிக்கும் பெரும்பாலான போலீஸ் அதிகாரிகள் மரணம் அல்லது பாலியல் பலாத்காரம் நடந்த இடங்களுக்கு தாமதமாகவே வருவதால் வழக்கின் முக்கிய தடையங்கள் அழிக்கப்பட்டுவிட குற்றவாளிகள் தப்பி விடுகின்றனர்.

- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 154 மற்றும் 155ன் படி போலீஸ் நிலையத்தில் புகார் கூறுபவர்களின் கூற்றை முழுமையாக பதிவு செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் மேற்படி சம்பவங்கள் குறித்தோ அல்லது கணவன் மனைவியை அடிப்பது குறித்தோ புகார் கூறுபவர்கள் கூறுவதைப் போலீசார் அலட்சியமாக / எடுத்துக் கொள்வதுடன் மனைவி கணவனிடம் அடிவாங்குவது சகஜம் என்று ஆலோசனையும் கூறுகின்றனர். பெரும்பாலான மகளிர் காவல்நிலையங்களில் கூட இதே நடைமுறை தான் காணப்படுகின்றது. இதற்கு காரணம் இவர்களிடம் பாலியல் கண்ணோட்டம் இல்லாததே. எனவே, அரசே அனைத்து மட்டங்களிலும் உள்ள போலீசாருக்குப் பாலியல் கண்ணோட்டம் மற்றும் பெண்களின் உரிமைகள் குறித்தும் முறையான பயிற்சிகள் திட்டமிட்டு நடட்த வேண்டும். இம்முயற்சியில் பெண்களின் அமைப்புகளும் அரசு சாரா நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட அரசே ஆவண செய்ய வேண்டும்.

- பெண்களின் மீதான வன்முறை என்பது அவர்கள் கருவில் இருக்கும் போதே துவங்கி விடுகிறது. கருக்கொலை மற்றும் சிசுக்கொலை குறித்து 2009 புள்ளி விபரங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்படி வாழ்வுரிமையை பறிக்கும் இரு வன்முறைகளும் தமிழகத்தில் இல்லை என்ற முடிவுக்கு வர இயலாது என்பது நாம் அறிந்ததே. பரவி வரும் இவ்வன்முறை குறிட்தும் அதற்கான தீர்வுகள் குறித்து தெளிவு பெறுவதற்காகவே கருக்கொலை மற்றும் சிசுக்கொலைகளைட் தடுப்பதற்கான பரிந்துரைகள் தரப்படுகின்றன.

- பிறக்கப்போவது ஆணா, பெண்ணா என்பதைத் தொழில் நுட்பங்களின் மூலம் கண்டறிந்து பெண் குழந்தையாக இருந்தால் கருவிலேயே கொலை செய்துவிடும் போக்கு அதிகரித்து வருகிறது. கருக்கொலைக்கு *(Foeticide)* உடந்தையாக ஸ்கேன் மையங்களும் செயல்பட்டு வருகின்றன. பகிரங்கமாகவே ஆண் குழந்தை

வேண்டுமா? பெண் குழந்தை வேண்டுமா என்று விளம்பரங்களும் செய்கின்றனர். இதனால், பெண் குழந்தைகளின் பிறக்கும் உரிமையையே சுருக்கமாகச் சொன்னால் அவர்களது வாழ்வுரிமையே பறிக்கப்பட்டு வருகிறது. கருக்கொலையை தடுத்திட மத்திய அரசு பிறக்கப் போகும் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறிய உதவும் தொழில் நுட்பம் (முறைப்படுத்துதலும், தவறாக உபயோகப்படுத்துவதைத் தடுத்தலும்) சட்டம் 1994ஐ *(Pre-Natal Diagnostic Techniques Regulation & Prevention of Misuse Act)* நிறைவேற்றியது. இச்சட்டத்தின் படி அனைத்து ஸ்கேன் மையங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால், சட்டம் இயற்றப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும் பதிவு செய்வது என்பது மிகவும் மந்தமாகவே இருந்து வருகிறது. மக்கள் இயக்கங்களின் பல்வேறு நிர்பந்தங்களுக்குப் பின்னர் ஸ்கேன் மையங்களை மே 31, 1999க்குள் பதிவு செய்யும்படி தமிழக அரசு அறிவித்திருந்தது. தமிழகத்திலுள்ள 5000 ஸ்கேன் மையங்களில் 318 நிலையங்கள் மட்டுமே பதிவு செய்துள்ளன. 706 பதிவுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதுவரை பதிவு செய்யாமல் இருக்கும் 3500க்கும் மேற்பட்ட மரபணுகூடங்கள், ஸ்கேன் மையங்கள் தடை செய்யப்பட வேண்டும். (ஆதாரம்: பெண் கருக்கொலைக்கு எதிரான பிரச்சார அமைப்பின் துண்டறிக்கை – தமிழ்நாடு)

- அனைத்து தனியார் மருத்துவமனைகளும், அரசுக்கும், பொது மக்களுக்கும் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பாலினம் குறித்த தகவல்களையும் கருக்கலைப்பு மற்றும் அவற்றின் பாலினம் குறித்த தகவல்களையும் மாத வாரியாக, அரசு அறிவிக்கை *(Notification)* வெளியிட வேண்டும்.
- பெண் கருக்கொலை சட்டத்தினை மீறும் மருத்துவர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
- ஆண் குழந்தை பிறப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் ஊடகச் சாதனங்களின் பிரச்சாரங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுப் பிறக்கும் அனைத்து குழந்தைகளின் மனித மதிப்பை ஏற்றுக்கொள்ளும்படியாக அரசு தொடர்ந்து பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.
- இதற்கு அடுத்தபடியாக பெண்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இன்னொரு கொடூரமான சிசுக்கொலை *(Infanticide)* தமிழகத்தில் சில மாவட்டங்களிலும் கிராமங்களிலும் பரவி வருகிறது. இக்கொடூரத்தை நிறுத்த சிசுக்கொலை சட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும். இக்கொலையில் ஈடுபடும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் போது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 302–ம் பயன்படுத்தப்படுகிறது. அப்படி சட்டத்தை பயன்படுத்தி தண்டிக்கும் போது கொலையாளியைவிட சிசுக்கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர்களையே *(Abettors)* தண்டிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஏனெனில், சிசுக் கொலையில் ஈடுபடும் (அதாவது பெண் குழந்தை பெற்ற தாயார்கள்) பெண்கள் ஒரு

போதும் தாங்களாகவே இக்கொடூரத்திற்கு உடன்படுவதில்லை. கணவர் மற்றும் குடும்பட்தினரின் தூண்டுதல்களினாலேயே இக்கொடூரத்தைப் புரியும்படி நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்பதை கவனத்தில் கொண்டு சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- பெண்கள் மீதான வன்முறையில், கருக்கொலைக்கும் சிசுக்கொலைக்கும் முக்கிய காரணமாகவும் தூண்டுதலாகவும் இருப்பது வரதட்சணை என்ற சமூக நோய்தான். இதைத் தடுக்க, வரதட்சணை தடுப்புச் சட்டம் 1961 போடப்பட்டு 50 ஆண்டுகள் ஆகியும் இதுவரை இக் குற்றங்களும் வரதட்சணை வாங்குவதும் குறையவில்லை. இதற்குச் சமூகம்தான் அடிப்படைக் காரணமாக இருப்பினும் இச்சட்டம் வலிமை இல்லாமல் இருப்பது வரதட்சணைக் கொடுமை மேலும் வலிமை பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கி வருகிறது. ஆனால், இதே போன்று மற்ற பிரச்சனைகளுக்கென்று போடப்பட்ட சட்டங்களான உணவில் கலப்படத் தடுப்புச் சட்டம், லஞ்ச ஒழிப்புச் சட்டம் போன்றவற்றுக்கெல்லாம் சட்டத்தை அமல்படுத்துவதற்கென்று தனித்தனியே அதற்கென துறைவாரியான அரசு அதிகாரிகள் செயல்படுகின்றனர். மேலும், இக்குற்றங்கள் அரசுக்கு எதிராக கருதப்படுகின்றன. இச்சட்டத்தை அமலாக்குவதற்கு தனித்துறையும் இல்லை. போலீசாரும் அதிக அக்கறையும் காட்டுவதில்லை. எனவே, வரதட்சணை தடுப்புச் சட்டத்தைத் திருத்தும் போது இக்குற்றங்கள் அரசுக்கு எதிரான குற்றங்களாகப் பாவிக்கப்பட்டு பிரிவு 3, 4 ஆனது இச்சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு இந்திய தண்டனைச் சட்டத்திலும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் முறையான இடங்களில் சேர்க்கப்பட வேண்டும். சட்டத்தின் பிரிவு 2, 8 இந்திய தண்டனைச் சட்டத்திலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் சேர்க்கப்படவேண்டும். பிரிவு 8(அ) ஆனது இந்திய சாட்சிய சட்டத்தில் முறையான இடத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

- இச்சட்டத்தின்படி வரதட்சணை வாங்குவதும் கொடுப்பதும் தண்டனைக்குரியதாகும். வரதட்சணை கொடுப்பவர் சமூகத்தின் நிர்பந்தத்தினாலும், கட்டாயத்தினாலுமே கொடுக்கிறார். இவரையும் தண்டிப்பது நீதியாகாது. இவரையும் குற்றமிழைத்தவர்களாகச் சட்டத்தில் இணைத்திருப்பதும் சட்டத்தின் தோல்விக்கான காரணங்களின் ஒன்று. எனவே, இச்சட்டத்தின் உட்பிரிவு (3) ஐ சட்டத்திலிருந்து விலக்கு பெறும் பாதிக்கப்பட்ட நபர்களை விவரிக்கும் பிரிவான 7ல் சேர்க்க வேண்டும்.

- வரதட்சணை வாங்குவதற்காகப் பேரம் பேசுவதும், அப்படிப்பட்ட பேரங்களில் பங்கேற்பதும் வரதட்சணை கேட்பது அல்லது வாங்குவதற்கு சமமாகவே பாவிக்கப்பட வேண்டும். இக்குற்றமானது பிடியாணை வேண்டாக் குற்றமாக மாற்றப்படவேண்டும்.

- ஒரு திருமணமான பெண்ணை (மனைவியை) வரதட்சணைக் கேட்டு குரூரமான சித்திரவதை செய்யும் கணவனுக்கோ அல்லது கணவரது உறவினருக்கோ 3

ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை தண்டனை அளிக்கும்படி இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498 ஆனது திருத்தப்படவேண்டும்.

- இச்சட்டத்தின் கீழ் கூறப்படும் குற்றமானது பிடியாணை வேண்டாக் குற்றமாக மாற்றப்படவேண்டும்.
- வரதட்சணை குற்றங்கள் அல்லது வாங்குவது குறித்த தகவல் அளிப்பது பொதுமக்களின் கடமை என்கின்ற ரீதியில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 39 ஆனது திருட்தப்படவேண்டும்.
- இப்போது வரதட்சணைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 3 குறைந்த தண்டனையை அளிப்பதால் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498(அ) ஐ இதில் சேர்த்து அதிகபட்சத் தண்டனையாக 10 ஆண்டுகள் அளிக்கப்பட உள்ளது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 53ன் படி ஆயுள் தண்டனை என்பது சில குறிப்பிட்ட காலத்திற்கு சிறைத்தண்டனை அளிப்பதிலிருந்து மாறுபட்டது என்று கூறுகிறது. அதற்கேற்றாற்போல் பிரிவு 304ஐ இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் வரதட்சணை மரணங்கள் என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், இப்பிரிவின் (2)ல் வரதட்சணை தடுப்புச் சட்டத்துடன் இணைந்து அமல்படுத்தப்படும் போது குற்றமிழைப்பவருக்குத் தண்டனை அளிப்பது ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டுகளிலிருந்து பத்து ஆண்டுகள் வரை என்று திருத்தப்படவேண்டும்.
- பெண்ணுக்கு இழைக்கப்படும் வன்முறையின் தன்மையைப் பொறுத்து 3 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் வரை அதிகபட்ச தண்டனை அளிக்க வேண்டும்.
- இப்போதுள்ள நடைமுறை போலன்றி, இந்து திருமணச் சட்டத்தின் 1955 கீழ் நடைபெறும் திருமணங்கள் அவசியம் பதிவு செய்யப்படுவதற்கேற்ப இச்சட்டமானது திருத்தப்படவேண்டும்.
- மணப்பெண்ணின் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் ஆண்டு வருமானத்தின் 20 விழுக்காட்டைவிட கூடுதலாக எக்காரணம் கொண்டும் திருமணச் செலவுகள் இருக்கக்கூடாது.
- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 498(ஆ)ன் கீழ் வரதட்சணைக் குற்றங்களில் நிரூபிக்கும் கடமையானது குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமட்டும்படி இந்திய சாட்சியச் சட்டம் 1872 திருத்தப்படவேண்டும்.
- திருமணத்தின் போது பெற்றோர்கள், உறவினர்கள் அல்லது நண்பர்களால் கொடுக்கப்படும் அன்பளிப்புகளானது பட்டியலிடப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கு வரி விலக்கு அளிக்கப்படவேண்டும். ஏனெனில் பெற்றோர்களின் சொட்துக்களில் சமபங்கு பெண்களுக்கு அளிக்கப்பட்டாலும் அவர்கள் தாங்கள் அளித்த பெரும் தொகையான வரதட்சணை மற்றும் சீதனத்தைக் காட்டி சொத்தில்

சமபங்கு தர மறுக்கின்றனர். இதிலும் பெண்கள்தான் பாதிக்கப்படுகின்றனர். ஏனெனில், வரதட்சணையையும் சீதனத்தையும் அனுபவிப்பது அவளது கணவனும் அவரது குடும்பத்தாருமே. இதில் அவள் எந்தவிதத்திலும் பயனடைவதில்லை. மேலும், திருமண வாழ்க்கை முறிந்து போனால் இவருவரும் விவாகரத்து செய்து கொண்டால் பெண்ணுக்கு எந்தவித அன்பளிப்பும் திரும்பிக் கொடுக்கப்படுவதில்லை. எனவேதான், கொடுக்கப்படும் அன்பளிப்புகள் பட்டியலிடப்பட்டுப் பதிவு செய்யப்படுவது திரும்பப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கும்.

- வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 8 (ஆ) ன் விதிகள் கடுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். அதற்காக ஆலோசனை வாரியங்களுக்கு பொறுப்பானவர்களாக முழுநேர வரதட்சணை தடுப்பு அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும்.
- வரதட்சணை மரணங்களுக்கு பின்னர் அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மரணமடைந்த பெண்ணின் கணவன் அல்லது அவரது பெற்றோர்களின் சொத்துக்களானது பறிமுதல் செய்யப்படுவதற்கு ஏதுவாக வரதட்சணை தடுப்புச் சட்டத்திலும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் புதிய பிரிவு ஒன்று சேர்க்கப்படவேண்டும்.

## தேசிய மகளிர் ஆணையத்தின் பரிந்துரைகள்

பாலியல் பலாத்கார வழக்குகளின் விசாரணைகளில் மிக முக்கிய பரிந்துரைகளாகக் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

அ) பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பெண்ணின் வாக்குமூலம் அல்லது சாட்சியமானது அவர் கடந்தகால பாலியல் நடத்தையைக் காரணம் காட்டி மறுக்கப்படுகிறது. இந்திய சாட்சியச் சட்டத்தின் பிரிவு 155(அ) ஆனது இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இப்பிரிவே நீக்கப்பட வேண்டும்.

ஆ) பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பெண்ணின் உறவினர்கள் மரணம் அல்லது பலாத்காரம் நடந்த இடத்தை நேரில் சென்று பார்க்க அனுமதிக்க வேண்டும். எந்த ஒரு அதிகாரியும் என்ன காரணத்திற்காகவும் மேற்படி கோரிக்கையை நிராகரிக்கக்கூடாது.

இ) ஒரு பெண் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் எனும் போது அவரைப் பெண் மருத்துவரே பரிசோதிக்க வேண்டும். அப்பெண் மருத்துவர் யார் எனத் தீர்மானிப்பதில் அப்பகுதிப் பெண்கள் அமைப்பு மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் 12 வயதிற்குட்பட்டவராக இருந்தால் அவருக்கு நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனையை அவர் வீட்டிலோ அல்லது அவர் விரும்பும் இடத்திலோ உறவினர் அல்லது நண்பர் முன்னிலையில் பெண் அதிகாரி அல்லது சமூகப் பணியாளர் ஒருவரால் பதிவு செய்யப்பட வேண்டும். இம்முறையை மீறுபவர்களுக்கு ஒரு ஆண்டு காலமாவது சிறைத்தண்டனை விதிக்க வேண்டும். இதே போன்று பாலியல் வன்முறையை மருத்துவ ரீதியாக பதிவு செய்யாத பதிவு பெற்ற மருத்துவருக்கும் தண்டனையை அளிக்க வேண்டும்.

பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் உடனடியாக பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டவர் பரிசோதனை செய்யப்பட வேண்டும். அவருடைய அறிக்கையில் அவர் வந்தடைந்த முடிவுகளுக்கு தெளிவான காரணமும் பாதிக்கப்பட்டவரின் முகவரியும் அவரைக் கொண்டு வந்தவரின் முகவரியும் எழுதப்படவேண்டும். இப்பரிசோதனையை ரகசியமாக *(In camera)* மேற்கொள்ள வேண்டும்.

பெண்களைக் கேலி செய்வதை தடை செய்யும் சட்டம், பணியிடங்களில் பாலியல் தொந்தரவுக் குறித்து விசாகா நீதிமன்ற வழிகாட்டுதல்கள், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் போன்ற சிறப்பு சட்டங்களை பாலின புரிதலோடு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இச்சட்டங்களை நடைமுறைப்படுட்த வேண்டிய அதிகாரிகளுக்கு பாலின சமத்துவம் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கள ஆய்வுகளில் பத்திரிக்கை செய்திகளாக வெளிவந்துள்ள செய்திகள் பாதிக்கப்பட்ட பெண்களின் பாதிப்புகள் அனைத்தையும் பெண்களுடைய தவறுகளால் நடந்தவை போல சித்திரிக்கின்றன. ஆகவே பத்திரிக்கையாளர்கள் பெண்கள் மீதான வன்முறை குறித்த செய்திகள் வெளியிடும் போது பாலின சமத்துவ உணர்வுடன் வெளியிட வேண்டியது அவசியம். பெண்களை இழிவுப்படுத்துகின்ற வகையில் செய்திகளை பிரசுரிக்கும் பத்திரிக்கையாளர்கள் மீது பத்திரிக்கை நெறியின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

...ශ෴...

# கொத்தடிமைத் தொழிலாளர்

## 1. கொத்தடிமைத் தொழிலாளர்

விழுப்புரம், ஏரிக்கரை தெரு, இளங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் முருகவேல்(26/09), த/பெ.சுப்பராயன். இருளர் சமூகத்தைச் சேர்ந்த இவர் சேஷனூர் செங்கல் சூளை உரிமையாளர் மூர்த்தி என்பவரிடம் கடனாக ரூ.10.000/-பெற்றுக்கொண்டு அவருடைய செங்கல் சூளையில் வேலை செய்து கழிப்பதாக கூறியுள்ளார். 2008ம் ஆண்டு ஐப்பசி மாதம் பணத்தைப் பெற்றுக் கொண்டு தை மாதம் வேலைக்கு செல்வதாகக் கூறியுள்ளனர். அதன்படி தை மாதம் முருகவேலும், அவரது மனைவி ராதாவும் மூர்த்தியிடம் சென்று வேலைக் கேட்டுள்ளனர். அதற்கு மூர்த்தி மணல் வரவில்லை என்பதால் பின்னர் வருமாறுக் கூறியுள்ளார். அதனால் முருகவேலின் குடும்பம் ராஜஸ்தானுக்கு  வேலைக்கு சென்றுள்ளது.

இராஜஸ்தானிலிருந்து திரும்பியவுடன் மீண்டும் மூர்த்தியிடம் சென்று வேலைக் கேட்டுள்ளனர்.அதற்கு மூர்த்தி நீ வேலை செய்ய வேண்டாம் வட்டியுடன் ரூ.15.000/- பணத்தைக் கொடு என்று கேட்டுள்ளார். முருகவேலும் கடனை அடைப்பதற்காக பல்வேறு நபர்களிடம் பணி உதவிக் கேட்டுள்ளார். இந்நிலையில் 22.04.09 ஆம் நாள் மூர்த்தி அடியாட்களுடன் சென்று முருகவேலை அடித்தும் தடுக்க சென்ற அருடைய மனைவி ராதாவின் மார்பை பிடித்து தள்ளியும் சித்திரவதை செய்துள்ளார். மேலும் முருகவேலை மூர்த்தியின் வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றி குமாரப்பாளையம் செங்கல் சூளைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பணத்தை திருப்பிக் கொடுக்கும் வரை மூர்த்தியின் செங்கல் சூளையில் கல் அறுக்குமாறு சொல்லி உணவு ஏதும் கொடுக்காமல்  அடைத்து வைத்துள்ளனர். முருகவேலின் மனைவி ராதா 25.04.09 அன்று ரூ.10.000/- பணத்தை மூர்த்தியிடம் திருப்பிக்கொடுத்துள்ளார். அதற்கு மூர்த்தி ரூ.15.000/- கொடுத்தால் தான் முருகவேலை விடுவதாகக் கூறியுள்ளார். அதனால் ராதா வானூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அதன்படி 26.04.09 அன்று ராதாவுடன் வானூர் காவல் நிலைய காவலர்கள் சென்று மூர்த்தியை கைது செய்து முருகவேலை மீட்டுள்ளனர். மூர்த்தி மீது வானூர் காவல்நிலையத்தில் கு.எண்:*326/09 -341, 294(b) 363, 354, 506 (ii) IPC r/w 3(i)(X) SC/ST-Act* ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 2. இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர் செங்கல் சூளையில்அடித்துக் கொலை

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, தாடூர் ஊராட்சியை சேர்ந்த குமார்(45/09), த/பெ. கோவிந்தன். இவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர். குமார் அவருடைய மனைவி சரோஜாவின் தம்பி வெங்கடேசனுக்கு ரூ. 20.000/- கடனாக சுப்பிரமணி என்ற புரோக்கரிடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளார். அந்த பணத்தை செங்கல் சூளைக்கு வேலைக்கு ஆட்களை அழைத்துச் சென்று வேலை செய்து கழிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் பெற்றுக் கொடுத்துள்ளார். வெங்கடேசன் பணத்தை திருப்பிக் கொடுக்காமலும், வேலைக்கு ஆட்களை அழைத்துச் செல்லாமலும் இருந்ததால் அவருடைய பெற்றோரை ஆந்திராவில் உள்ள செங்கல் சூளையில் அடைத்து வைத்துள்ளனர்.

இந்த தகவலை அறிந்த குமாரும் அவருடைய மனைவி சரோஜா மற்றும் மகனுடன் ஆந்திராவிலுள்ள சித்தூருக்கு சென்று அங்கிருந்து முத்தரப்பள்ளி என்ற இடத்திலுள்ள மோகன் ரெட்டி என்பவருடைய செங்கல் சூளைக்கு சென்றுள்ளனர். அங்கு சரோஜாவின் பெற்றோரை அடைத்து வைத்திருந்தனர். அதனால் குமார் வயதானவர்களை விட்டு விடுங்கள். நானும் எனது மனைவியும் வேலை செய்து கடனை அடைத்து விடுகிறோம் என்று கூறியுள்ளார். ஆனால் செங்கல் சூளை உரிமையாளரும், அவரது அடியாட்களும் 04.03.09 ஆம் நாள் முழுவதும் குமாரை கம்பத்தில் கட்டி வைத்து அடித்து சித்திரவதை செய்துள்ளனர். உணவோ, தண்ணீரோ, எதுவுமே வழங்காமல் அடித்து சித்திரவதை செய்து இரவு குமாரையும், அவருடைய மனைவி சரோஜாவையும் ஒரு அறைக்குள் அடைத்து வைத்துள்ளர். இரவில் குமார் வலி தாங்க முடியாமல் துடித்துள்ளார். அவருக்கு தொண்டை வரண்டு தண்ணீர் தாகம் ஏற்பட்டுள்ளது. அந்த அறையிலும் தண்ணீர் இல்லை. சரோஜா வெளியில் சென்று தண்ணீர் கேட்டுள்ளார். அங்கு யாரும் தண்ணீர் கொடுக்காததால் குமார் துடிதுடித்து இறந்துள்ளார். மறுநாள் காலை செங்கல் சூளை புரோக்கர் சரோஜாவை இச்சம்பவத்தை பற்றி வெளியில் சொல்லக்கூடாது என மிரட்டி காரில் பிணத்தை ஏற்றி அனுப்பியுள்ளார்.

இச்சம்பவம் நடந்த 10 நாட்களுக்கு பிறகு தான் சரோஜா திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்துள்ளார். அதனால் ஒரு மாதத்திற்கு பிறகு புதைக்கப்பட்ட குமாரின் உடலை தோண்டியெடுத்து கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. இச்சம்பவம் ஆந்திராவில் நடைபெற்றதால் இவ்வழக்கு ஆந்திரா காவல் கண்காணிப்பாளரிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கு.எண்:326/09 குற்றப்பிரிவுகள் *174, Cr..c-* யின் 3 கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 3. செங்கல் சூளை முதலாளி பணிப் பெண்ணைப் பாலியல் வன்கொடுமை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், ஆனந்தூர் நத்தம் முருகன்கோவில் தெருவைச் சேர்ந்தவர் ஜோதி(28/09). இவர் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர். ஜோதியின் கணவர் சங்கர் செல்லஞ்சேரியிலுள்ள செங்கல் சூளை உரிமையாளர் செல்வராசு என்பவரிடம் ரு.22.000/- முன்பணம் பெற்றுள்ளார். அந்த பணத்தை அடைப்பதற்காக சங்கர், ஜோதி இருவரும் 3 மாதங்களாக செல்வராஜின் செங்கல் சூளையில் கல் அறுத்துள்ளனர். இந்நிலையில் செல்வராஜின் சூளையில் பணி செய்துவரும் காத்தவராயன் குடும்பத்தினருடன் ஜோதி குடும்பத்தினருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. முதலாளி செல்வராசும் காத்தவராயனுக்கு ஆதரவாகச் செயல்பட்டுள்ளார். இதனால் இதுவரை சங்கரும், ஜோதியும் வேலை செய்த பணத்தை கழித்துவிட்டு மீதிப்பணம் ரூ.11.500/-ஐ கொடுத்துவிட்டு வேலையை விட்டு செல்லுமாறு செல்வராசு மிரட்டியுள்ளார். ஆகவே அருகாமையிலுள்ள கரிக்கலாப்பாளையத்தைச் சேர்ந்த பாண்டு என்பவரிடம் ரூ.11.000/- கடனாக பெற்று செல்வராசிடமிருந்து பெற்ற கடனை அடைத்துள்ளனர். பாண்டுவிடம் இருந்து பெற்ற ரூ.11.000/-முன் பணத்திற்காக பாண்டுவின் செங்கல் சூளைக்கு சங்கரும், ஜோதியும் வேலைக்கு சென்றுள்ளனர்.

இச்செயலால் ஆத்திரமடைந்த செல்வராசு, 06.06.09 அன்று சங்கர் ஊரில் இல்லாத நேரத்தில் அவரது பணியாளர்களான தேவா, காத்தவராயன் உள்ளிட்ட கும்பலுடன் பாண்டுவின் செங்கல் சூளைக்கு சென்றுள்ளார். 06.06.09 அன்று இரவு சுமார் 7 மணியளவில் மூவரும் ஜோதியை அவருடைய சூளைக்குள் இழுத்துச் சென்று மாறி மாறி மிகக் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். மேலும் தடியால் ஜோதியின் பிறப்புறப்பில் கடுமையாக அடித்துள்ளனர். அதனால் அதிக இரத்தம் வழிந்து ஜோதி மயக்கமாகியுள்ளார். மறுநாள் அதிகாலை சுமார் 2 மணியளவில் சங்கர் வீடு திரும்பிபோது ஜோதி நிர்வாணமாக கொடூரமான நிலையில் மயங்கி இருப்பதைக் கண்டு உடனடியாக தண்ணீர் தெளித்து அரசுப் பேருந்தில் 07.06.09 காலை 8 மணிக்கு மேல் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார். ஜோதிக்கு தொடர்ந்து பிறப்பிறுப்பில் இருந்து இரத்தம் வழிந்துக் கொண்டிருந்ததால் கடலூர் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் கொண்டு சென்றனர். அங்கு ஜோதி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார். அதன்பின்பு 09.06.09 ஆம் தேதியன்று இரவு சுமார் 10 மணியளவில் இரண்டு பெண் காவலர்கள் சென்று, விசாரித்து அரை மயக்க நிலையில் இருந்த ஜோதியிடம் கையெழுத்துப் பெற்றுள்ளனர். 14.06.09 ஆம் தேதியன்று தான் ஜோதிக்கு பேசும் அளவிற்கு நினைவு திரும்பியுள்ளது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் மீத காவல்துறையினர் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஜோதி சிகிச்சைப் பெற்ற மருத்துவமனை செவிலியர் ஜோதியின் பிறப்புறுப்பில் உள்ள காயங்கள் தடியால் அடிப்பதாலோ (அ) கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்வதாலோ ஏற்படக் கூடிய காயம் என்று கூறியுள்ளார். ஆனால்

புதுப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மதிவாணன் இது பொய் வழக்கு என்றும் கணவன் மனைவி சண்டை தான் என்றும் வழக்கை திசைதிருப்பி குற்றம் சாட்டப்பட்ட செல்வராசு மற்றும் அவரது பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க மறுத்துள்ளார். ஆகவே மக்கள் கண்காணிப்பகம் சார்பில் மாவட்ட ஆட்சியர், ஆணையர்கள் ஆகியோருக்கு பதிவுத் தபாலில் புகார் அனுப்பப்பட்டுள்ளது.

## 4. செங்கல் சூளையில் வேலை செய்தவரை கடத்திச் சென்று சித்திரவதை

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி, கரைக்குளம் செந்தமிழ் நகர் பகுதியில் வசிப்பவர் மார்த்தாண்டன். இவர் சரஸ்வதி நகரைச் சேர்ந்த செங்கல் சூளை முதலாளி முருகேசன் என்பவரிடம் வேலை செய்துள்ளார். மார்த்தாண்டன், முருகேசனிடம் வாங்கிய பணத்திற்கு மார்த்தாண்டன் மனைவி ராஜம்மாள், மார்த்தாண்டன் ஆகிய இருவரும் வேலை செய்துள்ளனர். இருவரும் சுமார் 1லட்சத்து 50 ஆயிரத்திற்கு மேல் செங்கல் அறுத்துள்ளனர். ஆனால் முருகேசன் கணக்கை சரியாக வைக்காமல் இவர்களுக்கு சேர வேண்டிய பணத்தை வரவு வைக்காமல் ஏமாற்றியுள்ளார். இதை எதிர்த்துக் கேட்டதால் 18.02.09 அன்று இரவு சமார் 9 மணியளவில் மார்த்தாண்டனை முருகேசன் கடத்திச் சென்று சித்திரவதை செய்துள்ளார். மக்கள் கண்காணிப்பகத்தின் மண்டல மனித உரிமை ஒருங்கிணைப்பாளர் திரு. ஆனந்தகுமார் செங்கல் அறுவைத் தொழிலாளர்கள் சங்கத் தலைவர். நாகராஜனை சந்தித்தும், மார்த்தாண்டனின் மனைவி ராஜம்மாள் மூலம் இளையான்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் மார்த்தாண்டனை மீட்டனர்.

## 5. பட்டினிப்போட்டு வேலை வாங்கிய கொடூரம்

நாமக்கல் மாவட்டம், திருசெங்கோடு, வையப்பமலை மரப்பாரை கிராமத்தைச் சேர்ந்த ராஜா, த/பெ. நட்ராஜ். இவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆனந்தன் என்பவர் மூலம் ரூ.30, 000/- முன்பணம் பெற்று கரூர்-கோயமுத்தூர் சாலையில் உள்ள சக்திமுருகன் ஜல்லி கிரஷர் ஆலையில் வேலை செய்துள்ளனர். அந்த ஆலையின் முதலாளி குமார் என்பவர் கடன் தொகை உள்ளது எனவும் அதை கழிக்கும் வரை வேலை செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தியுள்ளார். ராஜா அவருடைய மனைவி, குழந்தைகள் ராஜாவின் அக்கா பழனியம்மாள், அவருடைய கணவர் முருகன் ஆகிய அனைவரும் கொத்தடிமையாக அங்கே வேலை செய்துள்ளனர்.சரியான உணவு, குடிநீர் எதுவுமே தராமல் காலை 5.30 மணி முதல் இரவு 8 மணி வரை வேலை செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளார்கள். ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 3லோடு ஜல்லி கற்களை உடைத்து கடுமையாக 5 மாதங்களுக்கு மேல் வேலை செய்துள்ளனர். இருப்பினும் 5 மாதங்களாகியும் இன்னும் ரூ. 30,000/- கடனாக உள்ளது என்று ஏமாற்றிக் கொண்டும், அடியாட்களை வைத்து மிரட்டியும் வேலை செய்ய வைத்துள்ளனர். இது குறித்து திருச்செங்கோடு கோட்டாட்சியர் அவர்களுக்கும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் 22.05.09-ல் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

## 6. கொத்தடிமைத் தொழிலாளி சாவு

திருவண்ணாமலை மாவட்டம், மல்லவாடி கிராமத்தைச் சேர்ந்த ராமராஜன்(26/09), திருவள்ளூர் புன்னப்பாக்கம் கிராமத்தில் செங்கல் சூளை வைத்துள்ள ராமதாஸ் என்பவரிடம் வேலை செய்துள்ளார். ராம்தாஸ் நாயுடு சாதியைச் சேர்ந்தவர், பூந்தமல்லி பகுதியில் வசிப்பவர், புன்னப்பாக்கம் பஞ்சாயத்து அனுமதியின்றி அங்கு செங்கல் சூளை நடத்தி வந்துள்ளார். முறையாக வரி எதுவும் இதுவரை கட்டவில்லை, மேலும் அவருடைய செங்கல் சூளையில் வெளியூர் ஆட்கள்தான் தங்கி வேலை செய்துவருகின்றனர். இச்சூழலில் 18.04.09 அன்று ராமராஜன் காக்காய் வலிப்பு வந்து தண்ணீரில் விழுந்து இறந்ததாக தகவல் பரவியுள்ளது. ஆனால் தண்ணீர்க் குட்டை அதில் 1 அடி பள்ளம் உள்ள சிறிய குட்டை, பகல் 12 மணியளவில் ராமராஜன் விழுந்து இறந்ததாக கூறப்பட்டது. ஆனால் அந்த செங்கல் சூளையில் சுமார் 7 குடும்பங்கள் அங்கே இருந்துள்ளார்கள். ராமராஜன் இறந்த தகவலை செங்கல்சூளை முதலாளி, ஊர்,தலைவர், ஊர் தலையாரி, கிராம நிர்வாக அதிகாரி ஆகிய யாரிடமும் சொல்லாமல் அவசர, அவசரமாக ஆம்புலன்ஸில் ஏற்றி ஊருக்கு அனுப்பியதும், ராமராஜன் உடலிலும், முகத்திலும் காயங்கள் இருப்பதும் அவருடைய இறப்பைக் குறித்து ஊர் மக்களிடம் சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

## 7. வெற்றுத்தாளில் கையொப்பம் பெற்று கொத்தடிமையாக வேலை செய்ய நிர்ப்பந்தம்

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பண்ணைவாடி மேல் தெரு கிராமத்தைச் சேர்ந்த 5 குடும்பங்களை சார்ந்தவர்கள் 1. மினியப்பன், 2. முத்துச்சாமி, 3. முத்து, 4. நாகராஜ், 5. சுப்பிரமணி ஆகியோர் போயர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சேலம் மாவட்டம், பாறைக்கல்லூர், பகுதியைச் சேர்ந்த கவுண்டர் சாதியினரான சாமியப்பன் என்பவரிடம் 2008-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்படி 5 குடும்பத்தினரும் ரூ.80,000/- முன்பணம் பெற்று பெங்களூரில் உள்ள சாதஅள்ளி, ரங்கண்ணா பாறை உரிமையாளர் பசுவராஜ் என்பவரிடம் கல் உடைக்கும் வேலைக்குச் சென்றுள்ளனர். அங்கு இந்த 5 குடும்பத்தினரும் குடிசை வீட்டில் தங்கிக் கொண்டு தினமும் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் வேலை செய்யும் இடத்தில் உணவுக்கு கூடவழியின்றியும், பாதுகாப்பு இன்றியும் இருந்துள்ளனர். உடல்நிலை சரியில்லையென்றால் கூட மருத்துவம் செய்து கொள்ள பணம் இருக்காது. மிகவும் கஷ்டமான சூழலில் சொந்த ஊருக்கு திரும்பி சென்று அங்கு மருத்துவம் பார்த்துள்ளனர். அவர்கள் ஊருக்கு சென்ற ஒரு வாரத்தில் மேஸ்திரி சாமியப்பன் ஏன் வந்துவிட்டீர்கள் எனக் கேட்டுள்ளார். இவர்கள் தீபாவளி பண்டிகை முடிந்ததும் திரும்பி சென்றுவிடுகிறோம் என்று கூறியுள்ளனர். இந்நிலையில் மேஸ்திரி சாமியப்பன் இன்சூரன்ஸ் போடுவதாக சொல்லி ஏதோ தாளில் கைரேகை வாங்கியுள்ளார். மேற்படி 5 குடும்பத்தினரும் திரும்பிச் செல்லாததால் மேஸ்திரி அடியாட்களுடன் சென்று இவர்கள் ரூ 4 லட்சம் பணம் வாங்கியதாகவும், அதற்கு பாண்டு பேப்பர் அவரிடம் உள்ளதாகவும், அதனால் கண்டிப்பாக வேலை செய்ய வேண்டும் என்றும் மிரட்டியுள்ளனர்.

உடனடியாக 29.11.08-ம் ஆண்டு கொளத்தூர் காவல் நிலையத்தில் மினியப்பன் என்பவர் புகார் கொடுத்துள்ளார்.அதற்கு காவல்துறையினர் மேஸ்திரியையும், மினியப்பனையும் அழைத்து கைரேகை போடச் சொல்லியும், அவரை கைழெுத்துப் போடச் சொல்லியும், முறையான நடவடிக்கை எடுக்காமல் திருப்பி அனுப்பியுள்ளார். அதன்பின்பு 28.01.09 கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் மேஸ்திரி மேற்படி 5 குடும்பத்தார் பணத்தை வாங்கிக் கொண்டு திரும்ப தராமல் ஏமாற்றுவதாக அவர்கள் மீது புகார் கொடுத்து மிரட்டியுள்ளார். அதன் பின்பு மக்கள் கண்காணிப்பக வழக்கறிஞர் அசோகன் தலையீட்டால் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளிக்கப்பட்டு அவர் வருவாய் கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

## 8. சாதிப்பெயரைச் சொல்லி இழிவுப்படுத்திச் சித்திரவதை

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, பகுதியைச் சேர்ந்த ஜெயபால்(23/09), த/பெ. மாணிக்கம், அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். கடந்த 8 வருடங்களாக மொடக்குறிச்சி மெயின் ரோட்டிலுள்ள லெட்சுமி இன்ஜினியரிங் வெல்டிங் ஓர்க்ஷாப்பில் வேலை செய்து வந்துள்ளார். ஜெயபால் ஒர்க்ஷாப் உரிமையாளர் கோவிந்தராஜ் மற்றும் அவரது தம்பி ரமேஷ் ஆகியோரிடம் அவரது தேவைகளுக்காக சிறிது சிறிதாக ரூ.20,000/வரை பணம் வாங்கியுள்ளார். இதனால் வேறு எங்கும் வேலைக்கு செல்லாமல் அந்த ஓர்க்ஷாப்பிலேயே பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில் 17.08.09 அன்று ஜெயபாலுக்கு உடல்நிலை சரியில்லாததால் ஓர்க்ஷாப்பிற்குச் செல்லாமல் வீட்டில் படுத்திருந்தார். அப்போது ஓர்க்ஷாப் உரிமையாளர் கோவிந்தராஜ் ஜெயபாலின் வீட்டிற்கு சென்று ஒழுங்காக வேலைக்கு வரமுடியாதா? என்று சொல்லி அவரை அடித்து இழுத்துச் சென்றுள்ளார். அதன்பின்பு ஜெயபாலை ஓர்க்ஷாப்பில் வைத்து மற்ற நபர்கள் முன்னிலையில் சாதியைச் சொல்லி இழிவாக பேசி கோவிந்தராஜையும், அவரது தம்பி ஜெயபாலையும் அடித்துள்ளனர். வெற்றுப் பத்திரத்தில், ஏற்கனவே ஜெயபால் கையெழுத்துப் போட்ட பத்திரத்தை எடுத்து வைத்துக் கொண்டு எங்களை மீறி நீ எங்கும் செல்லமுடியாது. இங்கு தான் வேலை செய்ய வேண்டும் என மிரட்டியுள்ளனர்.அதனால் *BSP* கட்சி மாவட்ட தலைவர் தேவேந்திரன் என்பவரது உதவியோடு 25.08.09 அன்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு புகார் கொடுத்துள்ளார். இது வரை பாதிப்பு ஏற்படுத்திய கோவிந்தராஜ் மற்றும் ரமேஷ் மீது காவல்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## பொதுவாகக் கண்டறிந்தவைகள் :

- அதிகமான செங்கல் சூளைகள் கொத்தடிமைக் கூடாரங்களாக உள்ளன. கடனாக முன் பணம் கொடுத்து குடும்பத்துடன் கொத்தடிமைகளாக வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு கொத்தடிமை தொழிலில் அதிகமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்கள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான்.
- செங்கல் சூளையில் கொத்தடிமைகளாக வேலை செய்யும் பெண்களை செங்கல் சூளை முதலாளிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துகின்ற சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.
- கிரஷர் ஆலையில் பட்டினிப் போட்டு அதிகமான வேலை வாங்கி சித்திரவதை செய்துள்ளார்கள்.
- வெற்றுத் தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டு கொத்தடிமைகளாக வேலை செய்யவும் நிர்பந்தப்படுத்தப்படுகிறார்கள்.

## பொதுவான பரிந்துரைகள்:

- கொத்தடிமை தொழிலாளர் மீட்புச் சட்டத்தின் படி செங்கல் சூளை முதலாளிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
- கொத்தடிமைத் தொழிலில் பெருவாரியாக ஈடுபட்டுள்ளவர்கள் தலித்துகள் மற்றும் பழங்குடியினர் என்பதால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையில் உள்ளவர்களை பட்டியலிட்டு அவர்களுக்கான வேலை வாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- பன்னாட்டுக் கம்பெனிகளின் ஊடுருவலால் விவசாயம் மற்றும் அது சார்ந்த தொழில்களில் நலிவு ஏற்பட்டிருக்கின்ற பகுதிகளில் உள்ள தலித்துகள் மற்றும் பழங்குடியினருக்கு மாற்று வேலை வாய்ப்புகளுக்கான பயிற்சிகள் அளித்து வேலை வாய்ப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும்.
- கந்து வட்டி கொடுமைகளினால் கொத்தடிமை தொழிலுக்கு தள்ளப்படுகின்ற நிலை மாற வாழ்வாதாரத்துக்கான கடனுதவிகளை எந்த வித நெருக்கடிகளும் இல்லாமல் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# தலித் மீதான வன்முறை

## 1. தலித்துகள் மீது பொய் வழக்கு

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள கீழக்கொடுமலூர், மேலக்கொடுமலூர் கிராமங்கள் தலித்துக்கள் அதிகமான எண்ணிக்கையில் வாழக்கூடியப் பகுதிகளாகும். ஆண்டுதோறும் பசும்பொன்னில் நடைபெறும் தேவரின் குருபூசை நிகழ்வின்போது அதனைச் சுற்றியுள்ள தலித் கிராமங்கள் பதட்டத்துடனே காணப்படும். 30.10.2009 அன்று தேவரின் குருபூசைக்கு சென்று திரும்பிய தேவர் சாதியினர் அவர்களுடைய வழித் தடத்தை விட்டு இந்த கிராமங்களுக்கு வந்த போது தகராறு ஏற்பட்டது. ஏனெனில் இந்த பகுதி 10 ஆண்டுகளுக்கு முன்பே சாமி ஊர்வலமோ அல்லது சாதி தொடர்பான ஊர்வலமோ செல்லக்கூடாது என்று தடை விதிக்கப்பட்ட பகுதியாகும்.

இந்த பதட்டமான சூழ்நிலையைப் பயன்படுத்தி அபிராமம் காவல் ஆய்வாளர் பாபா பகுருதீன் தலைமையில் வந்த காவலர்கள் தேடுதல் எனும் பெயரில் கீழகொடுமலூர், மேலக்கொடுமலூர் கிராமத்தில் நுழைந்து பெண்களை தகாத வார்த்தைகளால் இழிவாகப் பேசி தாக்குதல் தொடுத்தனர். எக் குற்றமும் செய்யாத 36 தலித்துகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தை விட்டு வேறு வழியில் நுழைந்து தலித் பகுதியினரின் வாழ்விடத்தில் தாக்குதலை தொடுக்க திட்டமிட்ட தேவர் சமூகத்தினர் மீது காவல்துறை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அவர்களை தப்பிக்கவிட்டது.

## 2. மணல் அள்ளுவதைத் தடுத்த தலித்துகளுக்கு அரிவாள் வெட்டு

கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் அருகிலுள்ள சந்தேகவுண்டம்பாளையத்தில் தலித் சமூகத்தினரும், கொங்கு வேளாள கவுண்டர்களும் வாழ்ந்து வருகின்றனர். 15.03.2009 அன்று கொங்கு வேளாளக் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த சாமிநாதனும் அவரது மகன் கார்த்தீபனும் நொய்யல் ஆற்றிலிருந்து மணலை டிராக்டரில் அள்ளும்போது, மழை பெய்தால் அருந்ததியர் தெருவுக்குள் தண்ணீர் புகுந்து விடும் என்று அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த குமார் (24) என்பவரும், பகவதி (47) என்பவரும் தடுத்து வண்டி நிறுத்தக் கூறிய போது சக்கிலி

தாயோலிங்கலா எதுக்குடா வண்டியை குறுக்காட்றீங்க உங்க வேலையை பார்த்துகிட்டு போங்கடா சக்கிலிய நாய்ங்களா என்று டிராக்டரை எடுத்துக் கொண்டு வேகமாக செல்லும் போது குமாரும், பகவதியும் விடாமல் துரத்த, சாமிநாதன் அரிவாளால் பகவதியின் வலது முழங்காலில் வெட்டினார். வலி தாங்காமல் ஓடிய போது முதுகில் எறிந்த அரிவாள் வலது தோளில் வெட்டிது. குமாரை வெட்டிய போது கைகளைத் தூக்கியதால் சுண்டு விரலில் வெட்டுப்பட்டது.

ஆதித்தமிழர் பேரவையினரால் தான் இப்பிரச்சனை ஏற்பட்டது என்று கோபமடைந்த கொங்கு வேளாள கவுண்டர்கள் ஆதித்தமிழர் பேரவையின் பெயர்ப் பலகையை உடைத்து சாலை மறியலில் ஈடுபட்டனர். இவையெல்லாம் நடந்தது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முத்துராசு மற்றும் உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் முன்னிலையில் தான். எட்டு நாட்களுக்கு பிறகு 23.03.2009 அன்று விசாரணை செய்த வருவாய் கோட்டாட்சியர் பாலசந்திரன் யாராவது மணல் அள்ளினால் எங்களிடம் தான் கூற வேண்டும். நீங்களே சட்டத்தை கையில் எடுக்கக்கூடாது என்று ஆலோசனையை மட்டும் கூறினார்.

பகவதி கொடுத்த புகாரின் அடிப்படையில் *Cr. No. 25/09, 324, 323, 506 (ii) 3 (1) (x)* தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் சாமிநாதன் மீதும் அவர் மகன் ஜோதி மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பாலு கவுண்டர் கொடுத்த புகாரின் அடிப்படையில் *Cr.No. 27/09, 147, 342, 323* ஆகிய பிரிவுகளில் பகவதி, குமார், மோகன்ராஜ் உட்பட 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. தலித்துகள் மீது பொய் வழக்கை பதிவு செய்த காவல்துறை, தாக்குதல் தொடுத்த சாமிநாதனையும் அவரது மகன் கார்த்தீபன் உள்ளிட்ட குற்றமிழைத்தோரையும் கைது செய்யவில்லை.

## 3. தலித் குடும்பத்தை விரட்டிய சாதிவெறி

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்காவில் உள்ளது புதுபூலாமேடு. இங்கு வன்னியர்கள் அதிகமான எண்ணிக்கையிலும் தலித்துகள் குறைவான எண்ணிக்கையிலும் வாழ்ந்து வருகின்றனர். இரட்டை டம்ளர் முறை, ஊர்வலங்களுக்குத் தடை எனும் தீண்டாமை முறையாலும் அடிமை வேலைகளுக்கு தலித்துகளை கட்டாயப்படுத்தியதாலும் பல்வேறு தலித் குடும்பங்கள் 15 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வூரை விட்டு வெளியேறியுள்ளனர். 06.11.2008 அன்று ரவிசங்கர் (25), மற்றும் ஐய்யன் (25) எனும் வன்னிய சாதியைச் சேர்ந்த இருவர் தலித் சமூகத்தை சேர்ந்த முத்தையன் என்பவரது கட்டிலில் அமர்ந்து கொண்டு கட்டிலை தரமறுத்தார்கள். இதனை தலித் சமூகத்தைச் சேர்ந்த செல்வமணி கேட்டபோது “ஆளாளுக்குப் பஞ்சாயத்து பண்றீங்களா” என்று கெட்டவார்த்தைகளால் திட்டி, தடியால் செல்வமணியின் மண்டையை உடைத்தார் ரவிசங்கர். வீட்டிற்கு ரத்தத்தோடு சென்ற செல்வமணியை வீடு தேடி வந்து மீண்டும் ரவிசங்கர் அடித்தார். 07.11.2008 அன்று சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று சிதம்பரம் காவல் நிலையத்தில் புகார் செய்தார்.

புகார் செய்ததால் ஊருக்குள் நுழைவதற்கு தலித்துகளுக்கு வன்னியர்களால் தடைவிதிக்கப்பட்டது. இந்த தடையை மீறினால் குடும்பத்தோடு தீ வைக்கப்படும் என்ற

எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. 03.12.2009 ஊருக்குள் வந்த செல்வமணியின் மனைவி சாந்தியை ரவிசங்கர் பாலியல் வல்லுறவு செய்ய முயன்றுள்ளார். அவரிடமிருந்து தப்பித்த சாந்திக்கும் அவரது கணவர் செல்வமணிக்கும் இதுவரையில் நியாயம் வழங்கப்படவில்லை.

## 4. கேள்வி கேட்ட தலித் பெண் மீது தாக்குதல்

சிவகங்கை மாவட்டம் பூவந்திக்கு அருகில் உள்ளது கணக்கன்குடி. இங்கு வாழ்ந்து வருபவர் ராக்காயி (35). பறையர் சமூகத்தைச் சேர்ந்த இவர் தென்னை, கரும்பு தோட்டங்களில் காவல் பணி செய்து வருகிறார். ராக்காயி, காவல் பணி செய்த தோப்புக்கு எதிரில் வசித்து வந்த கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த செல்வி (27) என்பவர் 23.01.2009 அன்று மாட்டை ராக்காயி பணி செய்த தோப்புக்குள் மேயவிட்டார். இதனை கண்ட ராக்காயி செல்வியைச் சத்தம் போட்டு கேள்வி எழுப்பவும், கோபமுற்ற செல்வி அவரை "பறச்சி" என்று இழிவுபடுத்தி கன்னத்தில் ஓங்கி அறைந்தார். செல்வியின் கணவராகிய முருகனும் ராக்காயின் குடும்பத்துக்குக் கொலை மிரட்டல் விடுக்கவும், ராக்காயியும் அவரது கணவர் ஆறுமுகமும் பூவந்தி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். ஆனால் "உன்னை பறச்சின்னு சொன்னதால என்ன குறஞ்சாப் போயிட்ட" என்று மேல் சாதிக்கு வக்காலத்து வாங்கிய காவல்துறை 28.01.2009 அன்றே வழக்கு பதிவு செய்தாலும் இதுவரையில் பாதிப்பை ஏற்படுத்திய செல்வியையும் அவரது கணவர் முருகனையும் கைது செய்யவில்லை.

## 5. தலித் இளைஞன் சித்திரவதை: துணை போன காவல்துறை

உடுமலைப்பேட்டைக்கு அருகில் மருகலப்பட்டி எனும் கிராமத்தில் வசிப்பவர் முருகேசன் (23). இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 23.03.2009 அன்று முருகேசனும் அவரது 10 வயது மகனும் சைக்கிளில் வரும்போது எதிரில் காரில் வந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ராமசாமியை கையை நீட்டி "லைட்டை டிம்" பண்ணச் சொன்னார். இதனை பொறுக்காத ராமசாமி 'சக்கிலி' என்று சாதியை கூறி இழிவுபடுத்தியும், தகாத வார்த்தைகளால் திட்டியும் முருகேசனை அடித்து காயப்படுத்தினார். 'காரை ஏற்றிக் கொன்றுவிடுவேன்' என்று மிரட்டலையும் விடுத்தார். *FIR*-ஐ கூட பதிவு செய்யாத காவல்துறை முருகேசனின் வாக்குமூலத்திலிருந்து சக்கிலி என்று இழிவுபடுத்திய வார்த்தையையும், ராமசாமியின் கொலை மிரட்டலையும் நீக்கி குற்றவாளிகளுக்கு ஆதரவாகவே காவல்துறை செயல்பட்டது.

## 6. செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சித்திரவதை

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுக்காவிலுள்ள நெடுங்குளத்தில் வசிப்பவர் சின்னமாரியப்பன். இவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் இவரை 29.01.2009 அன்று சங்கரன் கோவில் காவல்துறையினர் திருடாத பொருளை திருடியதாக ஒப்புக்கொள்ளச் செய்ய முதுகு, கை, கால், தொடை, பிட்டம் என எல்லா உடற்பகுதிகளிலும் அடித்து சித்திரவதை செய்து குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்து குற்ற எண் *68/09, 29/09, 379 Crpc* பிரிவுகளில் வழக்கு பதிவு செய்தனர்.

## 7. தலித் அரசு ஊழியரைத் தாக்கிய சாதி வெறியர்கள்

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூருக்கு அருகிலுள்ளது கண்டவராயன்பட்டி கிராமம். இங்கு தபால்துறை ஊழியராக பணியாற்றுபவர் சின்னப்பழனி (45). இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். 08.04.2009 அன்று நடைபெற்ற கிராமக்கூட்டத்தில் மீன்பாசி ஏலம் விடுவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட சின்னப்பழனி ஏலம் எடுப்பவர்கள் முறையான ரசீதை பெறுவது பற்றியும், தவணை முறையில் பணம் செலுத்துவது பற்றியும் பேசுங்கள் என்று குறிப்பிட்டார். அதற்கு 'பறையன் கேட்குற கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது' என்று மகிபாலன்பட்டி யாதவர் இனத்தை சேர்ந்த பொன்னபம்பலம் கூறினார். சாதிய பற்றி பேசுறது நல்லாவா இருக்கு என்று பொன்னம்பலத்திற்கு பதிலளித்த சிவபழனியை ஊராட்சிமன்ற தலைவர் சுப. நாகராஜன், சுப. சிவசாமி, சுப. சின்னையா, சாலைப்பட்டி சி. ராமசாமி உள்ளிட்ட பல மேல்சாதி சமூகத்தினர் தகாத வார்த்தைகளால் திட்டி சராமாரியாக தாக்கினர். அவரிடமிருந்த ரூ. 25,000/–பணம், செல்போன், அவருடைய இரு சக்கர வாகனம் ஆகியவற்றைப் பறித்துக் கொண்டனர். ஊராட்சி மன்ற தலைவர் உள்ளிட்ட குற்றவாளிகள் மீது *FIR 21/2009 - 379, 143, 323, IPC. r/w 3(1) (x) SC/ST Act* சின்னபழனி புகார் செய்த நிலையில், அவர் மீது ஊராட்சி மன்ற தலைவர் சு.ப. நாகராஜன், *FIR/22/2009-294 (b), 506 (1), IPC* பிரிவுகளில் பொய் வழக்கைத் தொடுத்தார். *FIR*–ஐ பதிவு செய்த காவல்துறை இதுவரையில் குற்றமிழைத்தோரைக் கைது செய்யவில்லை.

## 8. அருந்ததியர்கள் மீதான தாக்குதல்: தீண்டாமையின் கோரமுகம்

சிவகாசி தாலுக்கா விசுவநத்தம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குமாரும், லிங்கமும். இவர்கள் அருந்ததியர் சமூகத்தினர். 09.05.2009 அன்று லிங்கத்தினுடைய அலைபேசிக்கு ஒரு அழைப்பு வர அவரும், அவருடன் இருந்த செல்வமும் நாடார் தெருவிலுள்ள ஒரு பிள்ளையார் கோயிலில் அமர்ந்து பேசினார்கள். அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த இருவர் கோயிலில் அமர்ந்ததை கண்ட பழனிச்சாமி நாடார் தெருவழியே சென்ற லிங்கத்தை "ஏன் எங்கள் தெரு வழியாக வந்தாய்?" என்று கேட்க பழனிச்சாமியின் மகன் பால்ராஜ் என்பவர் கன்னத்தில் அறைந்து தகராறு செய்தார். அவர்களுக்கு வாடகைக்கு வீடு கொடுத்த நாடார் சமூகத்தைச் சேர்ந்த ரமேஷை, பழனிச்சாமி உள்ளிட்ட 25 பேர் கொண்ட ஒரு கும்பல் தாக்க தொடங்கியது. பிறகு குமாருடைய வீட்டிற்குச் சென்று பொருட்களை சேதப்படுத்தி குமாரையும் தாக்கினர். அதில் இடதுகை விரல்களில் குமாருக்கு அரிவாளால் வெட்டுப்பட்டது. அவருடைய மனைவி பாண்டியம்மாள் தலைமுடியை பிடித்து அடித்தது அந்த கும்பல். 6 மாத கர்ப்பிணியாக இருந்த குமாரின் தங்கை பாண்டீஸ்வரியையும் வெறி பிடித்த அந்த கும்பல் உதைத்து வீட்டை விட்டு வெளியே தள்ளினர். வீட்டிலிருந்து வெளியேறிய அந்த கும்பல் சக்கிலிய தேவுடியா பசங்களே என்று பொதுவில் அனைவரையும் தகாத வார்த்தைகளால் இழிவுபடுத்தியும், பெண்களின் சேலையைப் பிடித்து இழுத்தும் அவமானப்படுத்தினர். சிவகாசி

காவல் நிலையத்தில் *478/2009, 147, 148, 323, 324, IPC r/w 3 (i) (x) SC/ST* பிரிவுகளில் குமாரின் புகார் பதிவு செய்யப்பட்டாலும் பழனிச்சாமியின் மகளை கையைப் பிடித்து இழுத்ததாக குற்ற எண் *477/2009 U/S 294 (b) 354, 323, 506 (ii) IPC* பிரிவுகளில் பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆட்களையும், பொருட்களையும் தாக்கிய குற்றவாளிகளை காவல்துறை முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கவே இல்லை. அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 9. மேல்சாதியினரின் வெறித்தனம்: விளை நிலங்கள் பாதிப்பு

நாமக்கல் மாவட்டம், மோகனூருக்கு அருகில் உள்ளது குமரிப்பள்ளம். இங்கு அருந்ததியர்களும், கவுண்டர்களும் வாழ்ந்து வருகின்றனர். அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த சரவணன் என்பவர் கவுண்டர்களிடமிருந்து நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வது வழக்கம். கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த சின்னச்சாமி என்பவர் தலித்துகளுக்கு பணத்தை வட்டிக்கு விட்டு அப்படியே நிலங்களை அபகரிப்பவர். குமரிப்பாளையத்தில் வசிக்கும் சுப்ரமணிக்கும், சின்னச்சாமிக்கும் முன் விரோதம் இருந்துள்ளது. இச்சூழலில் தலித் சமூகத்தைச் சேர்ந்த சரவணன் சுப்ரமணியிடமிருந்து நிலத்தை வாங்கியதால் கோபமுற்ற சின்னச்சாமி சரவணனின் நிலத்தில் விளைந்த பொருட்களை அழிப்பது வாழை மரங்களை வெட்டுவது, மோட்டார், பம்புசெட் இணைப்புகள் துண்டிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார். சரவணன் புகார் அளித்தும் காவல்துறை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் சின்னச்சாமிக்கே துணை நின்றது.

## 10. பொது இடத்தில் அருந்ததியர் மீது தாக்குதல்

சத்தியமங்கலம் தாலுக்காவிலுள்ள வெங்கநாயக்கன் பாளைத்தில் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த தர்மன்-சின்னச்சாமி தம்பதியினர் வசித்து வந்தனர். 28.12.2008 அன்று செம்பகபுத்தூரிலிருந்து *TVS* வண்டியில் வந்து கொண்டிருந்த போது, எதிரே *Suzuki* வண்டியில் வந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த கருப்புசாமி, தர்மன் வண்டியின் மீது மோதியதில் இருவரும் கீழே விழுந்தனர். கோபத்துடன் எழுந்த கருப்பசாமி 'சக்கிலி நாயே' என்றும் தகாத வார்த்தைகளைக் கூறியும் தர்மனையும் அவரது மனைவி சின்னமணியையும் அடிக்கத் தொடங்கினார். சேலையையும், ஜாக்கெட்டையும் கிழித்து அவமானப்படுத்தினர். தொலைபேசி மூலம் மேலும் சில நபர்களை வரவழைத்து பொது இடத்திலேயே தர்மனையும் அவரது மனைவியையும் அடித்து துன்புறுத்தினர். காயமுற்ற தர்மனும் சின்னமணியும் சத்தியமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மறுநாள் 29.12.2008 அன்று புளியம்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தனர். ஆனால் காவலர்கள் இச்சம்பவத்தை வெறும் விபத்தாகவே பதிவு செய்து தாக்குதலைப் பற்றியும், சாதியைக் கூறி இழிவுபடுத்தியதையும் இணைக்காமல் குற்றவாளியைத் தப்பிக்க விட்டனர்.

## 11. தலித் மீது பொய் வழக்கு

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவிலுள்ள ஆலம்பட்டியில் வசிப்பவர் லட்சுமிகாந்தன் (24). இவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். மறவர் சமூகப்பிரிவைச் சார்ந்த முத்துரவி என்பவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த செல்வராஜ் என்பவரை குளத்தில் அமுக்கி கொலை செய்தார். இதனை சாத்தூர் காவல்துறை தற்கொலையாக மாற்ற முயற்சித்தமையால் லட்சுமிகாந்தனும் அவரது நண்பர்களும் சுவரொட்டியின் மூலம் 13.04.2009 அன்று உண்மையை அம்பலப்படுத்தினர். இதையறிந்த காவல்துறை மக்களைத் தூண்டுவதாக கூறி லட்சுமிகாந்தனை விசாரிக்க காவல்நிலையம் அழைத்துச் சென்றனர். நீண்ட நேரம் ஆகியும் காவலர்கள் இவரை விசாரிக்காததால் சாலை மறியலில் லட்சுமிகாந்தன் ஈடுபட்டார். இதையே காரணமாகக் கொண்டு குற்ற எண் *345/09*, பிரிவு *505 (i), IPC r/w 4 A 9i ) TN Open places prevention of Distigaint Act 1959* –ன் கீழ் லட்சுமிகாந்தன் கைது செய்யப்பட்டார்.

## 12. வேலைக்கு வராத அருந்ததியர் அடித்துச் சித்திரவதை

ஈரோடு மாவட்டம் *V.* மேட்டுப்பாளையத்தில் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்தி வருபவர் லோகநாதன். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர் சின்னுச்சாமி என்பவரிடம் தறிவேலைக்கு வருவதாக லோகநாதன் ஒப்புக்கொண்டு முன்பணமாக ரூ. 12,500/- ஐ பெற்றுக்கொண்டார். 29.03.2009 அன்று லோகநாதனின் தாயார் இறந்து போனதால் அவரால் தொடர்ந்து பணிக்குச் செல்லமுடியவில்லை. சின்னுச்சாமி கவுண்டர் ஆள் அனுப்பி வேலைக்கு வரச்சொன்னார். ஆனால் ஊர் திருவிழா நடைபெறுவதால் பொங்கல் முடிந்து வருவதாகக் கூறினார். பணம் வாங்கிக் கொண்டு வேலைக்கு வராத லோகநாதனை 02.05.2007 அன்று சின்னுச்சாமி நேரில் சென்று கன்னத்தில் அறைந்தும் சக்கிலி தாயோலி வேலைக்கு வரமுடியாதா என்றும் சாதியை கூறி இழிவுபடுத்தினார். கம்யூனிஸ்ட் கட்சியின் உதவியோடு *323, 506 (1) Ret 3 (i) (x) SC/ST* சட்டப்பிரிவுகளில் வெள்ளோடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் சென்னிமலை விசைத்தறி உற்பத்தியாளர் சங்கம், புரட்சிகர முன்னணி, புரட்சிகர இளைஞர் முன்னணி போன்ற அமைப்பினர் கட்டப்பஞ்சாயத்து செய்து சமாதானம் செய்து வைத்தனர்.

## 13. அருந்ததியர் மாணவன் மீது சித்திரவதை

ராமநாதபுரம் மாவட்டம், பூசேரி ஊராட்சிக்கு உட்பட்டது ஆதாங்கொத்தக்குடி கிராமம். இங்குள்ள பூசேரி அரசு நடுநிலைப்பள்ளியில் 8-ம் வகுப்பு படிப்பவர் திருமுருகன். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 28.01.2009 அன்று திருமுருகனின் வகுப்பாசிரியர் ராமச்சந்திரன் சாலைக்கு எதிர்புறத்தில் உள்ள செங்கலை எடுத்து வருமாறு மாணவர்களிடத்தில் சொன்னார். அதனால் திருமுருகன் செங்கலை எடுத்துக் கொண்டு மாணவர்களோடு சிரித்து பேசியபடி சாலையைக் கடந்து வந்தார். அப்போது அவ்வழியாக

வந்தத் தேவர் சமுதாயத்தைச் சேர்ந்த முனியாண்டி (55), திருமுருகன் தன்னைத்தான் கிண்டல் செய்கிறான் என்று  சக்கிலி பயலே என்று சாதியை கூறி இழிபுபடுத்தியும், சக்கிலியனுக்கு என்ன படிப்பு வேண்டிக்கிடக்கு என்று திட்டியும் உடலிலும், வயிற்றிலும் தாக்கினார். ராமநாதபுரம் அருசு மருத்துவமனையில் 29.01.2009 அன்று சிகிச்சையை எடுத்துக்கொண்டு சிக்கல் காவல் நிலையத்தில் குற்ற எண் *9/09*, பிரிவு *323, 3 (i) SC/ST* சட்டத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதே நேரத்தில் குற்றவாளி முனியாண்டியின் வீட்டை திருமுருகனின் அப்பா அழகரும் அவருடன் 50 பேரும் தாக்கியதாக பொய் வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

## 14. தலித் பெண்ணைத் தாக்கி பாலியல் வல்லுறவுக்கு முயற்சி

கள்ளக்குறிச்சி வட்டம், தச்சூர் கிராமத்தைச் சேர்ந்தவர் காசியம்மாள் (23) இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். 24.09.2009 அன்று ரேஷன் கடையில் பொருட்களை வாங்குவதற்காக காசியம்மாள் சென்றார். அப்போது நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த விருதாம்பாள் (37) என்பவர் வரிசையின் இடையில் நுழைய முயன்றபோது அவரின் கையை பிடித்து தடுத்தார் காசியம்மாள். தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த காசியம்மாளின் கை மேலே பட்டது என்பதற்காக, விருதாம்பாளும் அவருடைய மகள்கள் இந்துமதி மற்றும் கிருஷ்ணவேணியும் தலையிலும், உடலிலும் சரமாரியாக தாக்கினர். பற நாயே என்று சாதியை கூறி இழிவுபடுத்தினர். வலி தாங்காமல் வீட்டிற்கு ஓடிய காசியம்மாளை, விருதாம்பாளின் கணவர் சீனிவாசன் கட்டையால் தாக்கி பொது இடத்திலேயே அவரது சேலையை பிடித்து இழுத்து அவமானப்படுத்தினார். பாலியல் வல்லுறவுக்கு முயற்சித்த போது அவரது பிடியிலிருந்து காசியம்மாள் தப்பிச் சென்றுள்ளார். குற்றமிழைத்த விருதாம்பாள், இந்துமதி, கிருஷ்ணவேணி மற்றும் சீனிவாசன் மீது *294 (b) 323, 354, IPC, SC/ST Act 3 (i) (x), 3 (i) (ix)* பிரிவுகளில் வழக்கு பதியப்பட்டுள்ளது.

## 15. தலித்துகள் மீது பொய் வழக்கு: காவல் ஆய்வாளரின் அராஜகம்

செங்கோட்டை தாலுக்காவில் வல்லம் எனும் கிராமம் உள்ளது. அங்கு நடைபெற்ற மாரியம்மன் கோவில் திருவிழாவில் தியாகி சுந்தரலிங்கனாரின் உருவப்படத்தை பள்ளர் சமூகத்தினர் வைத்திருந்தனர். 20.04.2009 அன்று அங்கு வந்த உதவி ஆய்வாளர் மங்கயர்க்கரசி தியாகி சுந்தரலிங்கனாரின் படத்தை அகற்றச் சொன்னார். அவர் சாதித்தலைவர் அல்ல சுதந்திரப் போராட்டத் தியாகி என்று கூறி எடுக்க மறுத்தனர் அப்பகுதி மக்கள். 21.04.2009 அன்று அரிவாளோடு வந்த காவல் ஆய்வாளர் செந்தில்குமரன் சுந்தரலிங்கனாரின் உருவப்படத்தை வெட்டி கீழே சாய்த்துவிட்டு ‘‘நான் போலீஸ் இல்ல பொறுக்கி’’ என்றும் பள்ளனுக்கு எதுக்குடா சாதித்தலைவன் என்றும் வசனம் பேசி, டிஜிட்டல் பேனர்களைக் கீழே தள்ளினார்.

பேனர்கள் கீழே விழுந்தமையால் அந்த சமயத்தில் அங்கு வந்த பேருந்து நின்று விட்டது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி காவல் ஆய்வாளர் செந்தில் குமரன், பள்ளர் இனமக்கள் சாலைமறியலில் ஈடுபட்டனர் என்றும் அதனால் பேருந்து போக இயலவில்லை எனவும் எழுதி நடத்துனரிடம் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டார். அதனையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு பள்ளர் சமூகத்தினர் 247 பேர் மீது பொய் வழக்கை பதிவு செய்தார். இதனுடைய எதிர் செயற்பாடாக தேர்தலை புறக்கணிப்போம், ரேஷன் அட்டையையும், வாக்காளர் அட்டையையும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறோம் என்று களமிறங்கிய தலித் மக்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர், வருவாய் கோட்டாட்சியர், தாசில்தார் ஆகியோர் சமாதானம் பேசி மக்களை தடுத்தனர். ஆனால் பொய் வழக்கு மட்டும் வாபஸ் பெறப்படவில்லை. வன்முறையில் ஈடுபட்ட காவல் ஆய்வாளர் செந்தில்குமரன் மீது நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

## 16. சமூக செயல்பாட்டாளர் மீது பொய் வழக்கு: கவுன்சிலரின் ரௌடித்தனம்

திருவண்ணாமலை மாவட்டத்தில் மேல்செட்டிப்பட்டு எனும் கிராமம் உள்ளது. இங்கு யாதவர்கள் பெரும் எண்ணிக்கையிலும் தலித்துகள் சிறுபான்மையினராகவும் உள்ளனர். 03.05.2009 அன்று செங்கம் வட்டார பெண்கள் இணைப்புக்குழு டாக்டர் அம்பேத்காரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அப்பகுதியின் பெரும் பணக்காரரும் தி.மு.க. கவுன்சிலருமான, யாதவர் சமூகத்தைச் சேர்ந்த சுப்ரமணி கூட்டத்திற்குள் புகுந்து அங்கிருந்த பெண்களை மிக இழிவாக 'பற தேவுடியாள்களே இங்க ஏண்டி கூட்டம் போடுறீங்க' என்று எல்லோரையும் அடிக்கத் தொடங்கினர். பெண்கள் இணைப்புக்குழுவின் பொறுப்பாளர் சுமதியையும் கன்னத்தில் அறைந்தார். சில பெண்களின் புடவையைக் கிழித்து மானபங்கம் செய்தார். டாக்டர் அம்பேத்கரையும், தொல் திருமாவளவனையும் கெட்ட வார்த்தைகளால் திட்டி இழிவுபடுத்தினார். 'இலவச டிவியும், கேஸ் அடுப்பும்' யார் கொடுத்தா? அம்பேத்கரா கொடுத்தான். நாங்கதான் கொடுத்தோம் என்று கூட்டத்தினரை அடித்து விரட்டினார். சுப்ரமணிக்கு அஞ்சிய மக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினர். காயமடைந்தவர்கள் திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் 03.05.2009 முதல் 07.05.2009 வரை சிகிச்சை பெற்றார்கள்.

காவல் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர், உள்துறை செயலர், மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அளித்தும் எவ்வித விசாரணையும், நடவடிக்கையும் குற்றம் இழைத்த ஆளும்கட்சி கவுன்சிலர் சுப்ரமணி மீது எடுக்கப்படவில்லை. அமைச்சர் வேலுவின் அதிகாரத்தினால் காவல்துறை எந்நடவடிக்கையும் எடுக்காமல் பாதிக்கப்பட்டவர்கள் மீதே *147, 148, 290 (b) 323, 506 (ii) IPC* பிரிவுகளில் பொய் வழக்கு போடப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களின் தரப்பிலிருந்து *147, 294 (b) 323, 341, 354, 506 (i) IPC* மற்றும் *3 (i) (x) SC/ST* சட்டப்பிரிவுகளிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. திருவண்ணாமலை காவல்ஆய்வாளர் நாகராஜ் பெண்கள் இணைப்புக்குழு மீது தொடுக்கப்பட்ட வழக்கு பொய் என்று தெரிந்தே போட்டேன் என்று தன்னுடைய நிலையையும் ஒப்புக்கொண்டார்.

## 17. தலித் மாணவர்கள் மீது பொய் வழக்கு: காவல்துறை சித்திரவதை

மதுரை மாவட்டம், பேரையூருக்கு அருகிலுள்ளது வெங்கடாசலபுரம். இங்கு வசித்துவரும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த பால் கருப்பசாமியும் சுப்புராஜூம் நண்பர்கள். பால் கருப்பசாமியும், சுப்புராஜ் டுட்டோரியல் காலேஜில் 10-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார்கள். பரமசிவம் என்பவர் *T*. கல்லுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 12-ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். இவர்கள் தேர்விற்காக குழு படிப்பில் ஈடுபட்டிருந்தனர். 25.04.2009 அன்று விருதுநகர் க்ரைம் போலீசார் 10 பேர் பல்வேறு திருட்டு வழக்குகளில் ஈடுபட்ட மாணவர் சுப்புராஜின் தந்தை முருகேசனைத் தேடி வந்தனர். அவர் அங்கு இல்லாததினால் மாணவர்கள் மூவரையும் கைது செய்த காவலர்கள் மாணவர்களை கடுமையாகத் தாக்கினர். கால் முட்டி மீது ஏறி நிற்றல், பாதங்களில் அடித்தல், கால்களை எதிர் திசையில் இழுத்தல் என பல்வேறு சித்திரவதைகளை மாணவர்கள் அனுபவித்தனர். காவல் துறையின் கண்மூடித்தனமான இந்த தாக்குதலில் மாணவர் சுப்புராஜின் மண்டை உடைந்தது. எக்குற்றமும் இழைக்காத மாணவர்கள் மீது *TVS-50* திருடியதாகவும், ரூ. 40,000/- மதிப்புள்ள மதுபாட்டில்களை திருடியதாகவும், திருமங்கலம் காவல் நிலையம், விருதுநகர் காவல்நிலையம் என வெவ்வேறு இடங்களில் பொய் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. சிறார்களை சட்ட விரோதக் காவலில் வைக்கக்கூடாது என்ற உச்சநீதிமன்ற விதிமுறையும் மீறப்பட்டு 25.04.2009 முதல் 28.04.2009 வரை காவலில் வைக்கப்பட்டனர்.

## 18. பொய் வழக்கில் இருளர்கள் கைது

விழுப்புரம் மாவட்டம், வளவனூருக்கு அருகில் உள்ளது பக்கமேடு. இங்கு தன் குடும்பத்தோடு வசிப்பவர் சிவா. இவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளி. 31.05.2009 வில்லியனூரில் இருக்கும் தன்னுடைய அக்காவை சந்திக்க சென்று திரும்பி வர பணம் இல்லாததால் வில்லியனூர் பேருந்து நிலையத்தில் இரவு உறங்கிவிட்டார். அங்கு வந்த காவலர்கள் சிவாவின் சாதியையும், தொழிலையும் கேட்டனர். செங்கல் சூளையில் பணி செய்வதாகக் கூறிய அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அடித்து துன்புறுத்தி திருடியதாக ஒப்புக் கொள்ளச் செய்தனர். அடி தாங்க முடியாத அவர் தன்னுடன் பணி செய்யும் சங்கரின் பெயரை குறிப்பிட அவரையும் காவல்துறை இழுத்து வந்து நிர்வாணப்படுத்தி சித்ரவதை செய்து இருவர் மீதும் திருட்டுக் குற்றத்திற்காக பொய் வழக்கு பதிவு செய்தனர்.

## 19. பேருந்தில் இடம் பிடிப்பதற்காகத் தலித்துகள் மீது கடும் தாக்குதல்

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர் பேட்டை தாலுக்காவில் உள்ளது ஆ. குன்னத்தூர் காலனி. இங்கு வன்னியர்களும், பறையர்களும் வசித்து வருகின்றனர். பறையர் சமூகத்தைச் சேர்ந்த ரஞ்சித், சிவா, சீனு, கோவிந்தன் ஆகியோர் திரைப்படம் பார்த்துவிட்டு ஊருக்கு

திரும்புகையில் பேருந்தில் இடம் பிடித்தனர். அப்போது வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ''நீங்கள் பிடித்த இடம் எங்களுக்குரியது'' என்று தகராறு செய்தனர். இருக்கையை விடமாட்டோம் என்று விடாப்பிடியாக ரஞ்சித் கூறியதால் சராமரியாக அவரை தாக்கி காவல்துறையிடம் வன்னியர்கள் ஒப்படைத்தனர். இந்த தகவலை ரஞ்சித்தின் குடும்பத்திடம் கூறவந்த சிவா, சீனு, கோவிந்தன் ஆகியோரை தகராறு நடந்ததை முன்பே அறிந்த வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த கிளியூர் கணேசன், ஐய்யனார், ராயன் ஆகியோர் அவர்களை பேருந்திலிருந்து இறக்கிவிட்டனர். ஆ. குன்னத்தூர் கிராமத்திலிருந்த ரஞ்சித்தின் அண்ணன் பாபுவுக்கு தகராறு பற்றி தகவல் தெரியவர கிளியூர் கணேசனிடம் சண்டை போட்டார். இதனால் கோபமடைந்த கிளியூர் வன்னியர்களும் ஆ. குன்னத்தூர் வன்னியர்களும், பறையர்களை ஆயுதங்களைக் கொண்டு தாக்கத் தொடங்கினர். இதில் ரஞ்சித்தின் வீடு எரிக்கப்பட்டது. அவருடைய தந்தை மந்திரியும் கடுமையாக தாக்கப்பட்டார். வீட்டு பொருட்கள், பணம் சூறையாடப்பட்டது. தாக்குதலை ஏற்படுத்திய வன்னியர்கள் மீது *147, 148, 294, (4) 323, 427, 506 (ii), 436 IPC r/w 3 (1) v SC/ST* சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 20. பணம் தராததால் தலித் ஊராட்சிமன்ற தலைவருக்கு அடி, உதை

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுக்காவில் உள்ளது போடிகாமன்வாடி. இங்கு ஊராட்சி மன்றத் தலைவராக இருப்பவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த சக்திவேல். இவருக்கு உதவியாளராக பணியாற்றுபவர் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த முத்து என்பவர். இவர்கள் இருவரும் சித்தையன்கோட்டையிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இருந்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு சம்பளம் அளிப்பதற்காக ரூ. 1,01,010/- யை எடுத்து வந்து கொண்டிருந்தனர். தேவர் சமூகத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் என்பவர்தான் எப்போதும் சொக்கலிங்கபுரம் கிராமத்தில் பணம் பட்டுவாடா செய்வார். ஆனால் அவர் பணத்தை பலமுறை கையாடல் செய்தமையால் சக்திவேல் அவரிடத்தில் பணத்தை தரவில்லை. இதனால் ஆத்திரமடைந்த சதீஸ்குமாரும், அவரது நண்பர்களான தேவர் சமூகத்தை சேர்ந்த மணிகண்டன், பரமன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் சக்திவேலையும், முத்து ஆகியோரை வழிமறித்து கோம்பை அடிவாரத்திற்கு தூக்கிச் சென்று ''சக்கிலி தாயோலி பணத்தை எங்ககிட்ட தரமுடியாதா'' என்று சாதியைக் கூறி இழிவுபடுத்தி தென்னை மட்டையாலும், செருப்பாலும் அடித்தனர். இதனை வெளியே கூறினால் கொலை செய்வதாகவும் மிரட்டல் விடுத்தனர்.

தன்னுடைய கிராமத்தினரோடு சக்திவேல் செம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தும், காவல் ஆய்வாளர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாததினால் சாலை மறியலில் ஈடுபட்டனர். *323, 506 (ii) 3 (i) (x) SC/ST* சட்டத்தின் குற்ற பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டாலும் குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை.

## 21. சாதி மறுப்புத் திருமணம் செய்த பெண்ணுக்குத் தொடர் சித்திரவதை

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்தில் உள்ளது மாளாந்தூர் கிராமம். இங்கு வசித்து வந்த பறையர் சமூகத்தைச் சேர்ந்த சசிகலாவும், வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரும் 1982-ம் ஆண்டு சாதி மறுப்பு திருமணம் செய்தனர். இதனால் அவர்கள் இருவரையும் ஊரைவிட்டு விலக்கி வைத்தனர். மாமனாரின் ஈமச்சடங்கில் கலந்து கொள்வதற்காக சென்ற சசிகலா ஆறுமுகம் குடும்பத்தினரை அடித்து துன்புறுத்தினர். அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் உள்ள நீர் குழாய்களை உடைத்தனர். 'பறத்தேவுடியா' என்று தகாத வார்த்தைகளாலும் அவருடைய நடத்தையையும் இழிவுபடுத்தினர். 06.03.2008 அன்று சசிகலாவின் வீட்டின் முன் வேலிபோட முயன்ற வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த சீனிவாசன், சேஷாத்திரி உள்ளிட்ட 5 நபர்களை கேள்வி கேட்ட சசிகலாவை, சேஷாத்திரி கன்னத்திலும், மார்பிலும் கடித்து அவரை மானபங்கம் செய்தார். இதனை புகார் கொடுக்கச் சென்ற சசிகலாவை பெரியப்பள்ளம் காவல் உதவி ஆய்வாளர் பரிமளம் சிறையில் அடைத்தார். அவருடைய கணவர் ஆறுமுகத்தின் மீது வீட்டை எரித்ததாக பொய் வழக்கு போடப்பட்டுள்ளது.

## 22. தலித்துகள் கோயிலில் நுழையத்தடை

கோபிசெட்டிப்பாளையம் வட்டம் நம்பியூர் பேரூராட்சிக்கு உட்பட்டது புதுஆரிப்பாளையம். இங்கு பழமையான அய்யன் கோவில் உள்ளது. இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கினாலும் அதனை நாடார்களே நிர்வாகம் செய்து வருகின்றனர். இதனால் நீண்டகாலமாகவே தலித்துகள் கோயிலில் நுழைந்து வழிபட அனுமதி மறுக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் தலித்துகள் கோயிலுக்குள் நுழைந்து வழிபட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நம்பியூர் ஒன்றியத்தலைவர் ரங்கசாமியும், கோவை குமணன் மற்றும் தங்கவேல் ஆகியோரும் மக்களை ஒன்று திரட்டி 31.07.2009 அன்று முயன்றபோது வட்டாட்சியரும், வருவாய் கோட்டாட்சியரும் அமைதிப் பேச்சு வார்த்தை என்ற முறையில் தலித்துகளைக் கட்டுப்படுத்த முயன்றனர். மேலும் நாடார் சமூகத்தினர் தலித்துகளை கோயிலுக்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என்று விடாப்பிடியாக மறுத்ததோடு நாடார்களோடு, கவுண்டர்கள், ரெட்டியார்கள், முதலியார் என ஆதிக்க சாதிகள் அனைவரும் ஒன்றாக தலித்துகளை தாக்கத் தொடங்கினர். இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சி ரங்கசாமியின் மீதும் கோவை குமணன் மீதும் கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்களுடைய வாகனங்கள் மீது பெட்ரோல் குண்டுகளும், கண்ணாடி புட்டிகளும் வீசப்பட்டன. பிறகு காயம்பட்டவர்கள் கோபி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். குற்றவாளிகள் மீது *147, 148, 355, 324, 506 (ii), 3(i) (x) 40 F, TPPT* தலித் வன்கொடுமை சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. நீதிமன்ற ஆணையை மீறியதாக ரங்கசாமி மற்றும் தங்கவேல் மீதும் *S.L.A ACT,TPPT Act, 143, 188, 353* மற்றும் *7 (i)* பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 23. கள்ளத் தொடர்பைப் பார்த்த தலித்தை சித்திரவதை செய்து கடத்தல்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ளது கீழக்கரை. இங்கு பறையர் சமூகத்தைச் சேர்ந்த ராமமூர்த்தி என்பவர் கூலி வேலை செய்து தன் குடும்பத்தை நடத்தி வருகிறார். 25.12.2008 அன்று வேலைக்கு சென்று ராமமூர்த்தி வீடு திரும்புகையில் அதே ஊரைச் சேர்ந்த முத்தரையர் சமூகத்தைச் சேர்ந்த முருகானந்தம் மனைவி அமுதா என்பவர் ஐயப்பன் என்பவரோடு கள்ளத் தொடர்பு கொண்டு தைலத் தோப்பில் இருந்ததைப் பார்க்க நேரிட்டது. இதனை மறைக்க முயற்சித்த அமுதாவால் அதனை மறைக்க முடியாததால் ராமமூர்த்தி தன் கையைப் பிடித்து இழுத்ததாக ஊர் மக்களிடம் கூறினார். பஞ்சாயத்தைக் கூட்டிய முத்தரையர் சமூகத்தினர் அவரை ஊரைவிட்டு விரட்ட திட்டமிட்டு அவரை அடித்துச் சித்திரவதை செய்தனர். அவருடைய கர்ப்பிணி மனைவியை வயிற்றில் எட்டி உதைத்தும், தங்கையை சேலை அவிழ்த்தும் அவமானப்படுத்தினர். ராமமூர்த்தியிடம் பேசுகிறோம் என்று கூறி அவரை கடத்திச் சென்றனர். பறபசங்களுக்கு எதுக்குடா பீரோ, கட்டில் எல்லாம் என்று வீட்டில் உள்ள பொருட்களை நாசம் செய்தனர். முத்தரையர் சமூகத்தைச் சேர்ந்த தங்கராசு உள்ளிட்ட பலர் மீது *147, 452, 294 (b), 323, 427, 379 IPC* மற்றும் *3 (i) (x)* தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டாலும் முத்துப்பேட்டை காவல் ஆய்வாளர் சின்னசாமி குற்றவாளிகளின் சார்பாகவே செயற்பட்டார்.

## 24. தலித் இளைஞர்கள் மீது வனச்சரகர்கள் தாக்குதல்

நெல்லை மாவட்டம், தேவிப்பட்டணத்திற்கு அருகில் உள்ளது நடுவூர். இங்கு ராஜகோபால் என்பவர் ஓட்டுநராக பணியாற்றுகிறார். இவருடைய நண்பர்கள் முனீஸ்வரன் மற்றும் முருகன். இவர்கள் அனைவரும் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 23.01.2009 வழிவனியல் ஆற்றுக்கு அருகே உள்ள சிங்காரவேல் தேவரின் தோட்டத்திலிருந்து மாட்டுத்தீவனம் ஏற்றுவதற்காக அரிவாள்களுடன் சென்றனர். அங்கு வீட்டில் சிங்காரவேலர் இல்லாததினால் அருகே உள்ள ஆற்றுக்கு குளிக்கச் சென்றனர். அங்கும் நீர் இல்லாததால் வனச்சரகத்தை ஒட்டியுள்ள இடத்திற்குச் சென்றனர். அங்கு நீர் இல்லாததால் திரும்பிக் கொண்டிருந்த போது சிவஞானம், தானியேல், சந்திரசேகர் என்ற 3 வனச்சரக அலுவலர்கள் எதிரில் வந்தனர். அப்போது இளைஞர்களின் சாதியையும், ஊரையும் கேட்ட அலுவலர் சிவஞானம், அவர்கள் பள்ளர் எனத் தெரிந்ததும், சாதியைச் சொல்லி இழிவாகத் திட்டியும், அடித்தும் சித்திரவதை செய்து கைகளை பின்புறமாகக் கட்டி கைது செய்து மரம் வெட்டிக் கடத்தியதாக பொய் வழக்கை பதிவு செய்தார். தகவலறிந்த ராஜகோபாலின் அண்ணன் கொடுத்த புகாரின் பேரில் சாதிய நோக்குடன் தலித் இளைஞர்களை அடித்து துன்புறுத்திய அலுவலர்கள் மீது தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 25. தலித் பெண் பாலியல் பலாத்காரம்

திருப்பூர் மாவட்டம், கருமாறம்பாளையத்தில் வசிப்பவர் சசிகலா. இவர் பனியன் கம்பெனியில் பணிபுரியும் அருந்ததியப் பெண். இவரும் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த விஜயக்குமார் என்பவரும் காதலித்து வந்தனர். 14.05.2009 அன்று விஜயக்குமாரும் சசிகலாவும் பேசிக்கொண்டிருந்த போது அதே ஊரைச் சேர்ந்த கவுண்டர் சமூகத்தினரான சதீஸ்குமார் என்பவர் அவர்களை பார்த்தார். வீட்டில் சொல்ல வேண்டாம் என்று சசிகலா கூறியதை சாதகமாக்கிக் கொண்ட சதீஸ்குமார் சசிகலாவோடு பேசவேண்டும் என்று தனியாக அழைத்தார். சுடுகாட்டிற்கு அருகே அழைத்துச் சென்ற சதீஸ்குமார் அவரை பாலியல் வல்லுறவுக்கு அழைத்தார். இணங்க மறுத்த அவரை அடித்து, துன்புறுத்தி, நிர்வாணமாக்கி அவருடைய காதலர் விஜயக்குமாரை பாலியல் வல்லுறவு செய்ய வற்புறுத்தியதோடு சதீஸ்குமாரின் நண்பர்களான வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த முருகேஷ், ரஞ்சித்குமார் ஆகியோரும் சசிகலாவை பாலியல் வல்லுறவு மேற்கொண்டனர். வெளியே கூறினால் கொலை செய்வதாகவும் மிரட்டியுள்ளனர். சசிகலா தன் தாயாருடன் தலித் வன்கொடுமை சட்டம் *3 (i) (x)* மற்றும் *376, 306 IPC* பிரிவுகளில் குற்றவாளிகள் மீது திருப்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கைப் பதிவு செய்துள்ளார்.

## 26. கோயிலுக்குள் நுழைந்த தலித் மீது தாக்குதல்

உளுந்தூர்பேட்டை தாலுக்காவில் உள்ளது கிளியூர் எனும் கிராமம். இங்கு கோயிலில் நுழையத்தடை, முடிவெட்டத்தடை, கட்டாய இழிவு வேலைகள் செய்தல் என பல்வேறு தீண்டாமைச் செயற்பாடுகள் நடைமுறையில் உள்ளன. 28.12.2008 அன்று கிளியூரில் நடைபெற்ற மாரியம்மன் கோவில் திருவிழாவில் பறையர் இனத்தைச் சேர்ந்த பெருமாள் என்பவரும் கலந்து கொண்டு கற்பூரத்தை ஏற்ற முயன்றார். அதனை கவனித்த வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ராஜாங்கம் என்பவர் சாமி குத்தம் ஆகிவிட்டது எனக்கூறி கடுமையாக பெருமாளை தாக்கத் தொடங்கினார்.

ஊராட்சிமன்றத் தலைவர் வீட்டில் கூடிய நாட்டார்கள் தீட்டு கழிக்கும் பரிகாரச் செலவை ஏற்கச் சொன்னார்கள். இதனை மறுத்த பெருமாளின் குடும்பத்தினரை சண்முகம் நாட்டார், கோவிந்தராசு, பிச்சைக்காரன், ரங்கநாதன் நாட்டார் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்தனர்.

## 27. இருளர் சமூகத்தினர் மீது பொய் வழக்கு

வேலூர் மாவட்டம், சலவன்பேட்டையில் (பிளாஸ்டிக்) நெகிழிப் பொருட்களை சேகரித்து விற்கும் கூலித் தொழிலாளி பச்சையப்பன். இவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர். வள்ளிமலையில் கொலை செய்யப்பட்ட மூதாட்டியைக் கொன்றவர்களை கண்டறிய முடியாத காவல்துறை பச்சையப்பனின் மகன் லட்சுமணனைக் கடத்திக் கொண்டு போய் சிறை வைத்து மிரட்டியும், பணம் கொடுத்தும் சிறுவனின் வாக்குமூலத்தையே ஆதாரமாகக்

கொண்டு 08.06.2009 அன்று காணாமற்போன உங்களுடைய மகன் வள்ளிமலை மேல்பாடி காவல் நிலையத்தில் இருக்கிறான் எனக்கூறி பச்சையப்பனையும் அவரது மனைவி மல்லிகாவையும் காவல்நிலையம் வரவழைத்து பச்சையப்பன் மீது கொலைக் குற்றம் சுமத்தி அவரை கைது செய்தனர்.

## 28. தலித்துகள் மீது சாதிவெறி தாக்குதல்

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுக்காவில் உள்ளது சன்னியாசிப்பேட்டை. இங்கு வன்னியர்களும், பறையர்களும் வாழ்ந்து வருகின்றனர். சன்னியாசிப்பேட்டை பகுதியில் உள்ள குடிநீர் குழாயை அகற்றிவிட்டு அந்த இடத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் கொடிக்கம்பத்தை நட முயன்றனர். அப்போது காவல்துறையில் புகார் செய்தும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காததால் காலனி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இந்த சூழலில் 17.01.2008 அன்று சன்னியாசிப்பேட்டையில் இறந்து போன பாப்பா என்பவரை அடக்கம் செய்ய வன்னியர் குடியிருப்பு வழியாகச் சென்றபோது ‘எதுக்குடா இந்த பக்கம் வந்தீங்க’ என்று தகராறு செய்தனர். இடுகாட்டிலிருந்து வரும்போது வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த சுரேஷ், பரசுராமன், தவமணி, பூபதி தலைமையிலான ஒரு கும்பல் தலித்துகளை கண் மூடித்தனமாக தாக்கினர். குற்றம் இழைத்தோர் மீது ஒரு வழக்கையும் வன்னியர் சாதிக்கு ஆதரவாக நின்று தலித்துகள் மீது ஒரு வழக்கையும் நெல்லிக்குப்பம் காவல்துறை பதிவு செய்தது.

## 29. தலித் பெண் மீது தாக்குதல்

பவானி வட்டத்தில் உள்ளது குப்பாண்டம்பாளையம். 07.12.2008 அன்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டுச் சுவரொட்டியை அந்தியூர் செம்புளிச்சாம்பாளையத்தைச் சேர்ந்த வன்னியர்கள் ஒட்டிய போது அதனை ஒட்டக்கூடாது என்று தடுத்ததால் அதற்குப் பழி வாங்கும் முயற்சியாகப் புதிய தமிழக கட்சிக் கொடிக்கம்பத்தினை இரவு 11 மணியளவில் வன்னியர்கள் ஒடித்தனர். இதனைக் கண்ணுற்ற பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த மாரக்காள் என்பவர் ‘ஏன் உடைக்கிறீங்க’ என்று கேட்டதற்குப் ‘பள்ளச்சி’ என்று சாதியைக் கூறி அவரை இழிவுபடுத்தி மண்டையை உடைத்தனர். ஆப்பக்கூடல் காவல்துறையினர் *239/08, 147, 148, 427, IPC* மற்றும் *334 IPC* தலித் வன்கொடுமைச் சட்டப்பிரிவு *2 (i) (x) (v)*– களிலும் குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## 30. பொது இடத்தில் தலித் மீது தாக்குதல்

வந்தவாசி தாலுக்காவில் உள்ளது வயலூர் கிராமம். இங்கு வன்னியர்களும் தலித்துகளும் வாழ்ந்து வருகின்றனர். பறையர் சமூகத்தைச் சேர்ந்த மண்ணு என்பவர் 06.02.2009 அன்று ரேசன் கடையில் பொருட்களை வாங்கியதற்கான ரசீதை தொலைத்துவிட்டார். இதனைப் பார்த்த வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் கடைக்காரரிடம் மண்ணுவுக்கு அரிசி போட வேண்டாம் என்றவுடன் ‘இந்த அரிசி இல்லைன்னா என்ன உயிரா

போய்விடும்' என்று கேட்ட மண்ணுவை 'பற தேவுடியா பையா' என்று கூறி இழிவுபடுத்தி அலுமினியப் பாத்திரத்தால் தலை மீது தாக்கினார். அவருடைய மனைவியையும் குடும்பத்தையும் தகாத வார்த்தைகளால் இழிவுபடுத்தினர். தேசூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த மண்ணு மிரட்டலுக்கு பயந்து அதனை திரும்பப் பெற்றுக்கொண்டார்.

## 31. அருந்ததியர் மயானம் ஆக்கிரமிப்பு

தேனி மாவட்டம், போடி தாலுக்காவில் உள்ளது நாகலாபுரம் கிராமம். இங்குள்ள பாரதி வித்யா மந்திர் எனும் பள்ளிக்கு பின்புறத்தில் அருந்ததியர்களுக்குரிய மயானமும், அந்த மயானத்திற்கு செல்லுகின்ற பாதையும் இருந்தது. பள்ளி நிர்வாகியான நாயுடு சமூகத்தைச் சேர்ந்த ராஜகோபால் அந்த இடத்தை வாங்கியவுடன் மயானத்திற்கு செல்லுகின்ற பாதையை அடைத்தார். மீதமுள்ள 3 அடியை அருந்ததியர்கள் மயானத்திற்கு செல்லும் பாதையாக பயன்படுத்தி வந்த நிலையில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த பாலு என்பவர் அந்த பாதையையும் ஆக்கிரமிப்பு செய்து அருந்ததியர்கள் போக விடாமல் தடைசெய்துள்ளார். இந்த பாதைப் பிரச்சனையில் வழக்கு இருப்பதால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று பள்ளி நிர்வாகத்திற்கே தேனி தாசில்தார் அப்துல் துணை நின்றார்.

## 32. வீட்டை அபகரித்துக் கொலை மிரட்டல்

தாராபுரம் வட்டம், ஆலாம்பாளையத்தில் வசிப்பவர் குப்புசாமி. இவர் பள்ளர் சமூகத்தைச் சார்ந்த விவசாயக்கூலி. அதே ஊரில் வசிக்கும் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவர் அரசு கடனுதவி திட்டத்தில் தலா 1 ஏக்கர் நிலைம் வாங்கித் தருவதாகக்கூறி 12 தலித் குடும்பங்களில் ரூ. 25,000/- பணத்தை பெற்றார். ஆனால் இவர்களுக்கு தருவதாகக் கூறிய நிலத்தை வேறொருவருக்கு மாற்றி எழுதினார். இதனைக் கேட்ட தலித் மக்களை 'சக்கிலிய தாயோலி' 'பள்ள நாய்ங்களே' என்று சாதியைக் கூறி இழிவுபடுத்தி நிலத்தை தரமுடியாது என்று மறுத்துவிட்டார். சாதியைக் கூறி இழிவுபடுத்தியும், நிலம் வாங்கித் தருவதாகவும் மோசடி செய்த பழனிச்சாமியின் மீது மூலனூர் காவல் நிலையத்தில் *420 3(i) (x)* தலித் வன்கொடுமைச் சட்டப்பிரிவுகள் மற்றும் *506 (i) IPC*-யிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் குற்றவாளியான பழனிச்சாமியின் மீது காவல்துறை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## 33. தலித் முதியவரைத் தாக்கிய மேல்சாதி இளைஞர்கள்

மானாமதுரை தாலுக்காவில் உள்ளது ஆலம்பச்சேரி எனும் கிராமம். இங்கு கூலித் தொழிலாளியாக பணி செய்பவர் கிருஷ்ணன் (55). இவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். வண்ணப்பூச்சு வேலைகளுக்காக வேதியரேந்தல் எனும் கிராமத்திற்கு சென்ற போது அங்குள்ள ஒரு பெட்டிக்கடையில் 27.02.2009 அன்று பாக்கு கேட்டார். அந்த கடையில் இல்லாததினால் அருகிலிருந்த கடையில் பாக்கு கேட்டார். அப்போது அந்தக் கடையில் இருந்த கோனார் சமூக இளைஞர்களான தினகரன் (27) மற்றும் மலைச்சாமி ஆகியோர் "ஏன்டா

அந்த கடைக்கு போய்ட்டு இந்த கடைக்கு வந்த" என்று கண்ணியக் குறைவாகவும், பள்ளப்பயலே என்று சாதியைக் கூறி இழிவு செய்து தகாத வார்த்தைகளால் திட்டியும் அவரை அடித்தனர். அவருடைய சட்டைப் பையிலிருந்த வாரச்சம்பளம் 1,400/- ரூபாயையும் பிடுங்கிக் கொண்டு சட்டையைக் கிழித்து அவமானப்படுத்தினர். அரசியல்வாதிகளின் தலையீட்டால் மானாமதுரை காவல் சார்பு ஆய்வாளர் புகாரைப் பதிவு செய்யாமல் காலம் தாழ்த்தியுள்ளார். மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடமும் புகார் அளித்ததற்கு பிறகே வழக்கை பதிவு செய்தார். ஆனால் தலித் முதியவரைத் தாக்கிய குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

## 34 அருந்ததியர்களைத் தாக்கிய மேல்சாதியினர்

கோவை மாவட்டம், சூலூர் தாலுக்காவில் உள்ளது சோளக்காட்டுப்பாளையம். இங்கு ஷேர் ஆட்டோ ஓட்டுநராகப் பணியாற்றுபவர் ஆறுமுகம். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 18.02.2009 ஜெகநாதன் என்பவரை அடித்துச் சித்ரவதை செய்தமைக்காக அதனைக் கண்டித்தும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும் சுவரொட்டிகளை ஒட்டினர். அப்போது அவ்வழியாக வந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தியும், *K. P.* சாமியும் இந்த பகுதியில் அம்பேத்கர் படம் போட்ட சுவரொட்டியை ஒட்டக்கூடாது என்று மிரட்டினர். இது தொடர்பாக கரும்பட்டி காவல் நிலையத்தில் அருந்ததியர்கள் புகார் கொடுத்தார்கள். இதனால் ஆத்திரமடைந்த கவுண்டர் அருந்ததியர்களுக்குச் சொந்தமான மாட்டுத்தீவனத்தைத் தீ வைத்துக் கொளுத்தினர். பால் கூட்டுறவு சங்கத்திலிருந்து பால் தரக்கூடாது என்றும் தடையும் விதிக்கப்பட்டது. அடியாட்களை வைத்து ஈஸ்வரமூர்த்தி எனும் கவுண்டரின் தலைமையில் ஒரு கும்பல் ஆறுமுகத்தை கொலை மிரட்டலும் செய்தனர். குற்றமிழைத்த கிருஷ்ணமூர்த்தி மற்றும் *K.P.* சாமியின் மீது இந்திய தண்டனைச் சட்டம் 435 மற்றும் *506 (i) c/i, 3 (i) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 35. போதையில் கீழே விழுந்தவரை தூக்கிவிட்ட தலித்துக்கு அடி

ஈரோடு மாவட்டத்திலுள்ள கரை எல்லாப்பாளையத்திற்கு அருகில் உள்ளது எலவமலை. இங்கு கருப்பன் என்பவர் கூலித் தொழிலாளியாக இருக்கிறார். அவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 26.04.2009 அன்று அவர் வேலை செய்யும் தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவதற்காகச் சென்றார். அப்போது குடிபோதையில் மிதிவண்டியை ஓட்டி வந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த துளசிமணி என்பவர் கீழே விழுந்துவிட்டார். அவரை கருப்பன் தூக்கிவிட்டார். வீட்டிற்குச் சென்றுவிட்ட துளசிமணி ஆள்விட்டு கருப்பனை அழைத்து வரச்சொல்லி 'உன்னை தூக்கி விடச் சொன்னேனாடா சக்கிலியத் தாயோழி' என்று சரமாரியாக அடித்தார். இதனால் சித்தோடு காவல் நிலையத்தில் குற்ற எண் 121/09, 323 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் தலித் வன்கொடுமைச் சட்டப்பிரிவு *3 (i) (x)* பிரிவுகளில் கருப்பன் புகார் செய்தார். இதனை அறிந்த துளசிமணி பணம் வாங்கிக் கொண்டு புகாரை திரும்ப பெற்றுக் கொள்ள மிரட்டல் விடுத்தார்.

## 36. செங்கல் சூளையில் தலித்துகள் சித்திரவதை

பரமக்குடி தாலுக்காவில் பிய்யனேந்தல் உள்ளது. இவ்வூருக்கு அருகில் உள்ள அச்சங்குளத்தில் தேவர் சமூகத்தைச் சேர்ந்த மூர்த்தி என்பவர் சுகன்யா எனும் பெயரில் செங்கல் சூளை வைத்திருக்கிறார். இந்த சூளையில் பல்வேறு தலித்துகள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். இதில் பறையர் சமூகத்தைச் சார்ந்த கருப்பையா என்பவரும் ஒருவராவார். இந்த சூளையில் வேலை பார்ப்பவர்கள் வேறு எங்கும் வேலைக்கு செல்லக்கூடாது என்பது மூர்த்தியின் கட்டளையாகும். இதனை மீறியவர்களுக்கு பல்வேறு சித்திரவதைகளையும் செய்வார். அவ்வாறு ஒருவர் ஏற்கனவே தற்கொலையும் செய்திருக்கிறார். மூர்த்தியின் சித்ரவதையைப் பொறுக்காத கருப்பையா சூளையை விட்டு வெளியேறி அபிராமம் காவல்துறையில் புகார் அளிக்கச் சென்றார். அவருடன் முனியசாமி மற்றும் அரியமுத்துவும் இருந்தனர். அங்கு வந்த மூர்த்தி புகார் கொடுக்கச் சென்ற கருப்பையாவை வழிமறித்து 'நீதான் தொழிலாளர்கள் வெளியேறியதற்கு காரணம் என்று இரும்புக் கம்பியால் அவரது உடலில் பல இடங்களில் தாக்கினார். பற பயலுங்க எனவும், ஈன சாதி எனவும் சாதியைக் கூறி இழிவு படுத்தி, தகாத வார்த்தைகளால் தொழிலாளர் சங்கத்தையும் திட்டினார். முனியசாமியும் , அரியமுத்துவும் ஓடி காவல் நிலையத்தில் இருந்த காவலர்களை அழைக்க அவர்களோ குற்றவாளியான மூாத்தியை அங்கிருந்து தப்பிவிடச் சொன்னார்கள். 50-க்கும் மேற்பட்ட வன்கொடுமை வழக்குகள் மூர்த்தியின் மீது இருந்தும் இதுவரை மூர்த்தி கைது செய்யப்படவும் இல்லை. அவருடைய கொத்தடிமை சூளையின் மீதும் எவ்வித நடவடிக்கையும் காவல்துறை மேற்கொள்ளவில்லை.

## 37. உரிமை கேட்ட அருந்ததியர் மீது கொலை மிரட்டல்

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்காவில் உள்ளன மெட்டுக்குளம் மற்றும் கஞ்சனூர் கிராமங்கள். இங்கு அருந்ததியர், ரெட்டியார், பறையர், ராஜுஸ், நாயுடு போன்ற சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். மெட்டுக்குளம் ஊராட்சிமன்றத் தலைவராக இருப்பவர் ஐ. நம்பிக்கைராஜன். இவர் ராஜுஸ் சமூகத்தைச் சேர்ந்தவர். இவருடைய சகோதரியின் கணவர் டெல்லி முரளி. இவர்கள் இருவரும் இணைந்து அரசியல்வாதிகளின் பின்புலத்தைக் கொண்டு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வது, கட்டப்பஞ்சாயத்து செய்வது, ஆக்கிரமிப்பு செய்த நிலங்களை அரசியல்வாதிகளுக்கு விற்பது போன்ற மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் மெட்டுக்குளம், கஞ்சனூர் கிராம மக்களுக்கு எவ்வித சாலைவசதிகளோ, கழிப்பிட வசதிகளோ, குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகளோ செய்து தரவில்லை. பஞ்சமி நிலங்களாக கொடுக்கப்பட்ட இடத்தில் குடிசை போட்டு தங்கியிருந்த 90 குடும்பங்களை அப்புறப்படுத்தினார்கள். அருந்ததியர்களுக்கு சொந்தமான மயானத்திலிருந்து அமைச்சர் துரைமுருகன் கட்டும் பொறியல் கல்லூரிக்கு மணல் எடுத்துச் செல்லப்பட்டது. தலித்துகளுக்குரிய பஞ்சமி நிலத்தில் டெல்லி முரளி தலைமையிலான உயர் சாதிகளுக்கு கோயிலும், பூங்காவும் கட்டுவதற்கு முயற்சிகளை எடுத்தனர். அந்நிலங்களைப்

பற்றி வேறு யாராவது பேசினால் கொலையும் செய்வேன் என்று டெல்லிமுரளி மிரட்டல் விடுத்தார். ஊராட்சிமன்ற தலைவர் ஐ. நம்பிக்கைராஜ் மற்றும் டெல்லி முரளியின் மக்கள் விரோத செயற்பாடுகளால் அதிருப்தியடைந்த சமூக செயற்பாட்டாளர்களான ஞானப்பிரகாசம், ஹரிகோபாலன், பிலிப், பாஸ்கர் ஆகியோர் மனித உரிமைக்கான இயக்கம் ஒன்றை தொடங்குவது தான் இப்பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் என்று மக்கள் கண்காணிப்பகத்தின் கீழ் செயற்படும் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தினை அப்பகுதியில் தொடங்க கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் மக்கள் கண்காணிப்பக இயக்குனர் ஹென்றி திபேன் கலந்து கொண்டு ஐ. நம்பிக்கைராஜ் மற்றும் அவரது உறவினர் டெல்லி முரளி செய்யும் அட்டூழியங்களை தன்னுடைய உரையில் அம்பலப்படுத்தினார். இதனால் ஆத்திரமடைந்த நம்பிக்கைராஜின் ஆட்கள் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்க பெயர் பலகையை அடித்து உடைத்தனர். கூட்டத்தில் கலந்து கொண்ட அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த குமார் என்பரை அழைத்து இயக்கத்தையும், இயக்குனர் ஹென்றி திபேனையும் மிகவும் தகாத வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டலை விடுத்தனர்.

ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தும் மக்களுக்கான எவ்வித நலத்திட்டங்களையும் பெற்றுத்தராமலும், அதனைத் தட்டிக் கேட்பவர்களை கொலை மிரட்டல் செய்துவரும் நம்பிக்கைராஜ் மற்றும் டெல்லி முரளி மீது காவல்துறையும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியவில்லை. தமிழக அரசு அறிவிப்பு செய்கின்ற இலவச நிலம் உள்ளிட்ட எந்த ஒரு பயனுதவியும் மெட்டுக்குளம், கஞ்சனூர் மக்களையும் வந்து சேரவில்லை. குற்றவாளிகள் மீது *787/2009,* பிரிவுகள் *147, 341, 506 (i), IPC, r/w, 3(12) V, 39(1(x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 38. அருந்ததிய இளைஞருக்கு நடுரோட்டில் சித்திரவதை

கோவை மாவட்டம், அவிநாசி வட்டத்தில் உள்ளது நம்பியப்பாளையம். இங்கு தறிவேலை செய்து வருபவர் ஜெகநாதன் (22) இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். மனநிலை பாதிக்கப்பட்ட கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சிமன்றத் தலைவரின் மகன் சரத்குமார் 31.01.2007 அன்று தறிவேலை செய்து கொண்டிருந்த ஜெகநாதனை கல்லால் தலையில் அடித்தான். வலிதாங்க இயலாமல் ஜெகநாதனும் திரும்பி கன்னத்தில் அறைந்தார். இதனை அறிந்த ஊராட்சி மன்ற தலைவர் முத்துச்சாமி, ஜெகநாதனை அடித்தார். ஜெகநாதன் அவரையும் திரும்ப அடித்தார். இதனால் ஆத்திரமடைந்த முத்துச்சாமி தன்னுடைய அடியாட்களுடன் அருந்ததியர் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்து வீட்டையும், வீட்டில் உள்ள பாத்திரங்கள், பீரோ, கட்டில் போன்றவற்றை அடித்து நொறுக்கினார்.

முத்துச்சாமி கவுண்டரின் அடியாட்களான ராஜ்குமார், பாலுச்சாமி ஆகியோர் இரும்புக் குழாயினால் ஜெகநாதனை சராமாரியாகத் தாக்கினர். ஜெகநாதனின் கைகளைக் கட்டி அவரது பிறப்புறுப்பில் துரையன் கவுண்டர் என்பவர் இரு சக்கர வாகனத்தை ஏற்றினார். காயம்பட்ட இடத்தில் உப்பையும், மிளகாய்தூளையும் தேய்த்து சித்திரவதை செய்தனர். காப்பாற்ற முயன்ற பெற்றோர்களையும், மற்ற பெண்களையும் 'தேவுடியா' எனவும், தகாத

வார்த்தைகளாலும் திட்டி 'சக்கிலிய தாயோலி' என சாதியைக் கூறி இழிவுபடுத்தி சுமார் 1 கி.மீ வரை அடித்துக் கொண்டே சென்றனர். இதன் தொடர்ச்சியாக அருந்ததியர் வாழ்விடத்தில் குடிநீர், கடைகள், பள்ளிகூடங்கள் மூடப்பட்டன. 13.02.2009 அன்று தலித் விடுதலைக்கட்சியின் பொறுப்பாளர் செங்கோட்டையனின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. காவல்துறை குற்றவாளிகளை தப்பிக்கவிட்டு கடுமையாக தாக்கப்பட்ட ஜெகநாதனை கவுண்டர்கள் வீட்டு குழாய்களை திருடினான் என்று பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது. பிறகு மக்களின் முயற்சியால் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் மீது குற்ற எண் *144/09*, சட்டப்பிரிவுகள் *147, 148, 324, 506 (ii) IPC* மற்றும் *3 (o) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 39. பொதுக்குளம் ஏலம் பற்றி கேட்ட தலித் இளைஞருக்கு அடி

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டத்தில் திருமாளம் எனும் கிராமம் உள்ளது. இங்கு வசிக்கின்ற கூலித் தொழிலாளி இளையராஜா (30). இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். திருமாளம் ஊரில் உள்ள சிவன்கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டுமென்று அனைவரிடத்திலும் வரியாக ரூ. 1,000/- வாங்கினர். ஆனால் தலித்துகளுக்கு கும்பாபிஷேகம் பற்றிய தகவலை கும்பாபிஷேகம் நடக்கும் நாளுக்கு (23.10.2007) முதல் நாள் இரவு 7 மணி வரை தகவல் தரவில்லை. இதனால் கிராம நிர்வாக அலுவலருக்கும், அறங்காவலர்துறைக்கும் இளையராஜா தகவல் கொடுத்தார். தகவலை மேல்சாதியினர் அன்று இரவு 10.30 மணிக்கு தலித் மக்களுக்கு அழைப்பிதழ் கொடுத்தனர். அதே நேரத்தில் இளையராஜாவை அடிக்கவும் திட்டமிட்டனர். இந்த சூழலில் பொதுக்குளம் ஏலம் பற்றி யாருக்கும் சொல்லாமல் மேல் சாதியினருக்குள் ஏலம் விட்டுக் கொள்வதை வழக்கமாக கொண்டிருப்பதையும் கேள்வி கேட்ட மேல்சாதி சமூகத்தைச் சேர்ந்த ஆனந்த என்பவரும் மற்றவர்களும் 'பறப் பயலுக்கு எவ்வளவு திமிர்' என்று கோயிலுக்குள் அடைத்து சித்ரவதை செய்தனர். தலைஞாயிறு காவல் நிலையத்தில் இளையராஜா புகார் அளித்தும் குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. பதிலாக இளையராஜா மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 40. விசாரணை என்ற பெயரில் தலித் இளைஞர் சித்திரவதை: காவல்துறையின் வெறிச்செயல்

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி தாலுக்காவில் உள்ளது திருவள்ளூர். இங்கு ஓட்டுநராக பணி செய்பவர் வேல்முருகன். இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்த ராசியாவும், முருகனும் காதலித்து வந்தனர். அவர்களுடைய வீட்டில் எதிர்ப்பு இருந்ததால் வீட்டை விட்டு ஓடி திருப்பூருக்கு சென்றுவிட்டனர். இந்த தகவலை வேல்முருகனின் அலைபேசியில் தெரிவித்தார்கள். இதனையறிந்த இளையான்குடி காவல்துறை வேல்முருகனை 17.04.2009 அன்று கைது செய்து பனைமட்டையால் அடித்தும், பூட்ஸ் கால்களால் நெஞ்சில் ஏறி மிதித்தும் சித்திரவதை செய்தனர். இதனால் வேல்முருகனுக்கு மூச்சுத்திணறலும், காதில் ரத்தமும் வடியத் தொடங்கியது. பிறகு

இளையான்குடி அரசு மருத்துவமனையில் சிசிக்சை பெற்ற வேல்முருகனை காவலர்கள் சிகிச்சை பெறாமல் தடுத்தும், ஓடிப்போன காதலர்களை வேல்முருகன் தன்னுடைய லாரியில் ஏற்றிச் சென்றதாகவும் இளையான்குடி காவல்துறையினர் பொய்வழக்கைப் பதிவு செய்தனர்.

## 41. கோயில் பூசை செய்த அருந்ததியர்களைக் கட்டி வைத்துச் சித்திரவதை

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டத்தில் உள்ளது பள்ளிப்பட்டு கிராமம். இங்கு அருந்ததியர்களும் வன்னியர்களும் வாழ்ந்து வருகின்றனர். 23.02.2009 அன்று சிவராத்திரி பூசை செய்வதற்காக நள்ளிரவில் அய்யனார் கோவிலுக்கு அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ் என்ற பூசாரியும் 6 பேர்களும் சென்றனர். இதனையறிந்த வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பூசை செய்த 6 அருந்ததியர்களை கட்டி வைத்து விடிய விடிய அடித்தும், அவர்கள் முகத்தில் காரித்துப்பியும் அவமானப்படுத்தினர். மேலும் ரூ. 50,000/- அபராதம் கட்டவேண்டும் என்று கட்டாயப்படுத்தியும், அவர்களிடமிருந்த நகைகளையும் ரூ. 2,000/- பணத்தையும் பறித்தும் சென்றனர். மேலும் ஊர்க்காரர்கள் அனைவரின் காலிலும் விழுந்து மன்னிப்பு கேட்க வைத்தனர். இவ்வளவு கொடுமைகள் நடந்தும் வன்னியர்களை சார்ந்தே அருந்ததியர்கள் வாழ வேண்டிய சூழ்நிலையிருப்பதாலும், அவர்களுடைய மிரட்டலுக்கு பயந்தும் காவல்துறையில் எவ்வித புகாரையும் அளிக்கவில்லை.

## 42. தலித்துகள் மீது கல்வீச்சு: பொய் வழக்கு

மதுரை மாவட்டத்திலுள்ள கருப்பாயூரணியில் பள்ளர், கள்ளர், முத்தரையர், நாடார், நாயக்கர், செட்டியார், இஸ்லாமியர்கள் என பல சாதியினர் வாழ்ந்து வருகின்றனர். இங்கு கள்ளர்களுக்கும், பள்ளர்களுக்கும் முன் பகை இருக்கிறது. இந்நிலையில் 16.01.2009 அன்று பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த மாரியாயி (70) எனும் மூதாட்டி இறந்து போனதால் நீர்மாலை எடுக்க ஊரணிக்குச் சென்றனர். ஊரணியில் குளிக்கக்கூடாது என்று முன்பே ஊரில் முடிவெடுக்கப்பட்டிருப்பதால் வீட்டிலிருந்து குடத்தில் நீர் எடுத்து வந்து இறுதிசடங்கை செய்தனர். ஊரணியில் குளித்து, நீர் எடுத்து வருவதாக கள்ளர்களுக்கு யாரோ பரப்பிய பொய்த் தகவலால் பள்ளர்கள் மீது ஜல்லி கற்களையும், செங்கலையும் வீசி தாக்கத் தொடங்கினர். இதனால் காயமடைந்த பள்ளர்கள் கருப்பாயூரணி உதவி ஊராட்சிமன்ற தலைவர் ராதாவின் தலைமையில் *147, 341, IPC* மற்றும் *3 (i) (x)* தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். ஆனால் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட கருப்பாயூரணி காவல்துறை அவர்களைத் தப்பிக்கவிட்டதோடு பாதிக்கப்பட்ட 10 நபர்கள் மீது தேவர் சிலையை அவமதிப்பு செய்ததாக பொய் வழக்கையும் பதிவு செய்தது.

## 43. ஆடுமேய்த்த தலித்துகள் மீது பொய் வழக்கு

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டத்தில் உள்ளது கீழத்தாயில்பட்டி எனும் கிராமம். இங்கு ஆடு, மாடுகளை மேய்த்து பிழைப்பு நடத்தி வருபவர்கள் சிவா, கருப்பசாமி மற்றும் கணேசமூர்த்தி. இவர்கள் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். கீழத்தாயில்பட்டி கிராமத்திற்கு

அருகில் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த முருகேசன் என்பவர் வசிக்கிறார். சட்ட விரோதமாக பட்டாசு தயாரிப்பவர்களுக்கு திரி செய்து கொடுப்பது இவருடைய வேலையாகும். 28.08.2009 அன்று ஆடு மேய்க்கப் போகும் போது சிவா வைத்திருந்த நாய் அங்கிருந்த ஒரு கோழியை விரட்டியது. அந்த சத்தத்தை பொறுக்க முடியாத முருகேசன் கடுமையாகத் திட்டி காவல்துறையைக் கூப்பிடுவதாகச் சொன்னார். பதிலுக்கு திருட்டுத்தனமாக திரி தயாரிப்பதைச் சொல்லுவோம் என்றார்.

31.08.2009 அன்று சிவாவும், கருப்பசாமியும் ஆடு மேய்க்கச் சென்ற போது வெம்பக்கோட்டை சார்பு ஆய்வாளர் மற்றும் இரு காவலர்களும் அவர்களை கைது செய்தனர். காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற அவர்கள் பனை மட்டையாலும், லத்தியால் உடலின் எல்லாப்பகுதிகளையும் தாக்கினர். இதனால் அவர்களுக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது. அப்பாவி தலித் இளைஞர்கள் அடித்து சித்ரவதை செய்ததோடு, செட்டியார் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு அழைத்ததாக அவர்கள் மீது பொய் வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

## 44. அருந்ததியர் பெண்ணைக் கொலை செய்த காவல் உதவி ஆய்வாளர் குடும்பம்

ஈரோட்டில் கனிராவுத்தர் குளத்திற்கு அருகில் உள்ளது வீரப்பன்சத்திரம். இங்கு அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாலதி என்பவர் தன் பெற்றோர்களுடன் வசித்து வருகிறார். இவர் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றினார். மாலதியும் கொடுமுடி காவல் உதவி ஆய்வாளர் பாண்டியனும் காதலித்து வந்தனர். 16.01.2009 அன்று பொங்கல் விடுமுறைக்கு வந்த பாண்டியன் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று அவருடைய பெற்றோர்களிடத்தில் காதலை தெரிவித்தார். மாலதியின் ஏழ்மையையும், சாதியையும் உடல் ஊனத்தையும் அறிந்த பாண்டியனின் பெற்றோர்கள் திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்து மாலதியை கட்டாயப்படுத்தி சாணிப்பவுடரை வாயில் ஊற்றி பொதுச்சாலையில் போட்டுவிட்டு தலைமறைவாயினர். மயங்கிய நிலையில் இருந்த பெண்ணை சோதித்த கொடுமுடி *R.S* எனும் தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் அவர் விஷமருந்தி இறந்துவிட்டதாகக் கூறினர். கொடுமுடி காவல்நிலைய ஆய்வாளர் லட்சுமணன் வழக்கை விசாரித்து குற்ற எண் 12/09 சட்டப்பிரிவு 174 வழக்கு பதிவு செய்துள்ளார். மாலதியை கொலை செய்த காவல் உதவி ஆய்வாளர் பாண்டியனும் குடும்பத்தினரும் இன்னும் கைது செய்யப்படவில்லை.

## 45. சாதியைச் சொல்லி திட்டி அவமானப்படுத்திய அரசு அலுவலர்கள்: நடவடிக்கை எடுக்காத காவல்துறை

சிவகாசி வட்டத்தில் உள்ளது எம். துரைசாமிபுரம். அங்கு அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாரிமுத்து என்பவர் பட்டாசு தொழிலாளியாக பணி செய்கிறார். அவர் கோனார் சமூகத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவரிடம் 6 சென்ட் நிலத்தை வாங்கினார்.

இவருடைய நிலத்திற்கு எதிரில் உள்ள கோனார் சமூக சீனிவாசன் என்பவர் இருவருக்கும் உள்ள பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்தார். இதனால் மறு அளவு செய்து பட்டா பெறுவதற்காக சர்வேயர் வேலுவை அணுகியபோது அவர் ரூ. 10,000/- கையூட்டாகக் கேட்டார். அதனை தர மறுத்த மாரிமுத்துவை ‘‘சக்கிலி .....’’ எனத் தகாத வார்த்தைகளால் கிராம நிர்வாக அலுவலர் முனியசாமியும், சர்வேயர் வேலுவும் இழிவாகத் திட்டினர். ‘என் மயிர கூட புடுங்க முடியாது’ என சவால் விட்டனர். இதனை மாரனேரி காவல்நிலையத்தில் மாரிமுத்து புகார் அளித்த போது காவல் சார்பு ஆய்வாளர் தெய்வானை, சாதியைச் சொல்லி திட்டியதைப் பற்றி என்னால் நடவடிக்கை எடுக்கமுடியாது எனக் கூறி சர்வேயரும், கிராம நிர்வாக அலுவலரும் சாதியைப் பற்றி திட்டவும் இல்லை. கையூட்டு கேட்கவும் இல்லை என் பொய்புகாரை மாரிமுத்துவிடம் எழுதி வாங்கினார்.

## 46. மனித உரிமைக் காப்பாளர் மீதே பொய் வழக்கு

காரைக்கால் மாவட்டம், நெடுங்காடு பஞ்சாயத்திற்கு உட்பட்டது செருமாவிலங்கை. இங்கு மனித உரிமைக் காப்பாளராக பணி செய்து வருபவர் ஜோசப் குணாளன். இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் காரைக்கால் பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுகு எதிராகத் தொடர்ந்து போராடி வருபவர். 2008-ம் ஆண்டு நெடுங்காடு பகுதியில் ராஜேஸ்வரி என்ற பெண்ணைக் கொலை செய்த குற்றவாளிகளுடன் காவல்துறை பணம் பெற்றுக் கொண்டு கட்டப்பஞ்சாயத்து செய்ததையும் வெளிக்கொணர்ந்தவர். இதனால் காவல்துறை ஜோசப் குணாளன் மீது ஆத்திரத்தில் இருந்தனர். 14.08.2009 அன்று தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் வந்த குணாளனை தடுத்து, இந்த வழி தடுக்கப்பட்டிருக்கிறது என்று ஊர்க் காவல்படையைச் சேர்ந்த சிலம்பரசன் கூறியுள்ளார். இதனால் இருவருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது. இதில் குணாளனின் சட்டையை கிழித்து அவரை அறைந்தார் சிலம்பரசன். நான் மனித உரிமை காப்பாளர் என்று கூறிய குணாளனை மனித உரிமைன்னா என்ன பெரிய மயிராடா என்று தகாத வார்த்தைகளால் திட்டி அவருடைய அடையாள அட்டையையும், கைப்பேசியையும் பிடுங்கி, பொது இடத்தில் சிலம்பரசனை பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும், அவரை அடித்துக் காயம் ஏற்படுத்தியதாகவும் இந்திய தண்டனைச் சட்டம் *324, 241, 506 (2)* மற்றும் *341, 506 (i)* பிரிவுகளில் கைது செய்து சித்ரவதை செய்தனர்.

## 47. வேலை செய்ய மறுத்த தலித் தொழிலாளி மீது பொய் வழக்கு

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவிலுக்கு அருகில் உள்ளது நடேசபுரம். இங்கு வயரிங் வேலை செய்யும் கூலித் தொழிலாளி பால்ராஜ். இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்தவ உடையார் சமூகத்தைச் சேர்ந்த இருதயம் என்பவருடைய வீட்டில் வேலை செய்த போது அவர் மோட்டாரிலிருந்து வயரை திருடியதாக பால்ராஜ், முத்துச்சாமி, சாமிகண்ணு ஆகியோர் மீது புகார் அளித்தார். அவர்கள் திருடவில்லை என காவல்துறை விடுவித்தது. மற்றொரு முறை (அதே நபர்) இருதயம் வேலைக்கு அழைத்த போது வீண்

திருட்டுப்பட்டம் சுமத்தியதால் வேலைக்கு வர பால்ராஜ் மறுத்தார். இதனால் ஆத்திரமடைந்த இருதயம் காவல்துறையில் புகார் செய்ய 21.08.2009 அன்று, 3 கிலோ செப்புக் கம்பிகளை திருடி விற்றதாக பால்ராஜை காளையார் கோவில் காவலர்கள் கைது செய்தனர். கெட்ட வார்த்தைகளாலும், 'பறத் தாயோலி' உங்க சாதிக்காரனுங்க திருட்டுப்பயலுங்க, என்று சாதியைக் கூறி இழிவுபடுத்தியும் சித்ரவதை செய்தனர். தடுத்த அவருடைய மனைவி மணிமேகலையையும் தகாத வார்த்தைகளால் திட்டினர். பால்ராஜின் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 48. பொய் வழக்கில் தலித் இளைஞர் சித்திரவதை

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் உள்ளது கோட்டை காலனி. இங்கு தன் குடும்பத்துடன் வசிக்கும் கூலித் தொழிலாளி பிலிப். பிலிப்புக்கு அறிமுகமான நண்பரான வல்லத்தரசு என்பவர் இரு சக்கர வாகனம் ஒன்றை அறிமுகமற்ற ஒருவரிடமிருந்து விலைக்கு வாங்கினார். அந்த வாகனம் எங்கோ திருடப்பட்டிருந்ததாக. 08.03.2009 அன்று பேரணாம்பட்டு காவல்நிலை காவலர்கள் 3 பேர் பிலிப்பின் வீட்டுக்குள் நுழைந்து அவரைக் கைது செய்து காவல் நிலையம் அழைத்துச் சென்று அடித்து துன்புறுத்தி சித்ரிரவதை செய்தனர். பிறகு வேலூர் மாவட்ட மனித உரிமைக் காப்பாளர் பாஸ்கரனின் தலையீட்டிற்கு பிறகு காவல்துறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

## 49. சொந்த இடத்தில் குடியேறப்போன தலித்துக்கு அடி

திருப்பூர் மாவட்டம், வீரபாண்டிக்கு அருகில் உள்ளது குப்பாண்டம்பாளையும். இங்கு கூலித் தொழிலாளியாக இருப்பவர் முருகேசன். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்த கவுண்டர் சமூக பழனிச்சாமி என்பவர் வீட்டுமனை பட்டா பெற்றுத்தருவதாக ரூ. 4,500/- த்தை 30க்கும் மேற்பட்ட குடும்பங்களிடம் பெற்றார். இவரிடம் இருந்த நிலத்தை அரசு, ஆதிதிராவிட நலத்துறைக்காக வாங்கிக்கொண்டது. நிலம் பெற்ற அனைவரும் அந்தந்த இடங்களில் குடிசை போட்டுக் கொண்டனர். முருகேசனின் தந்தை திடீரென்று இறந்து போனதால் அவரால் வீடு குடியேறமுடியவில்லை. 09.02.2009 அன்று மீண்டும் வீட்டில் குடியேற தன் குடும்பத்தினரோடு சென்ற போது அங்கு வேறு ஒரு குடும்பம் தங்கியிருப்பதை கண்டு முருகேசன் அதிர்ச்சியடைந்தார். இதனை பழனிச்சாமியிடம் கேட்ட போது 'சக்கிலிய நாய்ங்களா' எனவும் தகாத வார்த்தைகளாலும் திட்டி இழிவுபடுத்தி விரட்டினர். மீண்டும் முருகேசன் 17.02.2009 அன்று பழனிச்சாமியின் வீட்டில் கேட்டபோது அவருடைய நிலத்தை தரமுடியாது என தகாத வார்த்தைகளாலும் சாதியைக் கூறியும் திட்டி தென்னை மட்டையில் அடித்து விரட்டினார். பணத்தை வாங்கிக் கொண்டு நிலத்தை அபகரித்த பழனிச்சாமியின் மீது குற்ற எண்: *224/09*, இந்திய தண்டனைச் சட்டம் *324/506 (ii)* மற்றும் *3 (i) (v), 3 (i) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவினாசி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 50. கொலையைக் கண்டறிய முடியாத காவல்துறை: அப்பாவி தொழிலாளி மீது பொய் வழக்கு

சென்னை, வடபழனி, சின்மயா நகரில் உள்ள மார்ந்தோ மெட்ரிக் பள்ளிக்கு அருகில் சலவைத் தொழிலாளியாக பணி செய்பவர் துரை. இவர் வண்ணார் சமூகத்தைச் சேர்ந்தவர். இவருடைய கடைக்கு எதிரில் உள்ள வீட்டில் இரட்டைக் கொலைகள் நடந்தன. இதனை விசாரிப்பதற்காக துரையை மு. 10 கோயம்பேடு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற காவல்துறை, கொலை செய்யப்பட்ட ராதாகிருஷ்ணனுக்கும், துரையின் மனைவி சுபாவிற்கும் கள்ளத்தொடர்பு இருந்தததாகவும் அதனால் இருவரையும் கொலை செய்ததாக ஒப்புக்கொள்ளுமாறும் அடித்து சித்ரவதை செய்தனர். இதனை மீறினால் துரையின் கர்ப்பிணியான மனைவி சுபாவை கருக்கலைப்பு செய்து விடுவதாகவும், அவருடைய அம்மாவின் மீது விபச்சார வழக்கு பதிவு செய்வதாகவும் மிரட்டி, அடித்து துன்புறுத்தினர். இரட்டைக் கொலையை கண்டறிய முடியாத காவல்துறை அப்பாவி தொழிலாளி துரையின் மீது இந்திய தண்டனைச் சட்டம் 302, 380 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து புழல் சிறையில் அடைத்தது.

## 51. போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது காவல்துறை தடியடி

திருவண்ணாமலை – மணலூர்பேட்டை நெடுஞ்சாலையில் உள்ளது சோனான் குட்டை சுடுகாடு. இது பல்வேறு சமூகங்களுக்கு உரியதாகும். அதே பகுதியில் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவரும் சலாம் என்பவர் சுடுகாட்டு மணலை *JCB* இயந்திரத்தைக் கொண்டு சமன் செய்தார். இதனை அறிந்த ஊர்மக்கள் 23.03.2009 அன்று போராட்டம் நடத்தினர். இதனையறிந்த திருவண்ணாமலை நகர காவல்நிலைய ஆய்வாளர் ரமேஷ், ஏட்டு சுந்தரமூர்த்தி, நகர காவல் கண்காணிப்பாளர் இளையராஜா ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது வேனில் இருந்து இறங்கிய அதிரடிப்படை காவலர்கள், கூடிய பெண்கள், ஆண்கள் என எல்லோரையும் அடித்து விரட்டி, கையில் கிடைத்தவர்களை கைது செய்தனர். இந்த தாக்குதலில் பலருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டது. குற்ற எண் 359/09, குற்றவியல் தண்டனைச் சட்டம் பிரிவு 151 மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் 188, 341, 353 பிரிவுகள் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 52. பள்ளி மாணவியைக் கைது செய்த காவல்துறை

மதுரை மாவட்டம், சத்திரப்பட்டிக்கு அருகில் உள்ளது மஞ்சம்பட்டி. இங்கு பள்ளர்களும், பறையர்களும் வாழ்ந்து வருகின்றனர். பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் குடி போதையில் பறையர் சமூகப் பெண்ணாகிய சூர்யா என்பவரின் கையைப்பிடித்து இழுத்துள்ளார். இதனால் சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் புகார் செய்தனர். இதனைத் தொடர்ந்து பெண்ணிடம் தவறாக நடக்க முயற்சித்த ஆறுமுகத்தை தேடி வந்த காவலர்கள்

அவர் அங்கு இல்லாததினால் வீட்டில் இருந்த ஆறுமுகத்தின் தங்கையையும், அம்மாவையும், அவருடைய அக்கா மகள் கமலாவையும் 'பள்ளத் தேவுடியாளுகளே' என்று தகாத வார்த்தைகளால் திட்டியும், லத்தியால் அடித்தும் துன்புறுத்தினர். ஆறுமுகத்தின் அக்கா மகளான 8-ம் வகுப்பு பள்ளி மாணவி கமலாவையும் அவருடைய அம்மா ரஞ்சிதத்தையும் அடித்து வாகனத்தில் ஏற்றினர். பெண் காவலர்கள் யாரும் விசாரிக்கவோ, அழைத்துச் செல்லவோ இல்லாத நிலையில் இரவு 10 மணி வரை சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டனர். ஆறுமுகம் வீட்டில் இல்லாத நிலையில் அவருடைய தந்தை வேலுவும் சட்ட விரோதக் காவலில் 31.08.2009 முதல் 05.09.2009 வரை சிறை வைக்கப்பட்டார்.

## 53. புகார் அளித்த மனித உரிமைக் காப்பாளருக்கு வெட்டு: உயர் சாதி வெறி

திருப்பூர் மாவட்டம், கோவில்பாளையத்தில் வசிப்பவர் வீரக்குமார் (40). அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த இவர் விழுதுகள் எனும் அமைப்பில் பணியாற்றுகிறார். பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்று விசாரித்து காவல்நிலையத்தில் புகார் கொடுப்பது இவரது பணியாகும். இவருடைய சித்தப்பா மகன் வீரக்குமாரும்(20) அதே சமூகத்தைச் சேர்ந்த தனலட்சுமியும் காதலித்து வந்தனர். தனலெட்சுமியின் பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்து வீரக்குமாரை எச்சரிக்க சொல்லி கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த சாமிநாதன் என்பவரிடம் கூறினார்கள். 25.09.09 அன்று வீரக்குமாரை சாமிநாதனின் ஆட்கள் தூக்கி வந்த அடித்து சித்திரவதை செய்து அவருக்கும் தனலெட்சுமிக்கும் தொடர்பில்லை என்று எழுதி வாங்கினர். மேலும் இதுபற்றி புகார் செய்தால் கொலை செய்வதாகவும் மிரட்டல் செய்தனர். ஆனால் வீரக்குமாரின் தலையீட்டினால் அவினாசிப்பாளையம் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த சாமிநாதன் 29.09.09 அன்று திருப்பூர் காய்கறி சந்தைக்கு போயிருந்த மனித உரிமைக் காப்பாளர் வீரக்குமாரை சக்கிலி தாயோலி என்று சாதியைக் கூறி இழிவுப்படுத்தி அரிவாளால் அவருடைய கழுத்தில் வெட்டினார். அதனை தடுக்கும்போது வீரக்குமாரின் வலதுகையில் வெட்டுப்பட்டது. மனித உரிமை காப்பாளர் மீது கொலைவெறி தாக்குதல் நடத்திய சாமிநாதன் மீது பிரிவு *307*, இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் *3(ii)(v)* பிரிவு தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 54. தலித் முதியவருக்குக் காவல்துறை அடி, உதை

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அருகில் உள்ள சந்தையடியூரைச் சேர்ந்தவர். சப்பாணி(71). பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த இவர் ரயில்வே ஊழியராயிருந்து ஓய்வு பெற்று தற்போது விவசாயக்கூலியாக பணியாற்றுபவர், 04.07.09 அன்று வயல்வேலையை முடித்த சப்பாணி தான் வேலை செய்யும் போது வைத்திருந்த அரிவாளோடு மது அருந்தினார். இதனால் கடைத்தெருப்பகுதிகளில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அங்கு வந்த செய்துங்க நல்லூர் காவலர்கள் சேவியர் மற்றும் செல்வராசும் 'பள்ளப்பயலுக்கு திமிறாடா'

என்று சாதிப்பேரைச் சொல்லி திட்டி, இருகைகளிலும் லத்தியால் மாறி மாறி அடித்தனர். இதனால் அவருடைய கைகளில் எலும்பு முடிந்து ரத்தம் கசிந்தது. பிறகு நாட்டு வைத்தியரிடம் அழைத்துச் சென்று சப்பாணியின் வீட்டிற்கு அருகே இறக்கிவிட்டு சென்றனர், செய்துங்க நல்லூர் காவல்துறையினர்.

## 55. பொய் வழக்கில் தலித் குடும்பம் சித்திரவதை

சத்தியமங்கலம் பொன்மேடு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சின்னச்சாமி, லதா, அருந்ததியரான இவர்கள் கோவையிலுள்ள ராஜாத்தி எண்ணெய் தொழிற்சாலையில் பணி செய்தார்கள். அதே தொழிற்சாலையில் கணக்காளராக பணிசெய்த கலியமூர்த்தி என்பவர் கொலை செய்யப்பட்டு இறந்தார். அதனை லதா பார்த்ததினால், *B-6* பீளமேடு காவல்துறையினர் விசாரணை என்ற பெயரில் சின்னச்சாமியை அழைத்துச் சென்று அவரையும் அவருடைய மனைவியையும் துன்புறுத்தி கலியமூர்த்திக்கும் சின்னசாமியின் மனைவிக்கும் தொடர்பிருந்ததாகவும் அதனால் சின்னசாமி கலியமூர்த்தியைக் கொலை செய்ததாகவும் குற்ற எண் 1243/09 302 இந்திய தண்டனைச் சட்டப்பிரிவில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த பொய் வழக்கில் உண்மையான குற்றவாளிகளைக் காவல்துறை கண்டறியவும் இல்லை எண்ணெய் தொழிற்சாலை முதலாளிகளை விசாரிக்கவும் இல்லை.

## 56. தலித் இளைஞரைப் பாலியல் சித்திரவதை செய்த காவல்துறை

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் அருகே உள்ளது சத்யாநகர். இங்கு கூலித்தொழிலாளியாக பணி செய்பவர் சக்திவேல். இவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர். 8.03.09 அன்று சக்திவேலின் நண்பர் செல்வம் என்பவர் ராதாகிருஷ்ணன் நகரில் பணம் வாங்கவேண்டும் என்று சக்திவேலை அழைத்துச் சென்றார். அப்போது கொடுத்த பணத்தை கேட்டதில் வாய்தகராறு எற்பட்டது. இதனால் ராதாகிருஷ்ணன் காலனியில் இருந்த வெள்ளைச்சாமி மற்றும் இளங்கோ என்பவர்கள் நகைகளை திருடியதாக காவல்துறையில் புகார் அளித்தனர். சிவகாசி கிழக்கு காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்ற காவலர்கள் அங்கு சக்திவேலுக்கு பாலியல் சித்திரவதைகளை தொடுத்தும் 'பறதேவிடியா மகனே' என்று சாதியைக் கூறி இழிவுபடுத்தியும் பொய் வழக்குப் பதிவு செய்தனர்.

## 57. மனித உரிமை ஆர்வலரை சித்திரவதை செய்த காவல்துறை

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்திற்கு அருகில் உள்ளது சேத்தூர். இங்கு ஓட்டுனராகப் பணி செய்பவர் பிள்ளையார் என்பவர். இவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். மனித உரிமை தொடர்பான செயற்பாடுகளில் பங்கெடுத்து வருபவர். 22.05.09, வீட்டிலிருந்த பிள்ளையாரை சேத்தூர் காவல்துறையினர் விசாரணை செய்ய வேண்டும் என்று அழைத்துச் சென்று லத்தியாலும், 'சூ' கால்களால் நெஞ்சில் ஏறி மிதித்தும், கெட்ட வார்தைகளால் திட்டி அவமானப்படுத்தியும் சித்திரவதை செய்தனர். மனித உரிமை அமைப்புகளையும், உண்மை அறியும் குழுவினரையும் காவலர்கள் அவமதிப்புச் செய்தனர்.

## 58. அப்பாவி இளைஞர் அடித்துச் சித்திரவதை

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கலைஞர் நகரைச் சேர்ந்தவர் கலிக்கண்ணன். இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளி. அதே ஊரைச் சேர்ந்த விஜயலட்சுமி என்பவரிடம் 1,75,000/- ரூபாய்க்கு ஒரு வீட்டை வாங்கினார். ஆனால் விஜயலெட்சுமியின் சகோதரர்கள் வீட்டை காலி செய்யக்கோரி 23.12.08 அன்று கலிக்கண்ணனுக்கு கொலை மிரட்டல் விடுத்தனர். புகார் செய்ய போன கலிக்கண்ணனை திருப்பத்தூர் காவல்துறையினர் அடித்து துன்புறுத்தி வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்து பெற்று அவரை விடுவித்தனர். கலிக்கண்ணன் கொடுத்த புகாருக்கு எவ்வித நடவடிக்கையையும் காவல்துறையால் மேற்கொள்ளப்படவில்லை.

## 59. வாகனம் திருடிய காவல்துறை: பார்த்த சாட்சி மீது பொய் வழக்கு

விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் புகைப்படக்கடை வைத்திருப்பவர், கண்ணன், இவர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர். 25.10.09 அன்று கண்ணன் அவருடைய கடையின் முன் *Hero Honda TN67 H 5612* வண்டியை வைத்துவிட்டு வெளியே சென்றிருந்தார். அங்கு வந்த விருதுநகர் காவல்துறையினர் அந்த வாகனத்தை எடுத்துச் சென்றனர். இதனைக் கேட்ட கண்ணனை கெட்டவார்த்தைகளால் திட்டியும், துப்பாக்கியால் சுட்டுவிடுவேன் என்று கொலை மிரட்டலும் காவலர்கள் விடுத்தனர். காவல் ஆய்வாளர் மோகன், தம்பராஜன் வண்டியில் இருந்த 5750 ரூபாய் பணத்தையும், வீட்டுப்பத்திரத்தையும் எடுத்துக் கொண்டு வண்டியில் பதிவு சான்றிதழை கிழித்து கண்ணனின் முகத்தில் எறிந்தார். வழக்கறிஞர் விஜயராஜன் மூலமாக வண்டியை மீட்டதால் ஆத்திரமடைந்த காவல் ஆய்வாளரும், சார்பு ஆய்வாளரும் கண்ணன் மீதும், காவலர்கள் வண்டியை எடுத்துச் சென்றதை நேரில் பார்த்த சாட்சியான முத்தையா மீதும்

*U/s. mpc Crime No. 472/09, U/C 51r/w, 177mv act (STC No. 1449/09)*
*mpc No. 473/09, U/S 3r/w, 181 mv act (STC No. 1450/09)*
*mpc No. 474/09, U/S 51r/w, 192 mv act (STC No. 145/09)*
*mpc No. 475/09 U/S, 146r/w 196mv act (STC No. 1452/09)*

பிரிவுகளில் 4 பொய் வழக்குகள் பதிவு செய்தனர்.

## 60. தலித் வழக்கறிஞர் மீது பொது இடத்தில் காவல்துறையினர் தாக்குதல்

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நல்லின்பட்டியைச் சேர்ந்தவர் சுப்புராஜ். பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த இவர் வழக்கறிஞராக பணி செய்கிறார். 12.06.09 அன்று பணியை முடித்து வீட்டிற்கு தனியார் பேருந்தில் வந்துக் கொண்டிருந்த போது சில்லறை பெறுவதில் நடத்துனருக்கும், சுப்புராஜுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு தள்ளுமுள்ளு நடந்தது.

இதனை பார்த்துக் கொண்டிருந்த சாத்தூர் புறக்காவல் நிலைய காவலர்கள் ரெங்கராஜ் மற்றும் அசோக்குமார் பொதுச்சாலையிலேயே சுப்புராஜை அடித்து ஆட்டோவில் ஏற்றி வழக்கறிஞர் பணியை தகாத வார்த்தைகளை கூறி இழிவுபடுத்தினர். மேலும் தரையில் கட்டாயப்படுத்தி உட்காரச் செய்தனர். இதனை அறிந்த மற்ற வழக்கறிஞர்கள் சாத்தூர் காவல்நிலையத்திற்கு வந்து நடத்துனர் மீது புகார் அளித்தனர். அவர்களும் வழக்கறிஞர்கள் சுப்புராஜின் மீது பொதுச் சாலையிலேயே அடித்து அவமானப்படுத்திய காவலர்கள் மீது புகார் அளிக்கவில்லை.

## 61. இருளர் மீது பொய் வழக்கு: காவல்துறை சித்திரவதை

விழுப்புரம் மாவட்டம், மேலக்கொந்தகை கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்பவர் செங்கற்சூளையில் பணி செய்யும் கூலித் தொழிலாளி. இவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர், இருளர்களை பொதுவாகவே காவல்துறையினர் பொய் வழக்கில் பதிவு செய்வது வழக்கமாகும். 31.04.09-ல் உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்தில் கையெழுத்துபோட்டு விட்டு வெளியே வந்த முருகனை எலவனூர் கோட்டை காவல்துறையினர் கைது செய்து நகைகள் திருடியதாக ஒப்புக் கொள்ளச் சொல்லி அடித்துத் துன்புறுத்தி சித்திரவதை செய்தனர். முருகனும் அடி தாங்க முடியாமல் நகைகள் திருடியதாக ஒப்புக் கொண்டார். ஆனால் காவல்துறையினர் சட்டவிரோதமாக முருகனை கைது செய்ததையும் யாருக்கும் தெரியப்படுத்தாமல் இருந்ததையும், அடித்து துன்புறுத்தியதையும் பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## 62. தலித் மாணவரை காலை உடைத்து காவல்துறை சித்திரவதை

ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வைரவனேந்தல் கிராமத்தில் வசிப்பவர் விஜயக்குமார்(20) இவர் சேதுபதி அரசுக் கல்லூரியில் *BBE* படித்துவருகிறார். 8.4.09 தன்னுடைய குடும்பத்தினரோடு ராமநாதபுரம் முருகன் கோயில் திருவிழாவிற்கு சென்றபோது அங்கு காவல் சார்பு ஆய்வாளர் சிவபாலன் மற்றும் 3 காவலர்களும் திருவிழாவுக்கு வந்தவர்களை 'ஓரமா போங்கடா தேவுடியா மகன்களா என்றும் தாயோலி' என்றும் தொடர்ந்து தகாத வார்த்தைகளால் திட்டிக் கொண்டிருந்தனர். திட்டிய சிவபாலனை மாணவர் விஜயக்குமார் திரும்ப பார்த்ததினால் ஆத்திரம் கொண்ட சிவபாலன் இரும்பு பூண் போட்ட லத்திக் கம்பால் மாணவர் விஜயக்குமாரை சரமாரியாக தாக்கினார். அந்த தாக்குதலில் விஜயக்குமாரின் வலதுகால் உடைந்தது. காவல்துறையின் அத்துமீறலை கண்டித்து மறியல் செய்த பொதுமக்கள் மீது பொய் வழக்கு போடப்பட்டது.

## 63. இருளர் பெண் மீது பாலியல் வல்லுறவு

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மாத்தூர் திருக்கை கிராமத்தில் வசிப்பவர் சந்திரா. இவர் இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்த நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த வாசு என்பவர் தனியாக வீட்டில் இருந்த சந்திராவை விறகு கட்டையால் அடித்து பாலியல்

வல்லுறவு கொண்டார். இதனை ஊராட்சி மன்றத்தலைவர் முத்துக்கிருஷ்ணனிடம் சந்திரா கூறியதால் தகாத வார்த்தைகளால் சந்திராவை திட்டி பொது இடத்திலேயே வாசு அடித்தார். 31.12.09–ல் காவல்துறையிடம் புகார் அளிக்கச் சென்ற சந்திராவை மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் புகார் பதிவு செய்ய முடியாது என்று காவலர்கள் மறுத்துள்ளனர்.

## 64. தலித் சிறுமியைப் பாலியல் வன்புணர்ச்சி செய்ய முயன்ற மருத்துவர்

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ளது டி.மாம்பட்டி. இங்கு தன் குடும்பத்தோடு வசிப்பவர் பறையர் சமூகத்தைச் சேர்ந்த சுப்பையா. இவரது மகள் சுஜிதா 5ம் வகுப்பு படித்து வந்தார். 14.1.09 அன்று கடைக்குப் பொருட்கள் வாங்கச் சென்ற சுஜிதாவை மருத்துவர் அன்புச் செழியன் வீட்டிற்குள் அழைத்துச் சென்று பாலியல் பாலத்காரம் செய்ய முயன்றுள்ளார். இதனால் அச்சமடைந்த சிறுமி கேட்டை தாண்டி குதித்து தப்பித்தார். சுஜிதாவின்அண்ணன் மருதுபாண்டியன் இதை மருத்துவர் அன்புச் செழியனிடம் கேட்டதற்கு அவரும் அவருடைய தந்தை சந்திரனும் சாதியைச் சொல்லி திட்டி இழிவுப்படுத்தினர். விடுதலைச் சிறுத்தைக் கட்சியின் உதவியுடன் 14.1.09 அன்று அளிக்கப்பட்ட புகாருக்கு 18.1.09 அன்று நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்ற எண் *01/09 354, 323, IPC, 3(I) (Xi)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகளில் அன்புசெழியன், சந்திரன் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

## 65. தலித் பெண்ணிடம் பாலியல் பலாத்காரம் முயற்சி

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் வட்டத்தில் உள்ளது கலங்காபேரி புதூர் எனும் கிராமம். இங்கு விவசாயக் கூலிகளாக இருப்பவர்கள் மகாலெட்சுமியும் அவரது கணவர் முத்துசாமியும், இவர்கள் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 15.02.09 அன்று வயலில் நீர் பாய்ச்சிவிட்டு வந்த மகாலெட்சுமியை நாடார் சமூகத்தைச் சேர்ந்த அழகுகண்ணன் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தார். இறுதிவரை போராடிய மகாலெட்சுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முடியாத நிலையில் அவரை கொன்றுவிட திட்டமிட்டு அருகிலிருந்த கிணற்றுக்குள் அழகுகண்ணன் தள்ளியுள்ளார். ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் குற்றஎண் 83/09 376, 511 ஆகிய இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளில் அழகுக்கண்ணன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 66. அருந்ததியரை அடித்துத் துன்புறுத்திய கிராம நிர்வாக அலுவலர்

ஈரோடு வட்டத்தில் உள்ள கங்காபுரம் கிராமத்தில் விவசாயக் கூலியாக இருப்பவர் ராமன். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவருடைய இடத்திற்கு பக்கத்து தோட்டத்தில் உள்ள கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த மூர்த்தி, பாலசுப்பிரமணியம், ராஜேந்திரன், நாச்சிமுத்து ஆகியோர் ராமன் குடியிருக்கும் அந்த இடத்தை விட்டு காலிசெய்ய சொல்லி தொடர்ந்து

மிரட்டல் விடுத்து வந்தனர். 15.06.09 அன்று ராமனுடைய குடிசையையும், பிற பொருட்களையும் கிராம நிர்வாக அலுவலர் பார்த்தசாரதியும் மற்ற நால்வரும் அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர். ராமன் அதனை கேட்டபோது 'சக்கலித்தாயோலி' என்று சாதியைக் கூறி இழிவுபடுத்தி பார்த்தசாரதி ராமனை அடித்தார். மாவட்ட ஆட்சியருக்கும், காவல் கண்காணிப்பளாருக்கும் ராமன் அளித்த புகாரின் மீது குற்ற எண் *238/09, 147,323 IPC, 3(I)(X)* தலித் வன்கொடுமை சட்டத்தில் வழக்கு பதிவு செய்தாலும் குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் காவலர்களால் எடுக்கப்படவில்லை.

## 67. சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்த மேல்சாதியினர்

திருநெல்வேலி மாவட்டத்தில் சீதபற்பநல்லூரில் உள்ள சமத்துவபுரத்தில் துரைபாண்டியன் குடும்பம் உள்ளது. இவர் பறையர் வகுப்பைச் சேர்ந்தவர். இவடைய மகள் முத்துலெட்சமி(13) 5ம் வகுப்பு படித்து வருகிறார். 30.9.08, அன்று காட்டுப்பகுதிக்கு மலம் கழிக்கச் சென்ற முத்துலெட்சுமியை அதே ஊரைச் சேர்ந்த மேல் சாதியான பிள்ளை எனும் சமூகத்தைச் சேர்ந்த கணேசன்(43) பாலியல் பலாத்காரம் செய்தார். கணேசன் மேல்சாதியாக இருந்ததினால் முத்துலட்சுமியின் பெற்றோர் ஏதேனும் பிரச்சனை ஏற்படும் என்று பயந்தனர். பிறகு 5 நாட்கள் கழித்து ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண் 593/08, 376, 506 *(II)* இந்திய தண்டனைச் சட்டம் மற்றும 3 (2)(எ) தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவுகளின் வழக்கு பதிவு செய்யப்பட்டு கணேசன் கைது செய்யப்பட்டார்.

## 68. குறவர் பெண்ணைக் கர்ப்பமாக்கிக் கைவிட்ட மேல்சாதி இளைஞர்

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டத்தில் உள்ளது சேவூர் கிராமம். இங்கு வசிக்கும் குறவர் வகுப்பைச் சேர்ந்த கௌரி திருமணமாகி, கணவனை விட்டு பிரிந்த தன் 6 மாத கைக்குழந்தையுடன் வாழ்ந்து வந்தார். கௌரிக்கும் அதே ஊரைச் சேர்ந்த நாடார் வகுப்பைச் சேர்ந்த செல்வனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இதனால் கௌரி கர்ப்பமானார். என்னை முறைப்படி தாலிக்கட்டி மனைவியாக்குங்கள் என்று கௌரி முறையிட்டதன் அடிப்படையில் கௌரியின் சித்தப்பா வீட்டிலேயே 19.3.09 அன்று இருவருக்கும் திருமணம் நடந்தது. ஆனால் நடந்த திருமணத்தை ஒப்புக் கொள்ளாத செல்வனின் வீட்டார் வேறு பெண்ணோடு செல்வனுக்கு மறுதிருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர். மாமனார் பேரரசும், *BJP* ரவி, ஏட்டு ராமமூர்த்தி மற்றும் காவல் ஆய்வாளர் ரமணாதேவி ஆகியோர் 26.04.09 அன்று கௌரியை ஒரு காட்டிற்குள் அழைத்துப் போய் 'குறத்திக்கு நாடார் மாப்புள கேக்குதா' என்று சாதியைச் கூறி இழிவுபடுத்தி, அவரை அடித்து வெற்றுக் காகிதத்தில் கையெழுத்து வாங்கினர். குற்ற எண்.120/09. இந்திய தண்டனைச் சட்டம் *417, 120(B) 147, 365, 323,* பெண்கள் சித்திரவதை தடுப்பு சட்டத்தின் கீழ் *506(II)* பிரிவுகளிலும் பிரிவு 4 மற்றும் *3(I)(X)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றவாளிகள் மீது சேவூர் காவல்துறையால் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

## 69. மேல்சாதியினரின் கொடுமைகள்: ஊரைக் காலி செய்த அருந்ததியர்கள்

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனில் உள்ளது நத்தமேடு கிராமம். இங்கு வன்னியர்கள் அதிக எண்ணிக்கையிலும், அருந்ததியர்கள் குறைந்த எண்ணிக்கையிலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த கிராமத்தில் பல வருடங்களாக தீண்டாமைக் கொடுமைகளும், பெண்களை ஆபாசமாக திட்டுவதும், இரவு நேரங்களில் அருந்ததியப் பெண்களிடம் தவறாக நடக்க முயற்சிப்பதும் பல ஆண்டுகளாக தொடர்கின்றன. இதனை எதிர்த்து கேட்கும் அருந்ததியர்களுக்கு அடிவிழும். மேலும் தேர்தல் நேரத்தில் குறிப்பிட்ட சின்னத்திற்குத்தான் ஓட்டுப் போடவேண்டும் என்ற கட்டாயப்படுத்துதலும் தொடர்கின்றன. எவ்வித அடிப்படை வசதிகளும் அருந்ததியர்களுக்கு இல்லாத சூழ்நிலையில் நத்தமேடு கிராமத்திலுள்ள அனைத்து அருந்ததியர்களும் ஊரை காலி செய்து அருகில் உள்ள சுங்கரஅள்ளியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

## 70. தலித் பெண் பாலியல் பலாத்காரம்

திருப்பூர் வட்டம், காம்பவுண்டு கொடிகம்பம் தெருவில் வசிப்பவர் சரண்யா(15), அதே தெருவில் உள்ள வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த ரஞ்சித்குமார்(22) என்பவருக்கும் சரண்யாவிற்கும் பழக்கம் எற்பட்டது. இதனையே சாதகமாக்கி ரஞ்சித்குமார் சரண்யாவை பாலியல் பலாத்காரம் செய்தார். பலாத்காரத்தை வெளியே கூறினால் கொலை செய்வதாகவும், மிரட்டினார். 3.7.09 அன்று காய்ச்சலினால் அவதிப்பட்ட சரண்யாவை ஸ்கேன் செய்து பார்த்தபோது 4 மாதம் கர்ப்பம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை சரண்யாவின் அப்பாவும், சரண்யாவும் மற்றவர்களும் கேட்டபோது ‘பற நாயே’ என்று இழிவுபடுத்தியும் தான் பலாத்காரத்தை செய்யவில்லை என்றும் ரஞ்சித்குமார் மறுத்தார். பிறகு கட்டப்பஞ்சாயத்து செய்து ரஞ்சித்குமாரின் தந்தை கருவைக் கலைக்க கோரி ரூ.10,000/- த்தை சரண்யா குடும்பத்தாரிடம் தந்தனர். ஆனால் அதனை வாங்க மறுத்த சரண்யா குடும்பத்தினர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் செய்து *376(i), 3 (2) (5)* தலித் வன்கொடுமைத்தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளி ரஞ்சித்குமார் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

## 71. உரிமைக்காகப் போராடிய அருந்ததியர்கள்: சித்திரவதை செய்த காவல்துறை

ஈரோடு மாவட்டம், கோபி தாலுக்காவில் உள்ளது பீலியம்பாளையம் இங்கு வசித்துவரும் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாரியப்பன் என்பவர், கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ஈஸ்வரனுக்குச் சொந்தமான திருமணமண்டபத்தை வாடகைக்கு கேட்டபோது அதனை தர மறுத்துள்ளார். இதனால் போராட்டம் நடத்தி அம்மண்டபத்தை வாடகைக்கு பெற்றனர். இந்த நிகழ்வில் காவல்துறைக்கு அதிகமாக நெருக்கடிகள் இருந்தது.

இதனைப்போன்றே கோயில்நுழைவுப் போராட்டங்கள், ஈழத் தமிழர் ஆதரவு என பல செயற்பாடுகளை மாரியப்பன் மற்றும் அவரது நண்பர்கள் செய்துவந்தனர். இதனால் ஆத்திரமடைந்த காவல்துறையினர் 04.02.09 அன்று திருப்பூர் ஆய்வாளர் ஈஸ்வரன், துணைக்காவல் கண்காணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ஒட்டுனர் விஜய் உள்ளிட்ட 15 காவலர்கள் மாரியப்பன் வீட்டிற்குள் நுழைந்து அவரையும், தங்கவேல், ரங்கசாமி, வடிவேல், தங்கதுரை, சத்தியராஜையும் கைது செய்து, சிறையில் அடைத்தனர். அங்கு அவர்களை 'சக்கிலிய தாயோலிங்களா உங்களுக்கு கவுண்டர் வீட்டு மண்டபம் கேட்குதா' என்று சாதியைக் கூறி இழிவுப்படுத்தியும், லத்தியால் உடல் முழுக்க அடித்தும், கட்டிங் பிளேடால் நகக்கண்களை பிடுங்கியும், *DSP* பாலசுப்பிரமணியம், ஒட்டுநர் விஜய், ஆய்வாளர் சங்கரன் ஆகியோர் அவர்களுடைய ஆண் உறுப்பை வாயில் வைத்தும், ஆண் உறுப்பை கட்டிங் பிளேடால் நசுக்கி இழுத்தும் கடும் சித்திரவதை செய்து அடித்தனர். தாகமாயிருக்கிறது என்று கூறிய அவர்களுக்கு சாக்கடை கழிவு நீரையும் கட்டாயப்படுத்திக் கொடுத்தனர். இவ்வளவு கொடுமைகளுக்குப் பிறகு 04.02.09 அன்று பொதுவேலை நிறுத்தத்தின் போது பேருந்தின் கண்ணாடிகளை உடைத்தார்கள் என்று பொய் வழக்கு பதியப்பட்டு, வெள்ளைத்தாளில் கையெழுத்து வாங்கி குற்ற எண் *30/09, 31/09, TNPP Act 323, 147, 120 b* பிரிவுகளில் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

## 72. மேல்சாதிப் பெண்ணைக் காதலித்ததால் தலித் பெற்றோர்கள் சித்திரவதை

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுக்காவில் உள்ளது கடம்பக்குடி. இங்கு மருத்துவராக பணியாற்றும் சிவக்குமார் என்பவரிடம் உலகராஜ் ஒட்டுனராக பணியாற்றினார். இவர் பறையர் சமுகத்தைச் சேர்ந்தவர். அதே ஊரைச் சேர்ந்த சேர்வை சமூகத்தைச் சேர்ந்த நித்யா என்பவரை உலகராஜ் காதலித்து வந்தார். 14.04.09 அன்று காரில் வந்த நித்யாவின் தந்தை சுப்பிரமணி மற்றும் சில அடியாட்கள் தன் மகளைக் காணவில்லை எனக்கூறி உலகராஜின் பெற்றோர்களான காளிமுத்து, செல்வம் இருவரையும் கட்டாயப்படுத்திக் காரில் ஏற்றி மணியின் வீட்டில் வைத்து 'பறசாதி நாயிக்கு எம் பொண்ணைக் கேட்குதா' என்று சாதியைச் கூறி இழிவுப்படுத்தி அடித்து துன்புறுத்தினர். ரூ.15,000/-யை கொண்டு வரச் சொல்லி கேரளா ஜோதிடரிடத்தில் கணித்து பார்த்தனர். தன் மகளை கடத்திசென்று விட்டதாக சுப்பிரமணி புகாருக்கு ஆதரவு தெரிவித்த தேவகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அனுராதா, பாதிக்கப்பட்ட உலகராஜ்ஜின் பெற்றோர்கள் சார்பாக எந்த நடவடிக்கையும் வழக்கும் பதிவு செய்யவில்லை.

## 73. கோயில் உரிமையைக் கேட்ட தலித்துகள் படுகொலை

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோயில் தாலுக்காவில் உள்ளது செந்தட்பு கிராமம். இங்கு பள்ளர், யாதவர், செட்டியார், சமூக மக்கள் வாழ்கின்றனர். செந்தட்பு கிராமத்திலுள்ள முப்பிடாதி அம்மன் கோவில் திருவிழாவிற்கு அனைத்து சமூக மக்களும் 1000 ரூபாய்

வரியாக கொடுப்பார்கள், ஆனால் பள்ளர் மட்டும் கோயிலுக்குள் நுழைந்து சாமியை வழிபடமுடியாது. இதுபற்றிய புகார் காவல்துறையிடம் பள்ளர்கள் சார்பாக கொடுத்த பிறகும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காவல் துணைக் கண்காணிப்பாளர் பாலக்கிருஷ்ணன், வட்டாட்சியர் அப்துல்கலாமும் நீதிமன்றத்தில் முடித்துக் கொள்ளுங்கள் என்று மேல் சாதியினருக்கு சாதகமாக செயல்பட்டனர். விரக்தியடைந்த பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ஈஸ்வரன் மற்றும் பரமசிவம் பல்வேறு அரசுத்துறைகளுக்கு புகார் அளித்தார். இதனால் ஆத்திரம் கொண்டு ஈஸ்வரனையும், பரமசிவனை 20பேர் கொண்ட கும்பல் படுகொலை செய்தது.

## 74. தலித் பெண்ணைக் கர்ப்பமாக்கி வேறு திருமணத்திற்கு முயற்சி

திருவள்ளூர் வட்டத்திலுள்ளது வாசினாம்பட்டு கிராமம். இங்கு வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த தார்மீனா(20) என்பவரை அதே ஊரைச் சேர்ந்த யாதவர் வகுப்பு மணிமாறன் என்பவர் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டி அவரை காதலிக்க வைத்தார். திருமணம் செய்வேன் என்று ஆசைவார்த்தை கூறி பல முறை கட்டாய வல்லுறவு மேற்கொண்டார். இதனால் திருமணமாகாமலே தார்மீனா குழந்தை பெற்றார். இதனை மணிமாறனின் தந்தை சண்முகத்திடம் கேட்டபோது 'தாழ்ந்த சாதி' என்பதை காரணம் கூறி மறுத்து பணம் தருவதாக கூறி திருமணத்திற்கு மறுத்தார். மகன் மணிமாறனுக்கு வேறு திருமண ஏற்பாட்டையும் செய்தார். திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் தார்மீனா புகார் அளித்தும் உதவி ஆய்வாளர் பத்ராதேவி குற்றம் செய்த மணிமாறன் குடும்பத்திற்கே ஆதரவாக செயல்பட்டார். குற்ற எண் 10/08, 417, 316, 506(I) இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தாலும் மணிமாறன் உதவி ஆய்வாளர் பத்ராதேவி உதவியுடன் தப்பியுள்ளார். சாதியை இழிவுபடுத்தியதோடு சாதியைக் காரணமாக கூறி திருமணத்தை தடை செய்த சண்முகம் மற்றும் மணிமாறன் மீது தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

## 75. தலித் பிணத்தை அடக்கம் செய்ய வழிவிடாத மேல்சாதியினர்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுக்கா, அந்திவாடி கிராமத்தில் தலித்துகளும், மேல் சாதியினரான லிங்காயத்துகளும் வாழ்ந்து வருகின்றனர். தலித்துகள் தங்கள் உறவினர்களின் பிணத்தை அடக்கம் செய்வதற்குரிய சுடுகாட்டுப் பாதை பல ஆண்டுகளாகவே பிரச்சனையாக உள்ளது. இந்நிலையில் 26.06.09 அன்று தலித் சமூகத்தைச் சேர்ந்த நாகம்மா (60) எனும் மூதாட்டி இறந்து போனார். தலித்துகளின் சுடுகாட்டிற்கு செல்லும் பாதை புதர்கள் மண்டிக் கிடந்ததால், லிங்காயத் அய்யர் சமூகத்தைச் சேர்ந்த ருத்ரய்யாவின் (70) நிலத்தின் வழியாக பிணத்தை தூக்கிச் செல்ல முற்பட்ட போது லிங்காயத்து சமுதாயத்தினர் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்து சவ ஊர்வலத்தை போக விடாமல் தடுத்துள்ளனர். பிறகு காவல்துறை மற்றும் வருவாய் துறையினரின் சட்ட ரீதியான

தலையீட்டுக்குப் பிறகு எவ்வித பிரச்சனையுமின்றி நாகம்மாளின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. மீண்டும் இவ்வழியாக சவ ஊர்வலம் வரக் கூடாது என்று ருத்ரய்யா எச்சரிக்கை செய்துள்ளார். தலித்துகளுக்கு நிரந்தர பொது வழி இல்லாதிருப்பதே இப்பிரச்சனைக்குரிய காரணமாகும்.

## 76. அவரசச் சிகிச்சைக்காகக் கர்ப்பிணி மனைவியை அழைத்துச் சென்ற கணவனை சிறைக்குள் தள்ளிய மருத்துவர்கள்

தஞ்சாவூர், செங்களச்சியம்மன் கோவில் கள்ளர் சமூக பாலசுப்ரமணியம் மகன் சங்கரன் (29). இவருடைய மனைவி செல்வராணி 11.08.09 அன்று கடுமையான பிரசவ வலி செல்வராணிக்கு ஏற்பட்டு, வீட்டிலேயே குழந்தை பிறந்துள்ளது. ஆனால் குழந்தையின் நஞ்சுக் கொடி வராததால் வலியால் அவதிப்பட்டுள்ளார். இதனால் செல்வராணியை அரசு மருத்துவமனைக்கு சங்கரன் அழைத்துச் சென்றுள்ளார். அங்கு வாயிற் கதவை திறப்பதிலும் ஸ்ட்ரெச்சரை எடுப்பதிலும் தள்ளுமுள்ளு ஏற்பட்டுள்ளது. சங்கரனிடம் ஸ்ட்ரெச்சரை எடுக்க விடாமல் மருத்துவர் ராஜேந்திரன் தடுத்து அவரை அடித்துள்ளார். சீருடையில் மருத்துவர் இல்லாததினால் சங்கரனுக்கு அவர் மருத்துவர் என்பது தெரியவில்லை. மருத்துவர் எனத் தெரிந்ததும் மன்னிப்புக் கேட்கச் சென்ற சங்கரனை தனி அறையில் பூட்டி அவர் முகத்தில் காரி உமிழ்ந்துள்ளார். மேலும் காவல்துறைக்கு தொடர்பு கொண்டு குடிபோதையில் மருத்துவர்களிடம் பிரச்சனை செய்ததாக பொய் புகார் எழுதி சங்கரனையும், அவரது நண்பர் நீலமுரளிக்கிருஷ்ணன் என்பவரையும் குற்ற எண் *626/09, IPC, 332, 379* தமிழ்நாடு மருத்துச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து திருச்சி சிறையிலடைத்தனர்.

## 77. தலித் குடும்பத்தை ஊர் விலக்கம் செய்த பஞ்சாயத்து

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, செம்மங்குடி பறையர் சமூகத்தைச் சேர்ந்த நாகலட்சுமியின் மகள் மகேஸ்வரி, உறவினரான ரமேஷை திருமணம் செய்திருந்தார். மகேஸ்வரியிடம் கணவர் ரமேஷின் குடும்பத்தினர்கள் அடிக்கடி சண்டையிட்டதால் தன் தாய் நாகலட்சுமியின் வீட்டிற்கு வந்திருந்தார். மகேஸ்வரியின் குடும்பப் பிரச்சனைப் பற்றி செம்மங்குடியில் பெரியவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது. பஞ்சாயத்தில் சரியான முடிவுகள் எடுக்கப்படாததாலும், ஊர் மக்கள் மகேஸ்வரியின் குடும்பத்தினரை ஏளனமாக பேசியதாலும் மகேஸ்வரியின் தாயார் கணவர் வீட்டிற்கு மகேஸ்வரியை அனுப்பி வைத்தார். இதனால் பஞ்சாயத்து பேசி முடிக்காமல் எப்படி உன்னுடைய மகளை அனுப்பலாம் என்று பஞ்சாயத்தார்கள், பாஸ்கர், தங்கராஜ், ஜெயராமன், தங்கையன், ரவிச்சந்திரன் ஆகியோர் நாகலட்சுமியின் வீட்டைப் பூட்டி ஊருக்குள் வரக் கூடாது எனவும் சாமான்கள் கடைகளில் வாங்குதல், பிறருடன் பேசுதல், வேலை பார்த்தல், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல், தண்ணீர் பிடித்தல் என பல செயல்பாடுகளுக்கு தடை விதித்து ஊர்விலக்கம் செய்துள்ளனர். இதனை மீறி நாகலட்சுமியின் குடும்பத்தாரோடு பேசுபவர்களுக்கு 2000/- ரூபாய் அபராதம் விதித்துள்ளனர். மேலும் ஊர் பொது மக்கள் குச்சிக்காரி, தேவிடியா என்று

தகாத வார்த்தைகளால் நாகலட்சுமியின் குடும்பத்தினரையும் இழிவுபடுத்தியும், ராசி மகன் சரவணன் என்பவர் நாகலட்சுமியையும், மகேஸ்வரியையும் அடித்து துன்புறுத்தியுள்ளனர். இதனால் கிராம பஞ்சாயத்து அலுவலக வெளிப்புறத் திண்ணை, செம்மங்குடி பஞ்சாயத்து அலுவலக வெளிப்புற திண்ணைகளில் உறங்கி நாடோடிகளாக நாகலட்சுமியின் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். குடவாசல் வட்டாட்சியர் தலைமையில் 29.08.06 அன்று அமைதிப் பேச்சு வார்த்தையும், உயர் அதிகாரிகளுக்கு நினைவூட்டல் மனுவை 30.07.09 அன்று நாகலட்சுமியின் குடும்பத்தினர் அனுப்பியும் காவல்துறையோ, அரசு துறையினரோ எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 78. அதிமுக-வில் சேராததினால் ஊர் விலக்கு

நாகை மாவட்டம், திருக்குவளை தாலுக்கா, சொர்ணகுடி பறையர் சமூகத்தைச் சேர்ந்த சுப்ரமணியன் மகன் செந்தில்குமார். பட்டதாரியான இவர் விவசாயம் செய்து வருகிறார். செந்தில்குமாரின் குடும்பத்தினர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து விட்டு தற்போது திமுக கட்சியில் இருக்கின்றனர். இவர்களோடு கட்சியில் இருந்தவர்களெல்லாம் அதிமுக கட்சியில் இணைந்துள்ளனர். அவ்வாறு அதிமுக கட்சியில் இணையாத செந்தில்குமாரின் குடும்பத்தினரை ஊராட்சி மன்ற தலைவர் பறையர் சமூக கணேசன் என்பவர் செந்தில்குமாரின் வீட்டிற்கு யாரும் போகக் கூடாது என்று கூறி அவர்கள் தண்ணீர் பிடிக்கும் குழாயை உடைத்தும், தொந்தரவு செய்துள்ளார். சொந்தச் செலவில் தண்ணீர் குழாய் போட்டும் அதனையும் கணேசனும், அவரது ஆட்களும் உடைத்துள்ளனர். மேலும் செந்தில்குமாரின் தந்தை சுப்ரமணியன் இறந்த போதும், அவருடைய வீட்டிற்கு உறவினர்களும் ஊர்காரர்களையும் வரவிடாமல் தடுத்துள்ளனர். அதனையும் மீறி செந்தில்குமாரின் பெரியப்பா சுப்ரமணியனின் இறப்பில் கலந்து கொண்டதால் அவரையும் ஊர் விலக்கம் செய்துள்ளனர்.

## 79. மேல்சாதி ஊராட்சி மன்றத் தலைவரின் ஊழலை வெளிப்படுத்திய தலித்துகள் மீது தாக்குதல்

கடலூர் மாவட்டம், சிதரம்பரம் தாலுக்கா, கிளாவடிநத்தம் கிராமம்,தலித் சமூகத்தைச் சேர்ந்த தர்மன் மகன் ராமசாமி (53). இவர் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தில் கிளை அமைப்பாளராக பணி செய்து வந்தார். வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த குமார் இந்த கிராமத்தில் ஊராட்சி மன்றத்தலைவராகயிருந்தார். இவர் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் இறந்தவர்கள், ஊரில் இல்லாதவர்கள் சிறைக்கு சென்றவர்களின் பெயரையும் பட்டியலில் இணைத்து பல லட்சம் மோசடி செய்ததை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி ராமசாமி அம்பலப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் சார்பில் ஊராட்சி மன்றத் தலைவரைக் கண்டித்துச் சிதம்பரம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதனால் 03.07.09 அன்று குமாரின் தலைவர் பதவியும் பறிபோனது.

16.07.09 அன்று மனித உரிமைக் கல்வி ஆசிரியர் தம்பிராஜும், ராமசாமியும் செங்கல் வாங்குவதற்காக வன்னியர் குடியிருப்புப் பகுதிக்குள் சென்றனர். இருவரையும் குமாரின் பெரியப்பா மகன் கிரி அன்பழகன், அசோகன், கலைவாணன், ஆனந்தராஜ், சோப்ராஜ் ஆகியோர் இரும்பு கம்பிகளாலும் மூங்கில் தடிகளாலும் அடித்து காயப்படுத்தினர். தன் தந்தை ராமசாமியை காப்பற்ற வந்த மகன் ராஜேசையும் அடித்து துன்புறுத்தியுள்ளனர். தம்பிராஜ், ராமசாமி இருவரின் இருசக்கர வாகனத்தையும் அடித்து நொறுக்கியுள்ளனர். புவனகிரி காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்ற ராமசாமி, தம்பிராஜ்ஜை ஆய்வாளர் ஞானசேகரன் மருத்துவமனையில் சிகிச்சை பெறுங்கள் என்று அனுப்பி விட்டு, ஊராட்சி மன்ற தலைவருக்கு சாதகமாக செயல்பட்டு ராமசாமி, தம்பிராஜ், ராமசாமியின் மகன் ராஜேஸ், உறவினர் சுப்ரமணி, பொன்னுசாமி ஆகியோர் மீது குற்ற எண் *359 u/s 147, 148, 341, 294, 324, 506 (ii) r/w 379 IPC* கீழ் பொய் வழக்கு பதிவு செய்தார்.

## 80. அருந்ததியர்-பறையர் - நாயக்கர் தகராறு:

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுக்கா, அனுப்பர்பாளையத்தில் வசிப்பவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர் ரங்கன் மகன் சின்னகுருநாதன். இங்கு நாயக்கர்கள் பெரும்பான்மையினராகவும் அருந்ததியர்கள் குறைந்த எண்ணிக்கையிலும் வசித்து வருகின்றனர். அனுப்பர்பாளையத்தில் நாயக்கர்கள் ஆற்றில் துணி துவைக்கும் போது தலித்துகள் துணி துவைக்கக் கூடாது, நாயக்கர்கள் வரும் போது கட்டிலில் அமரக் கூடாது, இரட்டை டம்ளர் முறைகள், செருப்பு அணியத் தடை, ஊருக்குள் மிதிவண்டியில் போகக் கூடாது, பள்ளிகளில் நாயக்கர் குழந்தைகளுக்கு முதலில் உணவு பறிமாறுதல் எனப் பல்வேறு தீண்டாமைக் கொடுமைகள் நடைமுறையில் இருந்து வருகிறது. இந்நிலையில் 13.09.09 அன்று பறையர் சமூகத்தைச் சேர்ந்த கோயில் மணிகண்டனும் வேறு சிலரும் அதே சமூகத்தை சேர்ந்த ரங்கம்மாள் என்பவர் இறந்து போனதால் அருந்ததியர் சமூகத்தினர் வழிபடுகின்ற அன்னமார் கோவிலின் முன்பு பாடை கட்டிக் கொண்டிருந்தனர். அப்போது சின்னகுருநாதன் கோயில் முன்பு கட்டாமல் ஒதுக்குபுறமாகக் கட்டுங்கள் என்று கூறியுள்ளார். இதனால் கோபடைந்த பறையர் சமூகத்தினர் பஞ்சாயத்து கூறும் நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த செல்வராஜிடம் கூறியுள்ளனர். செல்வராஜ் ‘‘சக்கிலிய தாயோலி’’ என்று அம்மாவை இழிவுபடுத்தும் தகாத சொற்களைக் கூறி தென்ன மட்டையால் சின்னகுருநாதனை அடித்து, செருப்புக் காலால் எட்டி உதைத்துள்ளனர். ஓடி வந்த பெண்களையும், ‘‘சக்கிலிய கண்டாரோளிகளே’’ என்றும் இழிவாக திட்டியுள்ளார். மேலும் அனுப்பர்பாளையத்தில் உள்ள 30 அருந்ததியர்கள் வீட்டிற்கு யாரும் செல்லக் கூடாது என்றும் தடை விதித்துள்ளார். ரத்தம் வருகின்ற அளவிற்கு நாயக்கர் சமூக செல்வராஜன் தாக்கியதால் கோபி அரசு மருத்துவமனையில் 6 நாட்கள் உள் நோயாளியாக சின்னகுருநாதன் சிகிச்சை பெற்று, செல்வராஜின் மீது சத்தியமங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் குற்ற எண் 667/09, தலித் வன்கொடுமைச் சட்டப்பிரிவு *3(1) (x)* ன் கீழும் இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 324ன் கீழும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் வழக்கை திரும்ப பெற்றுக் கொள்ளுமாறு நாயக்கர் சமூகத்தை சேர்ந்தவர்கள் சின்னகுருநாதனை மிரட்டி வந்தனர். காவல் துறையும் பாதிப்பை ஏற்படுத்திய செல்வராஜை கைது செய்யவில்லை.

## 81. விஷ வாயு தாக்கி தலித் தொழிலாளி பலி

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், ராணிப்பேட்டை காரைப்பகுதியைச் சேர்ந்த ஆதிதிராவிடர் ஜெயக்குமாரின் மகன் ஜெயச்சந்திரன். இவர் அம்மூர் சாலையில் உள்ள *SLS* தோல் தொழிற்சாலையில் டிரம் ஆப்ரேட்டராக பணி செய்தார். 02.02.09 அன்று தோலை சுத்தம் செய்வதற்காக டிரம்மில் சோடியம் சல்பூரிக் ஆசிட்டை ஊற்றிய ஜெயச்சந்திரனை மேற்பார்வையாளர் டிரம் மூடியை திறக்கச் சொல்லியுள்ளார். மூடியைத் திறந்த ஜெயச்சந்திரன் விஷ வாயு தாக்கி அந்த இடத்திலேயே மயக்கமடைந்தார். அவருடன் மணி என்பவரும் சந்திரனும் மயக்கமடைந்துள்ளனர். நாவல்பூர் பெஞ்சமின் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக ஜெயச்சந்திரனை அழைத்துச் சென்றும் அவர் இறந்துள்ளார். குற்ற எண் 101/09 174 குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கீழ் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்தாலும் நஷ்டஈடாக 4 1/2 லட்சம் பணம் கொடுத்து சமரசம் செய்துள்ளனர்.

## 82. கழிவு நீர்த் தொட்டியைச் சுத்தம் செய்த போது இறந்த மூன்று தொழிலாளிகள்

ஈரோடு மாவட்டம், சித்தோடு பகுதியில் உள்ள *KM4* டேனரி தோல் தொழிற்சாலையில் அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த கிருஷ்ணன் என்பவரும், இஸ்லாமியர்களான முஸ்தபா மற்றும் நவாப்ஜான் ஆகிய மூவரும் பணி செய்துள்ளனர். 28.05.09 அன்று கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்யும் போது கிருஷ்ணன் என்பவர் தவறி தொட்டியில் விழுந்துள்ளார்.அவரைக் காப்பாற்ற சென்ற முஸ்தபாவும் நவாப்ஜானும் தொட்டியிலேயே இறந்துள்ளனர். தோல் தொழிற்சாலை உரிமையாளர்கள் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்ச ரூபாயும், 7000/– ரூபாய் இறுதிச் சடங்கிற்காகவும் வழங்கி எவ்விதப் பிரச்சனையும் இல்லாமல் சமரசம் செய்துள்ளனர்.

## 83.இருளர் பெண் மீது தாக்குதல்

புளிச்சம்பள்ளி, கி.வானூர் வட்டம், இருளர் சமூக சகாதேவன் மகள் நாகவள்ளி. இவர் 30.09.09 அன்று கடையில் சாமான் வாங்கிவிட்டு வந்து கொண்டிருக்கும் பொழுதும் காலனிப் பகுதியைச் சேர்ந்த காளிமுத்து (22) இருசக்கர வாகனத்தில் இடிப்பது போல நெருங்கி வந்து, வண்டியில் உட்காரு என்று கூறியுள்ளார். தன் உறவினர்களுடன் காளிமுத்துவின் அண்ணன் பாலுவிடம் இதுபற்றிக் கூறுவதற்காக நாகவள்ளி சென்றுள்ளார். அதனால் கோபமடைந்த காளிமுத்து, நாகவள்ளியை தகாத வார்த்தைகளால் இழிவுபடுத்தியும், அவரையும் உறவினர்களையும் அடித்துள்ளார். மேலும் எங்க பார்த்தாலும் அடிப்பேன் என்றும் மிரட்டியுள்ளார். காவல் நிலையத்தில் நாகவள்ளி அளித்த புகாரின் பேரில் காளிமுத்துவை கைது செய்து சிறையிலடைத்தனர்.

## 84. தலித் மூதாட்டியைக் கத்தியைக் காட்டித் துரத்தல்

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், கன்னிவாடி தாலுக்கா, அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த லட்சுமணன் மனைவி ஆரம்மாள் (60). இவர் விவசாயக் கூலி தொழிலாளியாக பணி செய்து வந்தார். 24.12.09 அன்று ஆரம்மாளுக்கு சொந்தமான கோழி, ஆசாரி சமூகத்தைச் சேர்ந்த மாணிக்கம் என்பவருடைய நிலத்தில் போய் மேய்ந்துள்ளது. இதனால் மாணிக்கம் மதுபோதையில் ஆரம்மாளை ''சக்கிலிய தாயோளி, சக்கிலிய கண்டாரோலி'' என்று சாதியைக் கூறி இழிவுப்படுத்தியும், கத்தியால் ஆரம்மாளையும், அவரது மகன்களையும் கொலை செய்வதாக மிரட்டியும் ஆரம்மாளை கன்னிவாடி பேருந்து நிலையம் வரை மாணிக்கம் துரத்தியுள்ளார். 24.12.08 அன்று ஆரம்மாளும், அவரது மகன்கள் கருப்புசாமி மற்றும் முருகேசன் ஆகியோர் மூலனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். மாணிக்கத்தின் மீது குற்ற எண் *461/08 3(1) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவிலும் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்தாலும், மாணிக்கத்தை தேடிக் கொண்டிருக்கிறோம் எனக் கூறி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

## 85. அருந்ததிய இளைஞரை அடித்துச் சித்திரவதை செய்த மேல்சாதியினர்

திருப்பூர் மாவட்டம், அவினாசி தாலுக்கா, செட்டிப்புதூர் கிராமம் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த குப்பன் மகன் பழனிச்சாமி (36). இவர் கூலித் தொழிலாளி. 05.08.09 அன்று இரு சக்கர வாகனத்தில் தொட்டியனூர் ஆற்றுப்பாலத்தில் பழனிச்சாமி வந்து கொண்டிருந்த போது, எவ்வித காரணமுமின்றி மது போதையில் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த மயில்சாமி, சென்னியப்பன், சந்தனமூர்த்தி, விஜயக்குமார், விஜய், பிரகாஷ், குருசாமி ஆகியோர் வழிமறித்து ஏண்டா விசில் அடித்தாய் என்று கேட்டுள்ளனர். நான் அடிக்கவில்லை, நான் அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த குப்பன் மகன் என்று கூறியுள்ளார். சாதியை தெரிந்து கொண்ட அந்த குண்டர் கும்பல் பழனிச்சாமியின் சட்டை, வேட்டியை கழற்றி அவரின் கைகளை பின்னால் கட்டி தென்னமட்டையில் அடித்து துன்புறுத்தியுள்ளனர். மேலும் அவரிடமிருந்த 3500/- ரூபாய் பணத்தையும்,கேமரா உள்ள கைபேசியையும் பிடுங்கியுள்ளனர். தகவலறிந்த பழனிச்சாமியின் தந்தை குப்பன் சென்று தன் மகனை கவுண்டர்கள் அடிப்பதை தடுத்ததினால் அவரையும் கீழே பிடித்து தள்ளியுள்ளனர். பழனிச்சாமி மனைவி தங்கமணியை சக்கிலியக் கண்டாரோலி என்று தகாத வார்த்தைகளால் இழிவுபடுத்தி கன்னத்தில் அறைந்துள்ளனர். மேலும் காவல் நிலையத்தில் எவ்வித புகாரும் செய்யக் கூடாது என்று பழனிச்சாமியை அந்த கும்பல் மிரட்டி வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கியுள்ளனர். பழனிச்சாமி ஏதேனும் தங்கள் மீது புகார் கொடுப்பார் என்று அஞ்சிய கவுண்டர்கள் பழனிச்சாமியின் மீது கவுண்டர் பெண்ணை கையைப் பிடித்து இழுத்ததாக காவல் துறையின் உதவியோடு பொய் வழக்கு பதிவு செய்தனர். மனித

உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தின் தலைமீட்டிற்குப் பிறகும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய சேவூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரமாதேவி மறுத்துள்ளார். கோவை அரசு மருத்துவமனையில் காயமடைந்த பழனிச்சாமி உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். பழனிச்சாமி கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 247/09, தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவு *3(1) (x)*ன் கீழும், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் *147, 342, 323, 506(1) 379 (NP)*ன் கீழும் தாக்குதல் தொடுத்த கவுண்டர்கள் மீது புகார் பதிவு செய்யப்பட்டது. பழனிச்சாமியின் மீது *246/09 u/s 279, 337, 354* இந்திய தண்டனைச் சட்டப்பிரிவின் கீழ் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

## 86. அருந்ததியர் வீட்டை அபகரித்த மேல்சாதியினர்

கோவை மாவட்டம், சௌரிப்பாளையம், நேவி நகர், அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாசாணி (62), சுப்பாத்தாள் (52) தம்பதிகள் மகன், மருமகள், பேரன்களுடன் புறம்போக்கு நிலத்தில் கடந்த 25 ஆண்டுகளாக வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய நிலத்தை அபகரிக்கும் நோக்கில் தொல்லை கொடுத்த அதிமுக உறுப்பினர் தேவர் சமூகத்தைச் சேர்ந்த புரட்சிதம்பி, சேரலாதன் மற்றும் நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த ராஜேந்திரன், சுப்புராஜ், கருப்புசாமி ஆகியோர் 30.03.07 அன்று சுப்பத்தாளின் வீட்டை காலி செய்ய சொல்லி தகராறு செய்தனர். இதற்கு மறுத்த சுப்பாத்தாளின் வீட்டை அடித்து நொறுக்கி, பிய்த்து எறிந்தனர். மேலும் வீட்டிற்குள் நுழைந்த சுப்பத்தாளின் குடும்பத்தினரை தீயை வைப்போம் என்று மிரட்டியும் பெண்களை தகாத வார்த்தைகளாலும் இழிவுப்படுத்தியும் ‘‘தெருவிலேயே..... செய்யணும்’’ என்று பாலியல் ரீதியாக தகாத சொற்களால் திட்டியும் அவமதிப்பு செய்துள்ளனர். 31.03.09 அன்று சுப்பத்தாளின் குடும்பத்தினர் கோவை பீளமேடு பி. 6 காவல் நிலையத்தில் புகார் அளித்தும் காவல் உதவி ஆணையர் கோபால்சாமி பணபலம், அரசியல் செல்வாக்கு பெற்ற அவர்களை ஒன்றும் செய் முடியாது எனக் கூறியுள்ளனர். குற்ற எண் *397/09, u/s 147, 448, 427, 323, 506 (1)* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் மற்றும் *3(1) (x)* தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 87.அருந்ததியர் குடிசைகளைப் பிய்த்து எறிந்து ஆக்கிரமிப்பு

ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்கா, சங்கரப்பாளையம் கிராமத்தில், அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த பழனிச்சாமி லட்சுமி தம்பதிகள் உள்ளிட்ட பல்வேறு அருந்ததியர் குடும்பங்கள் இங்கு உள்ளனர். 11.12.09 அன்று பழனிச்சாமிக்கு சொந்தமான இடத்தில் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த முருகன் (55) என்பவர் தேங்காய்களை போட்டுள்ளார். இதனை லட்சுமியும், அருகில் குடியிருப்பவர்களும் முருகனை கேட்டுள்ளனர். அதற்கு முருகன் நீங்கள் குடியிருப்பதே எங்களுடைய தோட்டம் தான் என்று கூறிவிட்டு மூன்று குடிசைகளையும் பிரித்து 12.12.09 அன்று முருகன் தன்னுடைய காட்டில் வைத்துள்ளார். இதனையறிந்த பழனிச்சாமி குடும்பத்தினரும், பாதிக்கப்படட மற்றவர்களும் அந்தியூர் காவல்

நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். ஆனால் காவலர்கள் நீங்களே குடிசையை பிய்த்து விட்டு புகார் அளிக்கிறீர்களா என்று கூறி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட அருந்ததியர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். மறியலில் ஈடுபட்ட 50 பேரை காவல்துறையினர் கைது செய்து, மாலையில் விடுவித்தனர். குற்றவாளி முருகன் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 88. தலித் பெண்ணை அடைத்து வைத்த செங்கல் உரிமையாளர்

ராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை தாலுக்கா, அழகு நாச்சிபுரம், பறையர் சமூகத்தைச் சேர்ந்த வெற்றிராஜின் குடும்பத்தினர் செங்கல் சூளையில் கூலித் தொழில் செய்பவர்கள். 3 ஆண்டுகளுக்கு முன்பு அபிராமம் அருகே உள்ள சுகன்யா செங்கல் சூளையில் வெற்றிராஜ் வேலை செய்துள்ளார். அங்கு சூளையின் உரிமையாளர் மூர்த்தியின் அச்சுறுத்தலினால் மானாமதுரை பெரியாண்டவர் சூளையில் பணம் வாங்கி சுகன்யா சூளையிலுள்ள கணக்கை வெற்றிராஜ் முடித்துள்ளார். இதற்கிடையில் வெற்றிராஜின் மைத்துனர் வீட்டு நிகழ்ச்சிக்காக 10,000/- பணம் கேட்டு பெரியாண்டவர் சூளையில் பணம் தராததினால் ஆவாரங்காட்டில் உள்ள, சேர்வை சமூகத்தைச் சேர்ந்த முருகன் என்பவரின் சூளையில் பணி செய்தார். வெற்றிராஜ் நன்கு பணி செய்ததால் முருகன் இவரை வெளியில் விட மாட்டார் என்பதையறிந்த வெற்றிராஜின் குடும்பத்தினரின் சூளையிலிருந்து தனிதனியாக 23.012009 அன்று வெளியேறினர். வெற்றிராஜின் மகள் மரியாள் (17) வெளியேறும் போது உரிமையாளர் முருகன், வெற்றிராஜ் வந்தால் தான் மரியாளை வெளியே விடுவேன் என்று அடைத்து வைத்துள்ளார். திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் வெற்றிராஜ் புகார் அளித்து, செங்கல் சூளை உரிமையாளர் முருகன் மீது எவ்வித வழக்கும் மேற்கொள்ளாமல் வெற்றிராஜின் மகள் மரியாளை மட்டும் மீட்டு சூளையிலிருந்து காவல்துறையினர் விடுவித்தனர்.

## 89.அருந்ததிய மாணவரை தாக்கிய மேல்சாதி இளைஞர்

சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுக்கா, வெள்ளக்கல்பட்டி அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கண்ணையன்-பாவாயின் மகன் சக்திவேல். இவர் 9ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணவர். அதே ஊரைச் சேர்ந்த நாடார் சமூகத்தைச் சேர்ந்த சின்னப்பையன் (30) என்பவர் கத்தியைக்காட்டி மிரட்டி பலமுறை சக்திவேலின் தாயான பாவாயியை பாலியல் வல்லுறவு மேற்கொண்டுள்ளார். இந்த தகாத செயல் மாணவன் சக்திவேலுக்கு தெரியவும், சின்னபையன் சக்திவேலின் மீது வன்மம் கொண்டுள்ளான். இந்நிலையில் 27.02.09 அன்று சக்திவேல் தமிழரசன் மற்றும் சரத்குமார் என்ற சக மாணாக்கர்களோடு வீட்டருகே படித்துக் கொண்டிருந்தான். அவ்வழியாக சின்னப்பயைன் வந்த போது தமிழரசன் சக்திவேலைப் பார்த்து டேய் சக்திவேல் என்று அழைத்துள்ளான். இதனால் ஆத்திரமடைந்த நாடார் சமூக சின்னப்பையன் தன்னை கூப்பிடுவதாக கருதி சக்திவேலு சக்கிலிய தேவிடியா பையா, சக்கிலிய கண்டாரோலி என்று சாதியைக் கூறி தகாத வார்த்தைகளால் திட்டி, சக்திவேலுவின் கழுத்தைப் பிடித்து நெறித்துள்ளார். சின்னபையனின் பிடியிலிருந்து விலகி ஓடிய சக்திவேலுவை செங்கலால் தலையில் அடித்ததில் சக்திவேலுவின் மண்டை உடைந்தது. இந்த கொலை வெறி

தாக்குதலை தாரமங்கலம் காவல் துறையினர் தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதியாமல் குற்ற எண் *105/09, 294 (b), 323, 324* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்து வழக்கை திசை திருப்பினர்.

## 90. மூன்று தலித்துகளை வெட்டிக் கொன்ற சாதி வெறி

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுக்காவில் உள்ளது கீழாம்பூர் கிராமம். இங்கு பள்ளர், பறையர், அருந்ததியர், யாதவர் மற்றும் தேவர் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இந்த கிராமத்தில் ஆரம்ப காலந்தொட்டே (பள்ளர்) தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்களே ஊராட்சி மன்றத் தலைவராக இருந்துள்ளனர். இதனால் தேவர் சமூகத்தினருக்கு வன்மம் இருந்துள்ளது. மேலும் மேல்சாதியினர் ஆற்றிலிருந்து மணல் எடுத்து விற்ற போதும் அதனை தலித்துகள் போராட்டம் நடத்தி மணல் அள்ளுவதை தடை செய்துள்ளனர். இதனால் மேல் சாதியினர் கோபம் அதிகரித்துள்ளது. மஞ்சபுளி கோவில் திருவிழாவின் போது ஏற்பட்ட தகராறில் தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினரை ஊரை விட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். ஒதுக்கி வைத்த மக்கள் தேவர் சமூகத்தவருக்கு ஆதரவாக செயல்பட்டு வந்த நிலையில் ஆம்பூரில் உள்ளவர்கள் தலித்துகளுக்கு துணையாக இருந்துள்ளனர். இந்த நெருக்கடி நேரத்தில் தேவர் சமூகத்தினர் தலித்துகள் யாரையாவது கொல்ல வேண்டும் என்று திட்டமிட்டு 30.05.09 வேலைக்கு சென்று திரும்பிய சுடலை, கணேசன், முத்துக்குமார் ஆகிய தலித்துகளை தேவர் சமூகத்தைச் சேர்ந்த கணேசன், சரவணன், பூமாச்சி,சைலு, பச்சிராஜன், கணேசன் ஆகியோர் வெட்டியுள்ளனர். இந்த கொலை முயற்சியில் கணேசன் அங்கேயே இறந்து போனார். அம்பாசமுத்திரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் முத்துக்குமாரும், சுடலையும் இறந்துள்ளனர். குற்ற எண் 94/09. இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு *147, 148, 324, 307, 302, 109, 506 r/w 311(v)* மற்றும் தலித் வன்கொடுமைச் சட்டப் பிரிவுகளில் குற்றவாளிகளின் மீது வழக்கு பதிவு செய்யப்படாமலும் அம்பாசமுத்திரம் மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் மீதே பொய் வழக்கு போடுவதாக மிரட்டி, கொலையாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்டார்.

## 91. தலித் பெண்ணை பொது இடத்தில் அவமானப்படுத்திய மேல்சாதி ஆண்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, மல்லசமுத்திரம் வண்ணம்பாறை அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கோவிந்தராஜின் மனைவி அமுதா (22). இவர் விவசாயக் கூலித் தொழிலாளியாகப் பணி செய்கிறார். வண்ணாம்பாளையில் நாயக்கர்கள் பெரும்பான்மையாக இருப்பதினால் இவர்களின் சாதிய மேலாதிக்கம் உள்ளது. அருந்ததிய சமூகத்தைச் சேர்ந்த அமுதா, நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்த ராஜா என்பவர் வருவதை கவனிக்காமல் கட்டிலில் உட்கார்ந்திருந்ததால் அதனை பொறுக்க இயலாத சாதிய மனோநிலையில் ராஜா அமுதாவை சக்கலி தேவடியா என்றும் மிக இழிவான சொற்களால்

அமுதாவை திட்டியும், வேட்டியை அவிழ்த்து நிர்வாணமாக நின்று இப்ப பாருடி என்றும் பொது இடத்தில் அவமானப்படுத்தியுள்ளார். மேலும் இனிமேல் கட்டிலில் உட்கார்ந்தால் செருப்பால் அடிப்பேன் என்றும் உடனே வீட்டைகாலி செய்யவில்லை எனில் தீ வைத்துக் கொளுத்துவேன் என்றும் உன்னைப் பாலியல் வல்லுறவு கொள்ளாமல் விட மாட்டேன் எனவும் கூறி அமுதாவை அவமானப்படுத்தியுள்ளார். இதனால் அருந்ததியர்கள் அனைவரும் மல்லசமுத்திரம் காவல் நிலையத்தில் 20.01.09 அன்று ராஜா மீது புகார் அளித்தனர். ஆனால் காவலர்கள் முதலில் புகாரை பதிவு செய்ய மறுத்துள்ளனர். பிறகு அருந்ததியர்களின் உறுதியான நிலைபாட்டினால் ராஜாவின் மீது குற்ற எண் 15/2009 தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு *3(1) (x)*ன் கீழும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 506ன் கீழும் வழக்குப் பதிவு செய்தனர்.

## 92. செங்கல்சூளைத் தொழிலாளிக்கு அடி உதை: வாகனம் பறிப்பு

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுக்கா, காறை கிராமம் இருளர் சமூகத்தை சேர்ந்த கண்ணப்பன் மகன் மணிகண்டன். இவர் செங்கல் சூளையில் தொழிலாளியாக பணி செய்தார். மணிகண்டனின் அம்மா வள்ளியம்மாள், செங்கல்சூளை பணிக்கு வருவதாக ரூ. 5000/- முன் தொகையாக கனகராஜிடமிருந்து வாங்கியிருந்தார். 17.10.08 அன்று கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த மேஸ்திரி கனகராஜ், மணிகண்டனை வழிமறித்து ஏண்டா உங்க அம்மா பணம் வாங்கிக் கொண்டு வேலைக்கு வரவில்லை என்று கேட்டுள்ளார். அதற்கு மணிகண்டன் பணம் வாங்கிய என் அம்மாவிடம் கேளுங்கள் எனக் கூறியதால் கோபமடைந்த கனகராஜ் தேவிடியா பையா என்று மணிகண்டனை இழிவுப்படுத்தி கன்னத்தில் அறைந்தும், காலால் உதைத்தும், துன்புறுத்தி அவரது வீட்டிற்குள் அடைத்து வைத்து மீண்டும் அடித்துள்ளார். மணிகண்டனை மேஸ்திரி கனகராஜ் அடித்த தகவலை அறிந்தும் வள்ளியம்மாள் வராததினால், உன் அம்மா படுத்து பிழைக்கலாம் என்று அம்மாவை இழிவுபடுத்தி மகன் மணிகண்டனிடம் கனகராஜ் பேசியுள்ளார். அங்கிருந்து தப்பித்து இருளர் பாதுகாப்பு சங்கப் பொறுப்பாளர் அத்தியூர் விஜயாவின் உதவியோடு 19.10.08 அன்று தச்சூர் காவல் நிலையத்தில் மணிகண்டன் புகார் செய்ததன் அடிப்படையில் 22.10.08 அன்று இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 341, 294, 323ன் கீழும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு *3(1) (x)* ன் கீழும் கனகராஜின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. காவல் துறையினர் மணிகண்டனின் *TVS 50* வண்டியை வழக்குக்கு தேவைப்படுகிறது என்று பறிமுதல் செய்து கொண்டு, அவருக்கு இன்னும் திரும்ப அளிக்கவில்லை.

## 93. தலித் குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்த கிராமப் பஞ்சாயத்தார்

நாகை மாவட்டம், சீவழூர் தாலுக்கா, ஆலமழை கிராமம் பறையர் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகத்திற்கு இரண்டு மனைவிகள். ஆறுமுகத்தின் மூத்த தாரத்து மகன் பக்கிரிசாமி, இளைய தாரத்து மகன் டேவிட் (29). இந்த இரு குடும்பங்களுக்கிடையில் நிலத்தைப் சமமாக

பங்கீடு செய்வதில் தகராறு இருந்துள்ளது. இதனால் பக்கிரிசாமியின் கிராமத்து பஞ்சாயத்தார்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் பொறுப்பாளர்களாகவும் இருக்கும் பக்கிரிசாமி, கண்ணையன், கண்ணன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களிடம் பணம் கொடுத்து டேவிட்டையும் அவரது சகோதரர் ஆனந்தராஜையும், ஊர் விலக்கம் செய்துள்ளனர். மேலும் கடைகளில் பொருட்கள் வாங்கக் கூடாது, தண்ணீர் பிடிக்கத் தடை, பொதுக் குளத்தில், குளிப்பதற்குத் தடை, பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்குத் தடை, மற்றவர்களோடு பேசினால் தடை என்று பல்வேறு தடைகளையும் பஞ்சாயத்தார்கள் விதித்துள்ளனர். பக்கிரிசாமியின் சகோதரர் ஆனந்தராஜிடம் பஞ்சாயத்தார் 5000/- ரூபாயைக் கேட்டும் தொந்தரவு செய்துள்ளனர். ஏற்கனவே அவர்களுக்காக 3000/- ரூபாய் காவல் நிலையத்திலேயே செலவு செய்துள்ளதால் ஆனந்தராஜ் இல்லை என்று மறுக்கவும் அவருக்குத் தடை விதித்துள்ளனர். 29.12.08 அன்று ஆனந்தராஜிவும் அவருடைய மனைவியும் சென்று கொண்டிருந்த போது ஆறுமுகம், ராஜேந்திரன், செல்வம், கணேசன் மற்றும் கண்ணையன் மகன் தலைமையில் ஒரு கும்பல் வழிமறித்து உருட்டுக் கட்டை, இரும்புக் குழாய், பெல்ட் ஆகிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். காயம்பட்ட ஆனந்தராஜையும் அவருடைய மனைவியையும் நாகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்க மறுத்ததினால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். வேளாங்கன்னி காவல் நிலையத்தில் புகார் அளித்தும் டேவிட் மீது பக்கிசாமியின் தூண்டுதலினால் பொய் வழக்கு பதிந்து அவரை கைது செய்ய முயற்சி செய்துள்ளனர். தற்போது 10,000/- ரூபாய் அபராதமும், பஞ்சாயத்தார்கள் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டால் ஊருக்குள் சேர்த்துக் கொள்வதாகவும் கிராமப் பஞ்சாயத்தார்கள் கூறி வருகிறார்கள்.

### 94. தலித் ஆசிரியரைப் பொது இடத்தில் அடித்த காவல்துறை

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுக்கா, உஞ்சனை அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப்பள்ளியில் மனித உரிமைக் கல்வி ஆசிரியராகவும், கணித ஆசிரியராகவும் பணி செய்பவர் தலித் சமூகத்தைச் சேர்ந்த கருணாகரன். 29.01.2009 அன்று தேவகோட்டை பேருந்து நிலையத்திற்கு அருகில் போன் செய்வதற்காக ஒரு கடைக்கு சென்றுள்ளார். அங்கு வந்த சார்பு ஆய்வாளர் ஞானவேலன் இங்கிருந்து போடா நாயே எனக் கூறியுள்ளார். யார் என்று திரும்பிப் பார்த்த ஆசிரியர் கருணகரனை கன்னத்தில் அறைந்தும் பொது இடத்திலேயே இரும்பு பூண் போட்ட லத்தியால் அடித்து வலுக்கட்டாயமாக காவல்துறை வாகனத்தில் ஏற்றி தேவகோட்டை நகர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இரவு 9.30 மணி வரை உட்கார வைத்து, அவருடைய கைபேசியைப் பிடுங்கிக் கொண்டு வெள்ளைத் தாளில் எதுவும் எழுதாமல் கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு அனுப்பியுள்ளார். போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தார் என்று ஆய்வாளர் ஞானவேலன் அந்த தாளைப் பூர்த்தி செய்து கொண்டார்.

## 95. மனித உரிமைக் காப்பாளரை அச்சுறுத்திய மேல் சாதியினர்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தாலுக்கா கோவில் மாதிமங்கலம் கிராமம், பறையர் சமூகத்தைச் சேர்ந்த அண்ணாமலை (34) மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தில் போளூர் தாலுக்கா அமைப்பாளராக இருந்தார். அதே ஊரைச் சேர்ந்த பறையர் சமூக மணிவண்ணன் என்பவர் அவருடைய 4 வயது குழந்தை விஜயராஜ்க்கு முடி வெட்டுவதற்காக உடையார் சமூகத்தைச் சேர்ந்த சலூன் கடைக்கு சென்றுள்ளார். பறையர் என்பதினால் மணிவண்ணனின் குழந்தைக்கு கடையின் உரிமையாளர் முடி வெட்ட மறுத்துள்ளார். இதனால் இருவருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டு மணிவண்ணன், அவரது அப்பா கண்ணன், அம்மா செல்வி ஆகியோரையும் உடையார்கள் சேர்ந்து அடித்து துன்புறுத்தி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இது தொடர்பாக அண்ணாமலை தேசிய தலித் மற்றும் பழங்குடியினர் ஆணையத்திற்கு புகார் அனுப்பியதால் கடலாடி காவல் நிலையத்தில் விசாரணைக்காக மணிவண்ணனை அழைத்துள்ளனர். அப்போது காவல்துறையினர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் சமரசம் செய்து அனுப்பியுள்ளனர். 09.09.08 அன்று கடலாடி காவல் நிலையம் சென்று கோவில்மாதிமங்கலம் கிராமத்திற்கு அண்ணாமலை திரும்பிக் கொண்டிருந்த போது உடையார் சமூகத்தைச் சேர்ந்த பாலு, சிவநேசன் மற்றும் அடையாளம் தெரிந்த 5 நபர்கள் வழிமறித்து பறத்தேவிடியா மகனே என்று இழிவாக அண்ணாமலையைப் பேசியும் புகாரை திரும்பப் பெறவில்லை எனில் குடும்பத்தோடு கொளுத்துவோம் என்றும் கொலை மிரட்டல் விடுத்தனர். 11.09.08 அன்று கடலாடி காவல் நிலையத்தில் அண்ணாமலை புகார் அளித்தும், *DGP, DIG,* காவல் கண்காணிப்பாளர், தேசிய தலித் மற்றும் பழங்குடியினர் ஆணையத்திற்கு புகார் அளித்தும் சாதிய ரீதியாக பாகுபாடு காட்டி, அடித்து கொலை மிரட்டல் விடுத்த உடையார் சமூகத்தவர்கள் மீது காவல்துறை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலும், முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யாமலும் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளது. குற்ற எண் 203/08 இவ்வழக்கு *CSR* மட்டுமே போடப்பட்டுள்ளது.

## 96.இருளர் குடும்பத்தினர் மீது கொலை வெறித் தாக்குதல்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தாலுக்கா, பரங்கிமலை இருளர் சமூகத்தைச் சேர்ந்த சகுந்தலா (40) தன் குடும்பத்தினரோடு வசித்து வரும் கூலித் தொழிலாளியாவார். 16.07.08 அன்று அரசு இவர்களுக்கு பட்டா வழங்கிய இடத்தில் மண்ணை சமன் செய்து கொண்டிருந்த போது, அருகிலுள்ள இட உரிமையாளர் போயர் சமூகத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மனைவி வேடியம்மா இது என்னுடைய இடம், இங்கு ஏன் வீடு கட்டுகிறீர்கள் என்று தகராறு செய்து இருளத் தேவிடியா பசங்களுக்கு வீடு ஒரு கேடா, என்று சாதியைக் கூறி இழிவுப்படுத்தி கருங்கல்லால் சகுந்தலாவின் மகன் ஏழுமலையின் மண்டையை உடைத்துள்ளார். 17.07.09 அன்று சகுந்தலாவின் மாமனார் பிச்சையப்பனையும் (75) புட்டம்மா என்பவர் தேவிடியா பையன் என்று கூறி இழிவுப்படுத்தியும், அடித்துக் கொல்லுங்கள் என்றும் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது தொடர்பாக செங்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் யாரும் இங்கு இல்லை என்று காவலர்கள் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் காலம் தாழ்த்தியுள்ளனர்.

## 97.அருந்ததியர்களை அடித்துத் துன்புறுத்திய மேல்சாதியினர்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் தாலுக்கா, வெங்கிடாபுரம் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த மாறன் மகன் மாயவன் (24). இவர் விசைதறி ஓட்டும் தொழிலாளியாவார். 28.02.09 அன்று வேலையை முடித்து மாயவனும், அவருடைய அண்ணன் அப்பாண்டன் மற்றும் நண்பர்களுடன் பேருந்தில் ஊருக்கு வந்து கொண்டிருந்த போது பேருந்தினுள் ஒரு கைபேசி கீழே கிடந்ததால் அதனை நடத்துனரிடம் தந்துள்ளனர். இதனைப் பார்த்த, காமநாயக்கன்பாளையம் கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த 4 பேர் குடிபோதையில் அப்பாண்டனையும், மாயவனையும் அடித்தனர். இவர்களும் பேருந்திலிருந்து இறங்கியவுடன் கவுண்டர்களை அடித்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த கவுண்டர்கள் 13.02.09 அன்று வேறு சில கவுண்டர்களுடன் வெங்கிடாபுரம் பேருந்து நிலையத்திற்கு தேடி வந்து மாயவனையும், சிவாவையும் சக்கிலியத் தாயோலி என்று சாதியைக் கூறி அவமதிப்பு செய்து தென்னமட்டையில் அடித்து துன்புறுத்தியுள்ளனர். பல்லடம் காவல் நிலையத்தில் 01.03009 அன்று மாயவன் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் *206/09, u/s 294 (b)* மற்றும் *323* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் பாதிப்பை ஏற்படுத்திய குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

## 98. வண்ணார் குடும்பத்தாரை சித்திரவதை செய்த பெண்கள்

சிவகங்கை மாவட்டம், திருப்பாச்சேத்திக்கு அருகிலுள்ள கண்ணாயிருப்பு கிராமத்தில் வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த மச்சக்காளை-மீனாட்சி (52) தம்பதிகள் கூலித் தொழிலாளியாக பணி செய்து வந்தனர். வண்ணார் சமூகத்தைச் சேர்ந்த இவர்களை மேல்சாதி இந்துக்களும் இஸ்லாமிய சமூகத்தவர்களும் பொதுப் பாதையில் நடக்கக் கூடாது நீரெடுக்கக் கூடாது என்று தடைகளை விதித்து வீட்டின் முன்பு முள் எடுத்துப் போட்டு வர விடாமல் செய்துள்ளனர். இதனால் 25.01.08 அன்று மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் திரு. ராஜசேகரனிடம் மச்சக்காளை புகார் அளித்துள்ளார். முள்ளை எடுத்துவிட்டு பாதையை பயன்படுத்திய மச்சக்காளை குடும்பத்தினரை பாத்திமாபீவி, அவரது மகள் சஃபியா, உடையார் சேர்வை சமூக ராஜம்மாள், அவரது மகள் மலர் ஆகியோர் ஆயுதங்களால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். மேலும் வழக்கை திரும்பப் பெறாவிட்டால் ஊரை விட்டு போக வேண்டும் என்றும் அச்சுறுத்தி வழக்கை திரும்பப் பெற வைத்துள்ளனர். வழக்கை திரும்ப பெற்றதற்கு பிறகும் பாத்திமாபீவி வண்ணாத்தி என்று நேரில் இழிவுப்படுத்தி பேசியுள்ளார். இந்நிலையில் 18.03.09 அன்று பொதுக் குழாயில் நீரெடுத்துக் கொண்டிருந்த மீனாட்சியை பாத்திமாபீவியும், அவரது மகள் சபியாவும் கீழே தள்ளி மண்டையை உடைத்து, கொடூரமாக தாக்குதல் தொடுத்துள்ளனர். அன்று இரவு 10.00 மணிக்கு திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் புகார் அளிக்கச் சென்ற போது அங்கிருந்த காவலர்கள் தலை என்ன துண்டாவா போயிருச்சு என்று கேலி செய்து கடமையைச் செய்யாமல் புறக்கணித்தும் தூக்கத்தை கெடுத்து வீட்டீர்கள் என்று கோபப்பட்டுத் திட்டியும் தனியார் மருத்துவமனைக்கு போகச் சொல்லியுள்ளார். 19.03.09லிருந்து 25.03.09 அவரை அரசு மருத்துவமனையில்

சிகிச்சைப் பெற்று வந்தவுடன் மீண்டும் பாத்திமாபீவி மீனாட்சியை "வழக்கு ஒன்றும் எங்களுக்கு புதிதல்ல, போலீசும் எங்களை ஒன்றும் செய்யாது" எனக் கூறி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். மீண்டும் மானாமதுரை மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளரிடம் 26.03.09 அன்றே புகார் அளித்தும் எவ்வித சட்ட நடவடிக்கைகளும் காவல்துறையில் மேற்கொள்ளப்படவில்லை.

## 99. அருந்ததியரை நிலத்தை விட்டு வெளியேறக் கூறி அடித்து சித்திரவதை

ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்கா, எஸ்.பி. கவுண்டனூர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கந்தன் மகன் உத்திரசாமி (38) விவசாயக் கூலி தொழிலாளியாக பணி செய்து வருகிறார். 27.08.08 அன்று கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த ராஜேந்திரனிடம் குத்தகைக்கு நிலம் பெற்று விவசாயம் செய்தார். இந்நிலையில் எஸ்.பி. குள்ளனூரில் வசிக்கும் ராமு, மணி, ராஜேந்திரன், கொண்டான் ஆகியோர் உத்திரசாமி விவசாயம் செய்யும் நிலம் எங்களுடையது எனக் கூறி தகராறு செய்து 12.05.09 அன்று சக்கிலியத் தாயோலி, சக்கிலிய நாயே என்று சாதிப் பெயரைக் கூறி இழிவுப்படுத்தி கல்லால் அடித்து துன்புறுத்தியுள்ளனர். மேலும் இரவோடு இரவாக நிலத்தை விட்டு வெளியேறவில்லை எனில் குடும்பத்தோடு கொளுத்தி விடுவதாகவும் கொலை மிரட்டல் விடுத்தனர். இதனால் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் 01.06.09 அன்று உத்திரசாமி அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் *146/09, 323* இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு மற்றும் *3(1) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவுகளிலும் காவல்துறையினர் வழக்கு பதிந்துள்ளனர்.

## 100. தலித் இளைஞனை அடித்து அவமானப்படுத்திய அரசியல்வாதிகள்

ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்கா, நெரிஞ்சிப்பேட்டை ஆரியக் கவுண்டனூர் கிராமம் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த ஆரான் மகன் பழனிச்சாமி (36). எம்.ஏ. பட்டதாரியான இவர் 10வது வார்டு உறுப்பினராக இருந்தார். 19.04.09 அன்று தேர்தல் விளம்பரம் எழுதுவது தொடர்பாக அதிமுக பாராளுமன்ற உறுப்பினர் எ.ஆர். கோவிந்தராஜிடம் பழனிச்சாமி பேசினார். இதனைப் பொறுக்க இயலாத கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த சரவணன் மற்றும் பூக்கடை சேட்டு ஆகியோர் நீ எம்.பிக்கு சரிசமமாக பேசிக் கொண்டிருக்கிறாயா? என்றும் ரேஷன்ல புழுவரிசி சாப்பிடுறவன் சக்கிலிய தேவிடியாப் பையன் என்று சாதிப் பெயரையும், குடும்பத்தையும் இழிவுபடுத்தி பொது இடத்திலேயே அடித்துள்ளனர். கொலை செய்வதாகவும் மிரட்டினர். எம்.பி. கோவிந்தராஜவும் வெளியே போடா என்று திட்டி அவமானப்படுத்தியுள்ளார். அம்மாபேட்டை காவல் நிலையத்திலும், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும் புகார் அளித்தும் முதல் தகவல் அறிக்கை மட்டுமே போடப்பட்டது. எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 101. சுய உதவிக்குழு பெண்கள் பணம் கேட்டதால் அவமானப்படுத்திய மேல்சாதியினர்

ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்கா, பூதப்பாடி கிராமம் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த வீரன் என்பவரின் மனைவி லட்சுமி (50). இவர் ஸ்ரீலட்சுமி சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்தார். இந்த சுய உதவிக் குழுவில் *SBI* வங்கியின் மூலம் மூன்று லட்ச ரூபாய் தொழில் தொடங்கக் கடனாகக் கொடுத்துள்ளனர். பாத்திரம் வாங்கி வாடகைக்கு விடலாம் என்று உறுப்பினர்கள் பணத்தை எடுத்து, வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த குழு உறுப்பினர் சந்திரிக்காவிடம் பணத்தை பிரிக்க கொடுக்கக் கூறியுள்ளனர். பணத்தை ஏற்கனவே கையாடல் செய்த சந்திரிக்காவின் கணவன் கணேசன் 20 ரூபாய் பத்திரத்தில் கையெழுத்தை கணவனிடம் பெற்றுவரக் கூறியுள்ளார். குழு பெண்களாகிய எங்களிடத்தில் பணம் கொடுங்கள் என்று லட்சுமி கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த கணேசன் பொது இடத்தில் லட்சுமி, குப்பாயி மற்றும் வள்ளியம்மாளை சக்கிலிய கண்டாரோலி, தேவிடியா என்று சாதியைக் கூறி இழிவுப்படுத்தியும், மானக்கேடு ஏற்படுமாறு தாக்குதலையும் தொடுக்க முயன்றுள்ளார். இதனால் 10.10.09 அன்று அம்மாபேட்டை காவல் நிலையத்தில் லட்சுமி புகார் அளித்துள்ளனர். காவலர்கள் கணேசனை கூட்டிச் சென்றாலும் ஈரோடு *MLA*, *NKKP* ராஜா, ஈரோடு மேயர் முருகேஷ், சத்தியமங்கலம் *MLA* தர்மலிங்கம், அந்தியூர் *MLA* குருசாமி, பவானிசாகர் *MLA* ஆகியோர் கணேசனை வெளியே அழைத்து வந்து புகார் கொடுத்த லட்சுமி மற்றும் பிற குழு உறுப்பினர்களையும் மிரட்டி வீட்டிற்கு போகச் சொல்லியுள்ளனர். காவல்துறையும் கணேசனுக்கு ஆதரவாகவே செயல்பட்டது.

## 102. பள்ளர்கள் மீது தொடர் தாக்குதல்

தஞ்சாவூர், ஆலங்குடி கிராமத்தில், கள்ளர்களும், பள்ளர்களும் வசித்து வருகின்றனர். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக கள்ளர்களின் சாதிய ஆதிக்கம் பள்ளர் சமூகத்தினர் மீது இருந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள முத்துமாரியம்மன் கோவிலில் பள்ளர்கள் வழிபடுவதற்குரிய உரிமையை கள்ளர்கள் மறுத்து வந்துள்ளனர். இதனால் போராட்டம் நடத்தி மாவட்ட ஆட்சித் தலைவரின் முயற்சியோடு கோவிலில் பள்ளர்கள் நுழைந்து வழிபாடு செய்துள்ளனர். மேலும் கோயிலுக்கு சொந்தமான குளம் மற்றும் நிலங்களை ஏலம் விடும் போது பள்ளர்களுக்கு தரக் கூடாது எனவும் கள்ளர்கள் தகராறு செய்துள்ளனர். கோயில் வருமானத்தை கள்ளர்கள் தங்களுக்குள்ளேயே பங்கிட்டுக் கொள்வதையும் கண்டறிந்து நீதிமன்றத்தில் பள்ளர்கள் வழக்கு தொடுத்துள்ளனர். இந்நிலையில் 27.09.09 அன்று பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த காமராஜின் அண்ணன் மகள் ரோஜாமணி மருந்து வாங்குவதற்கு கடைக்குச் சென்ற போது கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த கோவிந்தராஜ், ஜெயராமன், தங்கமுத்து உள்ளிட்ட 7 பேர், அந்த பெண்ணை பாலியல் வல்லுறவு மேற்கொள்வதற்கு முயன்றுள்ளனர். இதனை தடுக்கச் சென்ற காமராஜை பள்ளத் தேவிடியா மகனே என்று சாதியைக் கூறி இழிவு செய்து ‘‘பள்ளப் பயலுக பிரச்சனை பண்ணுனா ஸ்ரீதர்

வாண்டையாரும், செங்குட்டுவன் வாண்டையாரும் வெட்டச் சொல்லி இருக்காரு" எனக் கூறி தலையில் அருவாளால் ஜெயராமன் வெட்டினார். இரும்புக் குழாய்களாலும், உருட்டுக் கட்டைகளாலும் காமராஜை பொது இடத்திலேயே கள்ளர்கள் தாக்கியுள்ளனர். கள்ளர் சமூகத்தினரை காமராஜ் அடித்ததாக பொய் வழக்கு பதிவு செய்தனர். வல்லம் காவல் துறையினர் குற்ற எண் *256/09, 147, 148, 294 (b), 324, 506 (ii)* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளிலும், தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு *3(i) (x)*ன் கீழும் குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட காமராஜின் மீது குற்ற எண் 257/09, 147, 148, 323, 324, 307 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 103. அருந்ததியர் சொந்தக் கிணற்றில் தண்ணீர் எடுக்க எதிர்ப்பு; செருப்படி!

ஈரோடு மாவட்டம், பவானி, பிரம்மதேசம் கல்லம்பாறையில் வசித்து வருபவர் குருவாள் (80/09) அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தவர். கடந்த 9 வருடங்களுக்கு முன்பு சீரங்கன் என்பவரிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளார். அங்குள்ள கிணற்றில் 1/4 பங்கு குருவாளுக்கு பாத்தியப்பட்டது. ஆனால் அந்த கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது என வன்னியர் சாதியை சேர்ந்தவர்கள் எதிர்த்து வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த 09.09.09 அன்று இரவு சுமார் 8 மணியளவில் கிணற்றில் தண்ணீர் எடுத்துக் குருவாள் அவருடைய வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தார். அப்போது வன்னியர் சாதியைச் சேர்ந்த பழனிச்சாமி, காளியம்மாள், கண்ணாயாள் ஆகியோர் குருவாளை சக்கிலிய முண்டை என்று சாதிப் பெயரால் இழிவுப்படுத்தியும், கவுண்டர்கள் பயன்படுத்தும் கிணற்றில் தண்ணீர் எடுத்து பாய்ச்சியதால் தீட்டுப்பட்டு விட்டது என்று சொல்லியும் செருப்பால் அடித்துள்ளனர்.

மேலும் இனிமேல் இந்த கிணற்றில் தண்ணீர் எடுத்தால் அங்கேயே கொன்று புதைத்து விடுவதாக சொல்லி மிரட்டியுள்ளனர். குருவாளின் உறவினர் இதை எதிர்த்து கேட்டதற்கு அவரையும் சாதிப் பெயரைச் சொல்லி இழிவுப்படுத்தியுள்ளனர். அதன் பின்பு இச்சம்பவம் தொடர்பாக விழுதுகள் அமைப்பின் உதவியோடு 17.09.09 அன்று அந்தியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி கு. எண் 353/09 பிரிவு 147, 355 இ.த.ச மற்றும் *3(1) (x)* தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். ஆனால் குற்றம் சாட்டப்பட்ட மேல் சாதியினரை கைது செய்யவில்லை. அவர்கள் மீது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## 104. அருந்ததியரின் வளர்ச்சியை பொறுக்காத மேல் சாதியினர்

திருப்பூர் மாவட்டம், காங்கேயம், எல்லப்பாளையம் புதூர் நிழலி பகுதியில் வசித்து வருபவர் டி.என். செல்வராஜ் அருந்ததியர் சாதியை சேர்ந்தவர். இவர் ஆண்டிப்புதூரில் சுண்ணாம்பு சூளை வைத்துள்ளார். அவர் தினமும் சுண்ணாம்பு சூளைக்கு இரு சக்கர வாகனத்தில் செல்வது வழக்கம். பொது டீக்கடையில் உள்ள நாற்காலியில் அமர்ந்து டீ குடித்துள்ளார்.

இவையனைத்தும் மேல்சாதியை சேர்ந்தவர்களுக்கு காழ்ப்புணர்வாகவே இருந்துள்ளது.

இந்நிலையில் 12.11.09 அன்று மதியம் சுமார் 3.30 மணியளவில் நிழலியிலிருந்து ஆண்டிப்புதூர் செல்லும் வழியில் செல்வராஜின் இரு சக்கர வாகனம் பழுதடைந்ததால் வழியில் நின்றுக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக சென்ற மேல்சாதியைச் சேர்ந்த லோகநாதன் என்பவர் சக்கலியனாக இருந்து கொண்டு எங்களை மதிக்காமல் டீக்கடையில் சமமாக உட்கார்ந்து டீ குடிக்கிறாய். எங்கள் முன்னாலேயே இரு சக்கர வாகனத்தில் செல்கிறாய். சுண்ணாம்பு சூளை வைத்திருந்தால் பெரிய ஆளா? என்று சொல்லியும், லோகநாதனுடைய சொத்து, சாதிய பின்னணி ஆகியவற்றை சொல்லியும் மிரட்டி செல்வராஜை செருப்பால் அடித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக 13.11.09 அன்று காலை 11 மணியளவில் கவுண்டர் சாதியை சேர்ந்த லோகநாதன் மீது செல்வராஜ் மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்துள்ளார். மாவட்ட ஆட்சியர் இல்லாததால் அங்கிருந்த திருப்பூர் ஆர்.டி.ஓ புகாரை பெற்றுள்ளார். அதன் பின்பு பதிவு தபாலில் மாவட்ட ஆட்சியர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மனித உரிமை ஆணையங்கள் ஆகியோருக்கு புகார்கள் அனுப்பப்பட்டுள்ளது. செல்வராஜின் புகாரின் மீது 06.12.09 அன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து விசாரிக்க சென்ற மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்க உறுப்பினர்களை காங்கேயம் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஜீவா மனித உரிமை என்ற வார்த்தையை பயன்படுத்தக்கூடாது என மிரட்டியுள்ளார்.

## 105. காதல் திருமணம் செய்தவர்களை சாதியின் பெயரால் பிரித்தக் காவலர்கள்

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர், காந்திபுரம் பகுதியில் வசித்து வந்தவர் முருகன் (26/09) த/பெ. வேலாயுதம். இவர் கர்நாடகாவில் உள்ள கோலார் தங்க வயலில் பணியாற்றி வருகிறார். ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர் முருகனும் வன்னியர் சாதியை சேர்ந்த கவிதாவும் காதலித்துள்ளனர். இது கவிதாவின் பெற்றோருக்கு தெரிந்து கவிதாவை வீட்டுக்குள் பூட்டி வைத்து ஆதி திராவிடர் சாதியை சேர்ந்த முருகனை மறந்து விடச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளனர். அதனால் கவிதா வீட்டை விட்டு வெளியேறி முருகனிடம் சென்று சென்று திருமணம் செய்துக் கொள்ளுமாறு அழுதுள்ளார்.

முருகன் கவிதாவை பெங்களூருக்கு அழைத்துச் சென்று கோவிலில் இந்து முறைப்படி திருமணம் செய்து திருமணப் பதிவை செய்துள்ளனர். அதன் பின்பு திருப்பத்தூர் சென்று முருகனுடைய உறவினர் வீட்டில் இருவரும் தங்கியுள்ளனர். இதற்கிடையில் கவிதாவின் அப்பா வெங்கடேசன் முருகனின் பெற்றோரை சாதிப் பெயரைச் சொல்லி திட்டி அடித்து சித்ரவதை செய்துள்ளார். பிறகு திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில் கவிதாவின் பெற்றோர் மைனர் பெண்ணை கடத்திச் சென்றதாக முருகன் மீது பொய் புகார் கொடுத்துள்ளனர். திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தினர் முருகனை தேடுவதை அறிந்து முருகனும், கவிதாவும் 14.07.09 அன்று காவல் நிலையத்திற்கு சென்றுள்ளனர். அப்போது அங்கிருந்த

உதவி ஆய்வாளர் முருகனை லத்தியால் அடித்து சித்ரவதை செய்துள்ளார். கவிதாவை விட்டுவிட்டு செல்லுமாறும், வெள்ளைத் தாளில் கையெழுத்து போடுமாறும் கூறி முருகனை அடித்துள்ளார். முருகனை அடிப்பதை பார்த்து தாங்கிக் கொள்ள முடியாத முருகனின் பெற்றோர் வெள்ளைத் தாளில் கையெழுத்துப் போட்டுள்ளனர். அதன் பின்பு கவிதாவின் பெற்றோர் கவிதாவை அவர்களுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று கொடுமைப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் குறித்து முருகன் 30.10.2009 அன்று காவல்துறை அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியுள்ளனர்.

## 106. பொது இடத்தில் அருந்ததியரை அடித்துச் சித்திரவதை

திருப்பூர் மாவட்டம், காங்கேயம், தட்டாரவலசு பகுதியைச் சேர்ந்தவர் செந்தில்குமார் (29/09). இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். சுமார் 7 வருடங்களாக கவுண்டர் சாதியைச் சேர்ந்த கந்தசாமி என்பவரிடம் டிராக்டர் ஓட்டுநராக பணியாற்றுகிறார். இந்நிலையில் 24.12.08 அன்று கந்தசாமியின் நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து டிராக்டரில் தண்ணீர் ஏற்றிக் கொண்டு செந்தில்குமார் வாய்க்கால் மேடு பகுதியில் சென்றுள்ளார். அப்போது பூமாண்டவலசு பகுதியைச் சேர்ந்த கவுண்டர் சாதியினரான பெரியசாமி என்பவர் செந்தில்குமாரை வழிமறித்து இந்த பாதையில் செல்லக் கூடாது என்று கூறியுள்ளார். மறுநாள் 25.12.08 அன்றும் செந்தில்குமார் பெரியசாமி சொன்னது நினைவில் கொள்ளாது அவ்வழியாகவே டிராக்டர் ஓட்டிக் கொண்டு சென்றுள்ளார். பெரியசாமி மீண்டும் செந்தில்குமாரை வழிமறித்து சக்கிலி தாயோளி இந்த வழியாக வரக்கூடாது என்று சொன்னால் கேட்க மாட்டியா? இனிமேல் இவ்வழியாக வந்தால் அடித்து கொன்று விடுவேன் என்று செந்தில்குமாரை கட்டையால் அடிக்கச் சென்றுள்ளார். அப்போது மற்றொரு டிராக்டரில் ஓட்டுநராக சென்ற முதலியார் சமூகத்தைச் சேர்ந்த தங்கவேலு என்பவர் தடுத்துள்ளார். இச்சம்பவம் குறித்து 25.12.08 அன்று இரவு சுமார் 8 மணியளவில் செந்தில்குமார் காங்கயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரின் அடிப்படையில் பெரியசாமி மீது 26.12.08 அன்று கு.எண் 1132/08, பிரிவுகள் 341, இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் *3 (1) (x)* தா. மற்றும் பழ. வ. த. சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## 107. உணவகத்தில் சாப்பிடச் சென்ற அருந்ததியர் இளைஞர்கள் மீது தாக்குதல்

கோவை மாவட்டம், பொள்ளாச்சி, மலையாண்டிப்பட்டினம் பகுதியைச் சேர்ந்தவர் லோகநாதன் (25/09). த/பெ. பழனிச்சாமி. அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 27.06.09 அன்று லோகநாதன் அவருடைய நண்பர்கள் முருகன், மணிகண்டன், ராஜீ ஆகியோருடன் குமரன் கட்டத்திலுள்ள முனியாண்டி விலாஸ் என்ற உணவகத்திற்கு சாப்பிடச் சென்றுள்ளார். அப்போது கடைக்கு வெளியில் நின்று கொண்டிருந்த மலையாண்டிப்பட்டினத்தைச் சேர்ந்த கவுண்டர் சாதியினரான செந்தில், குண்டு ரவி, பாலு ஆகியோர் லோகநாதன் தரப்பினருடன் தகராறு செய்துள்ளனர். அப்போது சக்கிலி நாய்களுக்கு திமிர் ஏறிப் போச்சு என்று சாதிப்

பெயரைக் கூறி இழிவுப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் நடந்துக் கொண்டிருக்கும் போது கவுண்டர் சாதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி என்பவர் அங்கு சென்றிருக்கிறார். அப்போது லோகநாதன் அவரிடம் நியாயம் கேட்டுள்ளார். ஆனால் கிருஷ்ணசாமியும், மேல்சாதியினருடன் சேர்ந்துக் கொண்டு லோகநாதனையும் அவரது நண்பர்களையும் கட்டையாலும், சோடா பாட்டில்களாலும் தாக்கியுள்ளனர்.

கோட்டூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் உதயசங்கர் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார். அப்போது மற்ற நபர்கள் அங்கிருந்து ஓடி விட்டனர். காயம்பட்ட லோகநாதனையும், முருகனையும் காரில் ஏற்றிச் சென்று பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அதன் பின்பு 27.06.09 முதல் 29.06.09 வரை உள் நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுள்ளனர். இந்நிலையில் மேல்சாதியைச் சேர்ந்த செந்தில் என்பவரை லோகநாதன் மற்றும் அவருயை நண்பர்கள் அடித்து தலை உடைந்து விட்டது என்று கூறி அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் லோகநாதன் மீது கு. எண் 240/09 பிரிவுகள் *294 (b), 323, 324, 506(ii)* .த.ச.ன். கீழ் கோட்டூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. லோகநாதனின் புகாரின் பேரில் கிருஷ்ணசாமி உள்ளிட்ட 4 நபர்கள் மீது கு. எண் *239/09 294 (b), 323, 324 IPC r/w 3(1) (x) SC/ST Act*-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 108. பூங்கா அமைக்க அருந்ததியர் குடிசைகள் எரிப்பு

ஈரோடு மாவட்டம், ஈஞ்சம்பள்ளி கிராமத்தை சேர்ந்தவ கீரமடையில் 65 அருந்ததியர் குடும்பங்கள் உள்ளனர். 16 குடும்பங்கள் ஓடைப்புறம்போக்கு நிலத்தில் சாலை போட்டு 10 ஆண்டுகளாக குடியிருந்து வருகின்றனர். 10.12.08ல் பட்டா கேட்டு மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்துள்ளனர். ஆனால் 12.12.08ல் அருந்ததியர் மக்கள் கேட்கின்ற இடம் ஆட்சேபனையாக இருப்பதால் வீட்டு மனை பட்டா வழங்க இயலாது என அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்நிலையில் 29.03.08 அன்று கவுண்டர் சாதியை சேர்ந்த செந்தில்நாதன் உள்ளிட்ட கவுண்டர்கள் 16 குடிசைகளுக்கும் தீ வைத்துள்ளனர். இதனால் அம்மக்களுக்கு பொருளாதார இழப்பு பெரியளவில் ஏற்பட்டுள்ளது. காவல் ஆணையருக்கு தகவல் தெரிவிக்க காவல்துறை உயர் அதிகாரிகளும், 50க்கும் மேற்பட்ட அதிரடிப்படை காவலர்களும் காவலுக்குச் சென்றுள்ளனர். இத்தீவிபத்தில் காயம்பட்டவர்கள் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்துள்ளனர்.

## 109. இருசக்கர வாகனத்தில் போவதா? அருந்ததியரை வழிமறித்து அடித்துப் பொய் புகார்

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், செட்டிப்புதூர் பகுதியில் வசித்து வருபவர் பழனிச்சாமி. அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 05.08.09 அன்று சேவூரில் விசைத்தறி வேலைக்கு சென்று விட்டு திரும்பி செல்லும் போது தண்டுக்காரன்பாளையம் ஆற்றுப் பாலத்தில் கவுண்டர் சாதியை சேர்ந்த குமார், சந்தனமூர்த்தி, உள்ளிட்ட 8 நபர்கள் பழனிச்சாமி

ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தை வழி மறித்துள்ளனர். சந்தன மூர்த்தி, வண்டி சாவியை எடுத்துக் கொண்டு விசில் அடிக்காமல் போக முடியாதா? என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மற்றவர்கள் பழனிச்சாமியின் லுங்கியை கழற்றியுள்ளனர். பழனிச்சாமியின் கைகளை பின்னால் கட்டி அவரைக் கீழே தள்ளி மேல்சாதியினர் 8 பேரும் காலால் எட்டி உதைத்தும், தென்னை மட்டையால் அடித்தும் சித்திரவதை செய்துள்ளனர்.

பழனிச்சாமி இரு சக்கர வாகனத்தில் செல்வதை பொறுத்துக் கொள்ள முடியாத கவுண்டர்கள் அதைச் சொல்லி சொல்லியே அடித்துள்ளனர். பழனிச்சாமியின் கேமரா செல்போனையும், ரூ. 3500/- பணத்தையும் எடுத்துள்ளனர். செட்டிப்புதூரை சேர்ந்த வெள்ளியங்கிரி என்பவர் அவ்வழியாக செல்லும் போது தடுத்துள்ளார். அவர்களை கவுண்டர்கள் மிரட்டவே அவர் பழனிச்சாமியின் உறவினர்களிடம் தகவல் அளித்தார். அதன் பின்பு பழனிச்சாமியின் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு சென்று பழனிச்சாமியை விடச் சொல்லி கெஞ்சியுள்ளனர். அதனால் கவுண்டர்கள் ஒரு வெள்ளைத் தாளில் பழனிச்சாமியின் உறவினர்கள் மற்றும் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேரிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு பழனிச்சாமியை விட்டுள்ளனர். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கக் கூடாது என மிரட்டியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து 06.08.09 அன்று சேவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் உதவி ஆய்வாளர் ரமாதேவி புகாரை வாங்க மறுத்துள்ளார். 10.08.09 அன்று பாதிப்பு ஏற்படுத்திய கவுண்டர் சாதியினரை கைது செய்ய சொல்லி அருந்ததியர் அமைப்பினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் சேவூர் காவல் நிலையத்தில் கு. எண். *247/09, 147, 342, 323, 506 (ii), 379* இ.த.ச மற்றும் *3 (1) (x) SC/ST Act*–ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 110. தலித் அரசுப் பணியாளரைப் பணி செய்ய விடாமல் தகராறு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், முத்துநாயக்கன்பட்டி பொது விநியோகக் கடையில் வேலை செய்து வருபவர் சண்முகசுந்தரம். இவர் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர். பொது மக்களுக்கு ரேசன் பொருட்கள் சரிவர கிடைக்காததால் ஆயிரமுத்து என்பவர் 07.09.09 அன்று பொது விநியோகக் கடையில் தகராறு செய்து, கடையை மூட முயற்சித்துள்ளார். அப்போது அங்கு சென்ற சண்முகசுந்தரம் கடையை மூடாமல் தடுத்து, எதுவாக இருந்தாலும் பேசிக் கொள்ளலாம். கடையை மூடக் கூடாது எனக் கூறவே சண்முகசுந்தரத்தை ஆயிரமுத்து தாக்கியுள்ளார். இருவருக்குமுடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் சண்டையை விலக்கி விட்டுள்ளனர். பின்பு ஆயிரமுத்து ஊமைக் காயங்களுடன் ஒட்டன்சத்திரம் சக்தி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றார். சண்முகசுந்தரம் இடையக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்து மெமோ பெற்றுக் கொண்டு ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றார். அதன் பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு பொது மருத்துவமனைக்கு மருத்துவரின் பரிந்துரையின் படி

சென்றார். சண்முகசுந்தரம் அளித்த புகாரின் பேரில் ஆயிரமுத்து மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வ.கொ.த. சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. சண்முகசுந்தரம் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

## 111. தலித் மக்கள் மீது தாக்குதல்; சாதி வெறியின் உச்சம்; ஊரை விட்டு வெளியேற்றம்

விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி, டி. வேப்பங்குளம் கிராமத்தில் வசிக்கும் பறையர் சாதியை சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அங்குள்ள மேல்சாதியினரான சேர்வை சாதியினருக்கு இழிதொழில் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டு வந்துள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்கள் செருப்பை போட்டு கொண்டோ, சைக்கிளில் ஏறி செல்லவோ தடை. பெண்கள் முழங்காலுக்கு மேல் தான் சேலைக் கட்ட வேண்டும். டீக்கடைகளில் இரட்டை டம்ளர் முறை உள்ளது. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பேண்ட், சட்டை, அணியக் கூடாது என்பன போன்ற தீண்டாமை வன்கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் 03.10.09 அன்று டி. வேப்பங்குளம் அரசு தொடக்கப்பள்ளியில் மாலை சுமார் 3 மணியளவில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் குடும்பத்துடன் அடையாள அட்டை எடுக்க தாழ்த்தப்பட்ட மக்கள் வரிசையில் நின்று கொண்டிருந்தனர். அப்போது சேர்வை சாதியினர் வரிசையில் நிற்காமல் அவரவர் விருப்பம் போல் சென்றுள்ளனர்.அதை தாழ்த்தப்பட்ட பறையர் சாதியை சேர்ந்த ஐயங்காளை கண்டித்துள்ளார். அதனால் ஒட்டு மொத்த பறையர் சாதியினரை சாதிப் பெயரைச் சொல்லியும், தகாத வார்த்தைகளாலும் திட்டியுள்ளனர். மேலும் தாழ்த்தப்பட்ட சாதியினரான முத்துமணி, முனியாண்டி, வென்னிமுத்து, முத்துராஜ் ஆகியோரை கடுமையாக தாக்கியுள்ளனர். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் பயந்துக் கொண்டு அவரவர் வீட்டிற்கு சென்று விட்டனர். முனியாண்டி என்பவர் அவருடைய வீட்டிற்கு சென்றுக் கொண்டிருக்கும் போது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் செல்கிறார் என்று நினைத்துக் கொண்டு சேர்வை சாதி மக்கள் அனைவரும் சேர்ந்து அவரை காலால் உதைத்தும், அடித்தும் ஊருக்குள் வைத்து சித்திரவதை செய்துள்ளனர். இச்செய்தி அறிந்து அங்கு சென்ற முக்குளம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மற்றும் 2 காவலர்களை சேர்வை சாதியைச் சேர்ந்த செந்தில் என்பவர் பறப்பயலுகளுக்கு ஆதரவாக பேசுகிறாயா என்று அடித்துள்ளனர். அங்கிருந்த ஆர்.ஐ.யையும்அடித்துள்ளனர். சார்பு ஆய்வாளரும், ஆர்.ஐ.யும் நாங்கள் தேவர் சாதி தான் என்று கூறி உயிர் தப்பியுள்ளனர்.

மேலும் பாதிக்கப்பட்ட பறையர் சாதி மக்களை ஊரை விட்டு வெளியில் செல்லவிடாமல் தடுத்துள்ளனர். அதனால் பாதிப்புக்குள்ளான முனியாண்டி பெண் வேடமிட்டு மினி பஸ்ஸில் ஏறி காரியாப்பட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்துள்ளார். மற்றவர்கள் உடுத்திய உடையுடன் மறுநாள் ஊரை விட்டு வெளியேறியுள்ளனர். அதன் பின்பு 04.10.09 அன்று பாதிக்கப்பட்ட முத்து, முத்துராஜ், முத்துமணி ஆகியோர் அரசு மருத்துவமனையில்

சேர்ந்து சிகிச்சைப் பெற்றுள்ளனர். முக்குளம் காவல் நிலையத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் 4 நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு சேர்வை சாதியினர் 2 பேர் மீது இரண்டாவதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 37 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் ஊரை விட்டு வெளியேறி காரியாப்பட்டி காலனி இடத்தில் அகதிகளாக இருந்துள்ளனர். 05.10.09 அன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியரிடமும் 08.10.09 அன்று மதுரை *IG*-யிடமும் புகார் கொடுத்துள்ளனர். மாணவர்கள் பள்ளிக்கு செல்ல இயலவில்லை. அரசு அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## 112. தலித்தை வழிமறித்துஅவமதிப்பு செய்த மேல்சாதியினர்

கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்கா, போட்டூர் மலையாண்டிப்பட்டினம் கிராமத்தில் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர் பெருமாள் மகன் சக்திவேல் (46). இவர் ஒட்டுநராக பணி புரிந்தார். அதே ஊரைச் சேர்ந்த கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த பூபதி என்பவருடன் வண்டியை வாடகைக்கு எடுத்து பணம் தராததினால் முன்விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் சக்திவேல் அவருடைய சேமிப்பின் மூலம் ஒரு சரக்கு வண்டியை (மினிடோர்) வாங்கியுள்ளார். இதனை பொறுத்துக் கொள்ள இயலாத பூபதியும், குண்டு ரவி, கோபி,செந்தில் ஆகிய மேல்சாதியினர்களும் 25.06.09 அன்று சக்கிலி தாயோளி என பொது இடத்தில் கூறி அவமதிப்பு செய்து வண்டி எடுத்துட்டா பெரிய ஆளா ஆகிடுவியா என்று கேட்டு அவருடைய வாகனத்தை எடுக்க விடாமல் மறித்து தகராறு செய்துள்ளனர். அன்று மாலையும் பூபதி மீண்டும் சக்திவேல் வண்டி நிறுத்துமிடத்திற்கு வந்து சக்கிலி தாயோளி எனக் கூறி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதனால் சக்திவேல் கோட்டூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதனடிப்படையில் குற்ற எண் *238/09, 294 (b), 506(ii)* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளிலும், *3 (1) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவுகளிலும் வழக்கு பதிவு செய்தாலும் குற்றவாளி பூபதியை காவலர்கள் கைது செய்யவில்லை.

## 113. நாடகம் பார்க்கச் சென்ற தலித்துகள் மீது தாக்குதல்

சிவகங்கை மாவட்டம், முத்துபேட்டை கிராமம், பறையர் சமூகத்தைச் சேர்ந்த பூச்சி மகன் காமராஜன் (23). கூலித் தொழிலாளி. 01.03.09 அன்று பனையூர் கிராமத்தில் நடைபெற்ற நாடகத்தைப் பார்க்க காமராஜனும், அவருடைய நண்பர் பாண்டியும் சென்றுள்ளனர். காமராஜனுக்கும், பனையூர் கிராமத்தைச் சேர்ந்த கள்ளர் சமூக சுரேஷ் என்பவருக்கும் முன்பகை காரணமாக வாய்தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் நாடகம் முடிந்து வீடு திரும்பிய காமராஜனையும், பாண்டியையும் பின்தொடர்ந்து வந்து சாதியைக் கூறி இழிவுப்படுத்தியும், கெட்ட வார்த்தைகளால் திட்டியும், இரும்புக் குழாய்களால்அடித்துள்ளனர். இவர்களை தடுக்க வந்த காமராஜனின் அண்ணன் வடிவேலையும் உருட்டுக் கட்டையால் தாக்கியுள்ளனர். சிவகங்கை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 02.03.09 அன்று சிகிச்சை பெற்று, தாக்குதல் ஏற்படுத்திய கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த சுரேஷ் மீதும், சேர்வை சமூகத்தைச் சேர்ந்த கண்ணன் மீதும் சிவகங்கை காவல் நிலையத்தில் காமராஜன் புகார்

அளித்தார். அதனடிப்படையில் குற்ற எண் *35/09 294 (b), 324, 506 (ii)* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழும் *3(i) (x)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 114. நாற்காலியில் தலித் அமர்ந்ததால் அடித்துச் சித்திரவதை

சிவகங்கை மாவட்டம், இலுப்பக்குடி பறையர் சமூகத்தைச் சேர்ந்த பெருமாள் மகன் சேகர் (25). இவர் கூலித் தொழிலாளி. 24.09.09 அன்று கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த முனியாண்டியின் வீட்டில் படம் வரைந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த அரசனூரைச் சேர்ந்த சேகரின் உறவினர் கௌரி என்பவர் சேகரிடத்தில் இரு சக்கர வாகனம் இருந்ததால் இணைந்தே வீட்டுக்கு போகலாம் என்று கூறிவிட்டு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். உடனே கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த அழகர்சாமி மகன் ராமச்சந்திரன் “பறயனுங்க எல்லாம் நாற்காலியில் உட்காரக் கூடாது” எனக் கூறி அவமதிப்பு செய்து உருட்டுக் கட்டையால் சேகரையும், கௌரியையும் அடித்து துன்புறுத்தி கொலை செய்வதாக மிரட்டல் விடுத்தனர். அடுத்த நாள் 25.09.09 அன்றும் ராமசந்திரன் மற்றும் பல கள்ளர் சமூகத்தினர் சாலையில் சென்று கொண்டிருந்த சேகரை தகாத வார்த்தைகளால் சாதியைக் கூறி கூப்பிட்டு, உருட்டுக் கட்டையால் அடித்தும், செருப்புக் கால்களால் மிதித்தும், தாக்குதல் நடத்தினர். பூவந்தி காவல் நிலையத்தில் புகார் அளித்ததற்கு பிறகு சேகரும், கௌரியும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றனர். குற்ற எண் *166/09, 294(b), 323, 341* இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் மற்றும் தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவு *3(1) (x)*ன் கீழும் குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு கள்ளர் சமூக ராமச்சந்திரன், முருகன், சக்கரை ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

## 115.எழுந்து நிற்காத தலித்துகள் மீது தாக்குதல்

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா, தாமரங்கோட்டை பறையர் சமூகத்தைச் சேர்ந்த பன்னீர்செல்வத்தின் மகன் தினேஷ் (18). இவருடைய பெரியப்பா மகன் சிவராஜும், அவருடைய நண்பர் பாலமுருகனும் எல்லைக் கல்லில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த சக்திவேல் (23). “என்னைப் பார்த்து எழுந்து நிற்க முடியாதா பறத் தேவிடியா மகனே” என்று சாதியைக் கூறி இழிவுப்படுத்தி கம்பியால் சிவராஜையும், பாலமுருகனையும் அடித்தார். இதனை காவல் நிலையத்தில் புகார் அளித்த போது தினேஷ் சம்பவ சாட்சியாக இருந்ததினால் சக்திவேலும், மாறன் மகன் ஜெயக்குமாரும் (20) 07.09.09 அன்று மிதிவண்டியில் சென்று கொண்டிருந்த போது அவரை பறத்தேவிடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டி உருட்டுக் கட்டையால் அடித்தும், தென்னந்தோப்பில் கட்டி வைத்து சக்திவேலின் தந்தை சாமித்துரை நெஞ்சில் உதைத்தும், சக்திவேலின்தாய் ரெங்கம்மாள் வௌக்கமாறால் அடித்தும் துன்புறுத்தியுள்ளனர். தடுக்க வந்த தினேஷின் தந்தை பன்னீர்செல்வத்தையும் பெரியப்பா வடிவேலுவையும் தாக்கியுள்ளனர். அதிராம்பட்டினம் காவல் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தினேஷும் அவரது பெற்றோர்களும் புகார் அளித்தனர். பட்டுகோட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

## 116. தலித் விவசாயக் குடும்பத்தை சித்திரவதை செய்த வழக்கறிஞர்

சிவகங்கை தாலுக்கா, களப்பிரான் கிராமம், பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த கொங்கன் விவசாயக் கூலித் தொழிலாளி. இவர் தன்னுடைய ஊரில் இருந்த புறம்போக்கு நிலத்தை சுத்தம் செய்து விவசாயம் செய்து வந்தார். இதனையறிந்த மறவமங்கலம்,மறவர் சமூகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் பல்லப்பன்,கொங்கனின் நிலத்தை தன்னுடைய நிலம் என்று தகராறு செய்தார். இதனால் கொங்கன் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியரிடம் புகார் அளிக்கவும், கொங்கனின் பெயருக்கே பட்டா வழங்க உத்தரவு போட்டார். இந்நிலையில் 05.07.09 அன்று காலை, 11 வேப்பமரம், 100 தென்னை மரங்கள், 100 அகத்தி மரங்கள் கொண்ட கொங்கனின் நிலத்தை 150 அடியாட்களுடன் வந்திறங்கிய பல்லப்பன் *JCB* இயந்திரத்தைக் கொண்டு அனைத்தையும் தரைமட்டமாக்கினார். இதனை எதிர்த்துக் கேட்ட கொங்கனின் மகள் ரேவதியையும், அவருடைய அம்மா பேச்சிமுத்துவையும், பள்ள முண்டைங்களா என்று திட்டி, குரல்வளையை நெறித்து, உருட்டுக் கட்டையாலும் இரும்புக் குழாய்களாலும் அடித்து துன்புறுத்தினார். ரேவதியின் கழுத்தில் இருந்த 4 பவுன் தங்கச் சங்கிலியையும் பறித்துச் சென்றனர். தொலைபேசி மூலம் காவல்துறைக்கு நடந்த சம்பவத்தை கூற முயன்ற ரேவதியின் ஆடையைக் கிழித்து மானபங்கம் செய்யவும் முயன்றுள்ளனர். காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்ற கொங்கனின் குடும்பத்தாரிடம் ஆய்வாளர் செங்குட்டுவன் வழக்கறிஞர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது எனக் கூறி புகார் பதிவு செய்ய மறுத்துள்ளார். பிறகு குற்ற எண் 154/09, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் *147, 341, 447, 379, NP 323, 427* மற்றும் தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப் பிரிவு *3(i)(x)*ன் கீழ் பல்லப்பன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு இது தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது.

## 117. வேலைக்குச் சேர்த்து விட்ட தொழிலாளியை அடித்து சித்திரவதை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுக்கா, மூங்கில் ஊரணி கிராமம் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த சின்னமெய்யப்பன் மகன் சேகர் (45). இவர் திருப்பத்தூர் தாலுக்கா கே. வைரம்பட்டி சேர்வை சமூகத்தைச் சேர்ந்த பரஞ்சோதியின் காளவாசலில் டேவிட் என்பவரை வேலைக்கு சேர்த்துள்ளார். டேவிட் 30,000/- முன் பணமாகப் பெற்றுக் கொண்டு எங்கேயோ சென்றுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த முதலாளி பரஞ்சோதியும் கார்த்திக் என்பவரும் சேகரை பள்ளத் தாயோளி என்றும் தகாத வார்த்தைகளைக் கூறித் திட்டி அவமானப்படுத்தி அடித்து துன்புறுத்தியுள்ளனர். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சேகர் உள் நோயாளியாக சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது பரஞ்சோதி, சேகர் மீது புகார் கொடுத்துள்ளதாகக் காவலர் கூறியதால் பதிவுத் தபாலில் கண்டவராயன்பட்டி காவல் நிலையத்திற்கு புகார் மனுவை 08.08.09 அன்று சேகர் அனுப்பியுள்ளார்.

## 118. விடுதிப் பொறுப்பாளர் கவனக் குறைவால் தலித் மாணவன் சாவு

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா, பரளை கிராமத்தைச் சேர்ந்த பறையர் சமூக ராஜேந்திரன் மகன் ராஜேஷ் (6). இவர் சிவகங்கையிலுள்ள கலைவாணர் *NSK* நினைவுக் குழந்தைகள் இல்லத்தில் தங்கி 1ம் வகுப்பில் படித்து வந்தார். இந்த விடுதியில் முள்களை வெட்டுதல், விறகு சுமந்து வருதல், சமையல் செய்தல் போன்ற வேலைகளை விடுதியில் தங்கியுள்ள இளஞ்சிறார்களே செய்து வந்துள்ளனர். மேலும் கழிப்பறைகளை பூட்டி வைத்து இயற்கை உபாதைக்கு முற்புதர்களையே மாணவர்கள் பயன்படுத்தக் கட்டாயப்படுத்தியுள்ளனர். 21.10.2009 அன்று பாதுகாப்பற்ற முறையில் கட்டப்பட்டிருந்த குடிநீர் தொட்டியில் மாணவர் ராஜேஷ் விழுந்து இறந்துள்ளார். ஆனால் மாணவர் ராஜஷ் இறந்த தகவலை தலைமை ஆசிரியர், விடுதிக் காப்பாளர், காவல் துறைக்கும், கல்வி துறைக்கும் தெரியப்படுத்தாமல் மறைத்துள்ளனர். மாணவர் ராஜேஷின் தந்தை ராஜேந்திரன் சிவகங்கை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் 1225/09 குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு 174ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 119. தலித் இளைஞர் கொலை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தாலுக்கா, கிருஷ்ணராஜபுரம் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த திருவேட்டை மகன் கார்த்திகைசாமி (32). 18.07.09 அன்று மறவகளுக்கும், பள்ளர்களுக்கும் இருந்த முன் விரோதத்தை மனதிற் கொண்டு இளங்காட்டூர் மறவர் சமூகத்தைச் சேர்ந்த பாண்டி மகன் காளை என்கிற அருள்நிதி (20) பள்ளர்களை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார். இதனால் ஏன் ஆபாசமாக திட்டுகிறீர்கள் என்று கேட்ட கார்த்திகைசாமியையும் அவருடன் பிரபு மற்றும் ராமனையும் மறைந்திருந்த மறவர் கும்பலான ராஜா, கருப்புச்சாமி, சூரி (எ) சங்கையா, செல்லப்பாண்டி மற்றும் பலர் சரமாரியாக வெட்டியுள்ளனர். இதனால் மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே கார்த்திகைசாமி இறந்துள்ளார். 19.07.09 அன்று மதுரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்ற பிரபு மற்றும் ராமனிடம் திருப்புவனம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முத்துராமலிங்கம் உணவகத்தில் சாப்பிடும் போது தகராறு ஏற்பட்டதாக மிரட்டி கையெழுத்து வாங்கியுள்ளனர். குற்ற எண் 463/09, இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 324, 307, 302 மற்றும் *3(2) (v)* தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 120. அருந்ததியர் அரசு வேலையில் இருப்பதா? மேல் சாதியினரின் அடாவடித்தனம்

ஈரோடு மாவட்டம், ஊஞ்சலூர், கருங்காடு அருந்ததியர் காலனியை சேர்ந்தவர் வீரமுத்து (48/09). தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துனராக பணியாற்றுகிறார்.

18.10.09 அன்று வீரமுத்து அவருடைய டி.வி.எஸ். 50 வாகனத்தில் வீட்டிற்கு சென்றுக் கொண்டிருந்தார். அப்போது கவுண்டர்சாதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் வெங்கடாச்சலம் உள்ளிட்ட 6 பேர் வீரமுத்துவை வழி மறித்து சக்கிலி தாயோலி நின்று பேச மாட்டியா? அரசு வேலையில் இருந்தாலும் நீ சக்கிலி தான். எங்களை கண்டால் மரியாதை கொடுக்க வேண்டும் அப்படி கவுரவமாக வாழ வேண்டுமானால் ஈரோடு டவுனில் சென்று குடியிருக்க வேண்டும் என்று மதுபோதையில் கூறியுள்ளனர். அதற்கு வீரமுத்து நீங்கள் இப்போது குடிபோதையில் உள்ளீர்கள் எதுவாக இருந்தாலும் காலையில் பேசிக் கொள்ளலாம் என்று பதிலளித்து விட்டு வீட்டிற்கு சென்றுள்ளார்.

அதனால் ஆத்திரமடைந்த மேற்படி கவுண்டர்கள் இரவு சுமார் 9.30 மணியளவில் 2 டி.வி.எஸ். 50 வாகனத்தில் வீரமுத்துவின் வீட்டிற்கு சென்று வீரமுத்துவை அடித்து உதைத்துள்ளனர். அதை தடுக்கச் சென்ற அவருடைய அம்மா காமாட்சியையும் மனைவி அமுதாவையும் கடுமையாக தாக்கியுள்ளனர். இவர்களுடைய அலறல் சத்தம் கேட்டு ஊர் மக்கள் கூடவே கவுண்டர் சாதியினர் தப்பித்து சென்றுள்ளனர். பின்பு 108 ஆம்புலன்சுக்கு ஊர் பொது மக்கள் தகவல் அளித்து வீரமுத்துவையும், அவரது அம்மாவையும் கொடுமுடி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். சிகிச்சை பெற்று விட்டு 19.10.09 அன்று வீட்டிற்கு சென்றுள்ளனர். வலி அதிகமாக இருந்ததால் வீரமுத்துவும் அவரது அம்மாவும் 20.10.09 அன்றும் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சைப் பெற்றுள்ளனர். 21.10.09 மற்றும் 22.10.09 ஆகிய நாட்களில் கொடுமுடி காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் சென்று நடந்த சம்பவம் பற்றி வீரமுத்துவிடம் எழுதி வாங்கியுள்ளனர். 23.10.09 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. கு. எண். 276/09 பிரிவுகள் *147, 448, 294 (b), 506 (ii)* இ.த.ச மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வ.கொ. தடுப்பு சட்டம் பிரிவு *3 (1) (x)* ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 121. மேல்சாதியினர் தெருவில் குடியிருந்ததற்காக அடித்துக் கருச்சிதைவு செய்த கொடூரம்

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில், மறவமங்கலம் அரசு பிற்பட்டோர் மாணவர் விடுதியில் சமையலராக பணி செய்து வருபவர் இந்து பள்ளர் சமூகத்தைச் சேர்ந்த கோவிந்தன். இவர் மனைவி சரஸ்வதியுடன் மேல்சாதியினர் வாழும் தெருவில் குடியிருந்துள்ளார். இவர்களின் சாதி தெரியாத வரை இவர்களுடன் மற்றவர்கள் நன்றாக பழகியுள்ளனர். பள்ளர் சாதி என்பது தெரிய வந்தவுடன் அப்பகுதியில் உள்ள மேல்சாதியினர் இவர்களை வீடு காலி செய்து காலனிக்கு செல்லுமாறு மிரட்டியுள்ளனர்.

இந்நிலையில் 23.06.09 அன்று கோவிந்தன் வேலைக்கு சென்ற பின்பு மேல்சாதியினரான நாராயணன், அவரது மனைவி சரஸ்வதி, மகள் முத்தீஸ்வரி ஆகியோர் சரஸ்வதியை அடித்தும், அவருடைய வயிற்றில் காலால் எட்டி உதைத்தும் சித்திரவதை செய்துள்ளனர். மேலும் தாலிக் கயிற்றை பிடித்து இழுத்ததில் கழுத்தில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டுள்ளது. 3 மாத கர்ப்பிணியான சரஸ்வதியின் வயிற்றில் எட்டி உதைத்ததால்

கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் நடந்துக் கொண்டிருக்கும் போது அருகாமையில் குடியிருக்கும் மற்ற சாதி நபர்கள் சென்று சரஸ்வதியை காப்பாற்றியுள்ளனர். இத்தகவலை அறிந்து வீட்டிற்கு சென்ற கோவிந்தன் அரை மயக்க நிலையில் இருந்த சரஸ்வதியை ஆட்டோவில் ஏற்றி காளையார்கோவில் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று புகார் அளித்துள்ளார். காவல் நிலையத்திலிருந்த பயிற்சி காவலர் புகாரை ஏற்காமல் காவல் நிலையத்திலேயே அமர வைத்துள்ளார். சரஸ்வதிக்கு கருச்சிதைவு ஏற்பட்டதால் இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. இச்சூழலை கோவிந்தன் பயிற்சி காவலரிடம் எடுத்துச் சொல்லி பக்கத்து வீட்டுக்காரரிடம் சேலையை ஓசி வாங்கி மாற்றியுள்ளார். காவல் ஆய்வாளர் இவரது புகாரை ஏற்கக் கூடாது என உத்தரவிட்டுள்ளார். அதனால் பயிற்சி காவலர் இவர்களை காவல் நிலையத்திலேயே உட்கார வைத்துள்ளார்.

காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு சென்று இவர்களிடம் சாதிப் பிரச்சனையாக இருப்பதால் இப்புகாரை ஏற்க முடியாது. வேறு மாதிரி புகார் எழுதிக் கொண்டு மறுநாள் மாலை 5 மணிக்கு வருமாறு கூறியுள்ளார். அதனால் இரவு சுமார் 10.30 மணி யளவில் இருவரும் வீட்டிற்கு சென்றுள்ளனர். அப்போது பாதிப்புக்குள்ளாக்கிய சரஸ்வதி இவர்களைப் பார்த்து நீங்கள் எங்கு சென்றாலும் வழக்கை எடுக்க மாட்டார்கள் என்று ஏளனமாக பேசியுள்ளார். அன்றைய நாள் இரவு முழுவதும் சரஸ்வதிக்கு அதிகமான இரத்தப்போக்கு ஏற்பட்டுள்ளது. மறுநாள் 24.06.09 அன்று சிவகங்கை மாவட்டக் காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்து விட்டு சிவகங்கை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் கருச்சிதைவு ஏற்பட்ட விபரம் கூறி சரஸ்வதி உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். சரஸ்வதிக்கு தேவையான அனைத்து பரிசோதனைகளையும் செய்த பின்பு உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை அளித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மக்கள் கண்காணிப்பகம் சார்பில் மாவட்ட ஆட்சியர், காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆணையங்களுக்கு 02.07.09 அன்று பதிவுத் தபாலில் புகார் அனுப்பப்பட்டுள்ளது.

## 122. இருளர் சமூக வார்டு உறுப்பினர் மீது தாக்குதல்

விழுப்புரம் மாவட்டம், கஞ்சனூர் கே.ஆர். பாளையத்தில் வசித்து வருபவர் முனியம்மா (45/09) க/பெ. முனுசாமி. இருளர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் தேர்தலில் போட்டியிட்டு 1வது வார்டு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இருளர் சாதிப் பெண் பஞ்சாயத்து உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டது வன்னியர் சாதியைச் சேர்ந்த பஞ்சாயத்து கிளார்க் பக்தவசலம் மற்றும் ராமலிங்கம் ஆகியோருக்கு பிடிக்கவில்லை. முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சாந்தி என்பவருடன் இணைந்து முனியம்மா 100 நாள் வேலைத் திட்டத்தை அவ்வூர்களுக்கு வரவிடாமல் தடுத்துள்ளார் என்ற பொய்த் தகவலை ஊர் மக்களிடம் பரப்பி விட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பொது மக்கள் 25.05.09 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று திரும்பிய போது கும்பலாக சேர்ந்து முனியம்மாளை கடுமையாக அடித்தும், செருப்பால் அடித்தும் சித்திரவதை செய்துள்ளனர். பக்தவசலம் முனியம்மாளை தீயிட்டு கொளுத்தச் சொல்லி தூண்டிவிட்டுள்ளார். அதன் பின்பு முனியம்மாளின்

உறவுக்காரப் பெண் முனியம்மாளை கைத்தாங்கலாக வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக கஞ்சனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 123. மேல் சாதியினரின் பாலியல் சீண்டல்: இருளர் பெண் தற்கொலை

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி, தாண்டவசமுத்திரம் கிராமத்தில் வசித்து வந்தவர் ராஜகுமாரி (14/09) த/பெ. காசி. இருளர் சமூகத்தை சேர்ந்தவர். 10ம் வகுப்பு படித்துள்ளார். இந்நிலையில் 25.05.09 அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் ராஜகுமாரியின் அக்கா ராதிகா குழந்தைகளுடன் வீட்டிலும், ராஜகுமாரி வெளியிலும் படுத்துள்ளனர். அப்போது செட்டியார் சாதியைச் சேர்ந்த கோகுலன் என்பவர் ராஜகுமாரியின் மார்பை பிடித்து அழுத்தி துப்பட்டாவை இழுத்து பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார். ராஜகுமாரி அலறவே கோகுலன் அங்கிருந்த தப்பித்து சென்றுள்ளார்.

இத்தகவலை ராஜகுமாரியின் அம்மாவிடம் கூற அவர் ஊர் பஞ்சாயத்தாரிடம் நியாயம் கேட்க வேண்டும் என்று அவருடைய கணவருக்கு போன் செய்து அழைத்துள்ளார். இந்நிலையில் 28.05.09 அன்று ராஜகுமாரி பள்ளிக்கு செல்லும் வழியில் கோகுலன் மனைவி ராஜேஸ்வரி அவருடைய கணவருக்கு ஆதரவாகவும் ராஜகுமாரியின் நடத்தை குறித்து கேவலமாகவும் பேசியதால் மன வேதனையடைந்த ராஜகுமாரி ஏரிப் பக்கத்தில் இருந்த விஷத் தழைகளை தின்று தற்கொலை செய்து கொண்டுள்ளார். கூலி வேலைக்கு சென்ற ராஜகுமாரியின் தாய் தகவலறிந்து வந்து ராஜகுமாரியை ஆட்டோவில் ஏற்றி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளார். அங்குள்ள செவிலியர் ராஜகுமாரி இறந்து விட்டதாக கூறியுள்ளார். பிரேத பரிசோதனைக்கு பயந்து கொண்டு அரசு தலைமை மருத்துவமனைக்கு ராஜகுமாரியின் உடலை எடுத்துச் செல்லவில்லை. இது தொடர்பாக கண்டாச்சிபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கோகுலன் மற்றும் ராஜேஸ்வரி மீது பிரிவுகள் 376, 603 இ.த.ச மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் *3 (1) (x)*ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 124. அருந்ததியர் சிறுவன் மீது தாக்குதல்

ஈரோடு மாவட்டம், பவானி, அந்தியூர், நகலூர் புதூரில் வசித்து வருபவர் சக்திவேல் (16/09). அருந்ததியர் சாதியை சேர்ந்தவர். இவர் செங்கல் சூளையில் வேலை செய்து விட்டு நகலூர் சுடுகாட்டு வழியாக சென்றுள்ளார். அப்போது அவ்வழியாக சென்ற நாயக்கர் சாதியைச் சேர்ந்த சந்திரன் என்பவர் மதுபோதையில் சக்கிலிய நாயே ஏன் இவ்வழியாக வந்தாய், வண்டியில் ஏறு என்று மிரட்டியுள்ளார். அதற்கு சக்திவேல் தெரியாமல் வந்து விட்டேன் என்று கூறியுள்ளார். ஆனால் சந்திரன் சக்திவேலை அடித்தும், காலால் எட்டி உதைத்தும் குரல்வளையைப் பிடித்து நெறித்தும் சித்திரவதை செய்துள்ளார். சக்திவேலின் முகத்தில் குத்தியதால் அவருடைய வாயில் இரத்தம் வந்துள்ளது. இருப்பினும் போதை உச்சத்தில் சந்திரன் சக்திவேலை மேலும் மோசமாக தாக்கியுள்ளார்.

அப்போது அவ்வழியாக சைக்கிளில் சென்ற மாதன் என்பவரது சைக்கிளில் ஏறி சக்திவேல் தப்பித்துச் சென்றுள்ளார். அவருடைய பெற்றோர் அவரை அந்தியூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்து சிகிச்சை அளித்துள்ளனர். 07.12.09 அன்று ஈரோடு அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு அந்தியூர் மருத்துவர்கள் பரிந்துரை செய்ததால், ஈரோடு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சைப் பெற்றுள்ளார். பாதிப்பு ஏற்படுத்திய மேல் சாதி சந்திரன் மீது நடவடிக்கை எடுக்க கோரி 15.12.09 அன்று ஆதித் தமிழர் பேரவை சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

## 125. திருவிழாவில் தீ மிதித்த தலித் மீது மேல் சாதியினர் தாக்குதல்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர், மேலந்தல் காலனியில் வசித்து வருபவர் குபேந்திரன் (25/09). இவர் ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர். காங்கேயனூர் திரௌபதி அம்மன்கோவில் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறக் கூடியது. ஆனால் அந்த திருவிழாவில் தலித்துகள் பங்கேற்க முடியாது.

இந்நிலையில் மேற்கண்ட விபரம் அறியாத குபேந்திரன் 07.08.09 அன்று நடைபெற்று காங்கேயனூர் திரௌபதி அம்மன்கோவில் திருவிழாவில் வேண்டுதலின் படி தீ மிதித்துள்ளார். அவர் தீ மிதித்து விட்டு வெளியே வந்தவுடன் அவ்வூரை சேர்ந்த நாடார் சமூகத்தினர் 20 பேர் கொண்ட கும்பல் குபேந்திரனை எந்த ஊர் என்று கேட்டுள்ளனர். மேலந்தல் காலனி என்று சொன்னவுடன் காலனிக்காரனை எல்லாம் எவன்டா தீ மிதிக்கச் சொன்னது என்று கூறி அந்த கும்பல் குபேந்திரனை மிகக் கொடூரமாக தாக்கியுள்ளது. அதில் குபேந்திரன் மயக்கமடைந்துள்ளார்.

குபேந்திரனின் மாமா, அவரை அங்கிருந்து ஒரு ஆட்டோவில் ஏற்றி திருக்கோவிலூர் அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்துள்ளார். 07.08.09 முதல் 10.08.09 வரை அங்கேயே உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளார். இச்சம்பவம் குறித்து மணலூர்பேட்டை காவல் நிலையத்தில் கு. எண் 133/09 பிரிவுகள் 147, 342, 323, இ.த.ச ச/ற மற்றும் *3 (1) (x)* தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் காலனியை சேர்ந்த 20 நபர்கள் கலவரத்தில் ஈடுபட்டதாக கு. எண் 132/09 பிரிவுகள் *147, 341, 506 (ii)* இ.த.ச-ன் கீழ் எதிர் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 126. மேல்சாதி பெண்ணைக் காதலித்த தலித் இளைஞன் சித்திரவதை

ஈரோடு மாவட்டம், சின்னமாபுரம் கிராமம் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த கருப்புச்சாமியின் மகன் பிரபாகரன் (20). இவர் அதே ஊரில் தங்கியிருந்த கவுண்டர் சமூகத்தை சேர்ந்த ப்ரவீணா (20) என்பவரை காதலித்துள்ளார். இதனையறிந்த ப்ரவீணாவின் உறவினர் மோகன்ராஜ் பிரபாகரனை தொலைபேசியில் அழைத்து வீட்டுக்கு

வரச் சொல்லி சக்கிலி தாயோலிக்கு கவுண்ட புள்ள கேக்குதா என்று உருட்டுக் கட்டையால் அடித்து சித்திரவதை செய்துள்ளனர். இதனைக் கேட்கச் சென்ற பிற அருந்ததியர்களையும் சக்கிலி கண்டாரோலிகளா என்று தகாத வார்த்தைகளால் அவமதிப்பு செய்து ப்ரவீனாவை பிரபாகரன் கையைப் பிடித்து இழுத்ததாக பொய் புகார் கொடுத்தனர். பிரவீனா மற்றும் பிரபாகரன் உயிருக்கும், படிப்புக்கும் ஆபத்து நேரிடும் என்ற பயத்தினால் பிரபாகரன் தண்ணீர் பிடிக்கும் போது தகராறு ஏற்பட்டது என்று பொய்யான வாக்குமூலத்தை மாவட்ட துணைக் காவல் கண்காணிப்பாளரிடம் அளித்துள்ளார். பிறகு 07.11.09 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் உண்மையான புகாரை பிரபாகரன் கொடுத்துள்ளார். இதனால் ப்ரவீனாவின் உறவினர்கள் கொலை மிரட்டல் விடுத்து புகாரை திரும்ப பெற கட்டாயப்படுத்தியுள்ளனர்.

## 127. அரசு விடுதி மாணவர்கள் சாலை மறியல்: மிரட்டல் விடுத்த மேல்சாதியினர்

ஈரோடு மாவட்டம், ரங்கம்மாள்பாளையம், டாக்டர் அம்பேத்கர் அரசு கல்லூரி விடுதியில் பள்ளர், பறையர், அருந்ததியர் சமூக மாணவர்கள் சுமார் 170 பேர் தங்கி பயின்று வந்தனர். இங்கு மாணவர்களுக்கு சரியாக வேக வைக்காத உணவுகளையும், பழைய காய்கறிகளையும் தொடர்ந்து பயன்படுத்தி வந்துள்ளனர். மேலும் கழிப்பறைகளிலும் நீர் வருவதில்லை. இதுபோன்ற அடிப்படை வசதிகளை நிவர்த்தி செய்யக் கோரி பலமுறை மனு அளித்துள்ளனர். ஆனால் புகாரின் மீது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. 09.09.09 அன்று மாணவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். மறியலை கைவிடாவிட்டால் தடியடி நடத்துவோம் என்று காவல்துறை மிரட்டியதால் மாணவர்கள் மறியலை கை விட்டனர். அடுத்த நாள் 10.09.09 காலைக்கடனை முடிக்க ரயில்பாதைக்கு சென்ற போது மேல்சாதியினர் மாணவர்களை அடிக்க வந்துள்ளனர். இதற்கு ஆதரவாக விடுதிக் காப்பாளர் சங்கரும் செயல்பட்டுள்ளார். மாணவர்களுக்கு இதுவரை எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தராத சூழ்நிலையிலேயே அவர்கள் தங்கிப் பயின்று வருகின்றனர்.

## 128. சட்ட உதவி செய்தவர்கள் மீது பொய் வழக்கு

கரூர் மாவட்டம், சின்னவரப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் மாயவன். த/பெ. பகடைச்செல்வன். இவர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் மண்மங்கலத்தில் உள்ள கவுண்டர் சாதியை சேர்ந்த கோவிந்தராஜ் என்பவரிடம் ஓட்டுநராக பணியாற்றியுள்ளார். 27.07.09 அன்று தாமதமாக வேலைக்கு சென்றதால் மாயவனை கோவிந்தராஜ் சாதிப் பெயரை சொல்லி திட்டி அடித்துள்ளார். அதனால் மாயவன் அவருடைய உறவினர் கண்ணன் என்பவரிடம் சட்ட உதவி கேட்டுள்ளார். கண்ணன் இந்தியக் குடியரசுக் கட்சியின் கரூர் மாவட்ட தலைவர் ஆனந்தராஜிடம் இத்தகவலைக் கூறியுள்ளார். மாலை 6 மணியளவில் வாங்கல் காவல் நிலையத்திற்கு மாயவன், கண்ணன், ஆனந்தராஜ் ஆகியோர் சென்று காவல் ஆய்வாளர் கண்ணையன் என்பவரிடம் புகார் அளித்துள்ளார்.

இதையறிந்த கோவிந்தராஜ் பணம் கொடுத்து மாயவனிடம் வழக்கை திரும்பப் பெற சொல்லி மிரட்டியதன் அடிப்படையில் புகார் வாபஸ் பெறப்பட்டுள்ளது. மாயவனின் பெற்றோரை மிரட்டி கண்ணனும், ஆனந்தராஜூம் மாயவனை கடத்தி சென்றுள்ளதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வைத்துள்ளனர். அதனால் வாங்கல் காவல் நிலையத்தில் கண்ணனையும், ஆனந்தராஜையும் அடித்து சித்திரவதை செய்து 29.07.09 அன்று பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்துள்ளனர். 18.08.09 வரை 19 நாட்கள் சிறையில் இருந்து பிணையில் வெளி வந்துள்ளனர்.

## 129. பொது இடத்தில் தலித் அவமதிப்பு: நடவடிக்கை எடுக்காத காவல்துறை

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுக்கா, கண்டங்குறிச்சி, பறையர் சமூகத்தைச் சேர்ந்த சாத்தன் மகன் வீரையா (36). இவர் விவசாயக் கூலித் தொழிலாளியாவார். தமிழக அரசு இலவசமாக கொடுத்த எரிவாயு அடுப்பை, சேர்வை சமூகத்தைச் சேர்ந்த பொன்னையாவிற்கு வீரையா 3000/- ரூபாய்க்கு விற்றுள்ளார். அவர் அந்தமான் சென்றுவிட்டதால் பொன்னையாவின் உறவினர் சுந்தர் பணம் தரும் பொறுப்பை ஏற்றுள்ளார். வீரையா பலமுறை பணம் கேட்டும் பணம் தராமல் காலம் தாழ்த்தியுள்ளார். இதனால் 28.08.09 அன்று தேநீர் கடையில் சுந்தருக்கும்-வீரையாவுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சுந்தரும் அங்கிருந்த கோட்டை மகன் சேகர் மற்றும் அம்பலத்தேவர் ஆகியோர் வீரையாவை பறப்பயலே, தேவிடியா மகனே என்றும் வேறு பல தகாத வார்த்தைகளையும் கூறி பொது இடத்தில் அவமானப்படுத்தி அடிக்கச் சென்றுள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இளைஞர் அணி துணை அமைப்பாளராக வீரையா இருந்தும் காளையார்கோவில் காவல் நிலையத்தில் 28.08.09 அன்று அவர் அளித்த புகாரின் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

## 130. தலித் மனித உரிமைக் காப்பாளருக்கு கொலை மிரட்டல்

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், வீரானந்தல் கிராமம், பறையர் சமூகத்தைச் சேர்ந்த துரைசாமியின் மகன் கிருபாகரன் (30). இவர் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கத்தில் இணைந்து பணி புரிந்து வந்தார். வீரானந்தல் கிராமம் முதலியார் சமூகத்தைச் சேர்ந்த அண்ணாமலைக்கு சொந்தமான 2 லட்ச ரூபாய் மதிப்புள்ள தேக்குமரங்களை அவர்களுடைய உறவினர்கள் வெட்டியதால் அதனை மீட்டுத் தர கிருபாகரன் அண்ணாமலையை அணுகியுள்ளார். அண்ணாமலை ஊரகச் சரக அலுவலகர்களிடம் புகார் தந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பிரபாகரன் மற்றும் அருணாச்சலம் ஆகியோர் குடிபோதையில் 03.07.08 அன்று கிருபாகரனை பறத்தேவிடியா பையா என்று சாதியைச் சொல்லி அவமானப்படுத்தி, இந்தப் பிரச்சனையில் தலையிட்டால் கொலை செய்வதாக மிரட்டியுள்ளனர். இதுபற்றி புதுப்பாளையம் காவல் நிலையத்தில் கிருபாகரன் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் காவல்துறை மேற்கொள்ளவில்லை.

## 131. அருந்ததியர் கிராமத்தைத் தாக்கிய மேல்சாதியினர்

கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்காவில் ராசக்காபாளையம் உள்ளது. இங்கு கவுண்டர்களும், அருந்ததியர்களும் வாழ்ந்து வருகின்றனர். இந்த இரு சமூகத்தினருக்கும் இடையே பல ஆண்டுகளாக முன் விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் 26.04.09 அன்று அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த முருகேசன் (18) என்பவர் குடிபோதையில் கவுண்டர் சமூகத்தினருக்கு சொந்தமான முத்துமளிகைக் கடை அருகே வாந்தி எடுத்துள்ளார். இதனால் அருந்ததியர் குடியிருப்புக்குள் நுழைந்து முருகேசனை தாக்கியுள்ளனர். இதனை தடுக்க வந்த மற்ற அருந்ததியர் சமூகத்தினரை, கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் என்பவரின் தலைமையில் வந்த கும்பல் உருட்டுக் கட்டை, அரிவாளால் தாக்கியுள்ளனர். வீட்டு உபயோகப் பொருட்களையும், சமையல் பொருட்களையும், அடித்து உடைத்துள்ளனர். ஆதித்தமிழர் பேரவையின் கொடிக் கம்பத்தை உடைத்து, அம்பேத்கர் படம் கொண்ட அறிவிப்புப் பலகைக்கும் தீ வைத்தனர். கவுண்டர் சமூகப் பெண்களும் கலவரத்தில் கலந்து கொண்டு “சக்கிலிச்சிங்க முலைய அறுங்கடா” எனவும், “அவுங்கள ரோட்டுலயே கெடுங்கடா” எனவும் சாதி வெறியில் தாக்குதல் தொடுத்துள்ளனர். இந்த தாக்குதலில் ரங்கம்மாள், நாகமணி, சி.பி.குமார் ஆகியோர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளனர். அருந்ததியர் சமூக சி.பி குமார் மகாலிங்கபுரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் 26.04.09 அன்று குற்ற எண் 230/09, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் *147, 148, 324, 323, r/w* மற்றும் தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவு *3(1) (x)* கீழும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் 231/09, இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 147, 148, 324, 323ன் கீழ் அருந்ததியர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 132. சண்டையை விலக்கி வைத்த குடும்பத்தார் மீது தாக்குதல்

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை தாலுக்கா, கீழமுன்னீர்பள்ளம் கிராமம், கிறிஸ்தவ பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர் அந்தோணிமுத்து (50). இவர் விவசாயக் கூலித் தொழிலாளி. ஒருமுறை பள்ளர்களுக்கும், தேவர் சமூக இளைஞர்களுக்கும் நடந்த தகராறை அந்தோணிமுத்துவின் மகன் ஸ்டீபன் அருள்தாஸ் (25) சமாதானம் செய்து சண்டையை விலக்கி வைத்துள்ளார். இதனால் வன்மம் கொண்டு 30.09.09 அன்று இரவு உணவு வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் கடைக்கு சென்ற அந்தோணிமுத்துவை மூக்கையாத்தேவர் மகன் அல்லக்காத்தன் உள்ளிட்ட ஒரு கும்பல் வழிமறித்து தாக்கியது. அல்லக்காத்தன் இரும்புக் கம்பியால் அந்தோணிமுத்துவின் முகத்தில் கடுமையாக தாக்கியதில் அந்தோணிமுத்து மயக்கமடைந்தார். இதனால் அவரை ஓடைக்குள் தூக்கி எறிந்து சென்றுள்ளனர். முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் 30.09.09 அன்று புகார் செய்த போது வெள்ளைத்தாளில் கையெழுத்து போடச் சொல்லி அந்தோணிமுத்துவை கட்டாயப்படுத்தி அவருடைய இருசக்கர வாகனத்தையும், கைபேசியையும் காவலர்கள் பறிமுதல் செய்து கொண்டு குடிபோதையில் கீழே விழுந்து விட்டதாக பொய் வழக்கை காவல் ஆய்வாளர் அருள் பதிவு செய்துள்ளார், குற்ற எண் 2871/09 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 341, 324, 231ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 133. தலித்துகள் மீது மேல் சாதியினர் தொடர் தாக்குதல்

விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி வட்டம், டி.வேப்பங்குளம் கிராமத்தில் தேவர், பள்ளர், பறையர், அருந்ததியர் சமூகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இங்கு தேவர் சமூக வீடுகளில் தாழ்த்தப்பட்ட பெண்கள் கட்டாயக் குலவையிட வேண்டும். செருப்பு அணியக் கூடாது, பணி செய்ய மறுக்கக் கூடாது, இரட்டைக் குவளை முறை, பெண்களை பாலியல் உறவுக்கு கட்டாயப்படுத்துதல் போன்ற பலவகையான தீண்டாமை வடிவங்கள் நிலவி வருகின்றன.

இந்நிலையில் 03.10.09 அன்று கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்காக புகைப்படம் எடுக்கும் நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது பறையர்கள் வரிசையில் நின்றுக் கொண்டிருந்தனர். அப்போது தேவர் சமூகத்தினர் சிலர் வரிசையில் நிற்காமல் சென்ற போது தலித் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பதிவுச் சீட்டு எழுதும் தேவர்சமூகத்தைச் சேர்ந்த கண்ணனை கேட்டுள்ளனர். அதற்கு கண்ணன் பறத் தாயோலிகளுக்கு பொறுக்க முடியலையாடா என்று பொது இடத்தில் சாதியைக் கூறி அவமதிப்பு செய்துள்ளார். மேலும் தேவர் சமூக கண்ணன், செந்தில், சௌந்திரபோஸ், பனிச்சாமி உள்ளிட்ட 21 பேர் கொண்ட கும்பல் தலித் சமூக இளைஞர்களான வென்னிமுத்து, முத்துராஜா, முத்துமணி, முத்துவேல், முனியாண்டி ஆகியோர்களை கட்டையாலும், செருப்பாலும் தாக்கியுள்ளனர். மேலும் தேவர் சமூகத்தினரின் காலில் விழச் சொல்லி கட்டாயப்படுத்தியுள்ளனர். காரியாப்பட்டி பேருந்தில் ஏறி தப்பிச் செல்ல முயற்சித்தவர்களை நடத்துனரையும், ஓட்டுநரையும் மிரட்டி, பேருந்திலிருந்து தலித்துக்களை கட்டாயப்படுத்தி இறக்கியுள்ளனர். மேலும் காரியாப்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தவர்களையும் மிரட்டி மருத்துவமனையை விட்டு கட்டாயப்படுத்தி வெளியேற்றியுள்ளனர். இதனால் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருந்த அம்மக்கள் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் உதவியுடன் விருதுநகர் ஆட்சித் தலைவரிடம் 05.10.09 அன்று புகார் அளித்துள்ளனர். முக்குளம் காவல் நிலையத்தில் குற்ற எண் *113/09 r/w 501, 323, 506 (ii)* ன் கீழ் ஒரு வழக்கும், தலித் சமூகத்தைச் சேர்ந்த முனியாண்டி கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண் *114/09 u/s, 147, 148, 294 (b), 323, 355, 324, 506 (ii)* இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் தலித் வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவு *3(1) (x)*ன் கீழ் தேவர் சமூகத்தைச் சேர்ந்த 21 பேர் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

# கண்டறிந்தவை-பரிந்துரை

**தீண்டாமை வடிவங்கள்**

- இரட்டை டம்ளர் முறை
- பொதுப் பாதையில் நுழைய அனுமதி மறுப்பு
- பொதுப் பாதையில் நடக்கத் தடை
- கோயிலில் நுழையத் தடை
- உயர் கல்வி பெறுவதில் காழ்ப்புணர்வு
- தலித் தலைவர்கள் சிலை மீது அவமதிப்பு
- பொது வசதிகளைப் பயன்படுத்தத் தடை
- தூய்மையான (அ) உயர் ரக ஆடை அணிவதற்குத் தடை
- கட்டாய இழிதொழில்
- சாவுப் பறையடிக்க / வெட்டியான் தொழில்/ கழிவுகளை சுத்தம் செய்ய கட்டாயப்படுத்துதல்
- தலித்துகளின் நிலங்கள் அபகரிப்பு
- சாதிப்பெயரால் பொதுமக்கள் முன்னிலையில் இழிவுப்படுத்துதல்
- பாலியல் தொந்தரவு செய்தல்
- பஞ்சாயத்துக்களில் பங்கேற்க தடை
- தேர்தலில் போட்டியிடத் தடை .. இன்னும் பல

NCRB புள்ளி விவரப்படி 2009 ஆம் ஆண்டு இந்தியாவில் தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீதான வன்முறைகள் குறித்து மொத்தம் 33,594 மற்றும் 5,425 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 11,143 மற்றும் 944 வழக்குகள் தாழ்ட்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வழக்கின் வகை | தலித்துகள் | பழங்குடியினர் |
|---|---|---|---|
| 1. | கொலைகள் | 624 | 118 |
| 2. | பாலியல் பலாத்காரம் | 1,346 | 583 |
| 3. | கடத்தப்படுதல் | 512 | 82 |
| 4. | கொள்ளை | 44 | 3 |
| 5. | திருட்டு | 70 | 24 |
| 6. | எரித்தல் | 195 | 29 |
| 7. | காயப்படுத்துதல் | 4,410 | 787 |
| 8. | சிவில் வழக்குகள் | 168 | 2 |
| 9. | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 11,143 | 944 |
| 10. | மற்றவை | 15,082 | 2,853 |
| | மொத்தம் | 33,594 | 5,425 |

## பொதுவாகக் கண்டறிந்தவைகள் :

தமிழ்நாட்டில் மக்கள் கண்காணிப்பகம் மற்றும் மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம் ஆகியவை தீண்டாமை சித்திரவதைச் சம்பவங்களில் மட்டும் தலையீடு செய்து கள ஆய்வு செய்த வழக்குகளில் தற்போது தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் 133 வழக்குகளில் உள்ள வன்முறைகளிலும், தீண்டாமை சித்திரவதைகளிலும் கண்டறிந்தவைகள் கீழே் கொடுக்கப்பட்டுள்ளன.

- தென் மாவட்டங்களில் சாதிக் கலவரங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. முதுகுளத்தூரில் தேவர் குரு பூசையை முன்னிட்டு தொடர்ந்து தேவர் சாதியினருக்கும், பள்ளர் சமூகத்தினருக்கும் இடையே சாதிக் கலவரம் நடைபெற்றுள்ளது. தலித்துகள் மீது மட்டும் தாக்குதல் நடத்தி, பொய் வழக்கு போட்டுள்ளனர்.
- உயர் சாதியினர் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளில் தலித்துகள் கட்டப் பஞ்சாயத்து மூலமாக ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர்.
- தலித்துகளின் சிறு சிறு உரிமைகள் பெறுவதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாத உயர் சாதியினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தலித்துகள் நாற்காலியில் அமர்ந்ததற்காக தாக்கப்பட்டுள்ளனர். இரு சக்கர வாகனங்களில் சென்றதற்காக அடித்துள்ளனர்.

- தலித்துகள் மீதான தீண்டாமை வன்கொடுமைகள் இன்றளவும் குறையவே இல்லை. தலித்துகள் பொதுப் பாதைகளில் நடக்க மறுக்கப்பட்டுள்ளனர். கோயிலில் நுழைய தடை செய்யப்பட்டுள்ளனர். பொதுக் குழாயில் நீரெடுக்க தடுக்கப்பட்டுள்ளனர். பொது சுடுகாட்டில் தலித் பிணம் எரிப்பதற்கும் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.
- தலித்துகள் மீதும் இருளர் சமூகத்தினர் மீதும் அதிகமான பொய் வழக்குகள் போடப்பட்டு காவல் துறையின் சித்திரவதை செய்துள்ளனர்.
- தீண்டாமை வன்கொடுமை வழக்குகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வலியுறுத்தும் தலித் செயல்பாட்டாளர்கள் மீது காவல் துறையினர் வேண்டுமென்றே எதிர் வழக்கு பதிவு செய்து அவர்களுடைய செயல்பாட்டை முடக்கும் போக்கு அதிகமாக உள்ளது.
- தோல் தொழிற்சாலை, மலம் அள்ளும் தொழிலில் போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்படாமல் விஷ வாயுத் தாக்கி தொழிலாளர்கள் இறக்க நேரிட்டுள்ளது.
- தலித்துகள் அரசு வேலை வாய்ப்பு பெறுவதை பொறுத்துக் கொள்ள முடியாத உயர் சாதியினர் அரசுப் பணியாளர் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடட்துதல்.
- தலித் பஞ்சாயத்து தலைவர்கள் / உறுப்பினர்களை அவர்களுடைய பணிகளை செய்ய விடாமல் தடுப்பதும் அவர்களுடைய பதவிக்குரிய மரியாதை அளிக்காமல் சாதியை சொல்லி இழிவுப்படுத்தும் போக்கும் அதிகரித்துள்ளது.

## பொதுவான பரிந்துரைகள்

1. ஐ.நா–வின் 49–வது அமர்வில் கொண்டு வரப்பட்ட இனப்பாகுபாட்டிற்கு எதிரான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
2. தலித் மக்களின் உயிர் வாழ்தலையே தீண்டாமையானது நேரடியாக பாதிக்கக் கூடியது என்பதால் இதை ஒரு தீவிர இனப் பாகுபாடாகவும் தீண்டாமை கடைப்பிடித்தலை, “இன ஒதுக்கம்” என்று கருதும் அளவிற்கு பாவித்து அரசு

தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளாக,

அ) தலித்துகளின் மீதான வன்முறைகள் பற்றிய உண்மை (வெள்ளை) அறிக்கையொன்றை மத்திய அரசும், தமிழக அரசும் வெளியிட வேண்டும்.

ஆ) தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மற்றும் மலம் அகற்றும் தொழிலாளர்கள் ஆணையங்களின் ஆண்டறிக்கைகளை நாடாளுமன்றத்திலும் மாநில சட்டமன்றங்களிலும் விவாதிப்பதை கட்டாயமாக்க வேண்டும்.

இ) தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்பு விதிகளின் படி (1995) தலித் மக்கள் மற்றும் அவர்கள் உடமை பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரும் வகையிலும் உயர் சாதியினரின் தாக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவும் ஆயுதங்களை வைட்திருப்பதற்கான உரிமங்களை தலித் மக்களுக்கு வழங்க வேண்டும்.

ஈ) இதற்காக அனைத்து கிராமப் பகுதிகளிலும் தலித்துகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

3. சாதிய வன்முறைக்கு ஆளான கிராமங்களிலிருந்து சாதிக் கலவரத்தில் அடிக்கடி ஈடுபடுபவர்களை நிரந்தரமாக வெளியேற்ற இந்தச் சட்டத்தில் இடமுள்ளது. அதை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

4. தலித் மக்கள் அளிக்கும் புகார் மீது நடவடிக்கை எடுப்பதை தவிர்த்து புகார் கொடுத்தவர்களின் மீதே எதிர்வழக்கு பதிவு செய்யும் காவல் துறை அதிகாரிகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் தண்டனைக்குள்ளாக்க வேண்டும்.

5. தலித் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் 22 பிரிவுகளாக இச்சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் பிரிவு *3(1)(X)* இன் கீழ் மட்டும் தான் காவல்துறை வழக்குப் பதிவு செய்கிறது. சாதிப் பெயரைச் சொல்லி இழிவுபடுத்துதல் என்ற சாதாரண குற்றம் பற்றிய பிரிவு இது. எனவே, இந்திய அரசு தலித் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இந்தச் சட்டத்தின் மற்ற பிரிவுகள் குறித்து அனைவரும் அறியும்படி பிரச்சாரம் செய்ய வேண்டும்.

6. இந்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நீதிமன்றங்கள், குற்றங்களைப் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்கள் அல்ல என்று (*Not a Court of original Jurisdiction*) உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படும். எனவே, இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் நீதிமன்றங்கள் குற்றங்களைப் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட நீதிமன்றங்களாக, அமையும்படி இந்த சட்டத்தின் பிரிவுகள் திருத்தப்பட வேண்டும்.

7. உச்சநீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்களுக்கு இணையாக, தீண்டாமை பற்றி விசாரிக்க தனி நீதிமன்றங்களை அமைத்து அவை குறிப்பிட்டக் காலத்திற்குள் நீதி வழங்க ஏற்பாடு செய்யவும் வேண்டும்.

8. தலித் மக்கள் மீதான உயர்சாதியினரின் வன்முறைக்கு போலீஸ் துறையினரும் துணை போவதைத் தடுக்க தலித் மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, போலீஸ் துறையில் தலித் மக்களின் பிரதிநிதித்துவமானது மத்திய, மாநில அளவில் உயர்த்தப்பட வேண்டும்.

9. மனித குலத்தின் நாகரீகத்தை வேரோடு புதைக்கும் 'கையால் மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளர் முறை'–யை ரத்து செய்ய வேண்டும். இதற்காக கையால் மலம் அகற்றுவோரை வேலைக்கமர்த்தல் மற்றும் வசதியற்ற பாதாள சாக்கடை கழிப்பறைகள் (தடைச்) சட்டம் 1993–ஐ முழு வீச்சுடன் அமல் செய்ய வேண்டும்.

10. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்புச்) சட்டம் சரியாகச் செயல்படுவதை கண்காணிக்க மாநில அளவில் கண்காணிப்புக் குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

11. பத்திரிக்கை, தொலைக்காட்சி போன்ற ஊடகச் சாதனங்கள் மூலம் அரசே சட்டப்பூர்வமாக தீண்டாமை தடைசெய்யப்பட்டது குறித்து, தலித் மீதான வன்முறைக்கு எதிரான பிரச்சாரங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

12. தலித் மக்கள் மீது வன்முறையைத் தூண்டும் சாதி அமைப்பின் தலைவர்கள் மீது கடும் கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

13. சாதிய வகுப்பு வாதத்தை வளர்க்கும் வகையில் செயற்படும் சாதியக் கட்சிகளைத் தடை செய்யும் வகையில் தேர்தல் சட்டங்களைத் திருத்த வேண்டும்.

14. சாதிய ஆதிக்கம் கோலோச்சுகின்ற பஞ்சாயத்துகள் கலைக்கப்பட வேண்டும். சாதி, தீண்டாமையை அமல்படுத்தும் பஞ்சாயத்துகள் மற்றும் அதன் தலைவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

15. தலித் மக்கள் அங்கம் வகிக்கும்/ தலைவர்களாக இருக்கும் பஞ்சாயத்துகளுக்கு அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும். அதன் உறுப்பினர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு படை அளிப்பது உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்போதே மேலவளவு போன்ற படுகொலைகள், தலித் மக்கள் பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடுவதை தடுப்பது போன்றவை தடுக்கப்படும்..

16. இதுவரை மத்திய அரசும், மாநில அரசுகளும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்திய நிலை குறித்து உண்மையறிக்கை ஒன்றை கொண்டு வந்து பொதுமக்களின் விவாதத்திற்காக நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில் தாக்கல் செய்ய வைக்க வேண்டும்.

17. ஒவ்வொரு தலித் மீதான வன்முறையின் போதும் முதலில் பாதிக்கப்படுவது தலித் பெண்களே. தலித் பெண்கள் அவர்கள் எவ்வயது உடையவராக இருப்பினும் அவர்கள் மீது கோரமான பாலியல் வன்முறையே கட்டவிழ்த்து விடப்படுகிறது. எனவே இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க:

    அ) பெண்கள் என்ற பொதுவான வகைப்படுத்தலில் தலித் பெண்களை இணைக்காமல் அவர்களை தனியான ஒரு சமூகக் குழுவாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

    ஆ) திட்டம் தீட்டும் போதும், நிதி ஒதுக்கீடு செய்யும் போதும் கல்வி மற்றும் வேலைகளில் இட ஒதுக்கீடு வசதிகளை பகிர்ந்தளிக்கும் போதும் தலித் பெண்களுக்கான சிறப்பு மற்றும் தனிப்பட்ட இடமளிக்க வேண்டும்.

    இ) தேசியப் பெண்கள் ஆணையம், தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய தலித் பழங்குடி மக்களுக்கான ஆணையம், கையில் மலம் அள்ளுவோர் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான ஆணையம் (சபாய் கரம்சாரிஸ் ஆணையம்) ஆகியவற்றிற்கு சிறப்பாக தலித் பெண்களின் பிரச்சனைகளை கவனிப்பதற்கு அதிகாரமளிக்க வேண்டும்.

ஈ) தலித் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளைக் கண்காணிக்க தேசிய மற்றும் மாநில அளவிலான சட்டபூர்வ அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

உ) தலித் பெண்களின் நிலைமை மற்றும் அவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகள் குறித்து நாடாளுமன்றத்திலும் சட்டப் பேரவைகளிலும் முறையான காலங்களில் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஊ)தலித் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள், வன்கொடுமைகள் ஆகியவற்றுக்கு போலீஸ் அதிகாரிகளைப் பொறுப்பாக்க வேண்டும். அவர்களின் கடமை தவறிய குற்றத்திற்காகக் கடுமையான தண்டனை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

எ) தலித் குழந்தைகளுக்கு எதிராகப் பள்ளிகளில் கடைபிடிக்கப்படும் பாகுபாட்டு செயல்களை தீண்டாமை குற்றமாகக் கருதி சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மீது தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்வதற்கே போராட்டம் நடத்தக்கூடிய சூழல் இருப்பதால் தீண்டாமை வழக்குகளில் சாதிய உணர்வோடு செயல்படும் காவல்துறை அதிகாரிகள் மீது பிரிவு 4 ன் வழக்கு பதிவு செய்து தண்டனைகள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

- பாதிக்கப்படும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது வழக்கை திரும்பப் பெறுவதற்கு வலியுறுத்தும் வகையில் எதிர் வழக்கு பதிவு செய்யும் போக்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆகவே தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையமும், மாநில தாழ்த்தப்பட்டோர் இயக்குநரகமும் பதிவு செய்யப்பட்ட எதிர் வழக்குகளில் முறையான விசாரணை மேற்கொண்டு அவற்றை ஓர் பகுப்பாய்வு செய்து உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களை வழக்குகளிலிருந்து விடுதலைப் பெறச் செய்ய வேண்டும்.

- சாதியக் கலவரங்கள் நடைபெறக்கூடிய இடங்களுக்கு ஆணையங்கள் தாமாக முன்வந்து விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.
- தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் துணைக் காவல் கண்காணிப்பாளர் விசாரணை அதிகாரியாக தங்களுடைய பணிகளை ஆற்றவில்லையெனில் அவர் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- தாழ்த்தப்பட்டோர் ஆணையத்திற்கு அனுப்பப்படும் புகார்கள் மீது விசாரணை மேற்கொள்ளுமாறு மாவட்டக் காவல்துறைக்கு திருப்பி அனுப்புவதை தவிர்த்து ஆணையத்தின் விசாரணைக் குழுவே நேரடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.
- தலித்துகள் மீது பதிவு செய்யப்பட்டு தேக்க நிலையில் உள்ள வழக்குகளுக்கு விரைவு நீதி மன்றங்கள் மூலம் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- கழிவுகளை அகற்றும் பணியிலும் மலம் அள்ளும் பணியிலும் தலித்துகள் ஈடுபடும் போது போதுமான பாதுகாப்பு உபகரணங்கள் அளிக்கப்படாமல் பணிகளில் ஈடுபடுட்தப்படுவதால் மரணங்கள் ஏற்படுகிறது. ஆகவே இவ்வாறு பணிகளில் ஈடுபடுத்தும் நிறுவனங்கள் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். அவற்றை கண்காணிக்கும் குழு ஒன்றை அரசு அமைத்திட வேண்டும்.

# மக்கள் கண்காணிப்பகம்

## எமது இலக்கு

**மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தல், மக்கள் பங்கேற்கும் சனநாயகத்தைக் கட்டமைத்தல் – இவை வழி உரிமை மீறல்களும் பாகுபாடுமற்ற சமூகத்தை உருவாக்கல்.**

## பணி

**மனித உரிமை மீறல்களைக் கண்காணித்தல், தலையீடு செய்தல், மனித உரிமைக்கான மக்கள் போராட்டங்களில் தோழமை கொள்ளுதல்.**

**கல்வி மற்றும் விழிப்புணர்வு செயற்பாட்டு வழி, பரந்துபட்ட சமூகத்தில் மனித உரிமைகளைக் கலாச்சாரமாய் வளர்த்தெடுத்தல்.**

மக்கள் கண்காணிப்பகம்